தாத்திரி—பூமி.
தாபதம்—முனிவரிருக்கும்வாசம்.
தாபதர்-சடைமுடியர், சமணமுனிவர்.
தாபம்—காடு, துன்பம், வெப்பம்.
தாபரன்—கடவுள்.
தாபிஞ்சம்—தமாலம்.

தாபிதம்—சூடு, தாபித்தல்.
தாமணி—தாம்பு.
தாமநிதி—சூரியன்.
தாமம்—அணைகயிறு, இடம், உடல், ஒழுங்கு, ஒளி, கீர்த்தி, கொன்றைமரம், சுகம், தாமணி, பிறப்பு, பூ, பூமாலை, மணிவடம், முடியுறுப்பு, மூவாறுகோவைமணியுளமாதரிடையணி, வீடு.
தாமிரப்பருணி — ஓராறு, மேற்றிசையானைக்குப்பெண்யானை.
தாமிரம்—செம்பு.
தாமோதரன்—திருமால்.
தாம்—அசைச்சொல், (உ-ம். நீர்தாம்.)
தாம்பிரம்—செம்பு.
தாம்பு—கயிறு, தாமணிக்கயிறு.
*தாம்பூலம்—வெற்றிலை.
தாம்பூலவல்லி—வெற்றிலைக்கொடி.
தாம்பூலி—வெற்றிலைக்கொடி.
தாயத்தார்—தாயாதிகள்.
தாயம்—உரித்து, சூதாடுகருவி, தந்தைவழிச்சுற்றம், துன்பம்.
தாய்—மாதா, வினையெச்சம்.
தாரகம்—உச்சவிசை, பிரணவம், வெள்ளி.
தாரகாபதி—சந்திரன்.
தாரகை—விண்மீன்.
தாரணம் — அட்டாங்கயோகத்தொன்று, உறுதி, தரித்தல், நிலை.
தாரணி—பூமி.
தாரணை—தாரணம்.
தாரம்—அரும்பண்டம், இங்குலிகம், நா, பச்சைப்பாம்பினஞ்சு, பாதரசம், பிரணவம், மனைவி, மூக்காற்பிறக்குமிசை, வல்லிசை, வீணைநரம்பிலொன்று, வெண்கலம், வெள்ளி.

தாரா — ஓர்புள், குருகு, விண்மீன், வினைமுற்று, வினையெச்சம்.
தாராகணம்—விண்மீன்.
தாராதரம்—மேகம்.
தாராபதி—சந்திரன், வியாழம்.
தாரி—வழி.
தாரு—மரக்கொம்பு, மரப்பொது.
தாருகவிநாசனி—காளி.
தாருகற்செற்றாள்—காளி.
தாருகற்செற்றோன்—குமரன்.
தாருகன்—ஓரசுரன்.
தாருகாரி—குமரன்.
தாருகாவனம்—ஓர்வனம்.
தாருணம்—அச்சம், பயங்கரம்.
தாரை—ஒழுங்கு, கண், கண்மணி, காளம், கூர்மை, கொடிப்படை, சிறுசின்னம், சீலை, சுக்கிரீவன்மனைவி, திகிரி, தேவகுருவின்மனைவி, நா, நேரோடல், மழை, வலி, வழி, விண்மீன்.
தார்—கிண்கிணிமாலை, கொடிப்படை, படை, படைவகுப்பு, பூ, பூவரும்பு, மாலை.
தார்க்கியன்—கருடன்.
தாலகேதனன்—வீட்டுமாசாரி.
தாலம்—உண்கலம், கூந்தற்பனை, நா, பனை, பூமி, யானைச்செவி.
தாலவட்டம்—பூமி, யானைச்செவி, யானைவால்.
தாலவிருந்தம்—பேராலவட்டம், விசிறி.
தாலாலம்—பழிமொழி.
தாலி—மங்கலநாண்.
தாலு—நா.
தால்—பிள்ளைக்கவியிலோர்பருவம்.
தாவாந்தம்—நரகம்.

தாவம்—காடு, காட்டுத்தீ, மருதநிலத்தூர்.

தாவரம்—இடம், உடல், நிலை, பூமி, மரப்பொது, மலை.

தாவல் — தாண்டல், பாய்தல், வியங்கோண்முற்று.

தாவளம்—மருதநிலத்தூர்.

தாவு—குதிரைநடை, தாவென்னேவல், பகை, பற்றுக்கோடு, வருத்தம், வலி.

தாவுதல்—தாண்டல், பரத்தல்.

தாழி—குடம், சாடி, பரணிநாள்.

தாழை — தாழைமரம், தென்னமரம்.

தாழ் — சுவர்ப்புறத்து நீண்டவுத்திரம், தாழக்கோல், தாழென்னேவல்.

தாழ்தல் — ஆசை, ஆசைப்பெருக்கம், தங்கல், வணங்கல்.

தாழ்த்தல்—தாழ்த்துதல், மந்தம், வியங்கோண்முற்று.

தாழ்வடம் — முத்துக்கோவைமுதலியன.

தாழ்வாரம்—வீட்டிறப்பு.

தாழ்வு—ஈனம், பள்ளம்.

தாளம்—ஓர்வாச்சியம்.

தாளாண்மை—ஊக்கம், முயற்சி.

தாளாளர்—வைசியர்பொது.

தாளி—அனுடநாள், ஓர்கொடி, தாளியென்னேவல், பனைமரம்.

தாளிதம்—தாளிப்பு.

தாள் — ஆதி, கதவுறுதாள், கால், முயற்சி.

தாறு—அளவு, இருப்புமுள், ஈந்துகமுகு வாழையிவற்றின்குலை, வில்லின்நுதி.

தாற்றுக்கதிர்—கொத்தாய்க்காய்க்குங்கதிர்.

தாற்றுப்பூ—கொத்தாய்நிற்கும்பூ.

தானம் — இடம், கொடை, தேவலோகம், யானைமதம், வலி.

தானவர்—அசுரர்.

தானவன்—அசுரன், சந்திரன்.

தானியம்—பண்டம்.

தானை—ஆயுதப்பொது, நூசு, படை.

தானைத்தலைவர்—படைவீரர்.

தான்—அசைச்சொல், (உ-ம். நீதான்.

தான்றி—தான்றிமரம்.

தி

திகம்பரர்—சமணமுனிவர்.

திகம்பரன்—அருகன், நிருவாணி.

திகரம்—இளைப்பு, ஒழுங்கு.

திகழல்—ஒளிசெய்தல்.

திகழ்—ஒளி, திகழென்னேவல்.

திகழ்ச்சி—விளக்கம்.

திகழ்தல்—விளங்கல்.

திகிரி — உருளை, சக்கராயுதம், தேர், மலை, மூங்கில், வட்டம்.

திகை—திகையென்னேவல், திசை, தேமல்.

திகைத்தல்—மயங்கல்.

திக்காரம்—தள்ளல்,

திக்கு—திசை.

திங்கட்குடையோன்—மன்மதன்.

திங்களுள்—மிருகசீரிடம்.

திங்கள்—சந்திரன், மாதம்.

திசை—திக்கு.

திசைச்சொல் — அவ்வவர்நாட்டுச்சொல்.

திசைமுகன்—பிரமன்.

திடம்—மெய், வலி.

திடர்—திட்டை, மேடு.
திடல்—திட்டை, மேடு.
திடுதிடெனல்—ஈரொலிக்குறிப்பு.
திட்கல்—அச்சக்குறிப்பு, வியங்கோண் முற்று.
திட்டம்—ஒப்புரவு, நிலவரம், வினைமுற்று.
திட்டல்—வைதல், வியங்கோண்முற்று.
திட்டி—கண், வினையெச்சம்.
திட்டு—திட்டென்னேவல், மேடு.
திட்டை—உரல், திடர், திண்ணை, மேடு.
திட்பம்—காலநுட்பம், திண்மை.
திணி—திணியென்னேவல், திண்மை.
திணிகம்—போர்.
திணிதல்—திண்மை.
திணித்தல்—அறுத்தல்.
திணுக்கம்—திணுங்கல்.
திணுங்கல்—நெருங்கல், வியங்கோண் முற்று.
திணை — அகத்திணை, அஃறிணை, இடம், உயர்திணை, ஒழுக்கம், குடி, குலம், புறத்திணை, பூமி.
திண்டி—தம்பட்டம், யானை.
திண்டிமம்—தம்பட்டம்.
திண்ணகம் — செம்மறிக்கடா, துருவாட்டேறு.
திண்ணம்—மெய், வலி.
திண்ணியன்—வலியுடையோன்.
திண்ணை—வேதிகை.
திண்மை—மெய், வலி.
திதலை—தேமல்.
திதனி—தேமல்.
திதி—காசிபப்பிரமாவின்மனைவி, காத்தல், சந்திரனாள், திதியென்னேவல், நிலை, நிலைபெறுதல்.
திதித்தல்—நிலைபெறுத்தல்.
திதிமைந்தர்—அசுரர்.
தித்தம்—கசப்பு.
தித்தி—தித்திப்பு, தித்தியென்னேவல், தின்றற்குரியன, வேள்விக்குண்டம்.
தித்திரி—சிச்சிலிக்குருவி.
திந்திருணி—புளியமரம்.
திப்பி—கோது.
திமிங்கிலகிலம் —திமிங்கிலத்தைவிழுங்குமீன்.
திமிங்கிலம்—யானையைவிழுங்குமீன்.
திமிசு—வேங்கைமரம்.
திமிதிமி—யானையைவிழுங்குமீன்.
திமிரம்—இருள், நரகம்.
திமிராரி—சூரியன்.
திமிர்தம்—ஒலி.
திமிர்தல்—பூசுதல், வளர்தல்.
திமிலம்—பேரொலி, யானைமீன்.
திமிலர்—நெய்தனிலமாக்கள்.
திமிலை—பம்பைமேளம்.
திமில்—எருத்துத்திமில், தோணி, மரக்கலம், வேங்கைமரம்.
திமிறல்—வளர்தல்.
திமைத்தல்—கிளப்புதல்.
தியக்கம்—அசைவு, கலக்கம்.
தியக்கு—தியக்கம்.
தியாகம்—கொடை.
தியாகி—கொடையாளன்.
தியானம் — அட்டயோகத்தொன்று, நினைவு.
தியோதம்—வெயில்.
திரங்கல்—திரைதல், மிளகு, வியங்கோண்முற்று.

திரச்சினமுகம் — நாணத்தாற்றலையாட்டல்.

திரட்சி—உண்டை, முத்து.

திரட்டல் — கூட்டல், வியங்கோண்முற்று.

திரட்டு—கூட்டம், திரட்டென்னேவல்.

திரணபதி—வாழை.

திரணம்—துரும்பு.

திரமிடம்—தமிழ்.

திரம்—நிலை.

திரவம்—நீர்முதலியவற்றினெகிழ்ச்சி.

திரவிடம்—தமிழ்.

திரவியம்—பொன்.

திரளல்—திரட்சி, வியங்கோண்முற்று.

திரள்—உண்டை, குழியம், கூட்டம், திரளென்னேவல், படை.

திராமரம்—பவளமல்லிகை.

திராமிடம்—தமிழ்.

திராவிடம்—ஓர்தேசம், தமிழ்.

திரி-திரிசிலை, திரியென்னேவல்,மூன்று.

திரிகை—இடக்கைமேளம், ஏந்திரம், குலாலசக்கரம், திரிதல்.

திரிதரல்—சுழலல், திரிதல், மீளல்.

திரிதராட்டிரன்மைந்தன் — துரியோதனன்.

திரிதல்—உலாவல், கெடுதல், சுழலல், நடத்தல்.

திரிபதகை—கங்கை.

திரிபு—வினையெச்சம், வேறுபாடு.

திரிபுரம்—முப்புரம்.

திரிபுராந்தகன்—சிவன்.

திரிபுரி—சாரடை.

திரியம்பகன்—அரன், அருகன்.

திரிவிக்கிரமன்—விட்டுணு.

திரு—இலக்குமி, செல்வம்.

திருகல்—முறுக்கல், வளைத்தல், வியங்கோண்முற்று.

திருகு—திருகென்னேவல், முறுக்கு.

திருக்கு—கண், குற்றம்.

திருக்கை—ஓர்மீன்.

திருடல்—களவு, வியங்கோண்முற்று.

திருடன்—கள்ளன்.

திருட்டி—கண்.

திருட்டு—களவு.

திருதி—துணை.

திருத்தம்—திருந்தல்.

திருத்தல் — திருந்தச்செய்தல், வியங்கோண்முற்று.

திருநாள்—உற்சவநாள்.

திருநீறு—விபூதி.

திருந்தலர்—பகைவர்.

திருந்தல் — திருத்தமாதல், வியங்கோண்முற்று.

திருமகண்மைந்தன்—மன்மதன்.

திருமகள்—இலக்குமி.

திருமரம்—அரசமரம்.

திருமலர்—தாமரை.

திருமறுமார்பன்—அருகன், விட்டுணு.

திருமாலுந்தி—தாமரை.

திருமால்புதல்வன்—மன்மதன்.

திருமுற்றம்—கோயின்மாளிகை.

திரும்பல்—மீளல், வியங்கோண்முற்று.

திருவிலி—கைம்பெண், வறியன்.

திருவுறைப்பு—தாமரைமேலவள்.

திரை—ஆறு, இடுதிரை, கடல், திரைதல், திரையென்னேவல், புரைத்திரை.

திரைத்தல்—திரைக்குதல்.

திரையல் — வியங்கோண்முற்று, வெற்றிலை.

திரையன்—தொண்டைமான்.

திலகம்—கலித்துறை, சிந்தூரம், சுட்டி, பொட்டு, மஞ்சாடிமரம்.

திலதம்—சுட்டி, நெற்றித்திலகம், பொட்டு.

திலம்—எள், மஞ்சாடிமரம்.

தில் — அசைச்சொல், ஒழியிசை, காலம், விழைவு.

தில்லம்—காடு.

தில்லை—ஓர் மரம், சிதம்பரம்.

திவசம்—நாள்.

திவண்டல்—துவளல்.

திவரம்—நாடு.

திவலை — சிதறுந்துளி, மழை, மழைத்துளி.

திவவு—வீணைவலிக்கட்டு.

திவளல்-துவளல், வியங்கோண்முற்று.

திவறல்—சாதல்.

திவா—பகல்.

திவாகரன்—சூரியன்.

திளைத்தல்—அனுபவித்தல், நிறைதல், நெருங்கல், பெருகுதல்.

திறத்தல்—திறக்குதல்.

திறம்—காரணம், குணம், குறைநரம்புளவீணை, கூறுபாடு, வலி.

திறம்பல் — மாறுபடல், வியங்கோண்முற்று.

திறலோன்—திண்ணியன்.

திறல்—பகை, போர், வலி.

திறவு—திறத்தல்.

திறனில்யாழ்—நெய்தல்யாழ்த்திறம்.

திறன்—காரணம், குணம், கூறுபாடு.

திறை—அரசிறை.

தினகரன்—சூரியன்.

தினமணி—சூரியன்.

தினம்—நாள்.

தினவு—சொறி.

தினாந்தம்—மாலைப்பொழுது.

தினை—ஓர்பயிர், சிறுமை.

தின்றல்—புசித்தல்.

தீ

தீ—அறிவு, இனிமை, ஓரெழுத்து, தித்திப்பு, தீமை, தியெனேவல், நரகம், நெருப்பு.

தீக்குணர்—இழிமக்கள்.

தீக்கை—விரதநியமம்.

தீக்கையோன்—அரன், ஆசான்.

தீங்கு—குற்றம், தீமை.

தீச்சொல்—பழிச்சொல்.

தீட்டல் — எழுதல், சித்திரமெழுதல், வியங்கோண்முற்று.

தீண்டல் — தொடல், வியங்கோண்முற்று.

தீது—குற்றம், தீமை.

தீத்திரன்—ஊழித்தீ.

தீபமந்திகை—விளக்குத்தண்டு.

தீபம்—சோதிநாள், விளக்கு.

தீபவதி—ஆறு.

தீபவராடி—வராடித்திறத்திலொன்று.

தீபிகை—விளக்கு.

தீமை—பொல்லாங்கு.

தீம்பர்—இழிமக்கள்.

தீயகம்—நரகம்.

தீயம்—தித்திப்பு.

தீயர்—இழிமக்கள், வேடர்.

தீயளி—காய்.
தீரம்—கரை, சிறுவரம்பு, வலி.
தீர்க்கம்—நிச்சயம், நீளம்.
தீர்தல்—நடத்தல், நீளம், முடிதல், விடுதல்.
தீர்த்தம்—திருவிழா, நீர்.
தீர்த்தர்—கடவுளர்.
தீர்த்தல்—முடித்தல், விடுத்தல்.
தீர்த்தன்—அருகன், உபாத்தியாயன், குரு, சிவன்.
தீர்த்திகை—ஆறு.
தீர்ப்பு—தீர்த்தல்.
தீர்வை—இறை, கிரி.
தீவலஞ்செய்தல்—கலியாணம்.
தீவி—புலி.
தீவிகை—தீபிகை.
தீவிரம்—சூரியகிரணம், நரகம், பெருங்கோபம்.
தீவினை—பாவம்.
தீவு—இடைக்குறை, சுவை.
தீவேள்வி—கலியாணம்.
தீனர்—இரப்போர்.
தீனன்—தரித்திரன்.

து

து—ஓரெழுத்து, துவ்வென்னேவல்.
துகள்—குற்றம், பராகம், புழுதி.
துகிரிகை—சாந்து, சித்திரம்.
துகிர்—பவளம்.
துகிலிகை—எழுதுகோல், சித்திரம்.
துகில்—சீலை, விருதுக்கொடி.
துகினம்—பனி.
துகைத்தல்—வருந்துதல்.
துக்கம்—குற்றம், துன்பம், நரகம்.
துங்கம்—உயர்ச்சி, பரிசுத்தம், பெருமை.
துச்சவனன்—இந்திரன்.
துச்சில்—ஒதுக்கிடம், கூடு.
துஞ்சல்—உறங்கல், சாதல், சோம்பல், நிலைபெறுதல், வியங்கோள் முற்று.
துடக்கு—மகளிர் சூதகம்.
துடவை —உழவுக்கொல்லை, பூந்தோட்டம்.
துடி—அகில், உடுக்கை, உதடு, ஏலம், காலநுட்பம், குமாரனாடல், குறிஞ்சிநிலைப்பறை, கூதாளிச்செடி, சத்தகன்னிகைகளாடல், துடியென்னேவல், பாலைநிலப்பறை.
துடித்தல்—குதித்தல், மின்னல்.
துடியடி—யானைக்கன்று.
துடுப்பு—துடுப்பு.
துடுமெனல்—ஒலிக்குறிப்பு.
துடுவை—நெய்த்துடுப்பு.
துடை—சுவர்ப்புறத்து நீண்டவுத்திரம், துடையென்னேவல்.
துடைத்தல்—துடைக்குதல்,
துடைப்பம்—வாருகோல்.
துட்கல்—அச்சக்குறிப்பு, வியங்கோள் முற்று.
துட்கெனல் — அச்சக்குறிப்பு.
துட்டர்—தீயர்.
துட்டன்—தீயன், தேள்.
துட்டு—தீமை.
துட்டை—வசவி.
துணங்கறல்—இருள், திருவிழா.
துணங்கை — இருகையுமுடக்கிப்புடைப் புடையொத்தியாடல், கூத்து, திருவிழா.
துணர்—பூ, பூங்கொத்து, பூந்தாது.

துணவு—சிக்கிரம்.

துணி—ஒளி, சோதிநாள், துணியென் னேவல், துண்டம், தூக்கங்கள், தெளி வு, தேரிடக்கியம்.

துணிதல்—தெளிதல்.

துணித்தல்—அறுத்தல், வெட்டல.

துணிவு—தெளிவு.

துணுக்கம்—அச்சம், உள்ளோசை.

துணுக்கெனல் — அச்சக்குறிப்பு.

துணை—அளவு, இணை, ஒப்பு, சகாயம், சல்லியம்.

துணைக்காரணம்—உபகரணம்.

துணைவர்—மந்திரிகள்.

துணைவன் — தலைவன், தோழன், மந் திரி.

துணைவி—தோழி, மனைவி.

துணைவு—விரைவு.

துண்டம்—சாரைப்பாம்பு, துணி, துண் டித்தல், முகம், மூக்கு, பறவைமூக்கு, யானைத்துதிக்கை.

துண்டித்தல் — அறுத்தல், தறித்தல், வெட்டல்,

துண்ணெனல்—அச்சக்குறிப்பு.

துதமுகம் — வேண்டாமைக்குவலமிட ந்தலையாட்டல்.

துதம்—அசைவு.

துதி—துதித்தல், துதியென்னேவல்.

துதித்தல்—வழுத்தல.

துதைதல்—நெருங்கல்.

துத்தம்—கண்மருந்து, சமனிசை, நா ய், நாவினுற்பிறக்குமிசை, பால், யா ழினோர் நரம்பு, வயிறு.

துத்தல்—புசித்தல்.

துத்தி—உண்டற்குரியன, ஓர்செடி, தே மல், பாம்பின்படப்பொறி, வினைமு ற்று.

துந்துமாரி — முதலெழுவள்ளலிலொ ருவன்.

துந்துமி—பறையின்பொது, பேரிகை.

துப்பகம்—நெய்.

துப்பு—அரக்கு, அறிவு, அனுபோகம், ஆயுதப்பொது, உணவு, குற்றம், சகா யம், சிவப்பு, சுத்தம், துணை, துணைக் காரணம், நெய், பகை, பவளம், பா னம், பொலிவு, மிகுதி, வலி.

துப்புரவாக்கல்—சுத்தஞ்செய்தல்.

துப்புரவு—அலங்காரம், ஐம்பொறிநு கர்தல், ஒப்புரவு.

துமானம்—ஆபரணப்பெட்டி.

துமி—துமியென்னேவல், மழைத்துளி.

துமித்தல்—அறுத்தல், வெட்டல்.

தும்பி — சுரை, யானை, வண்டினுண், வ ண்டு.

தும்பு—ஓர் கயிறு.

தும்பை—ஓர்செடி, கூட்டம், பொருத ல், போர்வென்றூர்க்குமாலை, வெற் றிலை.

தும்மல்—உயிர்ப்பு, தும்முதல், விடுதல், வியங்கோண்முற்று.

தும்மு—கொசுகு, தும்மென்னேவல்.

துயக்கு—தளர்ச்சி.

துயரம்—துன்பம்.

துயருறுவோன்—தரித்திரன்.

துயர்—துன்பம்.

துயல்வரல்—அசைதல், வியங்கோண் முற்று.

துயிலல்—நித்திரைசெய்தல், வியங்கோ ண்முற்று.

துயிலிடம்—மக்கட்படுக்கை.

துயில்—துயிலென்னேவல், நித்திரை.

துயிறல்—நித்திரைசெய்தல்.

துய்—அறிவின்றிரிபு, நூற்கும்பஞ்சிற்றொடர்நுனி.

துய்த்தல்—புசித்தல்.

துரகதம்—குதிரை.

துரகம்—குதிரை.

துரங்கம்—குதிரை.

துரத்தல் — செலுத்தல், வியங்கோண்முற்று.

துரந்தரன்—பாரந்தாங்குவோன்.

துரவு—கிணறு.

துரால்—செத்தை, துன்பம்.

துரிசு—துன்பம்.

துரிஞ்சில்—உசிலமரம், வௌவால்.

துரிதம்—கலக்கம், கேடு, சீக்கிரம், துன்பம், பாவம்.

துரியம்—சுமத்தல், நான்காமவத்தை, பொதியெருது.

துருக்கம்—கத்தூரிமிருகம், கலக்கம். காடு, குங்குமமரம், மலைமேற்கோட்டை.

துருக்கர்—ஓர்சாதியார்.

துருக்கு—மிலேச்சசாதி.

துருசு—களிம்பு, சீக்கிரம்.

துருத்தி—ஆற்றிடைக்குறை, ஊதுந்துருத்தி.

துருமம்—மரப்பொது.

துருமோற்பலம்—கோங்குமரம்.

துரும்பு—திரணம்.

துருவண்ணம்—வெள்ளி.

துருவம்—அசையாநிலை.

துருவல்—கடைதல், துளைத்தல், தேடல், வியங்கோண்முற்று.

துருவை—செம்மறியாடு.

துரோணம் — எண்காற்புள், காக்கை, தனுவிராசி, தும்பைச்செடி, பதக்கு, வில்.

துர்க்கந்தம்—தியவாசனை.

துர்க்கம்—மலைமேற்கோட்டை.

துர்த்தூரம்—ஊமத்தை.

துலக்கல்—விளக்கல், வியங்கோண்முற்று.

துலங்கல்—ஒளிசெய்தல்,வியங்கோண்முற்று.

துலம்—கனம், நிறை.

துலவம்—பஞ்சு.

துலா—ஏற்றமரம். நிறைகோல்.

துலாம் — ஏற்றவுறுப்பு, ஓரிராசி, ஓர்நிறை.

துலிதம்—அசைவு.

துலை—கனம், துலாராசி, நிறை, நீரிறைக்குந்துலை.

துல்லம்—பேரொலி.

துல்லியம்—உவமை.

துவக்கல்—ஆரம்பித்தல், கட்டல், வியங்கோண்முற்று.

துவக்கு—உடல், சங்கிலி, துவக்கென்னேவல், தோல், பிணக்கு.

துவசம்—அடையாளம்,விருதுக்கொடி.

துவசர்—கள்விற்போர்.

துவட்டல்—துடைத்தல், துவட்டுதல், வியங்கோண்முற்று.

துவட்டா—கம்மாளர்.

துவட்டாநாள்—சித்திரைநாள்.

துவந்துவம்—இரண்டு.

துவம்—அசையாநிலை.

துவரம்—துவர்ப்பு.

துவரை—ஓர்பயறு, துவாரகை.
துவர்—சிவப்பு, துவர்ப்பு, பகை, பவளம், விறகு.
துவர்க்காய்—பாக்கு.
துவர்தல்—திமிர்தல்.
துவர்த்தல்—ஓர்சுவை.
துவலை—மழை, மழைத்தூவல்.
துவல்—சீக்கிரம்.
துவளல்—அசைதல், திவளல், வியங்கோண்முற்று.
துவறல்—துவலைவிடுதல், விரைவு.
துவன்றல்—சாதல், நிறைதல், நெருங்கல், பொலிவு, வியங்கோண்முற்று.
துவாதசான்மா—சூரியன்.
துவாந்தம்—இருள், நரகம்.
துவாரம்—வாயில்.
துவி—இரண்டு.
துவிதம்—இரண்டு.
துவை — இறைச்சி, ஒலி, துவையென்னேவல், பருகுதற்குரியன, பிண்ணாக்கு, புளிங்கறி.
துவைத்தல்—ஒலித்தல், பேரொலி,வாச்சியம்வாசித்தல், விடுதல்.
துவைபாயனன்—வியாசன்.
துவ்வல்-புசித்தல்,வியங்கோண்முற்று.
துவ்வாமை—வெறுப்பு.
துவ்வு-அனுபவம், ஐம்பொறிநுகர்ச்சி.
துழனி—ஒலி, பறவைக்கூட்டத்தொலி.
துழாய்—துளசி, வினையெச்சம்.
துழாய்மௌலி—திருமால்.
துழாய்வனம்—துளசி.
துழாவல்—கலத்தல், வியங்கோண்முற்று, வெட்டல்.

துளக்கம்—அச்சம், ஒளி, சோதிநாள்.
துளங்கல் — ஒளிசெய்தல், வியங்கோண்முற்று.
துளங்கொளி—கேட்டைநாள்.
துளவம்—துளசி.
துளவு—துளசி.
துளி — துளியென்னேவல், பெண்ணுமை, மழை, மழைத்துளி.
துளித்தல்—மழைபெய்தல்.
துளிர்—தளிர், துளிரொன்னேவல்.
துளிர்த்தல்—தளிர்த்தல்.
துளும்பல்—அலைதல், திமிர்தல், வியங்கோண்முற்று.
துளுவம் — ஓர்தேசம், பதினெண்பாடையிலொன்று.
துளை — துவாரம், துளையென்னேவல், மூங்கில், வாயில்.
துளைத்தல்—துளைக்குதல்.
துள்ளல்—ஆடு, கலிப்பாவோசை, குதித்தல், கூத்து, கொசுகு, வியங்கோண்முற்று.
துறக்கம்—தேவலோகம்.
துறத்தல்—துறவு, நீக்கல்.
துறந்தோர்—நீத்தோர்.
துறவர்—முனிவர்.
துறவி—முனிவன்.
துறவோர்—நீத்தோர்.
துறு—துறுகல், துறுவென்னேவல்.
துறுகல்—ஓர்கல், சலதாரைமுதலியவடைக்குங்கல்.
துறுத்தல்—துறுக்குதல்.
துறுபவம்—நெருக்கம்.
துறுமல் — திரட்சி, நெருங்கல், வியங்கோண்முற்று.

துறுவல்—நெருங்கல், புசித்தல், வியங்கோண்முற்று.
துறை—ஆறு, இடம், நீர்த்துறை, பாவினத்தொன்று, வழி.
துறைவல்லோர்—கற்றோர்.
துறைவன்—நெய்தனிலத்தலைவன்.
துற்றல்—உண்டல், குவிதல், நிறைதல், வியங்கோண்முற்று.
துற்று—சோறு, துறுகல், துற்றென்னேவல், நெருக்கம்.
துனி—அச்சம், ஆறு, கோபம், சினம், துன்பம், நோய், புலவிநீட்டம்.
துன்பு—துன்பம்.
துன்றல்—நெருங்கல், வியங்கோண்முற்று.
துன்னம்—தைத்தல்.
துன்னர்—சக்கிலியர், செம்மார், தையற்காரர்.
துன்னல்—கிட்டல், நெருங்கல், வியங்கோண்முற்று.
துன்னார்—பகைவர்.
துன்னு—இறைச்சி, துன்னென்னேவல், முதுகு.
துன்னுநர்—சிநேகிதர்.

தூ

தூ—ஓரெழுத்து, சுத்தம், தசை, தூவென்னேவல், பகை, பற்றுக்கோடு, புள்ளிறகு, வெண்மை.
தூக்கம்—ஆபரணத்தொடக்குவடிவு, காதணி, சல்லியம், நித்திரை.
தூக்கல்—ஆராய்தல், தூக்குதல், நிறுத்தல், வியங்கோண்முற்று.
தூக்கு—ஆராய்தல், உயர்ச்சி, உவமைச்சொல், உறி, காற்றுலாம், கூத்து, துலாராசி, தூக்கங்கள், தூக்கணங்குருவி, நிறை, பா.
தூங்கல்—ஆடல், உறங்கல், கூத்து, சோம்பல், தாழ்வு, யானை, வியங்கோண்முற்று.
தூசரம்—கொஞ்சவெள்ளை.
தூசர்—வண்ணார்.
தூசி—குதிரை, கொடிப்படை, படைவகுப்பு, புழுதி.
தூசு—சித்திரைநாள், சீலை, யானைகட்டுங்கயிறு.
தூட்டி—சீலை.
தூணம்—அம்புக்கூடு, தூண், பகை.
தூணி—அம்புக்கூடு, ஓரளவு.
தூணிகர்—செட்டிகள்.
தூணீரம்—அம்புக்கூடு.
தூண்—தூண், பற்றுக்கோடு.
தூண்டல்—எழுப்பல், செலுத்தல், வியங்கோண்முற்று.
தூண்டில்—மீன்பிடிக்குங்கருவியிலொன்று.
தூதன்—தூதுவன்.
தூதி—தூதுவள்.
தூது—செல்லுந்தூது.
தூதுணம்—தூக்கணங்குருவி, புறா.
தூதுவன்—தூதன், புதன்.
தூபமுட்டி—தூபக்கால்.
தூபம்—புகை.
தூபரம்—கொம்பிலாவிலங்கு.
தூபிதம்—சூடு.
தூமகேது—கொடுமை, தீ.
தூமான்—பீடிகை.
தூமம்—புகை, மட்கலஞ்சுடுசூளை.
தூமலம்—கருமைமிக்கசிவப்பு.
தூமிரம்—கருமைமிக்கசிவப்பு.
தூமை—தூய்மை.

தூம்பிரம்—கருமைமிக்கசிவப்பு.
தூம்பு—அருநெறி, உட்டுளை, சலதாரை, மடை, மரக்கால், மூங்கில், வழி, வாயில்.
தூயவர்—முனிவர்.
தூயாள்—சரச்சுவதி.
தூய்தன்மை—அசுத்தம்.
தூய்தாக்கல்—செப்பம்பண்ணல்.
தூய்து—சுத்தம்.
தூய்மை—சுத்தம்.
தூரம்—சேய்மை.
தூரல்—துன்பம், வியங்கோண்முற்று.
தூரியம் — உவகைப்பறை, எருது, எழுதுகோல், எறிபடைப்பொது, கைவேல், நல்லாடை, பறைப்பொது, முரசு.
தூர்—தூவென்னேவல், வேர்.
தூர்க்கை—பூரநாள்.
தூர்த்தர்—வஞ்சகர், விடர்.
தூர்த்தல்—செறுத்தல்,
தூர்த்தன்—வஞ்சகன், விடன்.
தூர்த்தை—தூர்த்தகுணமுள்ளாள்.
தூர்வகம்—சுமத்தல், பொதியெருது.
தூர்வாசம் — அட்டாதசவுபபுராணத்தொன்று.
தூர்வை—அறுகு, செத்தை.
தூலம்—பஞ்சு, பருமை, வீட்டுத்திரம்.
தூவத்தி—வாள்.
தூவல் — சிந்தல், மழை, மழைபெய்தல், மழைத்துளி, மழைத்தூவல், வியங்கோண்முற்று.
தூவி—அன்னத்திறகு, இறகு, மயிற்றோகை, வினையெச்சம்.
தூவு—உளான், தூவென்னேவல்.
தூளி — குதிரையினுர்ப்பு, பராகம், புழுதி.
தூளிதம்— தூளையுடையதாகப்பண்ணப்பட்டது.
தூள்—புழுதி, பூந்தாது.
தூறல்—பழிச்சொல், மழை, மழைத்துளி, மழைபெய்தல், வியங்கோண்முற்று.
தூறு — கூட்டம், சிறுசெடி, தூறென்னேவல், பழிச்சொல்.
தூற்றல்—தூற்றுதல், பழிகூறல், வியங்கோண்முற்று.
தூற்றுதல்—பழிகூறல்.

தெ

தெகுளம்—நிறைதல், பெருகுதல்.
தெகுளல்—பெருகல்.
தெங்கணம்—ஓர்தேயம்.
தெங்கு—தென்னமரம்.
தெட்டல்—வஞ்சித்தல், வியங்கோண்முற்று.
தெட்பம்—முதிர்ச்சி.
தெண்டிரை—கடல்.
தெண்ணீர்—தெளிநீர்.
தெபப்ம்—நீந்துந்தெப்பம்.
தெய்ய—இடைச்சொல், (உ-ம். சொல்லேன்றெய்யநின்னொடுபெயர்ந்தே.)
தெய்வதம்—தெய்வம்.
தெய்வமந்திரி—வியாழம்.
தெய்வம்—ஊழ், கடவுள், வருடம்.
தெய்வயானைகாந்தன்—குமரன்.
தெய்வவிரதன்—வீட்டுமாசாரி.
தெரிசொல்—சத்தியம், காரணம்.
தெரிதல்—ஆலோசனை, காணல்.

தெரித்தல்—எழுதல், சொல்லுதல், மாறுபாடு.

தெரிமா—சிங்கம்.

தெரியலர்—அறியாதார்.

தெரியல் — ஆராய்தல், காணல், பூமாலை, வியங்கோண்முற்று.

தெரிவு—தெரிதல்.

தெரிவை — பெண், முப்பத்தொருவயதுப்பெண், வினைமுற்று.

தெரு—வழி, வீதி.

தெருட்சி—அறிவு, தெளிவு.

தெருட்டல் — உறுதிப்படுத்தல், வற்புறுத்தல்.

தெருமரல்—சுழலல்.

தெருளல் — தெளிவு, வியங்கோண்முற்று.

தெருள் — தெருளென்னேவல், தெளிவு.

தெவிட்டல் — உமிழ்தல், ஒலித்தல், நிறைதல், நினைத்தல், வியங்கோண்முற்று.

தெவிளல்—நிறைதல்.

தெவு—கொளற்பொருட்டு, (உ-ம். நீர் தெவுநிரைத்தொழுவர்.

தெவுட்டல் — அடைத்தல், ஒளித்தல், கொப்புளித்தல், தங்கல், நிறைதல், நினைத்தல், வியங்கோண்முற்று.

தெவுளல் — பெருகுதல், வியங்கோண்முற்று.

தெவ்—பகை, போர்.

தெவ்வர்—பகைவர்.

தெவ்வினை—போர்.

தெவ்வு—சந்திரன், பகை, போர்.

தெழித்தல்—அதட்டல், கோபம், சினக்குறிப்பு, துவைத்தல், பேரொலி.

தெளிதல்—ஆராய்தல், ஆலோசனை, நூளைத்தல், தெளிவு.

தெளித்தல் — ஒலித்தல், கொழித்தல், துப்புரவாக்கல், தூவல், விதைத்தல்.

தெளிர்—உள்ளோசை.

தெளிர்தல்—பேசலாவெழுமொலி.

தெளிவு—அறிவு, துணிவு.

தெள்ளல்—கொழித்தல், தெளிதல், வியங்கோண்முற்று,

தெள்ளி—யானை, வினையெச்சம்.

தெள்ளுதல்—கொழித்தல், தெரிதல், தெளிதல்.

தெறித்தல்—தெறிக்குதல்.

தெறுக்கால்—தேள், விருச்சிகவிராசி.

தெறுதல்—அழித்தல், தங்கல்.

தெறுத்தல்—நெரித்தல்.

தெறுநர்—பகைவர்.

தெற்றல்—அலைத்தல், மாறுபாடு, வியங்கோண்முற்று.

தெற்றி—சித்திரகூடம், திண்ணை, வினையெச்சம்.

தெற்று—தெற்றென்னேவல், தேற்றம்.

தெனாது—தெற்குள்ளது.

தென்—அழகு, இசை, கறுப்பு, தெற்கு. தென்னமரம்.

தென்கால்—தென்காற்று.

தென்கீழ்த்திசையிறை—தீ.

தென்புலத்தார்—பிதிர்த்தேவதைகள்.

தென்மலை—பொதியமலை.

தென்மேற்றிசைப்பாலன்—நிருதி.

தென்றல்—தென்காற்று, முன்பனிப்பருவத்தின்காற்று.

தென்றற்றேரோன்—மன்மதன்.

தென்றி—தென்காற்று.

தென்றிசைக்கோன்—நமன்.

தென்னவன்—பாண்டியன்.

தென்னை—தெங்கமரம்.

தே

தேஓரெழுத்து, கடவுள், கிருபை.

தேகம்—உடல்.

தேக்கல் — நிறைதல், வியங்கோண்முற்று.

தேக்கு — ஓர்மரம், கமுகு, தித்திப்பு, தேக்கென்னேவல்.

தேங்கல் — அச்சக்குறிப்பு, நிறைதல், வியங்கோண்முற்று.

தேசா—ஓரிராகம்.

தேசி—பெருங்குதிரை.

தேசிகம்—அவ்வவநாட்டுச்சொல், அழகு, ஒளி, ஓர்கூத்து, பொன்.

தேசிகன் — உபாத்தியாயன், குரு, தேசாந்தரி.

தேசிகர்—செட்டிகள்.

தேசியம்—திசைச்சொல்.

தேசு—ஒளி, பொன்.

தேடல்-தேடுதல், வியங்கோண்முற்று.

தேட்கடை—மூலநாள்.

தேட்டு—தேடுதல்.

தேமல்—படர்சுணங்கு.

தேமா—தித்திப்புள்ளமாமரம்.

தேம்—ஏழனுருபு, (உ-ம். கோடாய்தேத்து, கள், தித்திப்பு, வாசனை.)

தேம்பல்—இளைத்தல், பழம்பூ, மெலிதல், வாடல், வியங்கோண்முற்று.

தேயம்—இடம், உடல், களவு, நாடு.

தேயு—நெருப்பு.

தேய்தல் — இளைப்பு, உரைதல், குறைதல்.

தேய்த்தல் — அழித்தல், உரைத்தல், கொல்லல்.

தேய்ப்பு—தேய்த்தல்.

தேய்வு—குறைபாடு, மெலிவு.

தேய்வை — பரிமளச்சாந்து, வினைமுற்று.

தேரகன்—தேர்ப்பாகன்.

தேரர்—புத்தர்.

தேரன்—ஆயுர்வேத முழுதுணர்ந்தவோர்புலவன்.

தேரார்—கல்லாதார், கீழ்மக்கள், பகைவர்.

தேரை — தவளையிலோர்பேதம்.

தேர்—இரதம், உரோகணிநாள், தேரென்னேவல்.

தேர்ச்சி—எண்ணல், கல்வி, தெளிவு.

தேர்ச்சித்துணைவர்—மந்திரிகள்.

தேர்தல்—ஆராய்தல், சொல்லல், தெரிதல்.

தேவகாந்தாரி—ஓரிராகம்.

தேவகி—கண்ணன்றாய்.

தேவகிமைந்தன்—கண்ணன்.

தேவகுலம்—தேவர்கோயில்.

தேவசாட்சி—ஆணை.

தேவசேனாபதி—குமரன்.

தேவதத்தன்—ஓர்வாயு.

தேவதாரம்—ஐந்தருவிலொன்று, ஓர்மரம், செம்புளிச்சைமரம்.

தேவதேவன்—சிவன்.

தேவநகர்—தேவர்கோயில்.

தேவன்—அருகன், கடவுள்.

தேவாங்கம்—பட்டுச்சீலை.

தேவாதி—கடவுள்.

தேவாலயம்—தேவர்கோயில், பொன்மலை.

தேவி—காளி, துர்க்கை, பார்வதி, மனைவி.

தேவை—ஓரூர்.

தேளி—ஓர்மீன்.

தேள்—அனுடநாள், தேள், விருச்சிகவிராசி.

தேறல்—கள், தங்கல், துணிவு, நிச்சயம், வியங்கோண்முற்று.

தேறு — தேற்றுமரம், தேறென்னேவல்.

தேற்றம்—கருமமுடிக்குந்துணிவு, நிச்சயம்.

தேற்றல்—தேற்றுதல், வியங்கோண்முற்று.

தேனர்—திருடர்.

தேனு—எருமை, களவு, குதிரை, தேவப்பசு, பசு.

தேன்—கள், பெண்வண்டு, வண்டு, வாசனை.

தை

தை—ஓரெழுத்து, ஓர்மாதம், தையென்னேவல், பூசநாள், மகரராசி.

தைதல்—அலங்கரித்தல்.

தைத்தல்—துன்னல்.

தைத்தியமந்திரி—சுக்கிரன்.

தைத்தியர்—அசுரர்.

தைத்திரியம்—இரண்டாம்வேதம்.

தைப்பை—சட்டை, வினைமுற்று.

தையல்—அழகு, பெண், வியங்கோண்முற்று.

தைவரல்—அடிவருடல், வியங்கோண்முற்று.

தொ

தொகல்—கூடல், வியங்கோண்முற்று.

தொகுதி—கூட்டம், திரட்சி.

தொகுத்தல்—கூட்டல்.

தொகை—கூட்டம்.

தொக்கு—உடல், தோல்.

தொங்கல் — ஆண்மயிர், ஆபரணத்திற்றொங்கணி, காதணி, தூங்கங்கள், பீலிக்குடை, பூமாலை, மயிற்றோகை, வியங்கோண்முற்று, வெண்குடை.

தொடக்கம்—ஆதி.

தொடங்கல்—துவக்கல், வியங்கோண்முற்று.

தொடர்—சங்கிலி, தொடரென்னேவல். பஞ்சினூல், பழமை, பிசின், பூமாலை, விலங்கு.

தொடர்ச்சி — தொடர்பு, பூங்கொத்து, மலர்த்திரள்.

தொடர்தல்—கட்டல், தேடல்.

தொடர்ந்தோர்—மித்திரர்.

தொடர்பு—உறவு, சிநேகம், பழமை, பா, முறைமை, வினையெச்சம்.

தொடலை—மகளிர்விளையாட்டு, மாலை, விளையாட்டு.

தொடல்—சார்தல், தீண்டல், தோண்டல், பிடித்தல், வியங்கோண்முற்று.

தொடி—ஒருபலம், கங்கணம், கைவளை.

தொடு — தொடுவென்னேவல், தோட்டம், மருதப்பூமி, வஞ்சம்.

தொடுக்கம்—பொன்.

தொடுதல்—தீண்டல், தோண்டல்.

தொடுதோல்—செருப்பு.

தொடுத்தல்—கட்டல், பற்றல், வளைத்தல்.

தொடுபதம்—சோறு.

தொடுப்பு—கலப்பை, தொடுத்தல்,வெறும்புறங்கூறல்.
தொடுவு—கொல்லை.
தொடை — அம்பு, சுவர்ப்புறத்துநீண்டவுத்திரம்,செய்யுளுறுப்பிலொன்று, தொடை, நாணி, பூமாலை, மதிற்சுற்று.
தொடையல்—தொடுத்தமாலை, மாலை, வாசிகை.
தொட்டல்—தீண்டல், தோண்டல்.
தொட்டி—தொட்டி.
தொட்டியம்—ஓர்கருநூல்.
தொட்டில்—தொட்டில்.
தொண்டகம்—குறிஞ்சிநிலப்பறை.
தொண்டலம்—யானைத்துதிக்கை.
தொண்டி—ஓரூர், கள்.
தொண்டு—அடிமை, ஒன்பது, பழமை.
தொண்டை — ஆதொண்டைச்செடி, கழுத்து, கோவைச்செடி, யானைத்துதிக்கை.
தொத்து—அடிமை, பழமை, பூங்கொத்து.
தொந்தம்—இரண்டு, சலஞ்சாதித்தல்.
தொந்தி — தொந்தியென்னேவல், வயிறு.
தொப்பி—கள்.
தொப்பை—தொந்தி.
தொயில்—தொய்யில்.
தொய்யகம்—தலைப்பாளை.
தொய்யல் — அகமகிழ்ச்சி, இன்பம், உழவு, சேறு, துன்பம்.
தொய்யில்—உழுநிலம், சாந்தினலுடலிலிடுங்கோலம்.
தொலை — உவமை, தொலையென்னேவல்.
தொலைதல்—கெடுதல்.
தொலைத்தல்—கொல்லல்.
தொலைவு—தோல்வி.
தொல்லை—பழமை.
தொழல்—தொழுதல், வியங்கோண்முற்று.
தொழில்—செயல்.
தொழு — இரேவதிநாள், தொழுமரம், தொழுவென்னேவல்,பசுக்கொட்டம்.
தொழுகுலத்தோர்—அந்தணர்.
தொழுகை—தொழுதல்.
தொழுதல்—கும்பிடுதல், வணங்கல்.
தொழுதி—கூட்டம், திரட்சி, பறவைக்கூட்டத்தொலி.
தொழுத்தை—வசவி.
தொழுப்பு—உழுதொழில்வளைப்பு.
தொழும்பர்—அடிமைகள்.
தொழும்பு—அடிமை.
தொழுவம்—ஆனிலை, வினைமுற்று.
தொழுவர்—தொழிற்செய்வோர், மருதநிலமாக்கள்.
தொளி—சேறு.
தொள்ளம்—சேறு, தெப்பம்.
தொள்ளல்—துளைத்தல், வியங்கோண்முற்று.
தொள்ளி—குழைசேறு.
தொள்ளை—துளை, துளையுடைப்பொருள், மரக்கலம்.
தொறு—அடிமை, கூட்டம், தொழிற்பயில்வு, பசுக்கூட்டம், பொலிவு.
தொறுவர்—இடையர்.
தொறுவியர்—இடைச்சிகள்.
தொறுவு — அடிமை, செய்தொழில், பசுக்கூட்டம்.

தொனி—ஒலி, தொனியென்னேவல்.
தொனித்தல்—ஒலித்தல்.
தொன்மரம்—ஆலமரம்.
தொன்மை — எண்வகைவனப்பினு ளொன்று, பழமை.
தொன்று—பழமை.
தொன்னீர்—கடல்.

தோ

தோகம்—சிறுமை.
தோகை—இறகு, மயில், மயிற்றோகை, முன்றானை, வால், விருதுக்கொடி.
தோக்கை—சீலை, மேற்போர்வை.
தோசை—அப்பவர்க்கம்.
தோடகம்—தாமரை.
தோடி—ஓரிராகம்.
தோடு—காதணி, கூட்டம், தாழை, தெங்கு, பனை, பூவிதழ்களினேடு.
தோட்கோப்பு—கட்டுச்சோறு.
தோட்சுமை—காவடி.
தோட்டம்—கொல்லை.
தோட்டி—அழகு, கதவு, சூழ்கழியிருக்கை, யானைக்குடாரி, வாயில்.
தோட்டிமை—ஒற்றுமை.
தோணி—அம்பு, இரேவதிநாள், சேறு, நீர், மதிலுறுப்பு, மரக்கலம்.
தோண்டல்—அகழ்தல்,முகத்தல், வியங்கோண்முற்று.
தோண்டான்—கோணய்.
தோண்டி—சிறுபானை, வினையெச்சம்.
தோண்மேல்—பிடரி.
தோதகம்—வஞ்சகம்.
தோத்திரம்—துதித்தல்.
தோப்பு—சோலை.
தோமரம்—எறியாயுதம், கைவேல்,பெருஞ்சவளம்.
தோம்—குற்றம்.
தோயம்—நீர்.
தோயல்—கலத்தல், குளித்தல்.
தோய்த்தல்—நனைத்தல்.
தோய்வு—சார்தல், தோய்தல்.
தோரணம்—தலைவாசலின் வாயில், தெருவிற்கட்டுந்தோரணம்.
தோரி—சோறு.
தோரை—இரத்தம், ஓர்வகைநெல், சரமணிக்கோவை, மூங்கிலரிசி, விரலிறை.
தோலாமை—தோல்வியின்மை.
தோல் — அழகு, எண்வகைவனப்பினு ளொன்று, சொல், துருத்தி, தோலாற்செய்தகேடகம், தோலென்னேவல், தோல், யானை.
தோல்வு—தோல்வி.
தோழம்—தொழுவம்.
தோழன்—பாங்கன்.
தோழி—பாங்கி.
தோளி—ஒருவகைச்சிவிகை, நீலி.
தோள்—கை, புயம்.
தோற்பரம்-தோலாற்செய்தகேடகம்.
தோற்றம்—ஏற்றமொழி, சொல், பிறப்பு, மகன், வலி.
தோற்றரவு—தோற்றல்.
தோற்றல்—தோல்வி, தோன்றல், பிறத்தல், முளைத்தல், வியங்கோண்முற்று.
தோற்றுவித்தல்—உண்டாக்கல்.
தோற்றுன்னர்-சக்கிலியர், செம்மார்.
தோன்றல் — ஆண்மகன், இராசா, தமையன், பெருமையிற் சிறந்தோன்,

மகன், முல்லைத்தலைவன், வியங்கோண்முற்று.
தோன்றி—இரத்தம், காந்தள், செங்காந்தள், வினையெச்சம்.
தோன்றிகர்—செட்டிகள்.
தோன்றுதல்—பிறத்தல், மூளைத்தல்.

தௌ

தௌதம்—வெள்ளி.
தௌரிதகம்—குதிரைவட்டமாய்த்திரும்பல்.
தௌவல்—கெடுதல், வியங்கோண்முற்று.
தௌவை—அக்காள், தாய், மூதேவி.

ந

நகம்—உகிர், பூமி, மரம், மலை.
நகரம்—இராசமனை, ஓரெழுத்து, மருதநிலத்தூர், மருதப்பதி.
நகர்—நகரென்னேவல், மருதநிலத்தூர், வீடு.
நகாயுதம்—சிங்கம்.
நகிலம்—முலை.
நகுதல்—இகழ்தல், ஒளிவிடுதல், சிரித்தல்.
நகுலம்—கீரி.
நகை—ஆபரணம், இகழ்ச்சி, இன்பம், எயிறு, ஒளி, களிப்பு, சிரிப்பு, நகையென்னேவல், பல், பூவரும்பு, மலர்ச்சி.
நகைச்சொல்—சிரித்துப்பேசல்.
நகைத்தல்—சிரித்தல், நிந்தித்தல்.
நக்கல்—நக்குதல், வியங்கோண்முற்று.
நக்கன்—அருகன், சிவன், நிருவாணி.
நங்கை—பெண்ணிற்சிறந்தாள்.
நசித்தல்—கெடுத்தல்.
நசை—ஆசை, ஒழுக்கம்.
நசைநர்—நண்பர்.
நச்சல் — வியங்கோண்முற்று, விரும்பல்.
நச்சு—ஆசை, நச்சென்னேவல், விடம்.
நச்சுதல்—ஆசைப்பெருக்கம்.
நஞ்சு—விடம்.
நடத்தல்—செலுத்தல், போகல்.
நடம் — ஓரிராகம், கூத்து, தாளவொத்தினடிப்பது.
நடர்—நாடகர்.
நடலை—துன்பம், நடுக்கம், பொய், வஞ்சனை.
நடல்—நடுதல், வியங்கோண்முற்று.
நடவை—கடவுமரம், வழி.
நடனம்—கூத்து.
நடனர்—கூத்தர்.
நடி — நடியென்னேவல், நாடகக்கணிகை, பெருமை.
நடித்தல்—ஆடல்.
நடு — இடை, நடுவென்னேவல், நீதி, பூமி.
நடுக்கம்—நடுங்கல்.
நடுங்கல் — நடுங்குதல், நோய், வியங்கோண்முற்று.
நடுதல்—நடல்
நடுநாள்—சித்திரைநாள்.
நடுப்பகல்—மத்தியானம்.
நடுவன்—நமன்.
நடை—ஒழுக்கம், கூத்து, செல்வம், வழி.
நடைப்பரிகாரம்—பலபண்டம்.
நட்டபாடை—ஓர்பண்.
நட்டம்—கூத்து, கேடு.

நட்டல்—உறவாடல், நடுதல்.
நட்டுவன்—ஆட்டுவோன்.
நட்டோர்—உறவோர்.
நட்பு—உறவு, சிநேகம்.
நணுகல்—கிட்டல்,வியங்கோண்முற்று.
நணுகுதல்—சார்தல்.
நண்டு—கர்க்கடகவிராசி, நண்டு.
நண்ணலர்—பகைவர்.
நண்ணல்—கிட்டல், சார்தல்,வியங்கோண்முற்று.
நண்ணார்—பகைவர்.
நண்ணுநர்—மித்திரர்.
நண்பகல்—மத்தியானம்.
நண்பன்—குறிஞ்சிநிலத்தலைவன், தோழன், புருடன்.
நண்பு—நட்பு.
நதம்—மேற்கோடுமாறு.
நதி—கிழக்கோடுமாறு.
நதிசரம்-ஆற்றுச்சார்பிற்பிறந்தயானை.
நதிபதி—கடல்.
நதுத்தல்—அவித்தல்.
நத்தமாலம்—புன்கமரம்.
நத்தம்—இராத்திரி, இருள், ஊர், சங்கு, நத்தை, புன்கமரம்.
நத்து—சங்கு.
நத்தை—கருநந்து.
நந்தகோபன்—இடையரரசன்.
நந்தநந்தனன்—கண்ணன்.
நந்தர்—இடையர்.
நந்தல்—ஆக்கம், கெடுதல், நிந்தை,வியங்கோண்முற்று.
நந்தனம்—இந்திரன்பூந்தோட்டம்,ஓராண்டு, பூந்தோட்டம்.
நந்தனவனம்—பூந்தோட்டம்.
நந்தனன்—மகன்.
நந்தனி—மகள்.
நந்தன்—ஓரரசன், நந்தகோபன்.
நந்தி — அட்டாதசவுபபுராணத்தொன்று, இடபவிராசி, எருது, ஓரரசன், சிவன், சிறுபறை, செக்கான், வினையெச்சம்.
நந்தியாவட்டத்தாமன் — துரியோதனன்.
நந்தியாவர்த்தம்—நந்தியாவட்டம்.
நந்திகேச்சுரன்—சிவனூர்தி, சிவன்.
நந்து—சங்கு, நத்தை.
நந்துதல்—ஆதல், கெடுதல்.
நந்தை—கொத்தான்செடி, சந்திரன்முதற்பக்கம்.
நபம்—ஆகாயம், ஆவணிமாதம்.
நபுஞ்சகம்—பேடு.
நபோமணி—சூரியன்.
நமர்—சுற்றத்தார்.
நமன்—இயமன், சுற்றத்தான்.
நமை—ஓர்மரம்.
நம்—சாரியை, (உ-ம். எல்லாநம்மையும்.)
நம்பல்—ஆசைப்பெருக்கம், நம்புதல், வியங்கோண்முற்று.
நம்பன்—சிவன்.
நம்பி—அரசமாதைப்பார்ப்பானிராக்கதமணஞ்செய்யப்பிறந்துவிட்டுணுவையருச்சிப்பான், ஆணிற்சிறந்தவன்,வினையெச்சம்.
நம்பு—ஆசை, நம்பென்னேவல்.
நயக்கன்—நாய்.
நயச்சொல்—சிரித்துப்பேசல்.
நயத்தல்—ஆசைப்பெருக்கம்.
நயந்தோர்—சிநேகிதர்.

நயப்பு—ஆசை.
நயப்புணர்வு—கண்ணேட்டம்.
நயம் — இன்பம், உபசாரம், நன்மை, நீதி.
நயவர்—சிநேகிதர்.
நயனம்—கண்.
நயன்—இன்பம், நன்மை, பயன், மகிழ்ச்சி.
நரகம்—பாதாளம்.
நரகர்—பாதாளலோகத்தார்.
நரகு—நரகம்.
நரசிங்கம்-விட்டுணுபத்தவதாரத்தொன்று.
நரதேவன்—அரசன்.
நரந்தம்—கத்தூரிமிருகம், காக்கை, நாரத்தை, வாசனை.
நரபதி—அரசன்.
நரம்பு—இசை, நாடி, நாணி.
நரர்—மனிதர்.
நரலல்—ஒலித்தல், பேசலாலெழுமொலி, வியங்கோண்முற்று.
நரலை—கடல்.
நரல்—செத்தை, நரலென்னேவல்.
நரல்வு—உள்ளோசை.
நரவாகனன்—குபேரன்.
நரற்றல் — ஒலித்தல், வியங்கோண்முற்று.
நரன்—மனிதன்.
நராந்தம்—காக்கை.
நராலை—நரகம்.
நரி—நரி.
நரிப்பு—இகழ்வு.
நரிப்புறம்—மிருகசீரிடம்.
நரேசன்—அரசன்.
நரேந்திரன்—அரசன்.
நரை—இடபவிராசி, எருது, சரை, சாமரம், நரையென்னேவல், நாரை, வெண்மை.
நரைத்தல்—மயிர்முதலியவெளுத்தல்.
நலம்—அழகு, இன்பம், உபகாரம், கண்ணேட்டம், நன்மை.
நலன்—இன்பம்.
நலி—நலியென்னேவல், நோய்.
நலிதல்—சரிதல், மெலிதல்.
நலிவு—அழிவு.
நல்கல்—ஆசைபெருக்கம், ஈதல், வியங்கோண்முற்று.
நல்குரவு—தரித்திரம்.
நல்கூர்ந்தோன்—தரித்திரன்.
நல்லம்—கறுப்பு.
நல்லவர்—அறிஞர், சினேகிதர்.
நல்லார்—அறிஞர், மாதர்.
நல்லாள்—பெண்.
நல்லோர்—அறிஞர்.
நல்வினை—அறம்.
நவநீதம்—வெண்ணெய்.
நவம்—ஒன்பது, கார்காலம், கேண்மை, சிநேகம், புதுமை,
நவரோசு—ஓரிராகம்
நவியம்—கோடாலி, புதுமை, மழு.
நவிரம்—ஆண்மயிர், உச்சி, தலை, புன்மை, மயில், மருதயாழ்த்திறம், மலை, வாள்.
நவிர் — ஆண்மயிர், மருதயாழ்த்திறம், வாள்.
நவிலல் — கற்றல், சொல்லல், வியங்கோண்முற்று.
நவிழ்த்தல்—அவித்தல்.
நவிறல்—சொல்லல்.

நவீனம்—புதுமை.
நவை—இகழ்ச்சி, குற்றம்.
நவ்வி — அத்தநாள், அழகு, இளமை, தோணி, மான்.
நவ்வு—மரக்கலம்.
நழுவல் — நழுவுதல், வியக்கோண்முற்று.
நள—ஓராண்டு.
நளகூபரன்—குபேரன்மகன்.
நளம்—அகலம், தாமரை.
நளன்—முதலெழுவள்ளலிலொருவன்.
நளி—அகலம், குளிர்ச்சி, கூட்டம், செறிவு, தேள், பெருமை.
நளிர்—குளிர், நண்டு, பெருமை.
நளினச்சொல்—சிரித்துப்பேசல்.
நளினம்—தாமரை.
நளினி—இலக்குமி, ஓர்பண், குளம்.
நளுத்தை—ஓர்பண்.
நள் — உச்சிப்பொழுது, திருவோணம், நடு, நள்ளென்னேவல்.
நள்ளல்—நட்டல், வியங்கோண்முற்று.
நள்ளார்—பகைவர்.
நள்ளி-உறவு, கடையெழுவள்ளலிலொருவன், கர்க்கடகவிராசி, நண்டு.
நள்ளுநர்—சிநேகிதர்.
நறவம் — அனிச்சமரம், குங்குமமரம், ஞாழல், தேன், வாசனை.
நறவு—கள், குங்குமம், தேன், வாசனை.
நறு—கள், வாசனை.
நறுமை—நன்மை, வாசனை.
நறுவிலி—ஓர்மரம்.
நறை-கள், குற்றம், நறும்புகை, வாசனை.
நற்கோள்—புதன், வியாழம், வெள்ளி.
நற்செங்கல்—காவிக்கல்.
நனந்தலை—உச்சி, நடு.
நனவு—அகலம், களன், தெளிவு.
நனி—இடங்கழிமை, பெருமை, மிகுதி.
நனை — கள், நனையென்னேவல், பூவரும்பு.
நனைதல்—நனையல்.
நனைத்தல்—ஈரமாக்கல்.
நனைவு—நனைதல்.
நன்கு—அழகு, நன்மை, மிகுதி.
நன்மை—உபகாரம்.
நன்றி—நன்மை.
நன்று—நன்மை, பெருமை.
நன்னயம்—உபசாரச்சொல், நினைவு.
நன்னர்—நன்மை.
நன்னிலை—ஒழுக்கம், சுகம், தவம்.

நா

நா—ஓரெழுத்து, நடு, நாக்கு.
நாகநாதன்—தேவேந்திரன்.
நாகம் — ஆகாயம், ஒலி, கருங்குரங்கு, காரீயம், குரங்கு, ஞாழல், தேவலோகம், நற்சிலை, பாம்பு, புன்னைமரம், மலை, யானை,
நாகரம்—ஒருலிபி, சுக்கு.
நாகரி—குருக்கத்தி.
நாகரிகம்—கண்ணோட்டம்.
நாகரிகர்—காமுகர், நகரப்பதியோர்.
நாகலோகம்—கீழுலகத்தொன்று, தேவலோகம்.
நாகவல்லி—வெற்றிலைக்கொடி.
நாகன்—ஓர்வாயு.
நாகாசனன்—கருடன்.
நாகு — இளமரம், இளமை, சங்கு, நத்தை, புற்று, பெண்ணெருமை, பெண்மரை, பெண்மீன்.

நாக்கு—நா.

நாங்கூழ்—நாகப்பூச்சி.

நாசமிலி—சிவன்.

நாசம்—சாவு.

நாசன்—நமன்.

நாசி—மூக்கு.

நாசிகை—மூக்கு.

நாஞ்சில்—கலப்பை, மதிலுறுப்பு.

நாஞ்சிற்படையோன்—பலபத்திரன்.

நாடகத்தமிழ்—முத்தமிழிலொன்று.

நாடகம்—கூத்து.

நாடகியர்—நாடகர்.

நாடல்—தேடல், வியங்கோண்முற்று.

நாடன்—கார்த்திகைநாள்.

நாடி—ஆண்மயிர், உட்டுளை, நரம்பு, மூக்கு, யாழினரம்பு, வினையெச்சம்.

நாடு — இடம், இடனுடைமை, நாடென்னேவல், பக்கம், பூமி, பூவுலகப்பொது.

நாட்டம்—ஓர் பண், கண், வாள்.

நாட்டல்—தாபித்தல், வியங்கோண்முற்று.

நாட்டியம்—கருத்து, குறிப்பு, கூத்து.

நாட்டை—ஓர் பண்.

நாட்பு—வலி.

நாணம்—வெட்கம்.

நாணல்—நாணற்புல், நாணுதல், வியங்கோண்முற்று.

நாணி—வில்விநாணி, வினையெச்சம்.

நாணுகம்—குதிரை.

நாண்—கயிறு, நாணென்னேவல், வெட்கம்.

நாதம்—ஓசை.

நாதன்—அரசன், அருகன், எப்பொருட்குமிறைவன், கடவுள், குரு, சிவன் மூத்தோன்.

நாந்தகம்—வாள்.

நாபி—ஓர்மருந்து, கொப்பூழ்.

நாப்பண் — தேர்நடு, நடு, யாழினுறுப்பு.

நாமகள்—சரச்சுவதி.

நாமதேயம்—பெயர்.

நாமம்-பெயர், வைட்டுணுவரிடுநாமம்.

நாம்—அச்சம், தன்மைப்பெயர்.

நாம்பல்—இளைத்தல், வியங்கோண்முற்று.

நாம்பு-நாம்பென்னேவல், மெல்லியது.

நாயகம்—தலைமை.

நாயகன் — எப்பொருட்குமிறைவன், கடவுள், சிவன், தலைவன்.

நாயகி—பார்வதி, மனைவி.

நாயன்—இராசா, சிவன்.

நாயில்—மதில்.

நாயிறு—ஓர்கிழமை, சூரியன்.

நாய் — சுனகன், தென்மேற்றிசைப்பாலன்குறி.

நாய்கர்—வணிகர்.

நாரங்கம்—நாரத்தை.

நாரசிங்கம் — அட்டாதசவுபபுராணத்தொன்று.

நாரணன்—விட்டுணு.

நாரணி—துர்க்கை.

நாரதம்—மேகம்.

நாரதன்—ஓரிருடி.

நாரதீயம் — அட்டாதசபுராணத்துமட்டாதசவுபபுராணத்துமொன்று.

நாரத்தை—நாரத்தை.

நாரம்—அன்பு, கயிறு, நாரத்தை, நீர், பாசி.

நர்ராசம்—சலாகை.

நாராயணகவுளம்—ஓரிராகம்.

நாராயணம் — அரசமரம், ஒருபநிடதம், மீன்.

நாராயணன்—அயன், அரன், அரி, சந்திரன், வருணன்.

நாராயணி—இலக்குமி, ஓரிராகம், கங்கை, சத்தமாதர்களிலொருத்தி, துர்க்கை.

நாரி—நாணி, பன்னாடை, பார்வதி, பெண், வாசனை.

நாரிகேளம்—தென்னமரம்.

நாரை—நீர்வாழோர்புள்.

நார்—அன்பு, கயிறு.

நாலல்—தாழ்தல், தொங்கல், வியங்கோண்முற்று, விழுதல்.

நாலி—முத்து.

நால்வாயன்—இந்திரன், விநாயகன்.

நால்வாய்—யானை, வினைமுற்று.

நாவணம்—உண்ணாக்கு.

நாவலர்—கற்றவர், புலவர்.

நாவல்-ஓர்மரம், நெற்போர்தெழிக்கும்பகட்டினங்களைத்துரப்பதோர்சொல்.

நாவாய்—இரேவதிநாள், மரக்கலம்.

நாவி—கத்தூரிமிருகம்.

நாவிதன்—கார்த்திகைநாள், நாவிதன், பூரநாள்.

நாவிப்பிள்ளை—ஓர்மிருகம்.

நாழி — அளக்குநாழி, உட்டுளை, பூரட்டாதி.

நாழிகை—உத்திரட்டாதி, நாழிகை.

நாளம்—உட்டுளை.

நாளி—கள், நாய்.

நாளிகம்—வள்ளைச்செடி.

நாளிகேளம்—தென்னமரம்.

நாளினி—புளிப்புள்ளமாமரம்.

நாள்—அச்சுவினிமுதலிருபத்தேழுநாண்மீன், காலம்.

நாறல்—தோன்றல், மணத்தல், முளைத்தல்.

நாறு—நாறென்னேவல், பயிர்முளை.

நாற்சந்தி—நாற்றெருக்கூடுமிடம்.

நாற்றம்—கள், வாசனை.

நானமா—கத்தூரிமிருகம்.

நானம்—கத்தூரி, கவரிமா, குளித்தல், வாசனை.

நானா—பல.

நானாவிதம்—பலவிதம்.

நான்மருப்பியானை — தேவேந்திரன்யானை.

நான்முகன்—அருகன், பிரமன்.

நான்முகன்கிழத்தி—சரச்சுவதி.

நான்முகன்வாழ்நாள்—கற்பம்.

நி

நிகண்டு—ஓர்நூல், நிச்சயம்.

நிகமம்—நகரம், வேதம்.

நிகர—உவமைச்சொல், வினையெச்சம்.

நிகரம்—ஓரெழுத்து, கூட்டம்.

நிகர்—உவமை, ஒளி, நிகரென்னேவல்.

நிகர்த்தல்—உவமித்தல், பொருதல்.

நிகர்ப்பு—ஒப்பு, போர்.

நிகலம்—தோண்மேல்.

நிகழ்ச்சி—நிகழ்தல்.

நிகழ்தல்—ஒளிசெய்தல், நடத்தல்.

நிகளம்—கால்விலங்கு, சங்கிலி, யானைச்சங்கிலி.

நிகாசம்—உவமை.

நிகாதன்—வஞ்சனையாளன்.

நிகாயம் — கூட்டம், மருதநிலத்தூர், வீடு.
நிகாரணம்—கொலை.
நிகாரணன்—கொலைசெய்வோன்.
நிகாரம்—பனி.
நிகிலம்—எல்லாம்.
நிகுஞ்சம்—புதர்வீடு, மலைக்குகை.
நிகும்பிலை — இந்திரசித்துயாகம்பண்ணினவிடம்.
நிகேதனம்—தேவர்கோயில், மருதநிலத்தூர், வீடு.
நிசம்—மெய்.
நிசா—இராத்திரி.
நிசாகரன்—சந்திரன்.
நிசாசரர்—அசுரர், இராக்கதர்.
நிசாசரி—கூகை.
நிசாதனம்—இடம், மெய்.
நிசாந்தம்—விடியற்காலம், வீடு.
நிசாபதி—சந்திரன்.
நிசாமணி—மின்மினி.
நிசாரணம்—கொலை.
நிசாரணன்—கொலைசெய்வோன்.
நிசானம்—ஓர்சட்பறை.
நிசி—இரா, இருள், பொன், மஞ்சள்.
நிசிசரர்—அசுரர்.
நிசிதம்—கூர்மை.
நிசிதர்—அசுரர்.
நிச்சயம்—மெய்.
நிச்சிந்தன்—அருகன்.
நிட்தம் — அட்டபருப்பதத்தொன்று, ஓர்தேசம்.
நிடேதனம்—கொலை.
நிடேதனன்—கொலைசெய்வோன்.
நிட்சேபம்—புதையல்.
நிட்டை—மனமசைவற்றிருத்தல்.
நிணத்தல் — கொழுத்தல், முடைதல், வியங்கோண்முற்று.
நிணம்—கொழுப்பு.
நிதம்பம்—கடிதடம், மலைப்பக்கம்.
நிதரிசனம்—திருட்டாந்தம்.
நிதனம்—சாவு.
நிதானம்—ஆதிகாரணம், கடவுண்மணிக்குநவமணிக்கும்பொது, நிச்சயம், படை, பொன்.
நிதானன்—கடவுள்.
நிதி—ஆபரணத்திற்றெங்கணி, கடவுண்மணிக்குநவமணிக்கும்பொது, நிறைவு, பொன்.
நிதிக்கிழவன்—குபேரன்.
நிதிபதி—குபேரன்.
நிதியம்—கடவுண்மணி, பொன்முதலியபதினான்குவகைப்பொது.
நிதியோன்—குபேரன்.
நித்தம்—எப்போழ்தும்.
நித்தன்—அருகன், கடவுள், சிவன்.
நித்தியம்—எப்போழ்தும்.
நித்தியவிதி—ஓமகுண்டம்.
நித்திலம்—முத்து.
நிநதம்—ஒலி.
நிநாதம்—ஒலி.
நிந்தித்தல்—இகழ்தல்.
நிந்தை—இகழ்ச்சி.
நிபம்—உவமை, காரணம்.
நிபிடம்—நெருக்கம்.
நிபுணர்—அறிஞர், மிகவல்லோர்.
நிபுணன் — அறிஞன், புதன், மிகவல்லோன்.
நிமம்—பிடர்.

நிமலன்—கடவுள்.

நிமி—சூரியகுலத்தோரரசன்.

நிமிட்டம்—காலநுட்பம்.

நிமித்தம்—அடையாளம், காரணம்.

நிமித்தர்—வருங்காரியஞ்சொல்வோர்.

நிமித்திகன்—புரோகிதன்.

நிமிர்தல்—உயர்ச்சி, ஓடல், சோறு, நெருங்குதல், வளர்தல்.

நிம்பம்—வேம்பு.

நியக்குரோதம்—அகலம், ஆலமரம்.

நியதி—ஊழ், செய்கடன்.

நிபதுதல்—விடுதல்.

நியமம்—அட்டயோகத்தொன்று, இடம், கடைவீதி, செய்கடன், தெரு, தேவர்கோயில், நிச்சயம், நெடுந்தெரு, மருதநிலத்தூர், முறைமை.

நியமித்தல்—பிறப்பித்தல்.

நியர்ப்புதம்—பதிஞயிரங்கோடி.

நியாசம்—வேம்பு, வைப்பு.

நியாதம்—வேம்பு.

நியாயம்—இடம், நீதி.

நியுதம்—நூருயிரம்.

நிரஞ்சனன்—அருகன், கடவுள்.

நிரந்தம்—இடங்கழிமை.

நிரந்தரம்—இடமின்மை, எப்போழ்தும், குரங்கு, நெருக்கம்.

நிரந்தரன்—கடவுள்.

நிரப்பு — குறைபாடு, தரித்திரம், நிரப்பென்னேவல், நிறைவு, மடிமை.

நிரப்போர்—இரப்போர்.

நிரம்பரன்—அருகன், கடவுள்.

நிரம்பல் — நிறைதல், வியங்கோண்முற்று.

நிரம்பாமென்சொல்—மழலைச்சொல்.

நிரயம்—நரகம்.

நிரல்—ஒழுங்கு.

நிராகம்—உடலின்மை.

நிராகாரம்—ஆகாயம், நீங்கல்.

நிராசனம்—இருப்பின்மை.

நிராதரம் — ஆசையின்மை, ஆதாரமின்மை.

நிராமயன்—கடவுள், நோயிலான்.

நிராயுதன்—அருகன், ஆயுதமில்லான்.

நிரியாணம்—சாவு, யானைக்கடைக்கண்.

நிருணமன்—அருகன், கடவுள்.

நிருதர்—இராக்கதர்.

நிருதி— தென்மேற்றிசைப்பாலன், மூதலெழுவள்ளலிலொருவன்.

நிருத்தமாது—நாடகக்கணிகை.

நிருத்தம்—கூத்து.

நிருத்தர்—கூத்தர்.

நிருத்தன்—நிருத்தஞ்செய்வோன்.

நிருபன்—அரசன்.

நிருமதம்—மதமொழிந்தயானை.

நிருமலம்—மாசின்மை.

நிருமலன்—அரன், அருகன், கடவுள்.

நிருமாணம்—நிருமித்தல்.

நிருமாலியம் — பூசித்தூக்கழித்தபொருள்.

நிருமிதம்—நிருமாணம்.

நிருமித்தல்—நிருமாணம்.

நிருவாணம் — அம்மணம், தண்மை, மோக்கம்.

நிரூபணம்—நிரூபித்தல்.

நிரூபன்—கடவுள்.

நிரூபித்தல்—ஆராய்தல்.

நிரை—ஒழுங்கு, ஒரசை, நிரையென்னேவல், பசுக்கூட்டம், பசுப்பொது, படைமுன்னணி, படைவகுப்பு.

நிரைதல்—வரிசையாதல்.

நிரைத்தல்—ஒலித்தல், நிரல்படவைத்தல்.

நிர்க்குணன்—கடவுள்.

நிர்க்குண்டி—வெண்ணொச்சி.

நிர்ப்புதம்—ஓரெண்.

நிர்விகாரி—கடவுள்.

நிலப்பிளப்பு—கமர்.

நிலமகன்—செவ்வாய்.

நிலம்—இடம், பூமி.

நிலம்பி—கொசுகு.

நிலயம்—கூத்து, தேவர்கோயில், பூமி, மருதநிலத்தூர்.

நிலவல் — ஒளிசெய்தல், வியங்கோண்முற்று.

நிலவு—ஒளி, சந்திரன், நிலவென்னேவல்.

நிலா—ஒளி, சந்திரன், வினைமுற்று, வினையெச்சம்.

நிலாமுகி—சகோரம்.

நிலாமுற்றம் — வீட்டின்மேனுலாவும்வெளி.

நிலை—ஆபரணத்திற்ருெங்கணி, இடம், குணம், நிலையென்னேவல், பூமி, பொழுது, முறைமை.

நிலைத்தல்—நிலைபெறுதல்.

நிலைபெறுத்தல்—காத்தல்.

நிலைபெறுத்துகை—திதத்தாபகம்.

நிலைபேறு—தூண், மானம், மோக்கம்.

நிலைமை—குணம், மெய்.

நிலையகம்—மனை.

நிலையழிவு—தோல்வி.

நிவகம்—கூட்டம்.

நிவத்தல்—உயர்த்தல்.

நிவப்பு—உயர்ச்சி.

நிவர்தல்—ஓங்கல்.

நிவறல்—நுணுக்கம், மொய்த்தல்.

நிவாரணம்—நீங்கல், விடுத்தல்.

நிவிர்த்தி—துறவு.

நிவேசம்—வீடு.

நிவேசனம்—ஊர், வீடு.

நிவேதனம்—கொடுத்தல், சொல்லல்.

நிழலி—காற்று.

நிழல்—அருள், ஒளி, குளிர்ச்சி, சாயை, செல்வம், நிழலென்னேவல், நோய்.

நிழற்றல் — நிழல்செய்தல், நுண்மை, மென்சொல், வியங்கோண்முற்று.

நிறம்—ஒளி, குணம், மார்பு.

நிறுத்தல்—கொடாமை, நிலைப்படுத்தல், நிறுக்குதல்.

நிறுப்பான்—துலாவிராசி.

நிறுவல் — நிலைபெறுத்தல், வியங்கோண்முற்று.

நிறை—அழிவின்மை, துலாவிராசி, நிறையென்னேவல், நீர்ச்சால், நூறுபலம், மாட்சிமை, முறையினிலைமை, வரையறை.

நிறைசெல்வன்—குபேரன்.

நிறைதல்—நிறைவு, பெருகுதல்.

நிறைந்திடல்—நிறைதல்.

நிறைமொழியாளர்—சான்ருேர்.

நிறைவு—மாட்சிமை.

நிற்றல்—நிலை.

நினதம்—ஒலி.

நினைதல்—நினைத்தல்.

நினைத்தல்—நினைக்குதல்.

நினைப்பு—நினைவு.

நினைவு—கருத்து.

நின்று — அசைச்சொல், (உ-ம். அழல டைந்தமன்றத்தலந்தயராநின்ருர் நி ழலடைந்தேநின்னையென்றேத்த,) வி னையெச்சம்.

நீ

நீகம்—தவளை, மேகம்.

நீகாசம்—உவமை.

நீகாரம்—பனி.

நீகான்—மீகாமன்.

நீக்கம்—நீக்கல், நீளம்.

நீக்கல் — அகற்றல், கொல்லல், நீளல், மாறுபாடு, மாற்றல், வியங்கோண் முற்று.

நீங்கல் — நீங்குதல், பிரிதல், போகல், மாற்றல், வியங்கோண்முற்று.

நீசம்—ஈனம்.

நீசர்—கீழ்மக்கள்.

நீடல்—நீளல், வியங்கோண்முற்று.

நீடாணம்—கறி.

நீடு— நீளல், நீளென்னேவல், நெடும் பொழுது.

நீடுதல்—தாண்டல், நீளல்.

நீட்சி—நீளம்.

நீட்டல் — ஈதல், நீட்டுதல், வியங்கோ ண்முற்று.

நீட்டித்தல் — நெடும்பொழுது, முடித் தல்.

நீதம்—நீதி.

நீதி—நியாயம், மெய்.

நீதிநூலன்—அருகன்.

நீதிபரன்—கடவுள்.

நீதியறிந்தோர்—மந்திரிகள்.

நீத்தம்—வெள்ளம்.

நீத்தல்—ஒழுக்கம், துறவு, நீங்கல், பிரி தல்.

நீத்தவன்—அருகன்.

நீத்து—நீந்துபுனல்.

நீத்தோர்—முனிவர்.

நீந்தல் — கடத்தல், நீரினீந்தல், வியங் கோண்முற்று.

நீபம் — உத்திரட்டாதிநாள், கடப்பமர ம், வெண்கடம்பு.

நீப்பு—துறவு, பிரிவு.

நீமம்—ஒளி.

நீரம்—நீர்.

நீராழி—கடல்.

நீரிலாநிலம்—பாலைநிலம்.

நீரோருகம்—தாமரை.

நீர்—குணம், நீர், முன்னிலைப்பெயர்.

நீர்நாய்—நீர்நாய்.

நீர்நாள்—பூராடநாள்.

நீர்நிலை—குளம்.

நீர்மை—ஒப்புரவு, குணம்.

நீலகண்டன்—சிவன்.

நீலகிரி—அட்டபருப்பதத்தொன்று, அத் தமிக்குமலை.

நீலந்தர்—பாடுவேர்.

நீலம் — இருள், கருங்குவளை, கறுப்பு, காற்று, நஞ்சு, நீலநிறம், நீலமணி, பனைமரம்.

நீலவண்ணன்—விட்டுணு.

நீலன்—சனி.

நீலாம்பரன்—பலபத்திரன்.

நீலாம்புரி—ஓரிராகம்.

நீலி—அவுரி, கறுப்பு, காளி, துர்க்கை, பார்வதி, மேகவண்ணப்பூவுள்மரு தோன்றிமரம்.

நீலோற்பலம்—கருங்குவளை.
நீல்—காற்று, நீலம்.
நீவல்—தடவல், துடைத்தல், வியங்கோண்முற்று.
நீவாரம்—குளநெல்.
நீவான்—மீகாமன்.
நீவி—சீலை, கொய்சகம், வினையெச்சம்.
நீவியம்—சீலை.
நீழல்—ஒளி, நிழல், நோய்.
நீளம்—தூரம், நெடுமை.
நீளல்—ஓடல், தூரம், வியங்கோண்முற்று.
நீளிடை—சேய்மை.
நீள்—உயர்ச்சி, ஒளி, நீளென்னேவல்.
நீறணிந்தோன்—சிவன்.
நீறு — திருநீறு, நீறென்னேவல், பராகம்.

நு

நுகம்—நுகத்தடி.
நுகர்ச்சி—அனுபோகம், உண்டல்.
நுகர்தல்—அனுபவித்தல், புசித்தல், விழுங்கல்.
நுங்கல் — வியங்கோண்முற்று, விழுங்கல்.
நுசுப்பு—இடை.
நுடங்கல்—ஆடல், துவளல், முடங்கல், வியங்கோண்முற்று.
நுட்பம்—காலநுட்பம், நுண்மை.
நுணக்கம்—நுணங்கல்.
நுணங்கல்—துவளல், நுண்மை, முடங்கல், வியங்கோண்முற்று.
நுணங்கு — தேமல், நுணங்கென்னேவல், நுண்மை.
நுணலை—தவளை.
நுணல்—தவளைப்பேதம்.
நுணவு—தணக்கமரம், நுணாமரம்.
நுணவை—தணக்கமரம்.
நுணா—நுணாமரம்.
நுணித்தல்—குணம், நுணுக்கல்.
நுணுக்கம்—கூர்மை, நுண்மை.
நுணுக்கல்—நுண்மையாக்கல்.
நுணுங்கல்—நுண்மை, வியங்கோண்முற்று.
நுணுங்கு — நுணுங்கென்னேவல், நுண்மை.
நுண்ணிடை—இடை, பெண்.
நுண்ணியர்—மந்திரிகள்.
நுண்பொடி—புழுதி.
நுதலணி—சுட்டி.
நுதலல்—கருதல், குறித்தல், வியங்கோண்முற்று.
நுதல்—நுதலென்னேவல், நெற்றி, புருவம்.
நுதற்சுடிகை—சுட்டி.
நுதி—முனை.
நுதுத்தல்—அவித்தல்.
நுந்துதல்—தூண்டல்.
நுமன்—உம்மவன்.
நும்—சாரியை, (உ-ம். எல்லீர் நும்மையும்.)
நுரை—குமிழி, நுரை, நுரையென்னேவல், வெண்ணெய்.
நுரைத்தல்—நுரைக்குதல்.
நுவணம்—கல்விநூல், தினைமா, நுண்மை, பஞ்சிநூல்.
நுவணை — கல்விநூல், தினைமா, நுண்மை, பஞ்சிநூல்.

நுவலல்—சொல்லல், வியங்கோண்முற்று.
நுவல்—சொல், நுவலென்னேவல்.
நுவற்சி—சொல்லல்.
நுழை—நுண்மை, நுழையென்னேவல், நுழைவாயில், பலகணி.
நுழைத்தல்—நுழைவித்தல்.
நுளம்பு—கொசுகு, மின்மினி.
நுளை—ஈனம்.
நுளைச்சி—நெய்தனிலப்பெண்.
நுளையர்—நெய்தனிலமாக்கள்.
நுனி — நுண்மை, நுனியென்னேவல், முனை.
நுனித்தல்—கூர்மைசெய்தல்.
நுனை—முனை.

நூ

நூக்கல்—தள்ளல்,வியங்கோண்முற்று.
நூங்கு—பெருமை, மிகுதி.
நூதனம்—புதுமை.
நூதனன்—புதியோன்.
நூபம்—எருது.
நூபுரம்—காற்சிலம்பு, பாதகிண்கிணி.
நூலோர்—அறிஞர், பார்ப்பார், மந்திரிகள்.
நூல்—எண்ணெல், கல்விநூல், நூலென்னேவல், பஞ்சினூல்.
நூல்வல்லோர்—மந்திரிகள்.
நூவு—எள்.
நூழில்—குவிதல், கொடிக்கொத்தான், கொலை, படர்கொடி, யானை.
நூழை—நுண்மை.
நூறல்—அழித்தல்,வியங்கோண்முற்று.
நூறு—சதம், நூறென்னேவல்.
நூறை—மலங்குமீன்.
நூற்றல்—நூற்குதல்.
நூற்பா—அகவல், சூத்திரப்பா.
நூனம்—குன்றல், நிச்சயம்.
நூனூழி—நாடா.
நூன்முகம்—பாயிரம்.

நெ

நெகிழ்தல்—குழைதல், மலர்தல்.
நெஞ்சு—மனம், மார்பு.
நெடநெடெனல்—ஈரமெக்கொலிக்குறிப்பு.
நெடி—சிள்வண்டு.
நெடித்தல்—பொழுதுநீட்டித்தல்.
நெடியவட்டம்—மரவட்டணம்.
நெடியோன்—விட்டுணு.
நெடில்—நீளம், நெட்டெழுத்து, மூங்கில்.
நெடுங்கழுத்தல்—ஒட்டகம்.
நெடுந்துயில்—சாவு.
நெடுமை—நீளம், பெண்மயிர்.
நெடுமொழி—தன்மேம்பாடுரைத்தல்.
நெட்டி—நெட்டிச்செடி.
நெட்டில்—மூங்கில்.
நெட்டை—சதைகழிந்தவெலும்பு, நெடுமை.
நெய்—இரத்தம், சித்திரைநாள், நிணம், நெய், நெய்யென்னேவல்.
நெய்தல் — ஆடைமுதலியநெய்குதல், ஆம்பல், ஓர்நிலம்.
நெய்தற்பறை—சாபறை.
நெய்தை—பெருமை.
நெய்த்தோர்—இரத்தம்.
நெய்யரி—பன்னாடை.

நெய்யல் — நெய்தல், வியங்கோண்முற்று.

நெரிதரல்—ஓடல், வியங்கோண்முற்று.

நெரிதல்—சாய்தல்.

நெரித்தல்—நெரியச்செய்தல்.

நெரிவு—நெரிதல்.

நெருக்கம்—நெருங்கல்.

நெருக்கல்—நெருக்குதல், வியங்கோண்முற்று.

நெருங்கல்—உறுதிச்சொல், கொல்லல், செறிவு, வியங்கோண்முற்று.

நெருடல்—இழைமுதலியநெருடல், வியங்கோண்முற்று.

நெருநல்—முன்னைநாள்.

நெருப்பு—தீ.

நெரோலெனல்—ஒலிக்குறிப்பு.

நெல்—ஓர்பயிர்.

நெல்லி—நெல்லிமரம்.

நெளி — கைவிரலணி, நெளியென்னேவல்.

நெளித்தல்—நெளிதல்.

நெளிர்—பேசலாவெழுமொலி.

நெளிர்தல்—பேசலாவெழுமொலி.

நெறநெறெனல் — ஈரடிக்கொலிக்குறிப்பு.

நெறி—செவ்வை, நீதி, நெறியென்னேவல், வழி.

நெறித்தல்—செவ்வேநிற்றல்.

நெறியிலார்—கீழ்மக்கள்.

நெற்றி—நுதல், படைவகுப்பு.

நெற்று—பழமுதிர்ச்சி.

நென்னல்—முன்னைநாள்.

நே

நேசம்—நேயம்.

நேடல்—தேடல், வியங்கோண்முற்று.

நேத்திரம்—கண், பட்டுச்சீலை.

நேபாளம்—ஓர்தேசம்.

நேமம்—நியமம்.

நேமி—கடல், சக்கரம், தேருருளை, பூமி, மூங்கில், வட்டம்.

நேமிநாதன்—அருகன், கடவுள்.

நேமிப்புள்—சக்கரவாகப்புள்.

நேயம்—அன்பு, நன்மை, நெய்.

நேர—உவமைச்சொல்.

நேரம்—காலம்.

நேரலர்—பகைவர்.

நேரார்—பகைவர்.

நேரியன்—சோழன்.

நேரிவெற்பன்—சோழன்.

நேரிறை—சோழன்.

நேரேடம்—நாவன்மரம்.

நேரோடு—நாவன்மரம்.

நேர்—உடன்பாடு, உவமை, ஓரசை, செவ்வை, நீளம், நுட்பம், நேரென்னேவல், பாதி.

நேர்தல்—ஈதல், உடன்படல், எதிர்த்தல், கிட்டல், பொருதல், வேண்டல்.

நேர்ந்தார்—சிநேகிதர்.

நேர்பாடு—நீளம்.

நேர்பு—எழுச்சி, நீளம், வினையெச்சம்.

நேர்மை—நுண்மை.

நேர்வளம்—செவ்வழியாழ்த்திறம், பாலையாழ்த்திறம்.

நேர்வான்—சித்திரைநாள், வினையெச்சம்.

நை

நைசிகம்—ஓர்மருந்து, காக்கை.

நைதல்—இரங்குதல், கெடுதல், தளர்தல், வாடல்.

நைதிகை—முல்லைக்கொடி.

நைதெனல்—இரக்கக்குறிப்பு, மெலிவின்குறிப்பு.

நைமிசம்—ஓரரணியம்.

நைருதி—நிருதித்திசை.

நைவளம்—குறிஞ்சியாழ்த்திறம்.

நொ

நொ—ஓரெழுத்து, துன்பம், நோவென்னேவல், நோய்.

நொசிவு—நுண்மை, வருத்தம்.

நொச்சி—ஓர்செடி, சிற்றூர், தன்னரண் காப்பார்க்குமாலை, மதில்.

நொடி—காலநுட்பம், சொல், நொடியென்னேவல்.

நொடித்தல் — சொல்லல், நொடிக்குதல்.

நொடை—விலை, விற்றல்.

நொண்டல்—நொண்டுதல், வியங்கோண்முற்று, விழுங்கல்.

நொதி—பெருஞ்சேறு.

நொதுத்தல்—அவித்தல்.

நொதுமலர்—அயலோர்.

நொய்—நொய்மை.

நொய்தல்—நுண்மை.

நொய்தெனல்—சீக்கிரக்குறிப்பு.

நொய்மை—நொய்வு.

நொய்யெனல்—நுண்மையின்குறிப்பு.

நொய்வு—நொய்மை.

நொலையல்—அப்பவர்க்கம்.

நொவ்வு—நொய்மை.

நொள்கல்—அச்சக்குறிப்பு, முகத்தல், வியங்கோண்முற்று.

நொள்ளல்—நுளம்பு.

நொள்ளை—குருடு, நாகரவண்டு.

நொறில்—அடக்கம், விரைவு.

நொறுங்கு-நொய், நொறுங்கென்னேவல்.

நொறுங்குதல்—நொய்தாதல்.

நோ

நோ—ஓரெழுத்து, நோதல், நோவென்னேவல்.

நோக்கம்—அழகு, உயர்ச்சி, கண், பார்வை.

நோக்கல் — காணல், காத்தல், வியங்கோண்முற்று.

நோக்கு—அழகு, கண், நோக்கென்னேவல்.

நோண்டல் — கிண்டல், தோண்டல், முகத்தல், வியங்கோண்முற்று.

நோதல்—நோயுறல்.

நோய்—துன்பம், வருத்தம், வியாதி.

நோய்முகன்—சனி.

நோலாமை—தவமின்மை, பொறுமை.

நோவு—நோய்.

நோழிகை—நூலின்முர்.

நோற்பு—பொறுத்தல்.

நோற்றல் — தவஞ்செய்தல், பொறுத்தல்.

நோனுமை—தவஞ்செய்யாமை, பொறுமை.

நோனர்—தவமிலார், பகைவர்.

நோன்பு—தவம்.

நோன்மை — தவம், பெருமை, பொறுமை, வலி.

நோன்றல் — தள்ளல், நிலைநிறுத்தல், பொறுத்தல்.

ப

பகடு—ஆண்யானை, இடபம், எருமைக்கடா, ஓடம், தெப்பம், பெருமை,பொதியெருது.

பகண்டை—சிவல்.

பகபகெனல்—ஈரொலிக்குறிப்பு.

பகம்—அவாவின்மை,ஈச்சுரத்தன்மை, சீர்த்தி, செல்வம், ஞானம், வீரியமாகியவறுகுணம், கொக்கு, பெண்குறி.

பகரம்—அலங்காரம், ஓரொழுத்து, சிறப்பு.

பகர்ச்சி—சொல்,

பகர்தல்—சொல்லல், விற்றல்.

பகலவன்—சூரியன், பரணிநாள்.

பகலோன்—சூரியன்.

பகல்—ஒளி, சூரியன், நடுநாள், நுகத்திலாணி, பகுத்தல், பிரிதல், பிளத்தல், மத்தியானம்.

பகவதி—தருமதேவதை, துர்க்கை, பார்வதி.

பகவதிநாள்—பூரநாள்.

பகவன்—அயன், அரன், அரி, அருகன், கடவுள், குரு, புத்தன்.

பகழி—அம்பு, அம்புக்குதை.

பகன்றை — கிலுகிலுப்பை, சிவேதை, சீந்தில்.

பகாசூரவைரி—வீமன்.

பகாப்பதம் — பகுப்பிற்பயன்படாப்பதம்.

பகாப்பொருள்—கடவுள்.

பகிர்—பகிரென்னேவல், பகுப்பு.

பகிர்தல்—பங்கிடல்.

பகினி—உடன்பிறந்தாள்.

பகிரதி—கங்கை.

பகுதி—இயல்பு, குடியிறை, பகுத்தல், பகுபதத்தோருறுப்பு, படை.

பகுத்தல்—ஈதல், தறித்தல், பங்கிடல், வெட்டல்.

பகுபதம் — பகுதிவிகுதிமுதலியவுறுப்பிணனியன்றபதம்.

பகுவாய்—அகன்றவாய், பிழா.

பகை—பகை, பகையென்னேவல்.

பகைஞர்—பகைவர்.

பகைத்தல்—முரணல்.

பகையகம்—போர்க்களம்.

பக்கணம்—ஊர், வேடர்வீதி.

பக்கம் — அருகு, இடம், இறகு, சந்திரனுள், நட்பு.

பக்கர்—சுற்றத்தார்.

பக்கி—பக்கியென்னேவல், பறவை.

பக்கித்தல்—உண்டல், புசித்தல்.

பக்குவம்—அமைதல்.

பஃறி — இரேவதிநாள், ஓடம், மரக்கலம்.

பங்கம் — அலை, குழைசேறு, குளம், துண்டு, தோல்வி, பாவம். புழுதி, வேறுபாடு.

பங்கயம்—தாமரை.

பங்கயன்—சூரியன், பிரமன்.

பங்கி—ஆண்மயிர், பிறமயிர்.

பங்கு—சனி, பாதி, முடவன்.

பங்குசம்—தலைக்கோலம்.

பங்குனி—உத்திரநாள், ஓர்மாதம்.

பசத்தல்-துன்பத்தாணிறம்வேறுபடல்.
பசப்பு—பசலை, பொன்மைநிறம்.
பசலை—துன்பத்தால்வேறுபட்டநிறம்.
பசி—உதரக்கனல், பசியென்னேவல்.
பசித்தல்—உதரக்கனலெழும்பல்.
பசு—இடபவிராசி, உயிர், எருது, பசு.
பசுக்காவலர்—வைசியரிலொருவகை.
பசுங்கதிர்த்தே—சந்திரன்.
பசுநா—பிராயமரம்.
பசுபதி—சிவன்.
பசுமை—பச்சை, மெய்.
பசும்பிடி—பச்சிலைமரம்.
பசும்புல்—பயிர்.
பசை—ஆசை, இலாபம்.
பசைந்தார்—சிநேகிதர்.
பச்சிமம்—மேற்கு.
பச்சிலை—பச்சிலைமரம்.
பச்சை—ஓர்புதர், தோல், பசுமை, பரிமளம், புதன், மரகதம், விட்டுணு.
பச்சைச்சடையன்—வயிரவன்.
பஞ்சதம்—சாவு.
பஞ்சதாரை—சருக்கரை.
பஞ்சதை—சாவு.
பஞ்சபாணன்—மன்மதன்.
பஞ்சமகதி—மோக்கம்.
பஞ்சமம்—ஓர்பண்.
பஞ்சமி—ஐந்தாந்திதி.
பஞ்சம்—ஐந்து, கருப்பு.
பஞ்சரம்—கழுகு, கூடு, செருந்திமரம், மட்கலம்வனையுங்கூடம்.
பஞ்சவர்—பாண்டுமக்கள்.
பஞ்சவர்தூதன்—கண்ணன்.
பஞ்சவன்—பாண்டியன்.
பஞ்சாய்—கோரை.
பஞ்சாநநம்—சிங்கம்.
பஞ்சாநநன்—சிவன்.
பஞ்சிகம்—தாளி.
பஞ்சிதம்—விண்மீன்.
பஞ்சு—சிலை நூற்கும்பஞ்சு, பருத்தி.
பஞ்சுரம்—ஓர்பண், குறிஞ்சியாழ்த்திறம், பாலைநிலத்திராகம்.
பஞ்ஞுகம்—பெருமை.
பஞ்ஞை—தரித்திரன்.
படகம்—கவரிமா, தம்பட்டம், திரைச்சீலை, பரண்.
படங்கு—கூடாரம், பெருங்கொடி, மேற்கட்டி.
படபடெனல்-ஈரடுக்கொலிக்குறிப்பு.
படப்பம்—மருங்கிலூர்குப்பதி.
படப்பை—கொல்லை, நாடு, பக்கவிலைகொட்டம், மருதநிலத்தூர்.
படம்—எழுத்துப்படம், சீலை, திரைச்சீலை, பாம்பின்படம், யானைமுகபடாம், விருதுக்கொடி.
படர்—கருத்து, துன்பம், செலவு, நோய், பகை, படரென்னேவல், படைவீரர், மேடு, வழி.
படர்க்கை—மூவிடத்தொன்று.
படர்ச்சி—நடை, பரவுதல்.
படர்தல்—அகலம், நடத்தல், நினைத்தல்.
படலம்—இரதனக்குற்றம், இலக்கியச்செய்யுட்கூறுபாடு, கூட்டம், நேத்திரபடலம்.
படலிகை—கைம்மணி, பெரும்பீர்க்கு, வட்டம்.
படலை—கோத்தமாலை, பூமாலை.
படல்—உண்டாதல், கெடுதல், சாத்தும்படல், படுதல், வியங்கோண்முற்று.

பட்டாகை—கொடிச்சீலை.
பட்டாம்—சீலை, திரைச்சீலை, பெருங்கொடி, வினைமுற்று.
படி—குணம், குதிரையங்கவடி, சோபானம், நாழி, நூறுபலம், பகை, படியென்னேவல், பூமி.
படிகம்—கூத்து, பளிங்கு, பிச்சை.
படிதல்—கலத்தல், குளித்தல்.
படித்தரம்—கட்டளை.
படித்தல்—வாசித்தல்.
படித்திரம்—சூட்டிறைச்சி.
படிப்போன்—கற்போன்.
படிமக்கலம்—கண்ணாடி.
படிமத்தோன்—தேவராளன்.
படிமை—தவவேடம்.
படியகம்—படிக்கம்.
படிவம்—உடலுருவம், உடல், நோன்பு, வடிவு.
படிவர்—சடைமுடியோர், முனிவர்.
படிறர்—திருடர், தூர்த்தர், பொய்யர், வஞ்சகர்.
படிறு—களவு, பொய், வஞ்சம்.
படினம்—வெற்றி.
படீரம்—சந்தனம், சிவப்பு.
படு—கள், குளம், கொத்து, நன்மை, படுவென்னேவல்.
படுகர்—இழிந்தேறும்வழி, குளம், பள்ளம், மருதநிலம், வயல்.
படுகளம்—போர்க்களம்.
படுகாடு—சுடுகாடு.
படுதல்—உண்டாதல், சாதல், பூத்தல்.
படுத்தல்—கொலைசெய்தல், படுத்தல்.
படுநிலம்—பாலைநிலம்.
படுமலைப்பாலை—ஓரிசை.
படுவர்—கள்விற்போர்.
படுவி—வசவி.
படுவை—தெப்பம், வினைமுற்று.
படை—ஆயுதம், கலப்பை, கல்லணை, தானை, படையென்னேவல், போர்.
படைக்கலம்—ஆயுதம், எழு.
படைத்தல் — உண்டாக்கல், ஊண்பகுத்திடல்.
படைத்தோன்—கடவுள், பிரமன்.
படையாளர்—படைவீரர்.
படையுறை—ஆயுதவுறை,
படைவரம்—குதிரைக்கல்லணை.
படைவாள்—கலப்பை.
பட்டடை—அடைகல், பண்டவிராசி.
பட்டணம்—நகரம்.
பட்டம்—ஆயுதம், கவரிமா, குளம், சீலை, நெற்றிப்பட்டம், பதவி, மனிதர்படுக்கை, வழி, விலங்கின்படுக்கை.
பட்டாங்கு—மெய்.
பட்டாரகர்—கடவுளர், குருக்கள்.
பட்டாரகன்—அருகன், குரு.
பட்டி—இடம், ஓர்செடி, களவு, சிற்றூர், சீலை, தெப்பம், பலகறை, பிள்ளை, விக்கிரமாதித்தன்மந்திரி.
பட்டிகள்—திருடர்.
பட்டிகை—அரைநாண், சீலை, சிவந்தில், தெப்பம், தோணி, முலைக்கச்சு.
பட்டிமை—களவு, வஞ்சம்.
பட்டினம்—ஊர், நெய்தனிலத்தூர்.
பட்டு — உல்லாசம், சிற்றூர், பட்டுச்சீலை, வினையெச்சம்.
பட்டை—மரத்தோல்.

பணம்—பருமை, பாம்பின்படம், பாம்பு, பொற்காசு.

பணயம்—பணம்.

பணவம்—தம்பட்டம்.

பணவை—கழுகு, பரண்.

பணி—ஆபரணம், ஏவல், சொல், தொழில், தோற்கருவி, பட்டுச்சீலை, பணியென்னேவல், பாம்பு.

பணிக்கன்—உபாத்தியாயன்.

பணிதல்—வணங்கல்.

பணித்தல்—ஈதல், சொல்லல்.

பணியல்—வணங்கல், வியங்கோண்முற்று.

பணிலம்—சங்கு, வலம்புரிச்சங்கு.

பணிவு—வணக்கம்.

பணை—அரசமரம், குதிரைப்பந்தி, பணையென்னேவல், பருமை, பறைப்பொது, பிழைத்தல், பெருமை, மரக்கொம்பு, மருதநிலப்பறை, மருதநிலம், முரசு, மூங்கில், வயல், விலங்கின்படுக்கை.

பணைத்தல்—பருத்தல், பிழைத்தல்.

பண் — இசைப்பாட்டு, குதிரைக்கல்லணை, நிறைநரம்புள்ளவீணை, பண்ணென்னேவல்.

பண்டசாலை – அணிகலன்முதலியவைக்கும்வீடு.

பண்டம்—பண்ணிகாரம், பொன், மெய்யறிவு.

பண்டர்—பாடற்கீழ்மக்கள்.

பண்டனம்—போர்.

பண்டாரம்—பலபண்டம், பொக்கசம்.

பண்டி–உரோகணிநாள், பண்டி, வயிறு.

பண்டிதன்—சுக்கிரன், புதன், புலவன், வைத்தியன்.

பண்டு—பழமை.

பண்ணல்—செய்தல், வியங்கோண்முற்று.

பண்ணவர்—கடவுளர், தேவர், பாடகர், முனிவர்.

பண்ணவன்—அருகன், குரு, நின்மனியன்.

பண்ணிகாரம்—பலபண்டம்.

பண்ணியங்கூலம்—பலபண்டம்.

பண்ணுவர்—குதிரைப்பாகர், யானைப்பாகர்.

பண்ணை—ஓர்செடி, குளம், மகளிர்கூட்டம், மகளிர்விளையாட்டு, மருதநிலம், வயல, விலங்கின்படுக்கை.

பண்படல்—செவ்விதாதல், வியங்கோண்முற்று.

பண்பு—குணம்.

பண்புரைப்பார்—தூதர்.

பதகம்—பறவை.

பதகர்—கீழ்மக்கள்.

பதகன்—பாதகன்.

பதக்கம்—பதக்கம், மாதரணிவடம்.

பதக்கு – இரண்டுமரக்காற்கொண்டது.

பதங்கமம்—பறவை.

பதங்கம்—பறவை, விட்டிற்பறவை.

பதங்கன்—சூரியன்.

பதடி—பதர்.

பதணம்—மதிலுண்மேடை, மதில்.

பதபதெனல்—ஈரடுக்கொலிக்குறிப்பு.

பதப்பாடு—மதிலுறுப்பு.

பதம் — அடையாளம், அழகு, அறுகு, இடம், உண்டல், காலம், கால், சொல், சோறு, நாழிகை, வரிசை, வழி.

பதரி—இலந்தைமரம்.

பதர்—பதர்.

பதலை—சிறுமலை, தாழி, மத்தளம், மலை, வாயகன்றபறை.

பதவி—செல்வம், தேவலோகம், வழி.

பதவுரை—சொற்றோறும்பொருளுரைத்தல்.

பதவை—வழி.

பதறல்-வியங்கோண்முற்று, விரைதல்.

பதன்—பக்குவம்.

பதாகினி—படை.

பதாகை—விருதுக்கொடி.

பதாதி—காலாள், படை, படையினோர் தொகை.

பதி — அரசன், இடம், ஊர், எப்பொருட்குமிறைவன், குரு, கொழுநன், நகரம், பதியென்னேவல், மருதநிலத்தூர், மூத்தோன், வீடு.

பதிகம் — பத்துச்செய்புளான்முற்றுப் பெறுதல், பாயிரம்.

பதிகன்—வழிச்செல்வோன்.

பதிதன்—குலஞ்சமயமுதலியவொழுக்கத்திற்றுறந்தோன்.

பதித்தல்—புதைத்தல்.

பதித்திரி—உலைத்துருத்தி.

பதியம்—பாசி.

பதிரன்—செவிடன்.

பதுக்கை—சிறுதிட்டை, சிறுதூறு, பாறை.

பதுங்கல்—ஒளித்தல், வியங்கோண்முற்று.

பதுமநாபன்—விட்டுணு.

பதுமநிதி—தாமரையுருவாய்க்கிடக்கும்பொன்.

பதுமம் — அட்டாதசபுராணத்தொன்று, கோடாகோடி, சோதிநாள், தாமரை, முடியுறுப்பு.

பதுமராகம்—நவமணியிலொன்று.

பதுமன் — அட்டநாகத்தொன்று, பிரமன்.

பதுமினி — நால்வகைப்பெண்களின் முதலவள்.

பதுமை—இலக்குமி, காளி.

பதைத்தல்—அச்சக்குறிப்பு.

பத்ததி—ஒழுங்கு, கருமங்களைவிதிக்கிறவொருநூல், சொற்பயன், வழி.

பத்தல்—நீரிறைக்கும்பத்தல்.

பத்தன்—அன்புடையோன்.

பத்தா—புருடன்.

பத்தி—அன்பு, ஆராதனை, ஒழுக்கம், ஒழுங்கு, படைத்தொகை, முறைமை.

பத்தியம்—ஆந்திரமாரியமிவற்றின்செய்யுள், இதம், கடுமரம்.

பத்திரம் — அம்பு, அழகு, இலை, இறகு, உடைவாள், மலை, முடியுறுப்பு.

பத்திராசனம்—சிங்காசனம்.

பத்திரி — அம்பு, இலை, காளி, குதிரை, பறவை.

பத்திரை — சந்திரனிரண்டாம்பக்கம், நற்பசு.

பத்திரைகேள்வன்—வீரபத்திரன்.

பத்தினி—கற்புடையாள்.

பத்து—ஓரெண்.

பந்தகம்—பந்தனை.

பந்தம்—அழகு, உறவு, கட்டு, கொண்டை, திரட்சி, பெருந்துருத்தி, மதில், முடிப்பு, முறைமை.

பந்தர்—ஓர்நகர், பந்தல்.

பந்தனம்—கட்டல், காவல்செய்தல்.

பந்தனை—பந்தித்தல், மகள்.

பந்தி—ஒழுங்கு, பந்தியென்னேவல்.

பந்தித்தல்—பிணித்தல்.

பந்து—சுற்றம், திரட்சி, திரிகை, மட்டத்துருத்தி.

பந்துரம்—அழகு.

பந்துவராளி—ஓரிராகம்.

பப்பரம் — ஓர்தேசம், பதினெண்பாடையிலொன்று.

பப்பு—பரப்பு.

பப்புவர்—புகழ்வோர்.

பம்—விண்மீன்.

பம்பரம் — மந்தரமலை, விளையாடுங்கருவி.

பம்பல்—எழுச்சி, நெருங்கல், பரவல், பொலிதல், வலி, வியங்கோண்முற்று.

பம்பை—ஓர்நதி, ஓர்வாச்சியம், முல்லைநிலப்பறை.

பயங்கரம்—பயப்படுத்தல்.

பயசு—நீர், பால்.

பயத்தல்—உண்டாதல், கிடைத்தல்.

பயந்தாள்—தாய்.

பயப்படல்—அஞ்சல்.

பயப்பு—கிருபை, நிறம், பசப்பு.

பயம்—அச்சம், குளம், சுதை, நீர், பயன், பால்.

பயம்பு—பள்ளம், யானைபடுங்குழி.

பயல்—பையல்.

பயறு—சித்திரைநாள், பயறு.

பயனிலாள்—வேசி.

பயனுரைத்தல்—உரைசொல்லுதல்.

பயன் — அகலம், இலாபம், சொல்லுரை, பால்.

பயிக்கம்—பிச்சை.

பயிர் — இடும்பயிர், பயில், பறவைக்குரல்.

பயிர்த்தல்—பேசலாலெழுமொலி.

பயிர்ப்பு—அசுத்தம், அருவருப்பு.

பயிலல்—சொல்லுதல், படிந்தல், வியங்கோண்முற்று.

பயில்—சைகை, சொல், பயிலென்னேவல், பாதி.

பயிறல்—ஒலித்தல், கூடுதல், சொல்லுதல், பேசலாலெழுமொலி.

பயிற்றுதல்—படிப்பித்தல்.

பயினி—கூடல்.

பயின்—உட்படுகுருத்து, பிசின்.

பயோததி—கடல்.

பயோதரம்—கடல், முலை, மேகம்.

பரகதி—முத்தி.

பரசிராமன்—திருமாலவதாரத்தொருவன்.

பரசு—பரசென்னேவல், மழு.

பரசுதல்—துதித்தல்.

பரசுபாணி—சிவன்.

பரஞ்சோதி—கடவுள்.

பரடு—கரடு.

பரணம்—கவசம், பட்டுச்சீலை.

பரணி—அணிகலச்செப்பு, ஆயிரம்யானைகொன்ற தலைவனைப்பாடும்பிரபந்தம், ஏரிமதகு, ஓர்நாள், கூத்து.

பரண்—பரண்.

பரதகண்டம்—நவகண்டத்தொன்று.

பரதம்—ஒரொண், கூத்து, பரதநூல்.

பரதர் — செட்டிகள், துரியோதனன்குலத்தோர், நெய்தனிலமாக்கள்.

பரதவர்—நெய்தனிலமாக்கள்.

பரதன் — இராமன்றம்பி, சந்திரகுலத்தோரரசன், பரதமுனைர்த்தொன்.

பரதி—கூத்தாடிச்சி.

பரத்தர்—தூர்த்தர்.

பரத்தல்—பரவுதல்.

பரத்தி — நெய்தனிலப்பெண்.
பரத்தை—வேசி.
பரந்தவட்டம்—கைம்மணி.
பரந்தவட்டிகை—சேமக்கலம்.
பரபிருதம்—காக்கை, குயில்.
பரபுட்டம்—குயில்.
பரப்பிரமம்—பிரமம்.
பரப்பு—அகலம், கடல், பரத்தல், பரப்பென்னேவல்.
பரமசுந்தரி—தருமதேவதை.
பரமம்—பிரமம்.
பரமன்—கடவுள், சிவன்.
பரமேச்சுரன்—கடவுள், சிவன்.
பரமேட்டி—அயன், அரன், அரி, அருகன்.
பரம்—உடல், கடவுள், கவசம், குதிரைக்கல்லணை, பாரம், மிகுதி.
பரம்பரம்—முறைமை.
பரம்பு — கழனிதிருத்தும்பலகை, வரம்பு.
பரர்—அந்நியர், பகைவர்.
பரல்—பருக்கைக்கல், விதை.
பரவல்—சொல்லுதல், பரத்தல், புகழ்தல், வணங்கல், வியங்கோண்முற்று.
பரவை—இலக்குமிகூத்து, கடல், பரப்பு.
பரன்—சிவன்.
பராகம்—பூந்தாது.
பராக்கிரமம்—வலி, வீரம்.
பராசரம் -அட்டாதசவுபபுராணத்தொன்று, அட்டாதசதருமநூலிலொன்று.
பராசரன்—ஓரிருடி.
பராசனம்—கொலை.
பராசனன்—கொலைசெய்வோன்.
பராடம்—பாலைநிலம்.
பராபரன்—கடவுள்.
பராமுகம்—பின்னோக்கியமுகம்.
பராயணி—கன்னன்.
பராரை—உள்ளோசை.
பரார்த்தம்—ஓரெண்.
பராவிருத்தமுகம்— வேண்டாமைக்குமுகந்திருப்பல்.
பரி—அச்சுவினிநாள், அன்பு, உயர்ச்சி, கறுப்பு, குதிரை, சீக்கிரம், சுமை, பரியென்னேவல், பருத்தி, பாதுகாத்தல், பெருமை, வருத்தம், வழி.
பரிகம்—அகழ், மதிலுண்மேடை, வளைதடி.
பரிகாரம்—பரிகரித்தல், பெண்மயிர்.
பரிகை—அகழ், பரிவு, மதிலுண்மேடை.
பரிசம்—தொடல்.
பரிசனம் — உறவு, ஏவல்செய்வோர், தொடுதல்.
பரிசன்னியம்—பொன்மலை.
பரிசாரகர்—ஏவல்செய்வோர்.
பரிசாரம் — ஏவற்றொழில், பெண்மயிர்.
பரிசிலாளர்—இரப்போர்.
பரிசு—ஈகை, குணம்.
பரிசை—கேடகம்.
பரிச்சேதம்—இலக்கியச்செய்யுட்கூறுபாடு.
பரிணமித்தல்—வேறுபடல்.
பரிணயம்—கலியாணம்.
பரிணமம்—வேறுபாடு.
பரிதல்—அறுத்தல், அன்பு, அன்பொடுபேசல், இரங்கல், ஓடிதல், தறித்தல், வெட்டல்.

பரிதி—ஒளி, சக்கராயுதம், சூரியன், சூரியசந்திரரைச்சூழத்தோன்றும்வட்டம், தேருருளை, வட்டம்.

பரித்தல்—சுமத்தல்.

பரிபவம்—இகழத்தகுபொருள், இழிவு, எளிமை.

பரிபுரம்—காற்சிலம்பு, பாதகிண்கிணி.

பரிபூரணன்—சிவன்.

பரிப்பு—சுமை.

பரிமளம்—மிகுவாசனை.

பரிமாணம்—அளவு.

பரிமாவடிப்போர்—குதிரைப்பாகர்.

பரிமுகம்-அச்சுவினிநாள், கணைக்கால்.

பரியகம்—காற்சரி, கைச்சரி, பாதகிண்கிணி.

பரியங்கம்—கட்டில், மக்கட்படுக்கை.

பரியந்தம்—எல்லை.

பரியவம்—பலர்செல்லுநெறி.

பரியாயம் — ஒருபொருள்குறித்தபலசொல், பலமுறை.

பரியாளம்—பரிவாரம்.

பரிவட்டம் — சீலை, நெய்வோர்கருவியிலொன்று.

பரிவயம்—அரிசி, யௌவனம்.

பரிவாகிதமுகம்—மதத்தாலொருபுறஞ்சாயத்தலையைச்சுற்றியாட்டல்.

பரிவாதம்—பழிச்சொல்.

பரிவாரம்—படை.

பரிவு—அன்பு, இன்பம், துன்பம்.

பரிவேடம் — சூரியசந்திரரைச்சூழத்தோன்றும்வட்டம்.

பரு—சிலந்திநோய், பருவென்னேவல்.

பருகல் — உண்டல், குடித்தல், வியங்கோண்முற்று.

பருகுதல்—உண்டல், குடித்தல்.

பருக்கை—பருக்கைக்கல், பனிக்குரு.

பருணிதர்—புலவர்.

பருத்தல்—பருமையாதல்.

பருத்தி—ஓர்செடி.

பருந்து—ஓர்பறவை.

பருப்பதம்—மலை.

பருப்பதி—பார்வதி.

பருப்பு—பருத்தல், பருப்பு.

பருமம்—கலாபம், குதிரைக்கல்லணை, மூவாறுகோவைமணியணி.

பருமித்தல்—பிரமஞ்செய்தல்.

பருவம்—அமாவாசியை, இளமை, உயர்ச்சி, கணு, காலம், பொழுது, பௌர்ணமி.

பருவரல்—அருவருத்தல், துன்பம், வருத்தல், வியங்கோண்முற்று.

பரூஉ—பருமை, பரித்தல், வினையெச்சம்.

பரை—பார்வதி.

பர்க்கன்—சிவன், சூரியன்.

பலகணி—சாளரவாயில்.

பலகாரம்—பலபண்டம், யானைமேற்றவிசு.

பலகை—கேடகம், பலகை.

பலசூதனன்—இந்திரன்.

பலதேவன்—பலபத்திரன்.

பலமுறை—நாலுவிதம், பலதரம்.

பலமூலசாகாசனர்—முனிவர்.

பலம்—ஊன், காய், கிழங்கு, நிறைகல், நிறையளவிலொன்று, தேற்றம், படை, பயன், பழம், பொன், வலி.

பலர்—சபை, பல்லோர்.

பலர்க்கம்—கதுப்பு.

பலவழித்தோன்றல்—மருமகன்.

பலவிதம்—நானாவிதம்.

பலவு—பலாமரம்.

பலன்—இலாபம், காய், பழம்.

பலா—பலாமரம்.

பலாகம்—கொக்கு.

பலாசம்—இலை, பச்சைநிறம், பலாமரம், முருக்கு.

பலாசி—மரப்பொது.

பலாசு—இலை, பச்சைநிறம், புனமுருக்கு, முருக்கு.

பலாண்டு—ஈரவெண்காயம்.

பலாரி—இந்திரன்.

பலாலம்—வைக்கோல்.

பலி—காய்த்திருந்தமரம், சாம்பல், சோறு, நீறு, பிச்சை, பூசை, விண்ணோருணவு.

பலிதம்—நரை, பலிப்பது.

பலித்தல்—இலாபம்.

பலிபுட்டம்—காக்கை.

பலினம்—காய்த்திருந்தமரம்.

பலினி—கோங்குமரம், ஞாழல்.

பல்—பல்.

பல்லணம்—குதிரைக்கல்லணை.

பல்லம்—அம்பு, ஓரெண், கரடி, குதிரைக்கல்லணை.

பல்லவம்—ஓர்தேசம், தளிர்.

பல்லவர்—கீழ்மக்கள், நூர்ந்தர்.

பல்லவை—கீழ்மை, பலபொருள்.

பல்லாண்டு—வாழ்த்து.

பல்லாதகி—சேங்கொட்டைமரம்.

பல்லார்—பலர்.

பல்லியம்—சங்கீதம், வாச்சியப்பொது

பல்லி—இடையருர், கௌளி.

பல்லூகம்—கரடி.

பல்வலம்—குளம்.

பவ—ஓராண்டு.

பவணை—கழுகு.

பவமானன்—காற்று.

பவம்—நாசம், பாவம், பிறப்பு.

பவர்க்கம்—நரகம்.

பவளம்—பவளம்.

பவளநெடுங்குன்றியோன் — வயிரவன்.

பவனம்—அரமனை, இராசிப்பொது, காற்று, கொழித்தல், தானியந்தூற்றல், தேவலோகம், நாகலோகம், பாவனை, பூமி, பூனை, வீடு.

பவஞ்சனம்—பாம்பு.

பவனி—உலாப்போதல்.

பவன்—சிவன்.

பவானி—பார்வதி.

பவி—வச்சிராயுதம்.

பவிடியம்—செல்வம், நிகழ்காலம்.

பவித்திரம்—தூய்மை.

பவித்திரி—தருப்பை.

பவுரி—கூத்தின்விகற்பம்.

பவ்வம்—மரக்கணு.

பழகல்-பழகுதல், வியங்கோண்முற்று.

பழக்கம்—பழகல்.

பழங்கண்—இளைப்பு, துன்பம், மெலிவு.

பழஞ்சொல்—முதுசொல்.

பழமலை—விருத்தகிரி.

பழமை—தொன்மை.

பழமொழி—ஓர்நீதிநூல், முதுசொல்.

பழம்பஞ்சுரம்—ஓர்பண்.

பழனம்—மருதநிலம், வயல்.

பழனி— திருவாவினன்குடியென்னுந் திருப்பதி.

பழி-குற்றம், பழியென்னேவல், பொய்.
பழிகூறல் — தூற்றுதல், வியங்கோண்முற்று.
பழிச்சல்—துதித்தல், வியங்கோண்முற்று.
பழித்தல்—நிந்தித்தல்.
பழிப்பு—நிந்தை.
பழு — ஏணிப்பழு, பழுவென்னேவல், விலா.
பழுது—குற்றம், பொய்.
பழுதை—கயிறு.
பழுத்தல்—முதிர்தல்.
பழுப்பு—அரிதாரம், இலைமுதலியமுதிர்தல்.
பழுமரம்—ஆலமரம்.
பழுவம்—காடு.
பழையர்—கள்விற்போர், தொல்லோர்.
பளபளெனல்—ஒளிக்குறிப்பு.
பளிங்கு—கண்ணாடி, சுக்கிரன், படிகம்.
பளிதம்—ஓமொண், கருப்பூரம்.
பள்ளம்—ஆழம், குழி.
பள்ளர்—உழவர்.
பள்ளி—அறச்சாலை, ஓர்சாதி, சிற்றூர், தேவர்கோயில், நித்திரை, மக்கட்படுக்கை, மருதநிலத்தூர், முனிவர்வாசம்.
பள்ளு—ஓர்சாதி, பள்ளுப்பாட்டு.
பள்ளை—ஆடு, வெள்ளாடு.
பறத்தல்—பறக்குதல்.
பறந்தலை—சுடுகாடு, போர்க்களம்.
பறப்பன்—தேள், விருச்சிகவிராசி.
பறம்பர்—தோல்வினைஞர்.
பறம்பு—மலை, முலை.
பறவை — அவிட்டநாள், புள், புள்ளிறகு.
பறவைவேந்தன்—கருடன்.
பறழ் — அணில், குரங்காதிகோட்டில் வாழ்விலங்கு, அரா, ஆடு, கீரி, நரி, நாய், பன்றி, புலி, பூனை, மான், முயலிவற்றின்குட்டி.
பறளிகை—பற்றிரும்பு.
பறளை—பற்றிரும்பு.
பறி—பறியென்னேவல், பொன், மீன்படுக்குங்கருவி, மீன்பெய்யுங்கருவி.
பறித்தல்—களைதல், கள்ளல்.
பறிவை—சிவந்தில்.
பறை—இறகு, சொல், பறையென்னேவல், வாச்சியம்.
பறைதல்—சொல்லல்.
பற்குனன்—அருச்சுனன்.
பற்குனி—உத்திரநாள்.
பற்சர்—பகைவர்.
பற்பம்—அட்டாதசபுராணத்தொன்று, தாமரை, நீறு.
பற்றல்—ஆசைப்பெருக்கம், குறித்தல், தொடர்தல், பிடித்தல், வியங்கோண்முற்று.
பற்றற்றார்—முனிவர்.
பற்றுக்கை — அம்புத்திரளைக்கட்டுங்கயிறு, கட்டுங்கயிறு.
பற்றார்—பகைவர்.
பற்றினர்—உறவோர், சிநேகிதர்.
பற்று — அன்பு, ஆசை, பற்றென்னேவல்.
பற்றுக்கோடு—தஞ்சம்.
பற்றுக்கோல்—பற்றுக்கோடு.
பற்றை—செங்காந்தள்.
பனசம்—பலாமரம்.

பனசை—ஓர்பாம்பு, பனையூர்.
பனந்தாரான்—சேரன், பலபத்திரன்.
பனம்பாரனார்—அகத்தியர்மாணக்கர் பன்னிருவரிலொருவர்.
பனி — அச்சம், குளிர், துன்பம், நடுக்கம், பனியென்னேவல்.
பனிக்கதிர்—சந்திரன்.
பனிச்சை—மயிர்ச்சுருள்.
பனித்தல்—சொரிதல், நடுங்கல், வருந்துதல், விடாமழைபெய்தல்.
பனிப்பகை—சூரியன்.
பனிப்பு—அச்சம், நடுக்கம்.
பனிமலை—இமயமலை.
பனுவலாட்டி—சரச்சுவதி.
பனுவல்—ஆகமம், சொல், நூல், பஞ்சி நூல்.
பனை—அனுடநாள், ஓர்மரம்.
பனைக்கொடியோன்—பலபத்திரன்.
பனைமீன்—யானைமீன்.
பன்மை—பலவற்றின்றன்மை.
பன்றி—வராகம்.
பன்னகம்—பாம்பு.
பன்னகவயிரி—கருடன்.
பன்னம்—இலை.
பன்னல் — சொல்லுதல், நெருங்கல், பருத்தி, வியங்கோண்முற்று.
பன்னாடை—நெய்யரி.
பன்னி—மனைவி, வினையெச்சம்.

பா

பா—ஓரெழுத்து, பாவென்னேவல், வெண்பாமுதலியபா.
பாகசன்—ஓரிராக்கதன்.
பாகசாதனன்—இந்திரன்.
பாகசாலை—மடைப்பள்ளி.
பாகதம்—எல்லாநாட்டுமொழி.
பாகம்—ஓரளவு, பக்குவம், பங்கு, பாதி, பிச்சை.
பாகலம்—யானைநோய்.
பாகல்—பலாமரம், பாகற்கொடி.
பாகவதம் — அட்டாதசபுராணத்தொன்று.
பாகவதர்—விட்டுணுசமயத்தார்.
பாகன் — தேர் முதலியநடத்துவோன், புதன்
பாகி—நாய், பக்குவன்.
பாகிடுதல்—பங்கிடுதல்.
பாகீரதி—கங்கை.
பாகு—குழம்பு, சருக்கரை, பங்கு, பரணிநாள், பாகன், பாக்கு.
பாகுடம்—அரசிறை.
பாகுலம்—கார்த்திகைமாதம்.
பாக்கம் — ஊர்ப்பொது, நெய்தனிலத்தூர், மருதநிலத்தூர்.
பாக்கன்—பூனை.
பாக்கு-எதிர்காலவிடைச்சொல், (உ-ம். உண்பாக்குச்சென்றான்,) துவர்க்காய்.
பாங்கர்—இடம், தோழர், பக்கம்.
பாங்கன்—தோழன்.
பாங்கி—தோழி.
பாங்கு—அழகு, உரிமை, பக்கம்.
பாசகரன்—காலன், நமன்.
பாசகர்—மடையர்.
பாசடை—இலை.
பாசம் — அன்பு, ஊசித்துளை, கவசம், கயிறு, சிவனாயுதம், நமனாயுதம், பிசாசம், பிரமனாயுதம்.
பாசறை — துன்பம், பகைமேற்சென்றோருறைவிடம்.

பாசறைமுல்லை - பாசறைத்தலைமகனறிலைவியையுள்ளல்.

பாசனம்—உண்கலம், உறவு, மட்கலம்.

பாசன்—சிவன்.

பாசாங்குசன்—விநாயகன்.

பாசி—சடைச்சி, நாய், நீர்ப்பாசி, வருணன்.

பாசிலை—பச்சிலை.

பாசு—பச்சை, மூங்கில்.

பாசுபதர்—சிவசமயத்தோர்.

பாசுரம்—வசனம்.

பாச்சல்—எழுச்சி.

பாஞ்சசன்னியம் — சலஞ்சலமென்னுஞ்சங்காயிரஞ்சூழ்ந்தசங்கு.

பாஞ்சாலம்—ஓர்தேயம்.

பாஞ்சாலி—துரோபதி.

பாடகம்—காலணியிலொன்று.

பாடம்—இடையர்வீதி, தெரு, பாடம்.

பாடலம் — குதிரை, சிவப்பு, சேரன்குதிரை, பாதிரிமரம்.

பாடலி—கள்.

பாடல் — சங்கீதம், வாசித்தல், வியங்கோண்முற்று.

பாடவம்—களிப்பு, வடவாநலம்.

பாடவள்—மிதுனவிராசி.

பாடவை—மிதுனவிராசி.

பாடாணம்—கல்.

பாடன்மகடூ—பாண்மகள்.

பாடி — ஊர், ஓரிராகம், கவசம், சேரி, நகரம், நாடு, படை, முல்லைநிலத்தூர், வினையெச்சம்.

பாடிலம்—நாடு.

பாடிவீடு—பகைமேற்சென்றோருறைவிடம்.

பாடினி—பாடுவெள்.

பாடு—இடம், ஓசை, குணம், கேடு, பக்கம், படுதல், பாடென்னேவல், பெருமை.

பாடை—ஆசந்தி, சொல்.

பாட்டன்—மூதாதை.

பாட்டி—ஒருசார்விலங்கின்பெண்பொது, பாடுவெள், பெண்ணரி, பெண்ணாய், பெண்பன்றி, மூதாய்.

பாட்டு—இசைப்பா, செய்யுள்.

பாணம் — அம்பு, மழைவண்ணக்குறிஞ்சி.

பாணர்—புகழ்ந்துபாடுவர்.

பாணி — இசைப்பாட்டு, ஊர்சூழ்சோலை, கள், காலம், கூத்து, கை, சங்கீதம், சொல், தாமதம், நீர், பலபண்டம்.

பாணிக்கிரகணம்—கைப்பற்றல்.

பாணித்தல்—பொழுதுநீட்டித்தல்.

பாண்—இசைப்பாட்டு, கள்.

பாண்டம்-பாத்திரப்பொது, மட்கலம்.

பாண்டரங்கம்—சிவன்கூத்து.

பாண்டரங்கன்—சிவன்.

பாண்டரம்—வெண்மை.

பாண்டவர்முன்பிறந்தோன் — கன்னன்.

பாண்டி—ஓர்தேயம், ஓர்பண்.

பாண்டியம்—ஓர்தேயம்.

பாண்டியன்—பாண்டிதேயத்தரசன்.

பாண்டில்—அகல், இடபவிராசி, எருது, கட்டில், கைத்தாளம், நாடு, பண்டி, மூங்கில், வட்டம், வாகைமரம்.

பாண்டு — ஓர்நோய், குருகுலத்தரசருளொருவன், வெண்மை.

பாண்டுமைந்தர்—தருமராசன்முதலைவர்.

பாண்டுரம்—வெண்மை.

பாண்மகள்—பாடுவெள்.
பாதகடகம்—பாடகம்.
பாதகம்—பாவம்.
பாதகர்—கீழ்மக்கள்.
பாதகன்—கீழ்மகன்.
பாதகாப்பு—செருப்பு.
பாதசாலம்—காலணிப்பொது.
பாதபம்—மரப்பொது.
பாதம்—கால், நாலிலொன்று.
பாதரசம்—இரதம்.
பாதராயணன்—வேதவியாசன்.
பாதலம்—பாதாளம்.
பாதவம்—கொல்லை, மரப்பொது, மலை.
பாதாளம்—கீழுலகம், நரகம்.
பாதி—அரை, பங்கு.
பாதிரி—ஓர்மரம், மூங்கில்.
பாதீடு—செறித்தல், பாதுகாத்தல்.
பாதுகம்—பாதகுறடு.
பாதுகாத்தல்—ஓம்பல்.
பாதேயம்—கட்டுச்சோறு.
பாதை—மரக்கலம், வழி.
பாத்தம்—எல்லாநாட்டின்மொழி.
பாத்தி—சிறுசெய், பங்கு, வீடு.
பாத்தியம்—சம்பந்தம், பெரியோர்கட்குப்பாதங்கழுவக்கொடுக்குநீர்.
பாத்திரபதம்—புரட்டாசிமாதம்.
பாத்திரம்—இரப்போர்கலம், உண்கலம், தகுதி, புரட்டாசிமாதம்
பாத்தில்—வீடு.
பாத்து—கஞ்சி, சோறு, பங்கு, பாதி.
பாந்தல் — பதுங்கல், வியங்கோண்முற்று.
பாந்தள்—பாம்பு, பெரும்பாம்பு.
பாந்தன்—வழிச்செல்வோன்.
பாபத்தி—வேட்டை.
பாபம்—பாவம்.
பாபி—பாவி.
பாமகள்—சரச்சுவதி.
பாமடந்தை—சரச்சுவதி.
பாமரம்—அறிவின்மை.
பாமுதல்வி—சரச்சுவதி.
பாம்பு—அரவு, ஆயிலியநாள்.
பாம்புரி—அகழி.
பாயசம் — பாற்சொற்றிச்செடி, பாற்சோறு.
பாயல்—மக்கட்படுக்கை, வியங்கோண்முற்று.
பாயிரம்—முகவுரை.
பாயு—குதம்.
பாய்—கப்பலில்விரிக்கும்பாய், படுக்கும்பாய், வினையெச்சம்.
பாய்ச்சல்—பாய்தல்.
பாய்தல்—குதித்தல், தாண்டல், தாவல், பரவுதல்.
பாய்த்தல்—பாயச்செய்தல்.
பாய்மா—குதிரை, புலி.
பாய்விரி—பசிரி.
பாரகம்—திரைச்சீலை, பூமி.
பாரசிகை—பருந்து.
பாரணம்—சோறுண்டல்.
பாரதம்—இரதம், ஐந்தாம்வேதம், பாரதவருடம்.
பாரதர்—குருகுலவேந்தர்.
பாரதி—சரச்சுவதி, மரக்கலம்.
பாரதிகொழுநன்—பிரமன்.
பாரத்துவாசம் — கரிக்குருவி, வலியன்.

பாரத்துவாசன் — ஓரிருடி, துரோணாசாரி.
பாரத்துவாசி—துரோணாசாரி.
பாரம்—கரைப்பொது, கல்லணை, கவசம், சுமை, நிறை, பூமி, வரம்பு.
பாரம்பரியம்—முறைமை
பாராசரியன்—வியாசன்.
பாராட்டல் — கொண்டாடல், வியங்கோண்முற்று.
பாராட்டு—கொண்டாடல், பாராட்டென்னேவல்.
பாராயணம்—நியமமாகப்படித்தல்.
பாராயணர்—குறிக்கொள்வோர்.
பாராவதம்—கரும்புறா.
பாராவளையம்—வளைதடி.
பாராவாரம்—கடல், கடற்கரை.
பாரி—கடையெழுவள்ளலிலொருவன், கட்டில், நற்சீலை, பாரியென்னேவல், பூமி, மனைவி.
பாரிசம்—பக்கம்.
பாரிசாதம்—ஐந்தருவிலொன்று, பவளமல்லிகை.
பாரிடம்—பூதகணம், பூமி.
பாரித்தல் — உண்டாக்கல், தோற்றல், பரப்பல்.
பாரியை—மனைவி.
பாரை—கடப்பாரை.
பார்—உரோகணிநாள், தேரின்பரப்பு, பாரென்னேவல், பூமி.
பார்க்கவம்— அட்டாதசபுராணத்தொன்று.
பார்க்கவன்—சுக்கிரன்.
பார்க்கவி—இலக்குமி.
பார்த்தல்—காணல், வணங்கல்.
பார்த்தன்—அருச்சுனன்.
பார்த்திவம்—பூமி.
பார்த்திவன்—அரசன்.
பார்ப்பு— கோட்டில்வாழ்விலங்கின்பிள்ளை, தவழ்சாதியின்பிள்ளை, பறவைக்குஞ்சு, மான்கன்று.
பார்மிசையோன்—புத்தன்.
பார்வதி—உமை.
பார்வதிகொழுநன்—சிவன்.
பார்வை—கண், மதிப்பு.
பாலம்—ஆற்றுப்பாலம், நெற்றி, பூமி, மரக்கொம்பு, மழு.
பாலரசம்—பொன்னிறம்.
பாலர்—இடையர், பிள்ளைகள்.
பாலனன்—காப்போன்.
பாலி—ஆலமரம், கள், பாலியென்னேவல்.
பாலிகை—உதடு, படைவாளின்முட்டி, முளைதெளிக்கும்பாலிகை, வட்டம்.
பாலித்தல்—ஈதல், காத்தல்.
பாலுகம்—கருப்பூரம்.
பாலை — ஓர்நிலம், ஓர்மரம், ஓர்வகைப்பாடல், கடல், புநர்பூசநாள், மிருகசீரிடநாள்.
பாலைக்கிழத்தி— துர்க்கை.
பால்—இடம், உரிமை, குணம், பக்கம், பங்கு, பாதி, பால், வெண்மை.
பாவகம்—இயல்பு, கருத்து, கொலை.
பாவகன்—தூய்மைசெய்வோன், நெருப்பு.
பாவகி—முருகன்.
பாவமூர்த்திகள்—வேடர்.
பாவலர்—கவிகள், புலவர்.
பாவல் — பாதகுறடு, வியங்கோண்முற்று.
பாவனம்—தூய்து, தூய்மைசெய்வது.

பாவி—தீயோன், பாவியென்னேவல்.

பாவுதல்—தாண்டல்.

பாவை-சித்திரப்பாவை, பெண், மதில்.

பாழி—அகலம், உரை, ஊர், குகை, சயனம், தேவர்கோயில், பகைவரூர், பெருமை, மருதநிலத்தூர், மூனிவர்வாசம், வலி, விலங்கின்படுக்கை.

பாழ்—பாழென்னேவல், பாழ்த்தல்.

பாழ்த்தல்—பாழாதல்.

பாளி—அடையாளம், பாசறை.

பாளிதம்—கண்டசருக்கரை, கருப்பூரம், சோறு, பட்டுச்சீலை, பாற்சோறு.

பாளை—கமுகு, தெங்கு, பனைமுதலியவற்றின்பாளை.

பாளையம்—பாசறை.

பாறல்--இடபவிராசி, எருது, ஓடல், பொதியெருது, பொருதல், வியங்கோண்முற்று.

பாறு—பருந்து, பாறென்னேவல், மரக்கலம்.

பாறை—திட்டை.

பாற்கடற்பிறந்தாள்—இலக்குமி.

பாற்குநம்—பங்குனிமாதம்.

பாற்குநி—உத்திரநாள்.

பாற்குநிகம்—பங்குனிமாதம்.

பானசியர்—மடையர்.

பானம்—கள், குடித்தல், துவை, பருகுவன.

பானல்-கருங்குவளை, மருதநிலம், வயல்.

பானுள்—பாதிநாள்.

பாணி—படை, பாணஞ்செய்வோன்.

பானீயம்—நீர்.

பானு—சூரியன்.

பானுமைந்தன்—யமன்.

பாணை—மிடா.

பான்—எதிர்காலவிடைச்சொல், (உ-ம். உண்பான்வந்தான்.)

பான்மை—குணம்.

பி

பிகம்—குயில்.

பிங்கதிருட்டி—சிங்கம்.

பிங்கம்—பொன்மைகலந்தசிவப்பு.

பிங்கலந்தை—ஓர்நிகண்டு.

பிங்கலம்—பிங்கலந்தை, பொன், பொன்மைநிறம், வடக்கு.

பிங்கலன்—ஓர்நிகண்டாசிரியன, குபேரன்.

பிங்கலை—ஆந்தை, சூரியசரம், பார்வதி.

பிங்களை—ஓராண்டு.

பிங்களை -தென்றிசையானைக்குப்பெண்யானை.

பிசங்கம்—பொன்மைகலந்தசிவப்பு.

பிசம்—இறகு.

பிசனம்—செஞ்சந்தனம்.

பிசி—அரும்பொருள், சோறு, பொய்.

பிசிதம்—உதாரணம், ஊன், நீர், வேம்பு.

பிசிதாசனர்—இராக்கதர்.

பிசிர்—தூவல்.

பிசினம்—கோட்சொல்லல்.

பிசின்—நீர்வஞ்சி, பஞ்சினூல், பிசின், வெட்டுக்குருத்து.

பிசுமந்தம்—வேம்பு.

பிசுனன்—உலோபன், கோளன், பொய்யன்.

பிச்சம்—ஆண்மயிர், இறகு, பீலிக்குஞ்சம், வெண்குடை.

பிச்சி—ஓர்கொடி.

பிச்சு—பித்து.

பிச்சை—ஐயம்.

பிஞ்சகன் — கொலைசெய்வோன், சிவன்.

பிஞ்சம்—இறகு, கொலை.

பிஞ்சு—இளங்காய்.

பிஞ்ஞகம்— தலைக்கோலம்.

பிஞ்ஞகன்—சிவன்.

பிடகம்—நூல், பிச்சை, புத்தநூல்.

பிடகன்—புத்தன், வைத்தியன்.

பிடர்—பிடரி.

பிடர்த்தலை—பிடரி.

பிடவம்—பின்புறம்.

பிடாரி—காளி.

பிடி—கைப்பிடி, பிடியென்னேவல், பெண்கவரி, பெண்ணொட்டகம், பெண்யானை.

பிடிகம்—பிள்ளைக்கைவளை.

பிடித்தல்—கட்டல், சார்தல்.

பிடியல்—சீலை, நல்லாடை, வியங்கோண்முற்று.

பிடுங்கல் — பறித்தல், வியங்கோண்முற்று.

பிட்டம்—கடிப்பிரதேசம், சிற்றுண்டி.

பிட்டு—சிற்றுண்டி, தினைமா, வினையெச்சம்.

பிணக்கம்—பிணங்கல்.

பிணக்காடு—சுடுகாடு.

பிணங்கல்—நெருங்கல், பின்னல், மாறுபடல், வியங்கோண்முற்று.

பிணம்—பிசாசம், பிரேதம்.

பிணம்வீழ்களம்—சுடுகாடு.

பிணர்—கோங்கு, சர்ச்சரைவடிவு.

பிணவு—நாய், பன்றி, புல்வாயிவற்றின்பெண்.

பிணா—கவரிமா, நாய், பன்றி, புல்வாயிவற்றின்பெண்; பெண்பொது, விலங்கின்பெண்பொது.

பிணி—கட்டு, துன்பம், நோய், பிணியென்னேவல்.

பிணித்தல்—கட்டல்.

பிணிமுகம்—பறவைப்பொது, மயில்.

பிணை—ஆசை, உடன்பாடு, ஒட்டகம், கவரி, கழுதை, குதிரை, நாய், பன்றி, புல்வாய், யானையிவற்றின் பெண், கட்டு, பிணையென்னேவல், பூமாலை.

பிணைத்தல்— கட்டல்.

பிணையல்—பின்னியமாலை, மாலை, வியங்கோண்முற்று.

பிணைவு—புணர்ச்சி.

பிண்டம்—உடல், உண்டை, கருப்பத்திலிருக்கும்பிண்டம், கவளம், கூட்டம், சோறு, பிச்சை.

பிண்டி—அசோகமரம், கூட்டம், தினைமா, பிண்டியென்னேவல், பிண்ணாக்கு, புநர்பூசம், மா.

பிண்டித்தல்—பிண்டமாக்கல்.

பிண்டிவாலம்—எறியாயுதம்.

பிதற்றல்-பேசலாலெழுமொலி, விடாதுபேசல், வியங்கோண்முற்று.

பிதா — அருகன், கடவுள், சிவன், தந்தை, பெருநாரை.

பிதாமகன்—பாட்டன், பிரமன்.

பிதிர்—கதை, காலநுட்பம், திவலை, நொடி, பராகம், பிதிரென்னேவல், பிதிர்கள்.

பிதிர்நாள்—அமாவாசியை, இறந்தோர்நாள், மகநாள்.

பிதிர்பதி—யமன்.

பிதிர்வனம்—சுடுகாடு.

பிதுக்கல்—பிதுங்கச்செய்தல்.

பித்தம் — கூத்தின்விகற்பம், மயக்கம், முப்பிணியிலொன்று.

பித்தன்—கள்ளன், சிவன், பித்தன், வைரவன்.

பித்தி—சுவர்.

பித்திகை—கருமுகை, சுவர்.

பித்து—பித்தம்.

பித்தை—ஆண்மயிர்.

பிந்து—விந்து.

பிபீலிகை—எறும்பு.

பிப்பலம்—அரசமரம்.

பிப்பிலி—திப்பிலி.

பிரகதி—கத்தரிச்செடி.

பிரகம்மிதமுகம் — அதிசயத்தாற்சிறிதாய்த்தலையாட்டல்.

பிரகரணம்—ஒருவிடயமுடிவு, சமயம்.

பிரகற்பதி - அட்டாதசதருமநூலிலொன்று, வியாழம்.

பிரகாசம்—ஒளி, வெயில்.

பிரகாமியம்—அட்டமாசித்தியிலொன்று, நிறைவு.

பிரகாரம்—தன்மை, விசேடணம்.

பிரகிருதி—இயல்பு, பிரதானம்.

பிரசம்—கள், தேனீ, தேன், தேன்கூடு, வண்டு.

பிரசன்னம்—காட்சி.

பிரசாதம்—பயன்.

பிரசாபதி—ஆண்குறி, பிரமன்.

பிரசாரம்—வேங்கைமரம்.

பிரசித்தம்—அறிவிப்பு.

பிரசுரன்—சுக்கிரன்.

பிரதம்—ஈகை.

பிரதரம்—அம்பு.

பிரதனம்—படையிலோர்தொகை.

பிரதானம்—முக்கியம்.

பிரதிலோமன்— இழிவுயர்வாண்பெண்ணிற்பிறந்தோன்.

பிரதீசி—மேற்கு.

பிரதேசம்—இடம்.

பிரத்தல்—எழுத்திலாவோசை.

பிரத்தியக்கு—மேற்கு.

பிரத்தியாகாரம் — அட்டாங்கயோகத்தொன்று.

பிரபஞ்சம்—உலகம், சேனை, விசாலம்.

பிரபஞ்சனன்—காற்று.

பிரபம்—தண்ணீர்ப்பந்தல்.

பிரபவ—ஓராண்டு.

பிரபா—தண்ணீர்ப்பந்தல்.

பிரபாகரன்—சூரியன்.

பிரபாவம்—ஒளி, கீர்த்தி, மகிமை.

பிரபு—அதிகாரி, வல்லவன்.

பிரபை—ஒளி, தண்ணீர்ப்பந்தல்.

பிரப்பு—ஒருகலத்திற்பல்லுணவின்பரப்பு, பெருண்டி.

பிரமகற்பம்—ஆயிரங்கோடாகோடி.

பிரமகைவர்த்தம்—அட்டாதசபுராணத்தொன்று.

பிரமசாரி—நாலாச்சிரமிகளிலொருவன், வீட்டுமாசாரி.

பிரமணம்—சுழலல்.

பிரமம் — அட்டாதசபுராணத்தொன்று, அட்டாதசவுபபுராணத்தொன்று, கடவுள், சலகசம், தத்துவம், தவசு, நடு, மயக்கம், முத்தி, வேதம்.

பிரமரம்—வண்டு.

பிரமரி—கூத்தின்விகற்பம், சுழலல்.

பிரமலோகம்—மேலேழுலகிற் சத்தியலோகம்.

பிரமனாள்—உரோகணிநாள்.

பிரமன்—அயன்.
பிரமன்றந்தை—திருமால்.
பிரமாணம்—அளவை, ஆணை.
பிரமாண்டம் — அட்டாதசபுராணத்தொன்று, பிரமாண்டம்.
பிரமாதம்—தவறல்.
பிரமாதி—ஓராண்டு.
பிரமாதீச்ச—ஓராண்டு.
பிரமாநந்தம்—மோட்சவின்பம்.
பிரமாயுதம்—பத்திலட்சம்.
பிரமேயம்—அறியப்படுதல்.
பிரமை—அறிவு, மயக்கம்.
பிரமோதம்—உவகை.
பிரமோதூத—ஓராண்டு.
பிரம்பு—தேரின்முட்டி,பிரம்பு, வரம்பு
பிரயத்தனம்—முயற்சி.
பிரயாசம்—வருத்தம்.
பிரயாணம்—வழிச்செல்கை.
பிரயுதம்—பத்திலட்சம்.
பிரயோகம்—ஏவல், செய்தல்.
பிரவாளம்—பவளம்.
பிரளயம்—படையிலோர்தொகை,வெள்ளம்.
பிரளல்—எழுத்திலாவோசை.
பிராகாரம்—மதில்.
பிராகிருதம்—வடமொழி.
பிராசயம்—ஆதி.
பிராசி—கிழக்கு.
பிராசீனம்—பழமை.
பிராசேதசன்—வான்மீகி.
பிராட்டி—பெருமாட்டி.
பிராணன்-இதயத்தியங்கும்வாயு, உயிர்.
பிராணுயாமம் — அட்டாங்கயோகத்தொன்று.
பிராதக்காலம்—விடியல்.
பிராந்தி—மயக்கம்.
பிராப்பியம்—பேறு.
பிராமி—சரச்சுவதி.
பிராய்—ஓர்மரம்.
பிராவம்—கொல்லை.
பிராறு—நிறைபுனல்.
பிரான்—எப்பொருட்குமிறைவன், கடவுள், சிவன்.
பிரி—பிரிதல், பிரியென்னேவல்.
பிரிதல்—அகறல், போகல்.
பிரித்தல்—நீக்கல்.
பிரியகம்—கடம்பு.
பிரியம்—உவகை.
பிரியலர்—சிநேகிதர்.
பிரியன்—தலைவன்.
பிரியை—பெண், மனைவி.
பிரிவு—பிரிதல்.
பிரீதி—உவகை.
பிருகதி—கத்தரி.
பிருகு—ஓரிருடி, சுக்கிரன்.
பிருகுடி—புருவம்.
பிருங்கம்—வண்டு.
பிருட்டம்—பின்பக்கம்.
பிருதுமானம் — யானைக்கொம்பினடு.
பிருதுவி—பூமி.
பிருத்தியர்—அடிமைகள்.
பிருந்தம்—கூட்டம், துளசி.
பிருந்தை — சலந்தரன்மனைவி, துளசி.
பிரேதம்—பிசாசம், பிணம்.
பிரேயம்—கள்.
பிறை—பான்முதலியவற்றையுறைவிக்கும்பொருள்.

பிலகரி—ஓரிராகம்.
பிலஞ்சுலோபம்—எறும்பு.
பிலம்—கீழறை, குகை, வளை.
பிலவகம்—குரங்கு, தேரை.
பிலவங்கம்—குரங்கு, தேரை.
பிலன்—எறும்பு.
பிலிற்றல்—கொப்புளித்தல்,வியங்கோண்முற்று.
பில்கல் — கொப்புளித்தல், வியங்கோண்முற்று.
பில்லடை—அப்பவர்க்கம்,
பில்லி—பூனை.
பிழம்பு—திரட்சி.
பிழார்—இறைகூடை.
பிழி—கள், பிழியென்னேவல்.
பிழிதல் — ஒன்றனீராக்கைமுதலியவற்றுநெருக்கிவெளிப்படுத்தல்.
பிழியர்—கள்விற்போர்.
பிழை—குற்றம், பிழையென்னேவல்.
பிழைக்கை—பிழைத்தல்.
பிழைத்தல்—உய்தல், பிழைசெய்தல்.
பிளத்தல்—அறுத்தல், போழ்தல்.
பிளவு—பிளத்தல்.
பிளிர்த்தல்—கொப்புளித்தல்.
பிளிறல்—ஒலித்தல், கிண்டல், பேசலாலெழுமொலி, வியங்கோண்முற்று.
பிளிறு — ஆரவாரம், எழுத்திலாவோசை, சேறு, பிளிறென்னேவல்.
பிள்ளை — அன்றிற்குஞ்சு, இளமையோன், கரிக்குருவி, கிளி, குரங்காதிகோட்டில்வாழ்விலங்கின்பிள்ளை, தெங்கின்கன்று, நாகணவாய்ப்புள், பறவைக்குஞ்சு, பன்றிக்குட்டி, பூனைக்குட்டி, மகன், மரக்கன்று, மான்குட்டி, முயற்குட்டி, வயிரவன்.
பிற—அசைச்சொல், (உ-ம். யாஞ்சிலவரிசிவேண்டினேமாகத்தான்பிறவரிசையறிதலிற்றன்னுந்தூக்கி.
பிறகிடல்—பின்றல்.
பிறகு—பின்புறம்.
பிறக்கம்—அச்சம், மரக்கொம்பு.
பிறக்கிடல்—பின்றல்.
பிறக்கு—அசைச்சொல், (உ-ம். நசைதரவந்தோர் நசைபிறக்கொழிய,) பின்புறம், வழு.
பிறங்கடை—மகன், வழித்தோன்றல்.
பிறங்கல் — உயர்ச்சி, ஒலித்தல், சிறுமலை, நிறைதல், பெருமை, மலை, மிகுதி, வியங்கோண்முற்று.
பிறங்கியல்—முதுகாடு.
பிறங்கு-பிறங்கென்னேவல்,விரலிறை.
பிறத்தல்—பிறப்பு.
பிறந்தகம்—தாய்மனை.
பிறந்தவம்—பிறப்பு.
பிறந்தை—பவம், பாவம், வினைமுற்று.
பிறப்பிடம்—உறைவிடம்.
பிறப்பிலி—சிவன்.
பிறப்பிறப்பில்லான்—கடவுள், சிவன்.
பிறப்பு—அச்சம், உற்பத்தி, நெருக்கம்.
பிறவினை—காமம், பாவம், பிறவினை.
பிறழ்தல்—ஒளிசெய்தல்,சொல்லுதல், நடுக்கம், வெறுப்பு,வேறுகப்போதல்.
பிறை—சந்திரப்பிறை.
பிறைசூடி—சிவன்.
பிற்கொழுங்கோல் — உத்திரட்டாதிநாள்.
பிற்றல்—பிறகிடல்.
பிற்றை—பின்னைநாள்.
பிறைகபாணி—சிவன்.

பிநாகம்—சிவன்வில், திரிசூலம், மணிமாலை, மண்மாரி.
பிநாகி — ஒருருத்திரன், சிவன், பெண்ணையாறு.
பின் — ஏழனுருபு, (உ-ம். காதலிபின் சென்றதம்ம,) கடை, காரணம், பெருமை, வழி.
பின்பனி—மாசிபங்குனியின் பருவம்.
பின்பிறந்தாள்—தங்கை.
பின்பு—பின்.
பின்றல்—பிறகிடல்.
பின்றை—பின்னை நாள்.
பின்றோன்றல்—தம்பி.
பின்னகம்—மயிர்முடி.
பின்னம் — பராகம், பிணக்கு, வேற்றுமை.
பின்னர்—பிறகு.
பின்னல்—சடை, வியங்கோண்முற்று.
பின்னவர்—சூத்திரர்.
பின்னவன்—தம்பி.
பின்னிடல்—தோல்வி.
பின்னிளவல்—தம்பி.
பின்னை—இலக்குமி, இளையவள், இளையவன், பின்பு.
பின்னைகேள்வன்—திருமால்.
பின்னோன்—தம்பி.

பீ

பீசம்—ஆண்குறி, தாமரைப்பூச்சுருள், விதை.
பீடம்—ஆசனம், சிங்காதனம்.
பீடரம்—கோயில்.
பீடனம்—பீடித்தல்.
பீடிகை—அணிகலச்செப்பு, கடைவீதி, பீடம், பூந்தட்டு, முனிவரிருக்கும்பீடம்.
பீடு—பெருமை, வலி.
பீடை—துன்பம்.
பீட்டை—பயிரிளங்கதிர்.
பீதகம்—சாந்து, பொன், பொன்னிறம், வெட்டிவேர்.
பீதகன்—வியாழம்.
பீதகாரம்—வேங்கைமரம்.
பீதம் — நால்வகைச்சாந்து, பொன், பொன்னிறம், மஞ்சள்.
பீதன்—அச்சமுள்ளோன்.
பீதாம்பரன்—திருமால்.
பீதி—அச்சம்.
பீதை—பொன்னிறப்பூவுளமருதோன்றிமரம்
பீரம்—பீர்க்கு, பூவரசு, வாகைமரம்.
பீரு—அச்சமுள்ளோன், புருவம்.
பீருகன்—அச்சமுள்ளோன்.
பீர்—அச்சம், பசலை, பீர்க்கு, முலைப்பால்.
பீலி—ஆலவட்டம், சிறுசின்னம், பெருஞ்சவளம், பொன், மதில், மயில், மயிற்றோகை, மாதர்காலணியிலொன்று, வாச்சியம், விசிறி.
பீலித்தண்டு—எறியாயுதம்.
பீலுகன்—அச்சமுள்ளோன்.
பீழை—துன்பம்.
பீள்—கருப்பம், பயிரிளங்கதிர்.
பீறல்—கிழித்தல், வியங்கோண்முற்று.
பீனம்—பருமை, பாசி.

பு

புகர் — கபிலநிறம், குற்றம், சுக்கிரன், நிறம்.
புகர்முகம்—யானை.

புகர்வு—சோறு.
புகலல் — சொல்லல், வியங்கோண்முற்று.
புகலிடம்—ஊர், தஞ்சம்,
புகல் — உடல், குதிர், சொல், தஞ்சம், புகலென்னேவல், வியங்கோண்முற்று, வெற்றி.
புகழ்—கீர்த்தி, புகழென்னேவல்,
புகழ்ச்சி—துதி.
புகழ்தல்—துதித்தல்.
புகறல்—குறித்தல், சொல்லல்.
புகார்—கழிமுகம், காவிரிப்பூம்பட்டினம், வினைமுற்று.
புகுடி—கழி, புருவம், வாயில்.
புகுதி—நுழைவாயில், வினைமுற்று.
புகுத்தல்—புகவிடல்.
புகை—தூமம், தென்கீழ்த்திசைப்பாலன்குறி, புகையென்னேவல், யோசனைதூரம்.
புகைதல்—சினக்குறிப்பு, புகையெழல்.
புகைத்தல்—புகையச்செய்தல், சினக்குறிப்பு.
புக்கல்—புகுதல்.
புக்கி—பிராய்மரம்.
புக்கில்—உடல், வீடு.
புங்கம்—அம்பு, அம்புக்குதை, உயர்ச்சி, சிலை.
புங்கவர்—கடவுளர், வானோர்.
புங்கவன்—கடவுள், குரு, புத்தன்.
புசித்தல்—உண்டல்.
புச்சம்—தேள், வால்.
புஞ்சம்—திரட்சி.
புஞ்சவனம்—கருக்கொண்டமூன்றுந்திங்களிற்செய்கருமம்.
புடம்—இடம், புடம், புறம்.

புட்வி—பூமி.
புடை—இடம், பக்கம், புடையென்னேவல்.
புடைத்தல்—அடித்தல், குட்டுதல், குத்தல், பறவைச்சிறகடித்தல், புடைத்தல், வீங்குதல்.
புடைவை—சீலை.
புட்கரம்—ஆகாயம், ஓர்தீவு, குருகு, தாமரைப்பூ, தீர்த்தம், நீர், யானைத்துதிக்கைநுனி, வாள்.
புட்கரிணி—தாமரைக்குளம், நாற்சதுரவாவி.
புட்கலம்—நிறைதல்.
புட்கலைமணாளன்—ஐயனார்.
புட்டகம்—சீலை.
புட்டம்—காக்கை, சீலை, நிறைவு.
புட்டில்—இறைகூடை, கூடை.
புட்பகம்—இரத்தினகங்கணம், குபேரவிமானம்.
புட்பகவிமானன்—குபேரன்.
புட்பகேது—மன்மதன்.
புட்பதந்தம்—வடமேற்றிசையானை.
புட்பம்—பூ.
புட்பலாவகன்—பார்ப்பனப்பெண்ணுக்குஞ்சாலியனுக்கும்பிறந்து பூக்கொய்து மாலைவிற்போன்.
புணரி—கடல், கடற்றிரை.
புணர்—புணரென்னேவல், புதுமை.
புணர்ச்சி—இசைப்பு, கலத்தல்.
புணர்தல்—கலத்தல், சார்தல்.
புணர்ப்பு—உடல், கூடல்.
புணர்வு—இசைப்பு, உடல், கலத்தல்.
புணை—தெப்பம், புணையென்னேவல், மரக்கலம், மூங்கில், விலங்கு.
புதன்—ஓர்கிரகம், தேவன், புலவன்.

புண்—ஊன், விரணம்.
புண்டரம்—ஓரிரோகை, கழுகு, நெற்றிக்குறி, வெண்கரும்பு.
புண்டரீகக்கண்ணன்—திருமால்.
புண்டரீகம்—கழுகு, தாமரை, தென்கிழ்த்திசையானை, புலி, வண்டு, வெண்கொற்றக்குடை, வெண்டாமரை.
புண்ணியமுதல்வன்—புத்தன்.
புண்ணியமூர்த்தி—புத்தன்.
புண்ணியம்-அறம், தூய்மை, நல்வினை.
புண்ணியன்—அரன், அருகன்.
புண்ணீர்—இரத்தம்.
புதர்—புதர், புலவர்.
புதல்—புருவம், புல், பூடு.
புதல்வன்—மகன்.
புதல்வி—மகள்.
புதவு—ஓர்வகைப்புல், கதவு, கோபுரவாயிலிற்கதவுவிட்டுப்புகும்வழி.
புதன்—ஒருகிரகம், தேவன், புலவன்.
புதா—கொக்கு.
புதியர்—விருந்தினர்.
புதுக்கல்—புதுப்பித்தல், வியங்கோண்முற்று.
புதுமை—நூதனம், மிகுதி.
புதுவை—புதுச்சேரி.
புதை—அம்பின்கட்டு, அம்பு, உடல், புதுமை, புதையென்னேவல், மறைவு.
புதைத்தல்—சேமித்தல்.
புதையல்—நிட்சேபம், புதைத்தல், வியங்கோண்முற்று.
புத்தகம் — எழுதுபுத்தகம், சித்திரப்படாம்.
புத்தர்—பௌத்தர்.
புத்தன் — திருமாலவதாரத்தொன்று, புத்தன்.
புத்தி—அறிவு.
புத்திரன்—மகன்.
புத்திரி—மகள்.
புத்தேணுடு—தெய்வலோகம்.
புத்தேளிர்—தெய்வம், வானோர்.
புத்தேள்—தெய்வம், புதுமை.
புநர்தம்—புநர்பூசநாள்.
புநீதன்—அரன், அருகன், இந்திரன்.
புந்தி—அறிவு, புதன்.
புந்தியர்—புலவர்.
புமான்—ஆண்மகன்.
புயகடி—பாம்பு.
புயகம்—பாம்பு.
புயங்கம்—பாம்பு.
புயம்—தோள்.
புயல்—சுக்கிரன், மேகம்.
புய்த்தல்—பயத்தல், பறித்தல்.
புரசு—ஓர்மரம்.
புரட்டல்—புரளச்செய்தல், வியங்கோண்முற்று.
புரட்டாதி—ஓர்மாதம், பூரட்டாதி.
புரட்டை—பூரட்டாதி.
புரணி—ஊன், தோல்.
புரத்தல்—காத்தல், கொடுத்தல், நிலைபெறுதல்.
புரந்தரன்—இந்திரன்.
புரமூன்றெரித்தோன்—சிவன்.
புரம்—இராசதானி, உடல், ஊர், நகரம், மருதநிலத்தூர், மூன்.
புரவலன்—அரசன், காத்தளிப்போன், கொடையாளன்.
புரவி—அச்சுவினிநாள், குதிரை.
புரவிவட்டம்—குதிரைவையாளிவீதி.
புரவு—கொடை.

புரளல்-புரளுதல், வியங்கோண்முற்று.
புராடம்—நகருட்சஞ்சாரம்.
புராணம் — கதை, காந்தமுதலியபுராணம், பழமை.
புராதனம்—பழமை.
புராரி—சிவன்.
புரி—ஆசை, இராசதானி, ஊர், கட்டு, கயிறு, கோட்டை, சங்கு, சுருள், புரியென்னேவல், மருதநிலத்தூர்.
புரிசை—மதில்.
புரிதல்—செய்தல், விரும்பல்.
புரிந்தோர்—சிநேகிதர்.
புரிமுகம்—கோபுரம்.
புரியம்—கூத்து.
புரிவு—அன்பு, ஆசை.
புரீடம்—மலம்.
புருகுற்சன்—ஓர்சக்கரவர்த்தி.
புருகூதன—இந்திரன்.
புருடநாள்—இரேவதிநாள்.
புருடர்—ஆடவர்.
புருடவாகனன்—குபேரன்.
புருடன்—ஆன்மா, தலைவன், மக்களிலாண்.
புருடோத்தமன்—திருமால்.
புருவம்—குதிரை, புருவம்.
புருவை—ஆடு, இளமை.
புரூரம்—புருவம்.
புரூரவன்—ஓர்சக்கரவர்த்தி.
புரை—உட்டுளை, உயர்ச்சி, உவமை, குற்றம், புரையென்னேவல்.
புரைதல்—போலுதல்.
புரைய — உவமைச்சொல், வினையெச்சம்.
புரையுள்—வீடு.
புரையோர்—திருடர்.
புரோகதி—நாய், முன்னடப்பது.
புரோகிதன்—இந்திரன், வருங்காரியஞ்சொல்வோன்.
புரோசர்—குறுநிலவேந்தர்.
புரோசை—யானைகட்டுங்கயிறு.
புலத்தல் - புணர்ச்சிக்கமையாததுபோலமுறைபடல்.
புலத்தியன்—ஓரிருடி.
புலத்தியன்மைந்தன்—வியாசன்.
புலமையர்—புலவர்.
புலம்—அறிவு, இடம், ஒலிமுதலைம்புலம், திசை, வயல்.
புலம்பல்—ஆரவாரம், இரங்கல், ஒலித்தல், வியங்கோண்முற்று.
புலம்பன்—நெய்தனிலத்தலைவன்.
புலம்பு — அச்சம், ஒலி, கலக்கம், தனிமை, துன்பம், புலம்பென்னேவல்.
புலரி—விடியல்.
புலர்தல்—வாடல்.
புலர்த்தல்—பூசுதல், வாட்டல்.
புலவர்—அறிஞர், தேவர்.
புலவன்—அருகன், அறிஞன், கம்மாளன், கூத்தன், தேவேந்திரன், பாடுவோன், புதன், புலவன், முருகன், வானோன்.
புலவி—ஊடலின்முதிர்தல்.
புலவு—ஊன், நரகம்.
புலன்—புலம்.
புலன்வென்றோர்—முனிவர்.
புலால்—ஊன்.
புலானீர்—இரத்தம்.
புலி—சிங்கவிராசி, நால்வகைச்சாந்து, புலி.
புலிக்கொடியோன்—சோழன்.

புலிங்கம்—ஊர்க்குருவி, தீப்பொறி.
புலிதொடக்கி—இண்டு.
புலித்தோலுடையோன்—சிவன்.
புலிந்தம்—புளிந்தம்.
புலுதம்-அளபெடை, குதிரைமுழுவோட்டம்.
புலை—புலால், விடக்கு.
புலைஞர்—சண்டாளர்.
புலைமகன்—புலையன்.
புலைமை—புலைத்தன்மை.
புலோமசை—இந்திராணி.
புலோமன்—இந்திராணிதகப்பன், ஓரரக்கன்.
புல்—அனுடநாள், பனைமரம், புலி, புல், புல்லென்னேவல், புன்மை.
புல்கல் — புணர்தல், வியங்கோண்முற்று.
புல்லகண்டம்—சருக்கரை.
புல்லகம்—நுதலணி.
புல்லம்—இடபவிராசி, எருது.
புல்லர்—கீழ்மக்கள், வேடர்.
புல்லல்—அமைதல், கூடுதல், சார்தல், புணர்தல், வியங்கோண்முற்று.
புல்லார்—பகைவர், வினைமுற்று.
புல்லி—புறவிதழ், வினையெச்சம்.
புல்லியர்—கீழ்மக்கள்.
புல்லுநர்—சிநேகிதர்.
புல்லெனல்—ஒளிமழுங்கல், பொலிவழிதல்.
புல்வாய்—கலைமான், வினைமுற்று.
புவலோகம்—மேலேழுலகிலொன்று.
புவனம்—உலகப்பொது, நீர், பூமி.
புவனி—பூமி.
புவி—பூமி.

புழக்கம்—பழகல்.
புழல்—ஓரூர், சலதாரை, துளையுடைப்பொருள்.
புழு—கிருமி, புழுவென்னேவல்.
புழுக்கம்—வெம்மை.
புழுக்கல்-சோறு, வியங்கோண்முற்று.
புழுங்கல்—சினக்குறிப்பு, புழுங்குதல், வியங்கோண்முற்று.
புழுத்தல்—புழுக்கத்திலுண்டாதல்.
புழுதி—பராகம், புழுதி.
புழுது—அம்புக்குதை.
புழை—உட்டுளை, கதவுவிட்டுப்புகுவழி, துளையுடைப்பொருள்.
புழைக்கை—யானை.
புளகம்—கண்ணாடி, சோறு, புடைப்பு, மயிர்சிலிர்த்தல்.
புளகித்தல்—மயிர்சிலிர்த்தல்.
புளவை—விரணம்.
புளி — ஓர்சுவை, புளியமரம், புளியென்னேவல்.
புளிங்கறி—புளிப்புள்ளகறி.
புளிஞர்—வேடர்.
புளிதம்—ஊன்.
புளித்தல்—நெருங்கல், புளிப்பு.
புளிந்தம்—ஓர்தேயம்.
புளிந்தன்—வேடன்.
புளிப்பு—ஓர்சுவை.
புளிமா—புளிப்புள்ளமாமரம்.
புளினம்—மணற்குன்று, மணற்றிட்டை.
புளினர்—வேடர்.
புள்—அவிட்டநாள், பறவைப்பொது, வண்டு.
புள்ளம்—கொடுவாள்.
புள்ளரசு—கருடன்.

புள்ளி—இலக்கப்புள்ளி, ஒற்றெழுத்து, நண்டு, பல்லி, பொறி, மதிப்பு.

புள்ளீட்டம்—பறவைக்கூட்டம்.

புள்ளுவம்—வஞ்சம்.

புள்ளுவர்—கீழ்மக்கள், பாலைநிலமாக்கள்.

புள்ளொலி—பறவைக்கூட்டம்.

புறக்காழ்—புறவயிரம்.

புறங்காடு—சுடுகாடு.

புறங்காழ்—புறவயிரம்.

புறங்கூறல்—தூற்றல், வியங்கோண்முற்று.

புறணி—புறம்.

புறத்தவன்—ஐயனார்.

புறத்திணை—ஒழுக்கம்.

புறநீர்மை—ஓர்பண்.

புறந்தரல் — ஓம்பல், தோல்வி, வியங்கோணமுற்று.

புறம்—ஏழனுருபு, (உ-ம். செல்லுமென்னுயிர்ப்புறத்திறுத்தமருண்மாலை,)பக்கம், பின்புறம், மதில், முதுகு, வீரம்.

புறம்பணை-குறிஞ்சிநிலம்,முல்லைநிலம்.

புறவணி—குறிஞ்சிநிலம்,முல்லைநிலம்.

புறவம்—காடு, குறிஞ்சிநிலம், புறா, முல்லைநிலம்.

புறவு-குறிஞ்சிநிலம்,முல்லைநிலம்,"புறா.

புறவுரை—பாயிரம்.

புறன்—புறம், முதுகு.

புற்கசன்—சண்டாளன்.

புற்கலம்—உடல்.

புற்கலன்—உயிர்.

புற்கு—கபிலநிறம்.

புற்கை—கூழ்.

புற்பதி—பனைமரம்.

புற்புதம்—நீர்க்குமிழி.

புற்றளி—அனுடநாள், பனைமரம்.

புற்று—புற்று.

புனம்—கொல்லை.

புனருத்தி—கூறியதுகூறல்.

புனர்ப்பவம்—நகம், மீண்டுபிறத்தல்.

புனல்—ஆறு, நீர்.

புனல்வேந்தன்—வருணன்.

புனவர்—குறிஞ்சிநிலமாக்கள்.

புனனாடன்—சோழன்.

புனிறு — ஈன்றணிமை, சூதகம், தோல், புதுமை.

புனிதம—சுத்தம், புநர்பூசம்.

புனிதன்—அரன், அருகன், இந்திரன், தூயவன், புத்தன்.

புனை — கால்விலங்கு, சீலை, புதுமை, புனையென்னேவல்.

புனைதல்—அணிதல், அலங்கரித்தல்.

புனைந்துரை — சிறிதினைப்பெருக்கிப் பெரிதினைச்சுருக்கிக்கூறல், பாயிரம்.

புனைவர்—கம்மாளர்.

புன்கண்—துன்பம், நோய், மெலிவு.

புன்கம்—சோறு.

புன்காலி—காயாமரம், பாதிரிமரம்.

புன்கு—புனமுருங்கை, புன்கமரம்.

புன்மை—ஈனம், மறதி.

புன்னாகம்—புன்னைமரம்.

புன்னாகவராளி—ஓரிராகம்.

புன்னை—ஓர்மரம்.

பூ

பூ—அழகு, இலை, ஓரெழுத்து, கூர்மை, பிறப்பு, பூ, பூமி, பூவென்னேவல், பொலிவு.

பூகதர்—புகழ்வோர்.
பூகம்—கமுகு, கூந்தற்பனை, திரட்சி.
பூக்கம்—ஊர், கமுகு, மருதநிலத்தூர்.
பூசம்—ஓர் நாள்.
பூசல்—பூசுதல், பெரிதொலித்தல்,பொருதல், வியங்கோண்முற்று.
பூசனை—ஆராதனை.
பூசித்தல்—பூசனை.
பூசுதல்—அலங்கரித்தல், சந்தனமுதலியபூசல்.
பூசுரர்—அந்தணர்.
பூசை—ஆராதனை, பூனை.
பூஞை—பூனை.
பூடணம்—ஆபரணம்.
பூடு—பூண்டு.
பூட்கை—மேற்கோள், யாளி, யானை.
பூட்சி—உடல், பூணல்.
பூட்டல் — பூட்டுதல், வியங்கோண்முற்று.
பூட்டு — நாணி, பூட்டும்பூட்டு, பூட்டென்னேவல்.
பூட்டை — ஏற்றமரம், காராம்பி, செக்கு.
பூணல்—அணிதல், வியங்கோண்முற்று.
பூணி—எருது, இடபவிராசி.
பூணை—முல்லைநிலம்.
பூண்—ஆபரணம், பூணென்னேவல்.
பூண்டி—ஊர், வினைமுற்று.
பூண்டு—பூடு.
பூததாத்திரி—பூமி.
பூதநாதன்—சிவன்.
பூதம்—இறந்தகாலம், உயிர், ஐம்பூதம், தூய்து, பரணிநாள், பேய்.
பூதரம்—பொன்மலை, மலை.
பூதலம்—பூமி.
பூதவம்—ஆலமரம், மருதமரம்.
பூதாரம்—பன்றி
பூதாரன்—அரசன்.
பூதி — கொடுமை, சாம்பல், செல்வம், துர்க்கந்தம், நரகம், புலால், புழுதி, விபூதி.
பூதியம்—உடல், பூமி.
பூதை—அம்பு.
பூத்தல்—உண்டாதல், பயத்தல், மலர்தல்.
பூநாகம்—நாகப்பூச்சி.
பூநீர்—பனிநீர்.
பூந்துணர்—பூங்கொத்து.
பூந்தை—ஒரூர், பூதன்றந்தை.
பூந்தோட்டம்—நந்தனவனம்.
பூபதி—அரசன், ஒருகுளிகை.
பூபன்—அரசன்.
பூபாலர்—பூவைசியர்.
பூபாலன்—அரசன், வேளாளன்.
பூபாளம்—ஓரிசை.
பூப்பகம்—பெண்குறி.
பூப்பு—மகளிர்சூதகம்.
பூமகள்—இலக்குமி, பூமிதேவி.
பூமன்—செவ்வாய்.
பூமி—பூவுலகு.
பூமிகொழுநன்—திருமால்.
பூமிசன்—அங்காரகன், நரகாசுரன்.
பூமிசைநடந்தோன் — அருகன், புத்தன்.
பூமின்—இலக்குமி, பூமிதேவி
பூரகம்—மூச்சுள்ளேவாங்கல்.
பூரணம்—எல்லாம், நிறைவு, பெருகுதல்.

பூரணன்—அரன், அருகன், கடவுள்.
பூரணி—இலவமரம்.
பூரணை—சந்திரனேந்தாம்பக்கம், சாத்தாவின்றேவி.
பூரணைகேள்வன்—ஐயனர்.
பூரம்—ஓர்நாள், ஓர்மருந்து, பூதம்.
பூரவாகினி—சரச்சுவதி.
பூரி—ஓரிசை, ஓரெண், கலப்புநெல்,நாணி, பூரியென்னேவல்,பொன்,மிகுதி.
பூரிகம்—அப்பவர்க்கம்.
பூரிகலியாணி—ஓரிராகம்.
பூரிகை — அப்பவர்க்கம், ஊதிடும்பூரிகை.
பூரிதம்—நிரம்பப்பட்டது.
பூரித்தல்—உவத்தல், நிறைத்தல்.
பூரிப்பு—மிகுகளிப்பு, மிகுதி.
பூரிமாயு—ஆணரி, பழமை.
பூரியம்—அரசிருக்கை, ஊர், மருதநிலத்தூர், வேந்தர்வீதி.
பூரியர்—கீழ்மக்கள்.
பூரு—புருவம்.
பூருகம்—மரம்.
பூருண்டி—மல்லிகை.
பூருவம்—ஆதி, கிழக்கு, சந்திரன்முன்பக்கம், பழமை, முன்பு.
பூருவகவுளம்—ஓரிசை.
பூர்த்தி—நிறைவு.
பூலத்தி—மருதமரம்.
பூல்—ஓர்செடி.
பூவணம்—ஓர்சிவதலம்.
பூவம்பன்—மன்மதன்.
பூவரசு—ஓர்மரம்.
பூவலயம்—பூமி.
பூவல்—சிவப்பு, தரவு.
பூவாளி—மன்மதன்.
பூவை—காயாமரம்,நாகணவாய்ப்புள், பெண்.
பூவைசியர்—உழவர், வேளாளர்.
பூழான்—கவுதாரி, கானங்கோழி.
பூழி—குழைசேறு, சேற்றிலெழுங்குமிழி, பராகம், புழுதி.
பூழியன்—சேரன்.
பூழில்—அகில்.
பூழை — கோபுரவாயிற்கதவிலிட்டுப்புகும்வழி.
பூழ்தி—பராகம், புலால், புழுதி.
பூளை—இலவம்பஞ்சு, ஓர்செடி.
பூனை—பூனே.

பெ

பெங்கு—கள்ளிலோர்பேதம்.
பெடம்—மிகுதி.
பெடை—பறவைப்பெண்.
பெட்டகம்—பெட்டி.
பெட்டல்—ஆசைப்பெருக்கம், விரும்பல்.
பெட்டார்—சிநேகிதர்.
பெட்டி—பேழை.
பெட்டு—பொய்.
பெட்டை—ஒட்டகம்,கழுதை, குதிரை, சிங்கம், மரையிவற்றின்பெண், பறவைப்பெண்.
பெட்பு—ஆசை.
பெண்-பெண்,விலங்கின்பெண்பொது.
பெண்டர்—அலியர்.
பெண்டகர்—அலியர்.
பெண்டு—பெண்மகள்.
பெண்ணை—அநுடநாள், ஓராறு, பனைமரம்

பெண்மரம்—புறவயிரமுள்ளமரம்.

பெண்மை — பெண்டன்மை, மாட்சிமை.

பெதும்பை—பதினொருவயதுப்பெண், பெண்பொது.

பெம்மான்—பெருமான்.

பெயர்—நாமம், பெயரென்னேவல், பெருமை.

பெயர்தல்—ஆடல், உரிஞ்சல், போகல், வேறுபடல்.

பெயர்த்தல்—வேறுபடுத்தல்.

பெயர்வு—பெயர்தல்.

பெயலை—மழை.

பெயல் — மழை, மழைத்துளி, வியங்கோண்முற்று.

பெய்தல் — செறித்தல், போடுதல், மழைபொழிதல், விடுதல்.

பெய்துரை—பாயிரம்.

பெரிது—பெரியது.

பெருகல்—நிறைதல், மிகுதல், வியங்கோண்முற்று.

பெருகு—தயிர், பெருகென்னேவல்.

பெருகுதல்—நிறைதல்.

பெருக்கம்—செல்வம், பெருகுதல், மிகுதி.

பெருக்கல் — துடைப்பத்தாற்பெருக்கல், நிறைத்தல், மிகல், வியங்கோண்முற்று.

பெருக்கு—பெருக்கென்னேவல், வெள்ளம்.

பெருங்கிராமம்—அஞ்ஞூறுகுடியூர்.

பெருங்கிழமை—முழுதுமுரிமை.

பெருங்குருகு—சக்கரவாகப்புள்.

பெருங்கோடணை—முரசு.

பெருச்சாளி—பெருச்சாளி.

பெருஞ்சொல்—பலரறிசொல்.

பெருநாள்—இரேவதிநாள்.

பெருநீர்—கடல்.

பெருந்தகை—அரசன்.

பெருந்தன்மை—மானம்.

பெருந்திணை—வழுவுடைக்காமம்.

பெருமகன்—அரசன், சிறந்தோன்.

பெருமலை—பொன்மலை.

பெருமா—யானை.

பெருமாட்டி—தலைவி.

பெருமான்—அரசன், குரு, சிவன், சிறந்தோன், மூத்தோன், விட்டுணு.

பெருமிதம்—களிப்பு, மிகுதி.

பெருமீன்—யானைமீன்.

பெருமை-பொலிவு, மாட்சிமை, மிகுதி.

பெரும்பதி—மருங்கிலூர்க்குழ்பதி.

பெரும்பறவை—எண்காற்புள்.

பெரும்புள்—கூகை.

பெரும்பூண்—பெரும்பதக்கம்.

பெரும்பூழை—கதவிலிடும்வாயில்.

பெறல்—அடைதல், கிடைத்தல், வியங்கோண்முற்று.

பெறுவதுகொள்வோர்—கூத்தியர்.

பெற்றம்—இடபவிராசி, எருது, பசுச்சாதிப்பொது, வினைமுற்று.

பெற்றோர்—தந்தைதாயர்.

பெற்றி—குணம்.

பெற்றிடல்—பெறுதல்.

பே

பே—ஓரெழுத்து, நுரை.

பேகம்—தவளை.

பேகன் — கடையெழுவள்ளலிலொருவன்.

பேகி—தவளைப்பெண்.

பேசல் — சொல்லல், வியங்கோண்மு ற்று.

பேச்சு—சொல், சொல்லல்.

பேடர்—அலியர்.

பேடாடல்—காமனுடல்.

பேடியர்—அலியர்.

பேடு—அலி, ஊர், மன்மதன்கூத்து.

பேடை—பறவைப்பெண்.

பேட்டை—நகரந்தருகுஞ்சந்தைகூட லுமாகியவூர்.

பேணல்—ஆசைப்பெருக்கம், ஓம்பல், கருத்து, குறித்தல், வியங்கோண்முற் று, விரும்பல்.

பேதம்—வேற்றுமை.

பேதி—இரதம், பேதம், பேதியென்னே வல்.

பேது—உன்மத்தம்.

பேதை — அறிவில்லான், ஏழுவயதுப் பெண், கள்,தரித்திரன், பெண்,பேடி.

பேதைமை—அறிவின்மை.

பேதையர்—இழ்மக்கள், தரித்திரர், பா லைநிலமகளிர்.

பேம்—அச்சம்.

பேயோடாடி—சிவன்.

பேய்—பிசாசம்.

பேய்த்தேர்—கானல்.

பேரணிகலம்—பெரும்பதக்கம்.

பேரறிவு—முதறிவு.

பேரன்—பெயரன்.

பேராண்மை—அரியசெயல்.

பேராந்தை—நிலாமுகிப்புள்.

பேராளன்—மிருகசிரிடநாள்.

பேரி—பறைப்பொது, முரசு,

பேரிகை—ஓர்வாச்சியம்.

பேரிளம்பெண் — நாற்பதுவயதுப் பெண்.

பேரின்பம்—ஆனந்தம்.

பேர்தல்—அகலல், பெயர்தல்.

பேர்த்தல்—பெயர்த்தல்.

பேர்த்தி—பெயர்த்தி, வினைமுற்று.

பேழை—பெட்டி.

பேழ்—பெருமை.

பேழ்வாய்—பெருவாய்.

பேறு—இலாபம்.

பேனம்—நுரை.

பை

பை—அழகு,ஒரெழுத்து, நிறம்,பச்சை, பாம்பின்படம், பை, பையென்னேவ ல், மந்தம்.

பைங்கூழ்—நோய், பயிர்.

பைசாசம்—பிசாசம்.

பைஞ்ஞீலம்—மக்கட்பரப்பு.

பைஞ்ஞீலி—ஓரூர்.

பைதல்—துன்பம், பையல்.

பைதிரம்—நாடு.

பைத்தல்—கோபம், சினக்குறிப்பு, ப சுத்தல், பாம்புப்படம்விரித்தல்.

பைத்தியம்—ஓர்நோய்.

பைத்து—பச்சை.

பைமை—தவப்பெண், பச்சை.

பைம்பொன்—பொன், மேருகிரி.

பையுள்—சிறுமை, துன்பம், நோய்.

பையெனல்—மந்தக்குறிப்பு.

பைரவம்—அச்சம், பயங்கரம்.

பைரவன்—க்ஷேத்திரபாலன்.

பைரவி—ஓரிசை, காளி.

பொ

பொருட்டு—சேற்றிலெழுங்குமிழி, தாமரைக்கொட்டை, மலை.

பொக்கம்—பொய், பொலிவு, மிகுதி.

பொக்கு—குற்றம்.

பொங்கடி—யானை.

பொங்கர்—இலவமரம், மரக்கொம்பு, மலை.

பொங்கல்—உயர்ச்சி, பொலிதல், மிகுதி, வியங்கோண்முற்று.

பொங்கழி—தூற்றுநெல்.

பொசிதல்—நீரரும்பல்.

பொச்சாப்பு—மறதி.

பொச்சை — கரிகாடு, காடு, சிறுமலை, மலை.

பொடி—பராகம், புழுதி, பொடியென்னேவல்.

பொடிதல்—கெடுதல்.

பொடித்தல்—கெடுத்தல், புழுதியாக்கல், முளைத்தல்.

பொட்டு—ஓர்புழு, தாலிப்பொட்டு, தானியப்பொட்டு, நெற்றித்திலகம்.

பொதி—அம்பலம், ஓலைக்குடை, கரிகாடு, பொதி, பொதியென்னேவல்.

பொதிசோறு—கட்டுச்சோறு.

பொதிதல்—மூடுதல்.

பொதிப்போதா—பெருநாரை.

பொதியம்—தென்மலை.

பொதியவெற்பன்—பாண்டியன்.

பொதியில்—பொதியமலை.

பொதிர்தல்—மிகுதல்.

பொதிர்ப்பு—அச்சம், நடுக்கம்.

பொது—சாதாரணம்.

பொதுத்தல்—துளைத்தல்.

பொதுமகள்—வேசி.

பொதுமை—பொதுத்தன்மை.

பொதும்பர்—மரச்செறிவு, மரப்பொந்து.

பொதுவர்—இடையர்.

பொதுவியர்—இடைச்சியர்.

பொதுவில்—அம்பலம்.

பொதுளல் — தழைத்தல், நெருங்கல், வியங்கோண்முற்று.

பொந்து—மரப்பொந்து.

பொம்மல்—சோறு, பொலிவு, மிகுதி.

பொம்மெனல்— அனுகாரணவோசை.

பொய்—பொய், பொய்யென்னேவல், மரப்பொந்து.

பொய்கை—குளம், கோட்டான்.

பொய்தல் — தோழி, மகளிர்கூட்டம், மகளிர்விளையாட்டு.

பொய்த்தல்—பொய்சொல்லல்.

பொய்யன்—பொய்சொல்லுவோன்.

பொரி — கரிக்காடு, பொரி, பொரியென்னேவல்.

பொரிதல்—பொரியாதல்,

பொரித்தல் — பொரிக்கறி, பொரியச்செய்தல்.

பொரியல்—பொரிக்கறி, பொரிதல், வியங்கோண்முற்று.

பொருகளம்—போர்க்களம்.

பொருகு—சோறு.

பொருக்கு—சீக்கிரத்தின்குறிப்பு, பொருக்குமண்.

பொருக்கெனல்—சீக்கிரக்குறிப்பு, சீக்கிரம்.

பொருட்செல்வி—இலக்குமி.

பொருட்டு—காரணம்.

பொருட்பெண்டிர்—வேசிகள்.

பொருணி—கள்.

பொருதல்—ஒப்புதல், போர்செய்தல், வியங்கோண்முற்று.

பொருத்தம் — பொருந்தல்.

பொருத்தல்—பொருத்துதல்,மூட்டல், வியங்கோண்முற்று.

பொருத்து—சந்து, பொருத்தென்னேவல்.

பொருத்துதல் — அமைத்தல், மூட்டுதல்.

பொருநர்—படைவீரர்.

பொருநன்—அரசன், குறிஞ்சிநிலத்தலைவன், திண்ணியன், நாடகன்,படைத்தலைவன், படைவீரன்.

பொருநை—ஓராறு.

பொருநைத்துறைவன்—சேரன்.

பொருந்தம் — பொருநையாறு.

பொருந்தர்—வேதகாரர்.

பொருந்தலர்—பகைவர்.

பொருந்தல்—அடுத்தல், அமைதல்,கலத்தல், வியங்கோண்முற்று.

பொருந்தாமை—வெறுப்பு.

பொருபுலி—பாலைநிலம்

பொருப்பன்—குறிஞ்சிநிலத்தலைவன்.

பொருப்பு—கொல்லிமலை, மலை.

பொருமல்—அழுதல், வியங்கோண்முற்று.

பொருவ — உவமைச்சொல், வினையெச்சம்.

பொருவு—உவமை, பொருவென்னேவல்.

பொருவுதல்—உவமை, ஒப்பல்.

பொருள் — சொற்பொருள், தலைமை, பணம், பலபண்டம், பிள்ளை, பொன் வாய்மை.

பொலங்கலம்—ஆபரணம்.

பொலம்—அழகு, பொன்.

பொலன்—பொலம், பொன்மைநிறம்.

பொலி—தூற்றுநெல்,பொலியென்னேவல்.

பொலிசை—இலாபம்.

பொலிதல்—எழுச்சி, மிகுதி.

பொலிவு—பொலிதல்.

பொல்லம்—தைத்தல்.

பொல்லர்—சக்கிலியர், செம்மார், தையற்காரர்.

பொல்லாங்கு—ஈனம், மறதி.

பொல்லு—பதர்.

பொழிதல்—ஈதல், மழைபெய்தல்.

பொழிப்புத்திரட்டல்—பொழிப்புரையுரைத்தல்.

பொழிப்புரை — ஒவ்வொருசொற்பயனுரையாமற்செய்யுட்பொருளைத்தொகுத்துரைத்தல்.

பொழில்—உலகப்பொது, சோலை, நாடு, பூந்தோட்டம், பூமி, பெருமை.

பொழுது—காலம்.

பொழுதுபோக்கல் — பொழுதுகழித்துவிளையாடல்.

பொள்ளல்—அப்பவர்க்கம், பொளிதல், மரப்பொந்து, வியங்கோண்முற்று.

பொள்ளெனல்— அனுகரணவோசை, சீக்கிரக்குறிப்பு, சீக்கிரம்.

பொறி—அடையாளம், அறிவு, இலக்குமி, எழுத்து, ஐம்பொறி, செல்வம்,தேமல், தோணி, புள்ளி, பொலிவு, பொறியென்னேவல், மதிலுறுப்பு, முத்திரை, விரலிறை.

பொறித்தல்-எழுதல், சித்திரமெழுதல்.

பொறியிலார்—கீழ்மக்கள்.

பொறுக்கல் — பொறுக்குதல், வியங்கோண்முற்று.
பொறுத்தல்—சுமத்தல்.
பொறுப்பு—பொறுத்தல்.
பொறுமை—பொறை.
பொறை—சலதாரைமுதலியவடைக்குங்கல், சுமை, பாரம், பூமி, பொறுமை, மலை.
பொறையன்—சேரன், தருமராசன்.
பொறையிலார்—வேடர்.
பொற்பு—அழகு, ஒப்பனை, பொலிவு, மிகுதி.
பொற்புறுத்தல்—அலங்கரித்தல்.
பொற்றை—சிறுதூறு, சிறுமலை, மலை.
பொன்—அழகு, இலக்குமி, பஞ்சலோகப்பொது, பொலிவு, பொன், வியாழம்.
பொன்செய்கொல்லர்—தட்டார்.
பொன்வாய்ப்புள்—சிச்சிலிக்குருவி.
பொன்வினைமாக்கள்—தட்டார்.
பொன்றல்—சாதல், வியங்கோண்முற்று.
பொன்னகர்—தேவலோகம்.
பொன்னகர்க்கிறைவன்—இந்திரன்.
பொன்னவன்—இரணியன், வியாழம்.
பொன்னி—காவேரி.
பொன்னித்துறைவன்—சோழன்.
பொன்னுலகு—தேவலோகம்.
பொன்னெயிற்கோன்—அருகன்.

போ

போ—அசைநிலை, (உ-ம். எரியினன்ன செந்தலையன்றில் பிரியின்வாழாதென்போ,) ஓரெழுத்து, போவென்னேவல்.
போகட்டல்—போகவிடல்.
போகபூமி—தேவலோகம், விளைநிலம்.
போகம்—அனுபோகம், செல்வம், பாம்பினுடல், விளைவு.
போகல் — உயர்ச்சி, செல்லல், நீளம், வியங்கோண்முற்று.
போகி — இந்திரன், பாம்பு, போகியென்னேவல், வினையெச்சம்.
போகில் — கொப்பூழ், பறவை, பூவரும்பு.
போக்கல்—செலுத்தல், வியங்கோண்முற்று.
போக்கு—போகுதல், போக்கென்னேவல், வழி.
போசனம்—உணவு, புசித்தல்.
போசன்—ஓரரசன், செல்வன்.
போடகம்—ஓர்நோய்.
போட்டம்—ஓர்தேசம்.
போடல்—எறிதல், வியங்கோண்முற்று, வைத்தல்.
போதகம்—இளமை, சிங்கக்குட்டி, புலிக்குட்டி, மரக்கன்று, யானை, யானைக்கன்று.
போதம்—அறிவு, பரணிநாள், மரக்கலம்.
போதரல்—கொடுபோதல், கொடுவரல், வியங்கோண்முற்று.
போதரவிடல்—உயிர்த்தல்.
போதல்—அகலல், நீளல், போகல், வரல், வியங்கோண்முற்று.
போதன்—அருகன், பிரமன்.
போதா—பெருநாரை.
போதி—அரசமரம், போதியென்னேவல், மலை, வினைமுற்று.
போதிகை—குறுந்தறி.

போதிவேந்தன்-புத்தன், மலையரசன்.
போது—காலம், பூ, பூமலரும்பருவத்தரும்பு, போதென்னேவல்.
போதை—மூதறிவு.
போத்திரி—பன்றி.
போத்து—எருமை, காட்டுப்பசு, பசு, புலி, புல்வாய், பூனை, மயில், மரையிவற்றினாண், செம்போத்து, நீர்ச்சாதியினாண், மரக்கன்று, விலங்கின்படுக்கை.
போந்தின்றுரோன்—சேரன்.
போந்து—அனுடநாள், பனைமரம், வினையெச்சம்.
போந்தை—அனுடநாள், இளம்பனை, பனை, வினைமுற்று.
போம்—அசைச்சொல், அச்சம், பெயரெச்சம், வினைமுற்று.
போருடன்றல்—போர்.
போரோறு—செவ்வாய்.
போர்—சதையநாள், நெற்போர், பொருதல், போவென்னேவல்.
போர்த்தல்—மூடுதல்.
போர்ப்பு—போர்த்தல்.
போர்வை—தோல், மூடுதல்.
போல — உவமைச்சொல், வினையெச்சம்.
போலல்-உவமை, வியங்கோண்முற்று.
போலி—ஒன்றுபோலொன்றிருத்தல்.
போலும் — இசைநிறையசைச்சொல், (உ - ம். வடுவென்றகண்ணாய்வருந்தினைபோலும்,) பெயரெச்சம், வினைமுற்று.
போல்—உவமை, பதர், போலென்னேவல், மூங்கில்.
போழ்தல்—பிளத்தல்
போழ்து—காலம்.
போழ்முகம்—பன்றி.
போளி—அப்பவர்க்கம்.
போற்றல்—பாதுகாத்தல், புகழ்தல், வணங்கல், வியங்கோண்முற்று.
போற்றார்—பகைவர்.
போனகம்—சோறு.

பௌ

பௌஞ்சு—சேனை.
பௌடம்—தைமாதம்.
பௌடிகம்—அட்டாதசபுராணத்தொன்று, முதல்வேதம்.
பௌடியம்—அட்டாதசபுராணத்தொன்று.
பௌண்டிரம்—ஓர்தேயம்.
பௌத்தம்—புத்தமதம்.
பௌத்திரன்—பெயரன்.
பௌத்திரி—பெயர்த்தி.
பௌத்தர்—புத்தர்.
பௌமன்—செவ்வாய்.
பௌரணை—பூரணை, மரக்கன்று.
பௌரவர்—குருகுலவேந்தர்.
பௌர்ணிமி—பூரணை.
பௌவம்—கடல், நீர்க்குமிழி, நுரை, பூரணை.

ம

மக—இளமை, மகன்.
மகடூ—பெண்.
மகதம்—ஓர்தேசம், பதினெண்பாடையிலொன்று.
மகமுறை—யாகக்கிரமம், விருந்து.
மகம்—ஓர்நாள், யாகம்.

மகரகேதனன்—மன்மதன்.
மகரந்தம்—கள், தேன், பூந்தாது.
மகரம்—ஒருநிதானம், ஓரிராசி, ஓரெழுத்து, சுறுமீன், பூந்தாது, முதலை.
மகரயாழ்—நால்வகையாழிலொன்று.
மகராலயம்—கடல்.
மகரிகை—தோரணம்.
மகவான்—இந்திரன்.
மகவு—குரங்காதிகோட்டில் வாழ்விலங்கின்பிள்ளை, குழந்தை, மகன்.
மகள்—பெண்.
மகன்—ஆண்மகன், பிள்ளை.
மகாகர்வம்—பத்திலட்சங்கோடி.
மகாகிதி—கோடிகோடாகோடி.
மகாகோணி—இலட்சங்கோடாகோடி.
மகாசகை — வாடாப்பூவுளமருதோன்றிமரம்.
மகாசங்கம்—ஆயிரங்கோடாகோடி.
மகாசேனன்—முருகன்.
மகாசோபம் — நூறுகோடிகோடாகோடி.
மகாநசம்—மடைப்பள்ளி.
மகாபதுமம்—பத்துக்கோடாகோடி.
மகாபதுமன்—அட்டநாகத்தொன்று.
மகாமேரு—பொன்மலை.
மகாயுகம்— நாலுயுகங்கூடின நாற்பத்துமூன்றிலட்சத் திருபதினாயிரம் வருடம்.
மகாரண்ணியம்—பெருங்காடு.
மகாரதன்—பதினோராயிரந்தேர்க்காரரோடுபொருதுவோன்.
மகாராசன்—குபேரன், யானைகட்டிவாழ்பவன்.
மகாராட்டிரம்—ஓர்தேயம், ஓர்பாடை.
மகார்—குழவிப்பன்மை.
மகாலோகம்—மேலேழுலகிலொன்று.
மகி—பூமி.
மகிடம்—எருமை.
மகிடற்செற்றாள்—காளி, துர்க்கை.
மகிமா—மகத்துவம்.
மகிமை—பெருமை.
மகிழ்—மகிழமரம், மகிழென்னேவல்.
மகிழ்ச்சி—இன்பம், களிப்பு.
மகிழ்தல்—களித்தல்.
மகிழ்நன் — புருடன், மருதநிலத்தலைவன்.
மகிழ்வு—இன்பம், களிப்பு.
மகீத்திரம்—மலை.
மகுடம்—முடி, முடியுறுப்பு.
மகுடராமக்கிரியம்—ஓர்பண்.
மகேசன்—சிவன்.
மகேச்சுரன்—சிவன்.
மகேச்சுரி—பார்வதி.
மகேந்திரசாலம் — வானிலற்புதங்காட்டும்வித்தை.
மகேந்திரம்—ஓர்மலை.
மகேந்திரன்—இந்திரன்.
மகோததி—கடல்.
மகோதரம்—ஓர்நோய்.
மகோதரன்—இராவணன்மந்திரி.
மக்கள்—மனிதர்.
மங்கலப்பாடகர்—கடிகைமாக்கள்.
மங்கலம்—நன்மை, பொலிவு, விவாகம்.
மங்கலன்—செவ்வாய், நாவிதன்.
மங்கலி—சிற்பத்தொழிலோர்மாதுக்குஞ்செக்காணுக்கும்பிறந்து மயிர்களைவோன்.

மங்கல்—கெடுதல், வியங்கோண்முற்று.
மங்களகவுசிகம்—ஓிராகம்.
மங்களம்—வாழ்த்து.
மங்குதல்—கெடுதல்.
மங்குல்—ஆகாயம், இரவு, மேகம்.
மங்கை—பதின்மூன்றுவயதுப்பெண், பெண்.
மங்கைபாகன்—சிவன்.
மசகம்—கொசுகு.
மச்சம்—அட்டாதசபுராணத்தொன்று, ஓர்தேசம், மச்சம், மீனவிராசி, மீன்.
மச்சிகை—மோர்.
மச்சு—குற்றம், மேனிலை.
மஞ்சம்—கட்டில்.
மஞ்சரி—ஓர்பிரபந்தம், தளிர், பூங்கொத்து, பூந்திரள், பூமாலை.
மஞ்சனம்—குளித்தல், நீரின்மூழுகல்.
மஞ்சாடி—ஓர்மரம், வயிரநிறுக்குநிறை.
மஞ்சாளி—வயிரநிறுக்குநிறை.
மஞ்சிகம்—தாளிக்கொடி, பெட்டி.
மஞ்சிகன்—நாவிதன்.
மஞ்சிகை—காதணி, குண்டலம், தாளிக்கொடி, பேழை.
மஞ்சில்—பழயவரம்பின்வழி.
மஞ்சு—அழகு, ஆபரணம், இளமை, கட்டில், பனி, முகடு, மேகம், யானைமுதுகு, வலி.
மஞ்சுகம்—கொக்கு.
மஞ்சுளம்—அழகு.
மஞ்ஞுடை—பேழை.
மஞ்ஞூரம்—கடலை.
மஞ்ஞை—மயில்.
மஞ்ஞையூர்தி—குமரன்.
மடக்கு—ஓர்சித்திரக்கவி, ஓர்பாத்திரம், மடக்கென்னேவல்.

மடங்கல்—இடி, ஊழித்தீ, காலன், சிங்கம், நோய், மீளல், மூடங்கல், யுகமுடிவு, வியங்கோண்முற்று.
மடங்கற்கொடியோன்—வீமன்.
மடங்கு — அளவு, மடங்கென்னேவல், வியாதி.
மடந்தை — பத்தொன்பதுவயதுப்பெண், பெண்.
மடப்பம் — ஐஞ்ஞூறுகிராமத்துக்குத்தலைக்கிராமம்.
மடமை—அறிவின்மை.
மடம் — அறிவின்மை, சத்திரம், முனிவர்வாசம்.
மடலூர்தல்—தலைவன்காமத்தாற்றுதுகிப்பனைமடலாற்செய்யும்பரிமேலூர்தல்.
மடல்—ஏற்றமடல், ஓர்பிரபந்தம், ஈந்தில், கமுகு, தாழை, தெங்கு, பனை, வாழையிவற்றிற்குரியவேடு, பூவிதழ், வியங்கோண்முற்று.
மடவரல்—பெண்.
மடவாள்—பெண்.
மடவை—ஓர்மீன், கடவுமரம்.
மடன்—அறிவிலான், உன்மத்தம்.
மடி — கேடு, சீலை, சோம்பல், தாழை, நோய், பொய், மடியென்னேவல், முலைமேற்றிரள், வயிறு.
மடிதல்—கெடுதல், சாதல், மடிதல்.
மடித்தல்—மடிக்குதல்.
மடிமை—சோம்பு.
மடிவு—சாவு.
மடு — ஆற்றினுட்பள்ளம், குளம், மடுவென்னேவல்.
மடுத்தல்—பருகல், வாய்முதலியவற்றுள்மடுத்தல்.

மடை — ஆபரணக்கடைப்பூட்டு, சோறு, துவாரம், நீர்பாயுமடை.

மடையர்—சமையற்காரர்.

மட்கல்—அழுக்கேறல், ஒளிமழுங்கல், வியங்கோண்முற்று.

மட்டத்துருத்தி—ஓர்சிவிறி.

மட்டம்—அளவு, கேடகம்.

மட்டாயுதம்—வாள்.

மட்டி — படைக்கலம், மட்டியென்னேவல்.

மட்டித்தல்—மண்டலித்தல்.

மட்டியம்—ஓர்தாளம்.

மட்டு—அவதி, அளவு, கள்.

மட்டை—உடற்குறை, கமுகு, தெங்கு, பனையிவற்றின்மட்டை.

மட்பகைஞன்—குயவன்.

மணக்கல்—பானை.

மணங்கு—ஆட்டுக்குட்டி, ஓர்நிறை.

மணத்தல்—கமழ்தல், கூடல், வாசனை, விடுதல், வேட்டல்.

மணமகள்—மனைவி.

மணமகன்—புருடன்.

மணம்—கலியாணம், வாசனை.

மணவாட்டி—மனைவி.

மணவாளன்—புருடன்.

மணவை—அடுப்பு.

மணாளன்—ஆண்மகன்.

மணி—அழகு, ஓசை, கறுப்பு, நவமணிப்பொது, மணிப்பொது, முத்து.

மணிமலை—பொன்மாலை.

மணிவட்டம்—பாதசாலம், வீரக்கழல்.

மணை—ஓராசனம்.

மண்—ஒப்பனை, சுட்டசாந்து, பூமி, மண்ணென்னேவல், மலை, மாட்சிமை, முழவின்மார்ச்சனை.

மண்கணை—குடமுழவு, வாச்சியம்.

மண்டகம்— சருக்கரைப்போடாதகோதுமைப்பூரி.

மண்டம்—தயிரோடு.

மண்டர்—படைவீரர்.

மண்டலம்—நாடு, பூமி, வட்டம்.

மண்டலி—ஓர்வகைப்பாம்பு, கூட்டம், நாய், பூமி, பூனை.

மண்டலீகர்—அரசர்.

மண்டலேச்சுவரன்—நாற்பதின்காவதமுள்ளதேயமாயினுநூறுயிரங்கிராமமாயினும் புரக்குமரசன், மற்றொருவரைப்பணியாதுலகாள்வோன்.

மண்டல்—நெருங்கல், மிகல், வியங்கோண்முற்று.

மண்டிகை—அப்பவர்க்கம்.

மண்டிலம் — குதிரை, கூத்து, நாடு, போர், வட்டமாயோடல்.

மண்டுதல்—நெருங்கல்.

மண்டூகம்—தவளை.

மண்டை — இரப்போர்கலம், தலையோடு.

மண்டோதரி—இராவணன்மனைவி.

மண்ணம்—சுட்டசாந்து.

மண்மக்கள்—சூத்திரர்.

மண்ணரிநார்—குயவர்மண்ணரிநார்.

மண்ணரியான்—குயவன்.

மண்ணல்—அலங்கரித்தல், கழுவல், வியங்கோண்முற்று.

மண்ணவர்—மனிதர்.

மண்ணிலம்—பூமி.

மண்ணீடு—திண்ணை, மாடம்.

மண்ணீட்டாளர்—சிற்பாசாரியர்

மண்ணுடையான்—குயவன்.

மண்ணுலகு—பூமி.

மண்ணை—அறிவில்லான், இளமை, பிசாசம்.

மண்ணோர்—மனிதர்.

மண்பொதுத்தந்தை—பிரமன்.

மண்மகள்புதல்வர்—வேளாளர்.

மதகயம்—யானை.

மதகரி—ஆண்யானை.

மதகு—நீரோடி.

மதங்கம்—ஓர்மலை.

மதங்கர்—ஓரிருடி, பாணர்.

மதங்கி—காளி,பதினாறுவயதுப்பெண், பாடுவாள்.

மதத்தல்—கொழுத்தல்.

மதமத்தகம்—கஞ்சா.

மதமொய்—யானை.

மதம்—கருத்து, சமயமதம், சம்மதம், செருக்கு, யானைமதம், வலி.

மதர்-களிப்பு, மதவென்னேவல், மிகுதி.

மதர்த்தல்—களித்தல்.

மதர்ப்பு—மதர்வு.

மதர்வு—களிப்பு, மிகுதி.

மதலிகை—ஆபரணத்துடக்குவடிவு,தூக்கங்கள்.

மதலை — கொடுங்கை, கொன்றைமரம், தூண், மகன், மரக்கலம்.

மதனம்—கடைதல், காமம், மௌனம்,

மதன்—அழகு, கலக்கம், காமன்,மாட்சிமை, வலி, வளமை.

மதாணி—ஆபரணம், பெரும்பதக்கம்.

மதாவளம்—யானை.

மதி—அறிவு, கர்க்கடகவிராசி, சந்திரன், நிதானம், மதியென்னேவல், மாதம், முன்னிலையசைச்சொல், (உ-ம். சென்மதிபெரும்.)

மதிகம்—மோர்.

மதிதிசை—வடக்கு.

மதித்தல்—கடைதல், மதத்தல், வரையறுத்தல்.

மதிநாள்—மிருகசீரிடம்.

மதிப்பகை—இராகு.

மதிமகன்—புதன்.

மதியம்—சந்திரன்.

மதியுணி—இராகு.

மது—இருப்பைப்பூத்திராவகம், ஓரரக்கன், கள், சித்திரைமாதம், தேன், மகரந்தம், வசந்தகாலம்.

மதுகம்—அதிமதுரம், எட்டி, தரா, தித்திப்பு.

மதுகரம்—ஆண்வண்டு, கள், வண்டு.

மதுகை—வலி.

மதுசகன்—மன்மதன்.

மதுசூதனன்—திருமால்.

மதுபதி—காளி.

மதுபம்—வண்டு.

மதுரசம்—முந்திரிகை.

மதுரம்—ஓர்கவி, சமனிசை, செஞ்சந்தனம், தித்திப்பு, முந்திரிகை.

மதுரை—ஓர்நகர், கள்.

மதுவம்—கள்.

மதூகம்—இருப்பை, வண்டு.

மத்தகம் — தலை, நுதல், பொல்லாநிலம்.

மத்தம் — உன்மத்தம், ஊமத்தை, களிப்பு, மத்து.

மத்தவாரணம் — அர்த்தசந்திரவடிவுள்ளதலையணை, மதயானை.

மத்திகை — குதிரைச்சம்மட்டி, விளக்குத்தண்டு.

மத்திமம்—இடை, சமனிசை, நடு.

மத்திமன் — சாமானியன், நடுவுள்ளவன்.

மத்தியமம்—நடு, நடுவிரல்.

மத்தியமாவதி—ஓரிசை.

மத்தியம்—இடை, கள், நடு.

மத்தியவிருத்தம்—உந்தி.

மத்தியானம்—உச்சிப்பொழுது.

மத்தியை—காமமுநாணமுஞ்சமமாகவுள்ளவள்.

மத்திரிப்பு—சினம்.

மத்து—தயிர்முதலியகடையுமத்து.

மத்துமலை—மந்தரமலை.

மத்துவம்—மத்துவமதம்.

மந்தமா—யானை.

மந்தம்—அற்பம், ஓர்நோய், கூர்மையின்மை, சோம்பல், மத்து, மெல்லெனல்.

மந்தரம்—அட்டகிரியிலொன்று, தேவலோகம், மந்தவிசை.

மந்தரை—கூனி, விரோசனன்மகள்.

மந்தனம்—யானைமுகபடாம்.

மந்தனி—தயிர்கடைதாழி.

மந்தன்—கூர்மையில்லான், சனி.

மந்தாகினி — அறுபதாண்டுள்ளவள், கங்கை.

மந்தாரம்—ஐந்தருவிலொன்று, செம்பரத்தை.

மந்தானம்—மத்து.

மந்தி—கருங்குரங்கின்பெண், பெண்குரங்கு, பெண்முசு, மந்தியென்னேவல், வண்டு.

மந்தித்தல்—மந்தப்படல்.

மந்திரம் — அரசன்மனை, ஆலோசனை, எண்ணல், ஓர்தேயம், தேவர்கோயில், நாப்புடைப்பெயராதுச்சரித்தல், வீடு.

மந்திரி—குபேரன், சுக்கிரன், தந்திரி, புதன், மந்திரியென்னேவல், வருங்காரியஞ்சொல்வோன், வியாழம்.

மந்திரித்தல்—மந்திரம்பண்ணல்.

மந்துரை—குதிரைப்பந்தி.

மந்தோதரி—மண்டோதரி.

மம்மர்—துன்பம், மயக்கம்.

மயக்கம்—உன்மத்தம்.

மயக்கு—மயக்கம், மயக்கென்னேவல்.

மயங்கல்—மயங்குதல், வியங்கோண்முற்று.

மயம்—அழகு, ஒட்டை.

மயர்வு—மயக்கம்.

மயல்—உன்மத்தம், செத்தை, பிசாசம், மயக்கம்.

மயன்—அரக்கர்தச்சன், கின்னரன், தச்சன், வினைஞன்.

மயானம்—சுடுகாடு.

மயிடம்—எருமை.

மயிடற்செற்றாள்—காளி, துர்க்கை.

மயிரகம்—மயிர்ச்சீலை.

மயிரொழுங்கு—மயிர்க்குழற்சி.

மயிர்—உரோமம்.

மயிர்வாரி—சீப்பு.

மயிர்வினை—கத்திரிகை.

மயிர்வினைஞன்—நாவிதன்.

மயிலை—இருவாட்சி, ஓர்நகர், மீனவிராசி, மீன்.

மயில்—மயில்.

மயூரம்—மயில்.

மரகதம்—பச்சை, பச்சைமணி.

மரகதவல்லி—தருமதேவதை, பார்வதி.
மரகதன்—குபேரன்.
மரக்கலம்—கப்பல்.
மரக்கலன்—மீகாமன்.
மரக்கா—நந்தனவனம்.
மரக்கால்—உப்பளம், சோதிநாள், துர்க்கைகூத்து, முகந்தளக்குங்கருவியிலொன்று, விட்டுணுகூத்து.
மரக்கோல்—மொட்டம்பு.
மரச்செறிவு—சோலை, மரப்பொது.
மரணம்—சாவு.
மரணை—சாதல்.
மரபு—குணம், பழமை, முறைமை.
மரம்—விருக்கம்.
மரல்—அரலை.
மரவட்டம்—நெடும்பரிசை.
மரவம்—குங்குமமரம்.
மரவினையாளர்—தச்சர்.
மரவுரி—நார்ச்சீலை.
மரவை—மரச்செப்பு.
மரா—வெண்கடம்பு.
மராடம்— பதினெண்பாடையிலொன்று, மகாராட்டிரதேயம்.
மராட்டம்-இடம்,புறமயிர்,பெண்மயிர்.
மராமரம் — அரசமரம், ஆச்சாமரம், கடப்பமரம்.
மராம்—கடம்பு, வெண்கடம்பு.
மராளம்—அன்னம், பாம்பு, மாதளை.
மரிசம்—மிளகு.
மரிசி—புதுவரம்புவழி.
மரித்தல்—சாதல்.
மரியாதம்—நீதி.
மரியாதை—அமைவித்தநிச்சயம், கடற்கரை, வரம்பு.
மரீசம்—மிளகு.
மரீசி—கிரணம், சத்தவிருடிகளிலொருவர்.
மரீசிகம்—கானல்.
மரீசிகை—கானல்.
மரு—ஒருபரிமளப்புதல்,மருவென்னேவல், வாசனை.
மருகன்—மருமகன்.
மருகி—மருமகள்.
மருகு—மகரவாழை.
மருங்கு—இடை, பக்கம்.
மருங்குல்—இடை, பக்கம்.
மருட்சி—அறிவின்மை, மயக்கம்.
மருட்டம்—கள்.
மருட்டல்—மயக்குவித்தல், வியங்கோண்முற்று.
மருண்மா—யானை.
மருதம் — ஓர்மரம், மருதநிலத்திராகம், மருதநிலம், வயல்.
மருதவேந்தன்—இந்திரன்.
மருது—மருதமரம்.
மருத்து—காற்று.
மருத்துவர்—அச்சுவினிதேவதைகள், வைத்தியர்.
மருத்துவநாள்—அச்சுவினிநாள்.
மருத்துவன்—இந்திரன், வைத்தியன்.
மருந்தம்—நஞ்சு.
மருந்து—அமுதம், மருந்து.
மருப்பு—இஞ்சி, விலங்கின்கொம்பு.
மருமம்—மார்பு.
மருமராஞ்சம் — அசையுஞ்சீலையானுமிலையானுமெழுமொலி.
மருமான் — மகன், மருமகன், வழித்தோன்றல்.

மருவலர்—பகைவர்.
மருவல்—கிட்டல், வியங்கோண்முற்று.
மருவுதல்—கிட்டல்.
மருளல் — அஞ்சல், எழுத்திலாவோசை, பேசலாவெழுமொலி, மயங்கல், வியங்கோண்முற்று.
மருளிந்தராகம்—ஓர்பண்.
மருள்—உவமையுருபு, உன்மத்தம், ஓர்கிழங்கு, பிசாசம், மருளென்னேவல்.
மரை—ஓர்மிருகம், தவளை, தாமரை.
மரைநீகம்—தவளை.
மர்க்கடம்—குரங்கு.
மலகரி—ஓரிராகம்.
மலங்கல்—அசைதல், குளம்,வியங்கோண்முற்று.
மலங்கு—ஓர்மீன், மலங்கென்னேவல்.
மலம்—அழுக்கு.
மலயக்கால்—தென்றல்.
மலயசம்—சந்தனம், தென்றல்.
மலயம்—பொதியமலை.
மலரோன்—பிரமன்.
மலர்—பூமலர், மலரொன்னேவல்.
மலர்ச்சி—எழுதல், களிப்பு, பொலிவு.
மலர்தல்—எதிர்தல், தோன்றல், நிறைதல், விரிதல்.
மலர்த்திரள்—பூங்கொத்து.
மலர்த்தேன்—பூந்தாது.
மலாடு—மலைநாடு.
மலாவகம்—பிண்ணாக்கு.
மலிதல்—நிறைதல், பெருகல்.
மலினமுகன்—இறந்தோன், திக்கடவுள், தீயோன், முசு, வண்டு.
மலினம்—கருமை, மாசு.
மலீமசம்—மாசு.
மலை—உவமை,மலை, மலையென்னேவல்.
மலைச்சார்பு—குறிஞ்சிநிலம்.
மலைதல் — அணிதல், எதிர்த்தல், பொருதல், மறுத்தல்.
மலைநாடன்—சேரன்.
மலைப்பச்சை—குளவி.
மலைப்பாறை—மலைப்பக்கம்.
மலைப்பு—கூத்தின்விகற்பம், போர், மலைவு.
மலைமகள்—பார்வதி.
மலைமடந்தை—பார்வதி.
மலையமான்—சேரன்.
மலையம்—குறிஞ்சியாழ்த்திறம், மலையுச்சி.
மலையன்—கடையெழுவள்ளலிலொருவன், குறிஞ்சிநிலத்தலைவன், சேரன்.
மலையாரம்—சந்தனம்.
மலைவு—உவமை, போர், மயக்கம், மாறுபாடு.
மல்—கூத்தின்விகற்பம், திருமால்கூத்து, வலி, வளமை.
மல்கல் — நிறைதல், பெருகல், வியங்கோண்முற்று.
மல்லலம்—தட்டம்.
மல்லரி—பம்பைமேளம்.
மல்லல்—மிகுதி, வலி, வளமை.
மல்லன்—ஓரரசன், வலியோன்.
மல்லாரி—பம்பைமேளம்.
மல்லிகை — இரப்போர்கலம், ஓர்பூஞ்செடி, விளக்குத்தண்டு.
மல்லை—இரப்போர்கலம், வட்டம்.
மழலை—நிரம்பாமெல்லியசொல்.
மழவன்—கட்டிளமையோன்.
மழவு—இளமை, குழந்தை.

மழித்தல்—மொட்டையாக்கல்.
மழு—எரியிரும்பு, பரசாயுதம்.
மழுங்கல்—பொலிவழிதல், வியங்கோண்முற்று.
மழுவாளி—சிவன்.
மழை—குளிர்ச்சி, நீர், மேகம்.
மழைக்கோள்—சுக்கிரன்.
மளமளெனல்—ஈரடுக்கொலிக்குறிப்பு.
மள்ளம்—வலி.
மள்ளர்—உழவர், குறிஞ்சிநிலமாக்கள், திண்ணியர், படைவீரர்.
மள்ளல்—வலி.
மறத்தல்—பொச்சாப்பு.
மறத்தியர்—பாலைநிலைப்பெண்கள்.
மறப்பு—மறதி.
மறப்புலி—சிங்கம்.
மறமலி—யானை.
மறம்—கொலை, கோபம், சினம், நமன், பாவம், பிணக்கு, வலி, வீரம்.
மறலி—நமன், மயக்கம்.
மறல்—எழுச்சி, ஓர்கூத்து, காலன், குற்றம், சாதல், தரித்திரம், நமன், பகை, பிணக்கு, போர், மயக்கம், மறதி, வியங்கோண்முற்று.
மறவர்—படைவீரர், பாலைநிலமாக்கள். வேடர்.
மறவி—ஈனம், கள், மறதி.
மறி—அருங்கு, ஆடு, குதிரை, மானிவற்றின்குட்டி, மறியென்னேவல், மான், மேடவிராசி.
மறிதல்—மடங்கல்.
மறித்தல்—தடுத்தல்.
மறிதரல்—மீளல்.
மறு—குற்றம், மறுவென்னேவல், மாசு.
மறுகல்—சுழலல், வியங்கோண்முற்று.
மறுகு—குறுந்தெரு, நெடுந்தெரு, மறுகென்னேவல்.
மறுத்தல் — கொடாமை, நீக்கல், வெட்கம்.
மறுமை—வருபிறப்பு.
மறுவல்—கத்தூரிமிருகம்.
மறுவி—கத்தூரிமிருகம்.
மறை—அடைக்கலம், இராசியம், சேடகம், சொல், மந்திரம், மறை, மறையென்னேவல், வேதம்.
மறைக்கொடியோர்—பார்ப்பார்.
மறைக்கொடியோன்— துரோணாசாரியன், பிரமன்.
மறைதல்—மறைவு.
மறைத்தலைவி—இலக்குமி, உமை.
மறைபுகல்—அடைக்கலம்புகல்.
மறைப்பு—மறைவு.
மறைமுதலி—சிவன்.
மறையவர்—அந்தணர்.
மறையிலார்—கீழ்மக்கள்.
மறையோன்—பிரமன், வியாழம்
மறைவு—மறைதல்.
மற்கொல்—பகை.
மற்று—அசைநிலை, (உ-ம். அதுமற்றவலங்கொள்ளாது,) வினைமாற்று, (உ-ம். இனிமற்றென்றுணா.)
மற்றை—சுட்டியதற்கினம்.
மற்றையது—சுட்டியதற்கினம்.
மற்றோ—அதிசயவிரக்கச்சொல்.
மனக்கோட்டம்—அழுக்காறு.
மனத்தழுக்கம்—அழுக்காறு.
மனவிழி—இசைப்பாட்டு.
மனவு—அக்குமணி, சங்கு, மணிப்பொது.

மனுவு—அரைப்பட்டிகை.
மனு—அட்டாதசதருமநூலிலொன்று, மந்திரம், மனுச்சக்கரவர்த்தி.
மனுவர்—கொல்லர்.
மனை—மனை, மனைவி, வீடு.
மனையாட்டி—மனைவி.
மனையாள்—மனைவி.
மனோகரம்—அழகு, இச்சை.
மனோக்கியம்—அழகு. மனதிற்குவப்புளது.
மனோசன்—மன்மதன்.
மனோபலம்—தைரியம்.
மனோபு—மன்மதன்.
மனோரதம்—இச்சை.
மனோற்பவன்—மன்மதன்.
மனோன்மணி—பார்வதி.
மன்—அசைநிலை, (உ-ம். அதுமற்கொண்கன்றேரோ,)அரசன்,ஆக்கம். (உ-ம். பண்டுகாடுமன்,) ஒழியிசை, (உ-ம். கூரியதோர்வாண்மன், (கழிவு,(உ-ம் சிறியகட்பெறினேயெமக்கீயுமன்னே,) பெருமை, மிகுதி, (உ-ம். எந்தையெமக்கருளுமன்.
மன்பதை—மக்கட்பரப்பு.
மன்மதன்—காமன், மனங்கலக்குவிப்போன்.
மன்விருத்தம்—ஆசிரியவிருத்தம்.
மன்ற—தேற்றம், (உ-ம். கடவுளாயினுமாகமடவைமன்றவாழியமுருகே.)
மன்றம்—அம்பலம், நிச்சயம், நெடுந்தெரு, வாசனை, வெளி.
மன்றல்—கலியாணம், நெடுந்தெரு, வாசனை.
மன்று—வெளி.
மன்றுபடுதல்—வெளிப்படல்.
மன்னர்—அரசர்.
மன்னர்பின்னோர்—வைசியர்.
மன்னர்மன்னன்—துரியோதனன்.
மன்னல்—நிலை, நிலைபெறுதல், வியங்கோண்முற்று.
மன்னவன்—அரசன், உத்திரட்டாதி, எப்பொருட்குமிறைவன்.
மன்னார்—பகைவர்.
மன்னுலகு—தேவலோகம்.
மன்னோ—அசைச்சொல்.

மா

மா—அழகு, ஆண்குதிரை, ஆண்பன்றி, ஆண்யானை, இலக்குமி, ஓரெழுத்து, கறுப்பு, குதிரை, சீலை, செல்வம், பெருமை, மா, மாமரம், வயல், வியங்கோளொடுவருமசைச்சொல், (உ-ம். உப்பின்றுபுற்கையுண்கமாகொற்கையோனே,) வண்டு, வலி, விலங்கின்பொதுப்பெயர், வெறுப்பு.
மாகதம்—மகததேசத்துள்ளது.
மாகதர்—அரசமாதுக்கும்வைசியனுக்கும் பிறந்தொருவர் வீரமுதலியவற்றைப்புகழ்வோர், பாணர்.
மாகதி—ஓர்பாடை, திப்பிலி, முசுமுசுக்கொடி.
மாகம்—ஆகாயம், மகநாள், மாசிமாதம்.
மாகரி—ஆண்யானை.
மாகாளி—காளி.
மாகுலவர்—வேடர்.
மாக்கருவி—குதிரைக்கல்லணை.
மாக்கள்—மனிதர்.
மாசறல்—நன்மை.
மாசி—ஓர்மாதம், புறுவரம்பு, மகநாள்.

மாசு — அழுக்கு, கருமை, குற்றம், மேகம்.

மாசுணம்—பாம்பு, பெரும்பாம்பு.

மாசுதீர்ப்பான்—நாவிதன்.

மாசேனன்—அருகன், கடவுள்.

மாசை—பொன்.

மாஞ்சி—வாசனைப்பண்டம்.

மாஞ்சில்—சடாமாஞ்சில்.

மாடகம்—வீணைமுறுக்காணி.

மாடம்—உழுந்து, வீடு.

மாடல்—செய்தல்.

மாடு — அகன்மணி, இடம், செல்வம், பக்கம், பொன், மாடு.

மாடை—பொன்.

மாட்சி—பெருமை.

மாட்சிமை—பெருமை.

மாட்டல் — மூட்டல், வியங்கோண்முற்று.

மாணம்—மாட்சிமை.

மாணல் — நன்மை, மாட்சிமை, வியங்கோண்முற்று.

மாணவகன்—எட்டாண்டிற்குள்ளாயசிறுவன், மாணாக்கன்.

மாணாக்கன்—கற்போன்.

மாணார்—பகைவர்.

மாணி—பிரமசாரி.

மாணிக்கம்—ஓரிரத்தினம்.

மாணிக்குழி—ஓரூர்.

மாண்—மாட்சிமை, மாணென்னேவல்.

மாண்டல்—மாட்சிமை.

மாண்டார்—இறந்தோர், பெரியோர்.

மாண்பு—அழகு, மாட்சிமை.

மாதங்கம்—யானை.

மாதங்கர்—சண்டாளர்.

மாதங்கன் — அரசமாதுக்கும்வேடனுக்கும் பிறந்துசெருப்புத்தைப்போன்.

மாதங்கி—காளி, துர்க்கை.

மாதண்டம்—பெரும்பாதை.

மாதம்—மாசம்.

மாதரி—காளி.

மாதர்—அழகு, ஆசை, மகளிர்.

மாதலி—இந்திரசாரதி.

மாதவம் — கள், தவம் வசந்தகாலம், வைகாசிமாதம்.

மாதவர்—முனிவர்.

மாதவன்—திருமால், வசந்தன்.

மாதவி — அருச்சுனன்மனைவி, கண்ணன்மனைவி, கள்ளினையட்டவெல்லம், குருக்கத்திமரம், கோவலன்கூத்தி, துதிகை, நாடகக்கணிகை, வசந்தகாலமல்லிகை.

மாதவிகொழுநன்—அருச்சுநன்.

மாதா—தாய், பார்வதி.

மாதி—வட்டமாயோடல்.

மாதிகம்—குதிரைமார்க்கம்.

மாதிரம்—ஆகாயம், திசை, பூமி, மலை, யானை.

மாதிரி—ஒப்பு.

மாது—அசைச்சொல், (உ-ம். விளிந்தன்றுமாதவர்த் தெளிந்தவென்னெஞ்சே, பெண்.)

மாதுலன்—மாமன்.

மாதுலுங்ககம்—மாதளை.

மாதுவம்—கள்.

மாதுளங்கம்—மாதளை.

மாதுளம்—மாதளை.

மாதேவன்—சிவன்.

மாத்திரம்—பிரமாணம்.
மாத்திரை—அளவு, காலநுட்பம், காலவிரைவு, குளிகை.
மாநடன்—சிவன்.
மாந்தம்—ஓர்நோய்.
மாந்தர்—ஆண்மக்கள், மனிதர்.
மாந்தல் — குடித்தல், புசித்தல், வியங்கோண்முற்று.
மாந்தி—மாமரம், வினையெச்சம்.
மாபலன்—காற்று.
மாபலி—மாவலி.
மாபுலி—சிங்கம்.
மாமகன்—மன்மதன்.
மாமணி—மாணிக்கம்.
மாமருத்துநூலோர்—வைத்தியர்.
மாமன்—அம்மான்.
மாமாத்திரர்—வைத்தியர்.
மாமி—மாமன்மனைவி.
மாமுனி—அருகன்.
மாமை—அழகு, நிறம்.
மாயம்—அழகு, கறுப்பு, தீமை, பொய், வஞ்சம்.
மாயவள்—இடாகினி, காளியேவல்செய்மகள், தெய்வப்பெண்.
மாயன்—திருமால்.
மாயாதேவி—புத்தன்றாய்.
மாயாதேவிசுதன்—புத்தன்.
மாயாபுரி — சத்தபுரியிலொன்று, பித்தளை.
மாயாவி—மாயைசெய்வோன்.
மாயூரம்—ஓரூர்.
மாயை—இந்திரசாலமுதலிய,இரதிதேவி, இலக்குமி, காளி, சத்தபுரியிலொன்று, பொய், மாயாசத்தி, வஞ்சம்.
மாயையுற்றாள்—காளி.
மாயோள்—பெண்.
மாயோனாள்—திருவோணம்.
மாயோன்—திருமால்.
மாயோன்மருகன்—குமரன்.
மாய்தல்—சாதல், மறைதல்.
மாய்த்தல்—கொல்லல்.
மாய்வு—சாவு, மறைவு.
மாரகம்—மரணம்.
மாரசயன்—புத்தன்.
மாரணம்—கொலை.
மாரன்—மன்மதன்.
மாராயம்—உவகை.
மாரி—கள், சாவு, நீர், பற்பலரிறக்குநோய், மழை, மேகம், வடுகி.
மாரிநாள்—உத்திரநாள்.
மாரீசம்— அட்டாதசவுபபுராணத்தொன்று.
மாரீசன்—இராவணன்மாமன்.
மாருதம்—காற்று.
மாருதி—அனுமான், வீமன்.
மார்கழி—ஓர்மாதம், மிருகசீரிடம்.
மார்க்கசிரம்—மார்கழிமாதம்.
மார்க்கணம்—அம்பு, தேடல்.
மார்க்கணர்—இரப்போர்.
மார்க்கண்டேயம் — அட்டாதசவுபபுராணத்தொன்று.
மார்க்கண்டேயர்—ஓர்முனிவர்.
மார்க்கம்—தெரு, நெடுந்தெரு, மார்கழிமாதம், வழி.
மார்ச்சாலம்—பூனை.
மார்த்தாண்டம்— அட்டாதசபுராணத்தொன்று.

மார்த்தாண்டன்—சூரியன்.

மார்பு—அகலம், நெஞ்சு.

மாலதி—சிறுசண்பகம், மல்லிகை, முல்லை.

மாலம்—குங்குமமரம், பேய்.

மாலயற்கரியான்—சிவன்.

மாலர்—கவசம்,பார்ப்பனப்பெண்ணுக்குஞ்சூத்திரனுக்கும்பிறந்தோர், புலையர், வேடர்.

மாலவன்—புதன்.

மாலி—ஓரரக்கன், கள், மாலையணிந்தவன்.

மாலிகை-நிரல்படநிற்குங்குழு, மாலை.

மாலிமி — இளமைப்பருவத்திற்செய்நட்பு.

மாலினி—காளி.

மாலுகம்—வேம்பு.

மாலுக்கிளையாள்—துர்க்கை.

மாலுதானம்—கண்குத்திப்பாம்பு.

மாலுந்திவந்தோன்—பிரமன்.

மாலுமி—மீகாமன்.

மாலூரம்—வில்வமரம்.

மாலூர்தி—கருடன்.

மாலை—அந்திப்பொழுது, அரசன்மனை, இயல்பு, இரா, ஒழுங்கு, சொல்லாலும் பூவாலும் பொன்னாலு மணியாலுந்தொடுத்ததொடை, நோய்.

மால்—அருகன், இந்திரன், கருமை, காற்று, சோழன், திருமால், புதன், பெருமை, மயக்கம், மேகம், வேட்கை.

மால்பு—கண்ணேணி.

மாவலர்-குதிரைப்பாகர்,யானைப்பாகர்.

மாவலி—ஓர்சக்கரவர்த்தி.

மாவிரதியர் — சிவசமயத்தோர்வகையோர்.

மாவிளம்—வில்வமரம்.

மாவுரம்—வலி.

மாவெனல்—அழைத்தல்.

மாழாத்தல்—மயக்கம்.

மாழை—அழகு, அறிவின்மை, உலோகக்கட்டி, ஓலை, திரட்சி, புளிமா,பொன், மாமரம்.

மாழ்கல்—சாதல், மயக்கம், மேவல், வியங்கோண்முற்று.

மாழ்கு—மாழ்கென்னேவல், மிருகசீரிடம்.

மாழ்தல்—சோம்பல், மயக்கம்.

மாள—முன்னிலையசைச்சொல், (உ-ம். சிறிதுதவிர்ந்தீகமாளநின் பரிசிலருய்ம்மார்,) வினையெச்சம்.

மாளல்—சாதல், வியங்கோண்முற்று.

மாளவம்—ஓர்தேசம்.

மாளவகவுளம்—ஓரிசை.

மாளவி—ஓர்ராகம்.

மாளிகை—அரசன்மனை, வீடு.

மாறல்—ஆடல், தவிர்தல், விடுதல், வியங்கோண்முற்று, விற்றல்.

மாறன்—பாண்டியன்.

மாறு—கைமாறு, துடைப்பம், மாறென்னேவல்.

மாறுகம்—சிலை.

மாற்றம்—சொல், பகை, வேற்றுமை.

மாற்றலர்—பகைவர்.

மாற்றல்—கொடாமை,வியங்கோண்முற்று.

மாற்றார்—பகைவர்.

மான—உவமைச்சொல், (உ-ம். கோங்கமுகைமானக் குவிமுலைநங்காய,) முன்னிலையசைச்சொல், வினையெச்சம்.

மானசம்-கருத்து,மனது,மானதவாவி.

மானமா—கவரிமா.
மானம்—அபிமானம், அளவு, உவமை, குற்றம், பெருமை, வலி, வெட்கம்.
மானல்—ஐயம், ஒத்தல், மயக்கம், வியங்கோண்முற்று.
மானவர்—ஆண்மக்கள், படைவீரர், மனிதர், மானமுடையோர்.
மானவு—தெளிவு.
மானார்—பகைவர்.
மானி—மானமுடையோன்.
மானிடத்தன்மன்—குபேரன்.
மானிடமேந்தி—சிவன்.
மானிடர்—மனிதர்.
மானியம் — அரசர்கள்சம்மானத்தால் விட்டநிலம்.
மானினி—பெண்.
மானுடர்—மனிதர்.
மானேந்தி—சந்திரன், சிவன்.
மானேறு—உத்திரநாள், கலைமான்.
மான்—உருவம், மகரமீன், மகரராசி, மான், விலங்கின்பொது.
மான்மகன்—பிரமன், மன்மதன்.
மான்மதம்—கத்தூரி.
மான்றலை—மிருகசீரிடம்.
மான்றல்—மயக்கம்.

மி

மிகப்படல்—மிகுதல்.
மிகல்—மிகுதி, வியங்கோண்முற்று.
மிகவல்லோர்—அறிஞர்.
மிகுகொடையாளன்—கன்னன்.
மிகுதி—அநேகம், திரட்சி, பூரிப்பு, பொலிவு.
மிகை-கேடு, துன்பம், மிகுதி, வருத்தம்.
மிக்கவை—ஊண், சோறு, நியாயமல்லவை, நிறைதல்.
மிக்கோர்—அறிஞர்.
மிசை—உயர்ச்சி, சோறு, தரித்திரம், மிசையென்னேவல், மேடு, மேல்.
மிசைதல்—உண்டல்.
மிசைத்திரள்—கரடு.
மிச்சில்—எச்சில், ஒழிபொருள்.
மிச்சை—அஞ்ஞானம், தரித்திரம்.
மிஞிறு—வண்டு.
மிஞ்சல்—மிகுதல், வியங்கோண்முற்று.
மிடல்—வலி.
மிடறு—கழுத்து, இழ்வாய், தொண்டை.
மிடா—பானை, மிடா.
மிடி—மிடியென்னேவல், வறுமை.
மிடித்தல்—வறுமையுறல்.
மிடிமை—வறுமை.
மிடியன்—வறியன்.
மிடை—தூறு, மிடையென்னேவல்.
மிடைதல்—நெருங்கல்.
மிண்டன்—திண்ணியன்.
மிண்டு — மதத்தாற்பிழைத்தல், மிண்டென்னேவல்.
மிண்டுதல்—நெருங்கல்.
மிதத்தல்—மிதப்பு.
மிதம்—அளவு.
மிதலை—கொப்பூழ்.
மிதவை—சோறு, தெப்பம்.
மிதி—மிதித்தல், மிதியென்னேவல்.
மிதித்தல்—குதித்தல்.
மிதியடி—பாதக்குறடு.
மிதுலை—சனகநகர்.

மிதுனம்—இரட்டை, புணர்ச்சி, மிதுன ராசி.
மித்திரநாள்—அனுடநாள்.
மித்திரம்—நட்பு.
மித்திரர்—சிநேகிதர்.
மித்திரன்—சிநேகிதன், சூரியன்.
மித்திரை—தோழி.
மித்தை—பொய்.
மியா—முன்னிலையசைச்சொல், (உ-ம். கேண்மியா.)
மிரதம்—பாம்பு.
மிரியல்—மிளகு.
மிருகசீரிடம்—ஓர் நாள்.
மிருகண்டன்—ஓரிருடி.
மிருகதரன்—சந்திரன்.
மிருகநாபி—கத்தூரிப்பூனை.
மிருகபதி—சிங்கம்.
மிருகமதம்—கத்தூரி.
மிருகம்—மான், விலங்கின்பொது.
மிருகராசன்—சிங்கம்.
மிருகாங்கன்—சந்திரன், சிவன்.
மிருகாதனம்—ஓர்வகைப்புலி.
மிருகாதி—புலி.
மிருகேந்திரன்—சிங்கம்.
மிருடன்—சிவன்.
மிருதங்கம்—முழவு.
மிருதம்—போர்.
மிருதி—தருமநூல், மரணம்.
மிருது—மென்மை.
மிருத்தஞ்சயன்—சிவன்.
மிருத்திகை—மண்.
மிருத்து—மண், மரணம்.
மிருநாளம்—தாமரைக்கொடி.
மிலேச்சம் — சரச்சுவதியாற்றின்வட தேசம்.
மிலைச்சல்—அணிதல், வியங்கோண்முற்று.
மிலைதல்—சூடுதல்.
மிழலை—ஒருசிவதலம், மழலைச்சொல்.
மிழற்றல்—சொல்லல், நிரம்பாமென்சொல், பேசலாலெழுமொலி, வியங்கோண்முற்று.
மிளிர்—பெருமை, மிளிரென்னேவல்.
மிளிர்தல்—ஒளிசெய்தல்.
மிளிறு—கரடி.
மிறல்—பெருமை.
மிறை—அச்சம், குற்றம்.
மிறைக்கவி—சித்திரக்கவி.
மிறைத்தல்—துன்பப்படல்.
மின்—ஒளி, பெண்மகள், மின்னல், மின்னென்னேவல்.
மின்னல்—ஒளிசெய்தல், வியங்கோண்முற்று.

மீ

மீ — ஆகாயம், உயர்ச்சி, ஓரொழுத்து, மேல்.
மீகான்—மீகாமன்.
மீக்குவம்—மருதமரம்.
மீக்கூர்தல்—பெருகுதல்.
மீக்கூறல்—புகழ்தல், மெச்சல், வியங்கோண்முற்று.
மீக்கூற்று—புகழ்.
மீக்கோள்—ஏறுதல், மேற்போர்வை.
மீட்சி—மீளுதல்.
மீட்டல்—மீட்குதல், வீணைவாசித்தல், வியங்கோண்முற்று.
மீட்டுதல்—வீணைவாசித்தல்.

மீமாஞ்சை—ஓர்சமயம்,பிரமாணத்தா லுண்மையறிதல்.
மீமிசை—மேல்.
மீதுரை—பலகால்விளம்பல்.
மீதூர்தல்—நெருங்கல்.
மீளல்—திரும்பல், வியங்கோண்முற்று.
மீளாக்கதி—மோக்கம்.
மீளி—அரசன், திண்ணியன், பாலைநில த்தலைவன், பெருமை, மேன்மக்கள், வலி.
மீனக்கொடியோன்— பாண்டியன், ம ன்மதன்.
மீனம்—மீனவிராசி, மீன்.
மீனவன்—பாண்டியன்.
மீனெறி—மீன்குத்திக்குருவி.
மீனேறு—மகரமீன்.
மீன் — சித்திரைநாள், நெய்தற்பறை, மகரமீன், மச்சம், விண்மீன்.
மீன்சுவை—சித்திரைநாள்.

மு

முகடி—மூதேவி.
முகடு—சுவர்ப்புறத்துநீண்டவுத்திரம், மலையுச்சி.
முகத்தல்—மொள்ளல்.
முகமன்—உபசாரம்.
முகமுகெனல்—ஈரொலிக்குறிப்பு.
முகம்—இடம், முகம்.
முகரிமை—பேரறிவு.
முகரொனல்—ஒலிக்குறிப்பு.
முகவுரை—பாயிரம்.
முகாரி—ஓர்ராகம்.
முகில்—மேகம்.
முகிழம்—மலரும்பருவத்தரும்பு.
முகிழ் — மலரும்பருவத்தரும்பு, முகிழ் ழென்னேவல்.
முகிழ்த்தல்—குவிதல்.
முகினி—புளியமரம்.
முகுந்தன்—திருமால்.
முகுரம்—கண்ணாடி.
முகை—கூட்டம், மலரும்பருவத்தரும்பு, மிடா, முகையென்னேவல்.
முகைத்தல்—அரும்புதல்.
முக்கணன்—சிவன், விநாயகன், வீரப த்திரன்.
முக்கணி—காளி, பார்வதி.
முக்கல்—பேசலாலெழுமொலி, வியங் கோண்முற்று.
முக்குடுமி—சூலம்.
முக்குடைச்செல்வன்—அருகன்.
முக்குற்றங்கடிந்தோன்—கடவுள், புத்தன்.
முக்கூட்டு—பரணிநாள்.
முக்கோல்—திருவோணம்.
முசர்—தயிர்.
முசலம்—இருப்புலக்கை, உலக்கை.
முசலி—உடும்பு, ஓணான், தாழை, பல பத்திரன், பல்லி, முதலை.
முசலிகை—உடும்பு.
முசல்—முயல்.
முசித்தல்—மெலிதல்.
முசிப்பு—மெலிவு.
முசு—ஓர்சாதிக்குரங்கு.
முசுடர்—கீழ்மக்கள்.
முசுண்டர்—கீழ்மக்கள்.
முசுண்டி—படைக்கலம்.
முசுப்பதி—பாசறை.
முச்சந்தி—முத்தெருக்கூடுமிடம்.

முச்சி—உச்சி, உச்சிக்கொண்டை, மயிர்முடி.
முச்சியர்—உறைகாரர்.
முச்சில்—சிறுமுறம்.
முஞல்—கொசுகு.
முஞ்சல்—சாதல், முற்றல், வியங்கோண்முற்று.
முஞ்சி—ஓர்சாதிநாணற்புல், வினையெச்சம்.
முடக்கம்—முடங்குதல்.
முடக்கு—முடக்கென்னேவல், முடங்கல், விரலணி.
முடங்கல்—ஓலை, தாழை, நோய், மடங்கல், மூங்கில், வியங்கோண்முற்று.
முடங்கு—நோய்,முடங்கென்னேவல்.
முடங்குளை—சிங்கம்.
முடமுடெனல்-அனுகரணவோசை.
முடலை—உண்டை, நாற்றம், பெருமை, வலி.
முடவன்—அருணன், சனி, முடவன்.
முடி—கிரீடம், குடுமி, தலை, துழாய்,நாறுமுடி,மயிர்முடி, முடியென்னேவல்.
முடிதல்—கடை, சாதல், முடிச்சுமுடிதல்.
முடித்தல்—முற்றுவித்தல்.
முடியல்-எல்லாம்,வியங்கோண்முற்று.
முடிவு—கடை.
முடுகல்—எதிர்த்தல், சீக்கிரம், மொய்த்தல், வலி, வியங்கோண்முற்று.
முடுகியல்—வண்ணம்.
முடுகு—அராகம், கடமைப்பெண், முடுகென்னேவல்.
முடுக்கர்—மலைக்குகை.
முடுக்கல்—ஓட்டல், மொய்த்தல், வியங்கோண்முற்று.
முடுவல்—செந்நாய்,நாய், பெண்ணாய்.
முடுவற்படையோன்—வயிரவன்.
முடை—ஓலைக்குடை, தீயவாசனை, நாற்றம், புலால், முடையென்னேவல்.
முடைச்சேரி—முல்லைநிலத்தூர்.
முடைதல்—இளைத்தல், நிணத்தல், முடைதல்.
முட்டம்—ஓரூர்.
முட்டி—எட்டிமரம், கைப்பிடி,பிச்சை, வினையெச்சம்.
முட்டு—கடிவாளம், குறைவு, முட்டென்னேவல்.
முட்டுதல்—எதிர்த்தல், குறைவுறல்.
முட்டுப்பாடு—குறைபாடு, தீமை.
முட்டை-அண்டம், தவிடு.
முட்பன்றி—முள்ளம்பன்றி.
முணங்கு—அடக்கம்.
முண்டகம்—கள், தாமரை, தாழை,தெற்றி, முட்செடி, முள்ளிச்செடி.
முண்டகாசனை—இலக்குமி.
முண்டம்—உடற்குறை, தலை, திரட்சி, மொட்டைத்தலை.
முண்டனம்—மழித்தல்.
முண்டி—நாவிதன்,முண்டியென்னேவல், மொட்டைத்தலையன்.
முண்டிதம்—மொட்டை.
முண்டித்தல்—மழித்தல்.
முண்டை—விதவை.
முண்மா—முட்பன்றி.
முதம்—உவகை.
முதலல்—முதலாதல், வியங்கோண்முற்று.
முதலி—முதல்வன், வினையெச்சம்.
முதலுதல்—முதலாதல்.

முதலை—நீர்வாழ்முதலை.
முதலோன்—கடவுள்.
முதல்—ஆதி, ஏழனுருபு, (உ-ம். சுரன் முதல்வந்தவுரன்மாயமாலை,) முதலென்னேவல்.
முதல்வர்—வானோர்.
முதல்வன்—அரசன், அரன், அருகன், கடவுள்.
முதல்வி—தலைவி.
முதற்பா—வெண்பா.
முதனாள்—அச்சுவினிநாள்.
முதியர்—மூத்தோர்.
முதிரம்—மேகம்.
முதிரை—அவரை, காராமணி, கொள், துவரையிவைமுதலியன.
முதிர்ச்சி—முதிர்வு.
முதிர்தல்—காய்தல, வறத்தல்.
முதிர்ந்திடல்—முதிர்தல்.
முதிர்ப்பு—கலக்கம்.
முதிர்வேனில்-ஆனியாடியின்பருவம்.
முது—பழைமை.
முதுகு—பின்புறம்.
முதுக்குறைவு—பேரறிவு.
முதுசொல்—பழஞ்சொல்.
முதுநிலம்—களர், பெரும்பாழ்நிலம்.
முதுமகன்—சனி.
முதுமை—பழமை, பழமொழி, மூப்பு.
முதுவர்—புலவர், மந்திரிகள், மூதுணர்ந்தோர், மூத்தோர்.
முதை—காடுவெட்டிச்சுட்டகொல்லை.
முதைப்புனம்—பழங்கொல்லை.
முதையல்—முதுகாடு.
முத்தகம்—கருக்குவாளிமரம், தனித்தனியேமுற்றுப்பெறுஞ்செய்யுள்.
முத்தக்காசு—கோரைக்கிழங்கு.
முத்தமிழ்முரியோன்—அகத்தியன், வயிரவன்.
முத்தம் — உதடு, பிரியம், மருதநிலம், முத்து.
முத்தர்—திடர், பக்குவர்.
முத்தலை—சூலம்.
முத்தலைவேலோன்—வைரவன்.
முத்தன்—அரன், அருகன், புத்தன், முத்திபெற்றோன், வயிரவன்.
முத்தாபலம்—இசங்குஞ்செடி, முத்து.
முத்தி—மோக்கம்.
முத்திரிகை — எழுத்துப்பொறித்த மோதிரம்.
முத்திரை — அடையாளம், எழுத்துப் பொறித்தமோதிரமுதலிய, ஒன்றின் மேற்பதிக்குமுத்திரை.
முத்து—முத்தம்.
முத்தை—கவளம், திரட்சி, மிகவுந்தெரிவிலாள்.
முத்தொழிலோர்—வைசியர்பொது.
முத்தொழிற்பகைவன்—கடவுள்.
முந்தல் — முற்படல், வியங்கோண்முற்று.
முந்து — முந்தென்னேவல், வெண்ணை.
முந்தூழ்—மூங்கில்.
முந்தை—பழமை.
முந்நீர்—கடல்.
முப்புரம்—திரிபுரம்.
முப்புரிநூலோர்—பார்ப்பார்.
முப்புள்ளி—ஆய்தவெழுத்து.
மும்மீன்—மிருகசிரிடம்.
முயக்கம்—முயங்கல்.
முயக்கு—முயக்கம்.

முயங்கல் — தழுவல், வியங்கோண்முற்று.
முயலல் — முயற்சி, வியங்கோண்முற்று.
முயலின்கூடு—சந்திரன்.
முயலுதல்—முயற்சி.
முயல்—போர், முயலென்னேவல், முயல்.
முயற்சி—ஊக்கம்.
முயிறு—எறும்பின்விசேடம்.
முரசக்கொடியோன்—தருமராசன்.
முரசம்—முரசு, வாச்சியப்பொது.
முரசு—உத்திரட்டாதிநாள், ஓர்வாச்சியம், வாச்சியப்பொது.
முரட்கை—கலிப்பா.
முரணல் — மாறுபடல், வியங்கோண்முற்று.
முரண் — ஓர்தொடை, பகை, போர், முரணென்னேவல், வலி.
முரம்பு—உப்பளம், கல்லின்மேடு,கழி, பரலடுத்துயர்நிலம், பாறை.
முரலல் — ஒலித்தல், பேசலாவெழுமொலி, வியங்கோண்முற்று.
முரல்வு—உள்ளோசை.
முரளி—மூக்கால்வாசிக்குஞ்சிறுகுழல், வேய்ங்குழல்.
முரற்றல்—ஒலித்தல்.
முரன்—ஓரரக்கன்.
முராரி—திருமால்.
முரிதல்—ஒடிதல், கெடுதல், முறிதல்.
முரித்தல்—முறித்தல்.
முரிப்பு—எருத்துத்திமில், முரித்தல்.
முரிவு—முறிவு.
முருகன்—இளையோன், குமரன்,வெறியாட்டாளன்.
முருகியம்—குறிஞ்சிநிலப்பறை.
முருகு—அகில், அழகு, இளமை, எழுச்சி, கள், திருவிழா, முருகன், வாசனை.
முருக்கல் — அழித்தல், உருக்குதல், கொல்லல், வியங்கோண்முற்று.
முருக்கு—எலுமிச்சை, கொலை, முருக்கு, முருக்கென்னேவல்.
முருக்குதல் — அழித்தல், உருக்குதல், கொல்லல்.
முருங்கை—ஓர்மரம்.
முருடர்—வேடர்.
முருடு—ஓர்வாச்சியம், பறைப்பொது, பெருங்குறடு, விறகு.
முருந்து—இறகினடியிற்குருத்து, வெண்குருத்து, வெண்மை.
முலை—கொங்கை.
முல்லை—இசை, கற்பு, மன்மதன்கணை, முல்லைக்கொடி, முல்லைநிலம், வனமல்லிகை, வெற்றி.
முல்லையர்—இடையர்.
முழக்கம்—ஒலி.
முழக்கல்—முழக்கல், வாச்சியம்வாசித்தல், வியங்கோண்முற்று.
முழங்கல்—ஒலித்தல்.
முழந்தாள்—முழங்கால்.
முழந்து—முழங்கால்.
முழல்—கழற்சிக்கொடி.
முழவம்—குடமுழா, முரசு.
முழவு—பறைப்பொது.
முழா—முழவுமேளம்.
முழுகல்—குளித்தல், வியங்கோண்முற்று.
முழுக்கு—முழுகல்.
முழுது—எல்லாம்.

முழுதும்—எல்லாம்.

முழுதொருங்குணர்ந்தோன்- அரன், அருகன், கடவுள்.

முழுத்தல்—மூழ்குவித்தல், வியங்கோண்முற்று.

முழுமகன்—அறிவில்லான்.

முழுமை—எல்லாம்.

முழுவதும்—எல்லாம்.

முழுவலயம்—வென்றி.

முழுவெலும்பு-தசைகழிந்தவெலும்பு

முழை—துடுப்பு, மலையினுட்குகை.

முழைத்தல்—எழுத்திலாவோசை.

முளரி — ஓமவிறகு, கடைக்கொள்ளி, காடு, தாமரை, நுண்மை, நெருப்பு, முட்செடி, விறகு.

முளவு—முட்பன்றி.

முளி—மரமுதலியவற்றின்கரடு, முளியென்னேவல்.

முளித்தல்—காய்தல், வறத்தல்.

முளை—அங்குரம், தண்டாயுதம், தறி, மகன், முளையென்னேவல், மூங்கில்.

முளைத்தல்—முளைக்குதல்.

முள்—நுண்மை, முள்.

முள்ளி—ஓர் செடி.

முறம்—புடைக்குமுறம், விசாகநாள்.

முறி—இலை, எழுதுமுறி, தளிர், முறியென்னேவல்.

முறிதல்—ஒடிதல்.

முறித்தல்—ஒடித்தல்.

முறியர்—விற்றற்குரியவடிமைகள்.

முறிவு—முறிதல்.

முறுகல்—கடுப்பு, திருகல், வியங்கோண்முற்று.

முறுக்கல்—திருகல், முறுக்குதல், வியங்கோண்முற்று.

முறுவல்—எயிறு, சிரிப்பு.

முறை—இடைச்சொல், ஒழுக்கம், குணம், பழமை, புத்தகம், முறைமை.

முறைதெரிந்தோன்—சிற்பாசாரி, பிரமன்.

முறையிலார்—கீழ்மக்கள்.

முற்கம்—பயறு, முற்கு.

முற்கரம்—படைக்கலம்.

முற்கு—முற்கந்தெறித்தல்.

முற்குளம்—பூராடநாள்.

முற்கொழுங்கோல்—பூரட்டாதி.

முற்சனி—மகநாள்.

முற்றம்—முன்றில்.

முற்றல்—காழ்க்கோடல், முடிவு, மூப்பு, வளைத்தல், வளைவு, வியங்கோண்முற்று.

முற்றில்—முறம், விசாகநாள்.

முற்று—முடிவு, முற்றென்னேவல்.

முற்றுதல்—முடிதல்.

முற்றும்—எல்லாம், கடை, பெயரெச்சம், மூலநாள், வினைமுற்று.

முனி—அகத்தி, தவத்தோன், புத்தன், முனியென்னேவல், யானைக்கன்று, வில்.

முனிதல்—சினக்குறிப்பு, சினம், வெறுத்தல்.

முனிவர்—அந்தணர், சடைமுடியோர், தவத்தர்.

முனிவு—கோபம், சினம்.

முனீந்திரன்—புத்தன்.

முனை—நுனி, பகை, முதன்மை, முனையென்னேவல், வெறுப்பு.

முனைதல்—சினக்குறிப்பு.

முனைந்தோர்—பகைவர்.

முனைப்பதி — பகைவர்மேற்சென்றோ ருறைவிடம்.

முனையிடம்—பாலைநிலத்தூர்.

முனைவர்—பகைவர், முனிவர்.

முனைவன்—அருகன், பகைவன், புத்தன், வினைமுற்று.

முனைவு—கோபம், சினம், வெறுப்பு.

முன் — இனியென்பது, ஏழனுருபு, (உ-ம். கற்றூர்முற்றோன்றுகழிவிரக்கம்,) பக்கம், பழமை, முதல், முன், முன்னென்னேவல், மேல்.

முன்சொல்—பழஞ்சொல்.

முன்பனி—மார்கழிதையின்பருவம்.

முன்பிறந்தாள்—அக்காள்.

முன்பு — பழமை, பெருமை, முன், வலி.

முன்றுதை—பாட்டன்.

முன்றுனை—மேற்போர்வை.

முன்றில்—முற்றம்.

முன்றோன்றல்—தமையன்.

முன்னம்—கருத்து, சீக்கிரிமாம், குறிப்பு, மனம், முன்.

முன்னர்—ஆதி, இடம், முன், நெஞ்சு.

முன்னல்—நினைத்தல், வியங்கோண்முற்று.

முன்னவன்—சிவன், தமையன்.

முன்னிலை — காரணம், மூவிடத்தொன்று.

முன்னிளவல்—தமையன்.

முன்னூல்—கடவுண்மொழிந்தநூல்.

முன்னூற்கேள்வன்—கடவுள்.

முன்னை — அக்காள், அண்ணன், பழமை, முன்னைமரம்.

முன்ஞேர்—மந்திரிகள்.

முன்ஞேன்—கடவுள், விநாயகன்.

மூ

மூ—ஓரெழுத்து, மூப்பு, மூவென்னேவல்.

மூகம்—மௌனம்.

மூகன்—ஊமை.

மூகை—ஊமை.

மூக்கரிகத்தி-வெற்றிலைகிள்ளுங்கருவி.

மூக்கு—நாசி, பறவைமூக்கு.

மூங்கை—ஊமை.

மூசல்—சாதல், மொய்த்தல், வியங்கோண்முற்று.

மூச்சு—உயிர்ப்பு.

மூஞ்சல்—மொய்த்தல்.

மூஞ்சூறு—சுசுந்தரி.

மூடர்—அறிவில்லார், கீழ்மக்கள்.

மூடல்—மூடுதல், வியங்கோண்முற்று.

மூடிகம்—எலி, பெருச்சாளி.

மூட்டம்—மூடல், மூளல்.

மூட்டல்—இசைத்தல், வியங்கோண்முற்று.

மூட்டு—குதிரைக்கடிவாளம், சந்து, மூட்டென்னேவல்.

மூட்டை—மூட்டை.

மூதணங்கு—காடுகாள்.

மூதா—தம்பலப்பூச்சி.

மூதாதை—பாட்டன்.

மூதிரி—எருமை.

மூதிரை—திருவாதிரைநாள்.

மூதுரை—பழமொழி.

மூதேவி—இலக்குமிமுன்பிறந்தாள்.

மூதை—வெட்டிச்சுட்டகாடு.

மூத்தல்—முதுமையுறல்.

மூத்தாள்—அக்காள், கிழவி, தலைவி.

மூத்திரம்—சிறுநீர்.
மூத்தோர்—புலவர், மந்திரிகள்.
மூத்தோன்—அண்ணன், விநாயகன்.
மூப்பு—தலைமை, முதுமை.
மூய்தல்—மூடுதல்.
மூரல்—சிரிப்பு, சோறு, பல்.
மூரி—எருது, எருமை, சோம்பல், நெரிவு, பழமை, பெருமை, வலி.
மூர்க்கம்—சலஞ்சாதித்தல், நாகப்பாம்பு.
மூர்க்கர்—கீழ்மக்கள்.
மூர்ச்சை—நினைவுமயங்கிக்கிடத்தல்.
மூர்த்தம்—இருகடிகைப்போழ்து, உருவமுடையது, தலை.
மூர்த்தி—அருகன், உடல், உருவம், சிவன், புத்தன்.
மூர்த்திகன்—குமரன், வயிரவன்.
மூர்த்தினி—தலை.
மூலகந்தம்—வெட்டிவேர்.
மூலகம்—கிழங்கு, முள்ளங்கி.
மூலதனம்—மூலத்திரவியம்.
மூலம்—ஓர்நாள், ஓர்நோய், காரணம், கிழங்கு, முதல், வேர்.
மூலிகை—வேர்.
மூலியம்—விலை.
மூவிலைவேல்—சூலம்.
மூவுதல்—முடிதல்.
மூவுலகாதாரன்—கடவுள்.
மூவுலகாளி—கடவுள்.
மூவுலகுணர்ந்தோன்—அருகன்.
மூவுலகேந்தி—கடவுள்.
மூழி—அகப்பை, துடுப்பு, மத்து.
மூழை—துடுப்பு, மத்து, முகவை.
மூழ்கல்-முழுகல், வியங்கோண்முற்று.
மூழ்த்தல்—மொய்த்தல், வியங்கோண்முற்று.
மூளல்—மூளுதல், வியங்கோண்முற்று.
மூளுதல்—நெருப்புமுதலியமூளல்.
மூளை — தலைமுதலியவற்றின் மூளை.
மெச்சல்—கொண்டாடல், துதித்தல், வியங்கோண்முற்று.
மெத்து—மென்மை.
மெத்தை—அமளி, மேல்வீடு.
மெய்—உடல், உண்மை, ஒற்றெழுத்து
மெய்காப்பாளர்—காவலர்.
மெய்ந்நலம்—வலி.
மெய்ந்நூலன்—ஞானாசாரியன்.
மெய்புகுகருவி—கவசம்.
மெய்ப்படாம்—திரைச்சீலை.
மெய்ப்பிரம்—மேகம்.
மெய்ப்பை—சட்டை.
மெய்ம்மை—உண்மை, கருத்து.
மெய்யர்—அந்தணர், முநிவர்.
மெய்யன்-உண்மையுள்ளோன், மகன்.
மெய்யுரைத்தல்—உரைசொல்லல்.
மெய்யுறை—கவசம்.
மெய்விரதன்—தருமராசன்.
மெலிதல்—மெலிவு.
மெலிவு—இளைப்பு.
மெல்லல்—மெல்லுதல், வியங்கோண்முற்று.
மெல்லன்—நெய்தனிலத்தலைவன்.
மெல்லியர்—மாதர்.
மெல்லியல் — பெண், மராத்திளங்கொம்பு.
மெல்லிலை—வெற்றிலை.

மெல்லெனல்—மந்தக்குறிப்பு.

மெழுகு-மெழுகு, மெழுகென்னேவல்.

மென்பால்—மருதநிலம்.

மென்மை—மிருது.

மென்னடை—அன்னம்.

மே

மேகநாதம்—சிறுகிளை.

மேகநாதன்—இந்திரசித்து.

மேகபுட்பம்—நீர்.

மேகம்—ஓர்நோய், முகில்.

மேகரஞ்சி—ஓரிராகம்.

மேகராகக்குறிஞ்சி—ஓர்பண், குறிஞ்சித்திறத்தினொன்று.

மேகலை—சிலை, மாதரிடையணியுளொழுகோவை.

மேகவாகனன்—இந்திரன்.

மேகாரம்—மயில்.

மேக்கு—உயர்ச்சி, மேல், மேற்கு.

மேசகம்—மயிற்றோகைக்கண்.

மேடம்—ஆடு, மேடவிராசி.

மேடு — உயர்ச்சி, ஊர், சிறுதிட்டை, வயிறு.

மேடிகம்—சுவர்.

மேடை—மேடு.

மேட்டிமை—மேன்மை.

மேதகம்—மதிப்பு, மேன்மை.

மேதம்—கொலை.

மேதாரம்—மலை.

மேதாவியர்—அறிஞர்.

மேதி—எருமை.

மேதிச்சென்னிமிதித்தோள்—துர்க்கை.

மேதினி—பூமி.

மேதை—அறிவு, இறைச்சி, கள், தோல், நரம்பு, நிணம், புதன், மேன்மை.

மேதையர்—புலவர்.

மேத்தியம்—சுத்தம்.

மேநகை — தேவதாசி, மேருமலைக்குப் பெண்ணு, மிமயமலைக்குமனைவியுமாகியமனோரமையென்பவள்.

மேநகைபுதல்வி—பார்வதி.

மேனை—மலையரையன்மனைவி.

மேம்பாடு—புகழ், மேன்மை.

மேய்தல்—உண்டல், வேய்தல்.

மேய்த்தல்—மேயச்செய்தல்.

மேரு—பொன்மலை, மலை.

மேலகம்—மோக்கம்.

மேலவரிறைவன்—முருகன்.

மேலுலகம்—தேவுலோகம்.

மேலோர்—அறிஞர், புலவர், வானோர்.

மேல்—அகலம், ஆகாயம், இனி, ஏழனுருபு, (உ-ம். தன்மேற்கடுவரைநீர்ந்கடுத்துவரக்கண்டும்,) மேல்மேற்கு.

மேவலர்—பகைவர்.

மேவல்—ஆசைப்பெருக்கம், உண்டல், வியங்கோண்முற்று, விரும்பல்.

மேவினர்—உறவோர், சிநேகிதர்.

மேவு—ஆசை, மேவென்னேவல்.

மேழகம்—கவசம், செம்மறிக்கடா, துருவாட்டேறு.

மேழியர் — மருதநிலமாக்கள், வேளாளர்.

மேளம்—பலவாச்சியக்கூட்டம்.

மேளனம்—கூட்டம்.

மேற்கு—மேல், மேற்றிசை.

மேற்குலத்தோர்—அந்தணர்.

மேற்கோள்—எடுத்துக்காட்டுஞ்செய்யுள், சனி, மேன்மை.

மேற்செம்பாலை—ஓரிராகம்.

மேற்றிசைப்பாலன்—வருணன்.

மேனி—உடலுருவம், நிறம், வடிவு.

மை

மை—அஞ்சனம், கறுப்பு, குற்றம், செம்மறியாடு, நீர், மலடு, மேகம், மேடவிராசி, மையென்னேவல்.

மைதல்—மையச்செய்தல்.

மைதுலி—சீதை.

மைதுனம்—புணர்ச்சி.

மைத்திரம்—சிநேகம்.

மைத்திரியம்—சிநேகம்.

மைத்துனன்—மச்சினன்.

மைநாகன்—மலையரயனுக்குமேனகைக்கும்புத்திரன்.

மைந்தர்—ஆண்மக்கள், மனிதர்.

மைந்தன்—மகன்.

மைந்து—மயக்கம், வலி.

மைமை—மலடி, மலட்டெருமை.

மைம்மா—பன்றி.

மைம்முகன்—முசு.

மையம்—நடு.

மையல்—உன்மத்தம், மயக்கம், வியங்கோண்முற்று.

மொ

மொகமொகெனல்—ஈரடுக்கொலிக்குறிப்பு.

மொக்குள்—கொப்பூழ், நீர்க்குமிழி, மலரும்பருவத்தரும்பு.

மொச்சை—ஓர்கொடி.

மொடமொடெனல்—ஈரடுக்கொலிக்குறிப்பு.

மொட்டு—இளம்பூவரும்பு.

மொட்டை—மழித்தல்.

மொத்தம்—பொது.

மொத்தல்—அடித்தல், வியங்கோண்முற்று.

மொந்தை—ஓர்கட்பறை, ஓர்பாத்திரம்.

மொய்—கூட்டம், போர், போர்க்களம், மொய்த்தல், மொய்யென்னேவல், யானை, வண்டு.

மொய்கதிர்—முலை.

மொய்த்தல்—நெருங்கல், மூடுதல்.

மொய்த்தாய்—தாய்.

மொய்ம்பு—தோள், வலி.

மொழி—சொல், மொழியென்னேவல்.

மொழிதல்—சொல்லல்.

மொழிமை—பழஞ்சொல்.

மொள்ளல்—முகத்தல், வியங்கோண்முற்று.

மோ

மோ—ஓரெழுத்து, முன்னிலையசைச்சொல், (உ-ம். கேண்மோ,) மோவென்னேவல்.

மோகம்—ஆசை, உன்மத்தம், காமம்.

மோகர்—சித்திரகாரர்.

மோகனம்—அட்டசித்தியிலொன்று.

மோகன்—மன்மதன்.

மோகினி—திருமால்பெண்ணுருக்கொண்டமோகினி.

மோக்கம்—தீர்தல், பரகதி.

மோசம்—வஞ்சனை.

மோசனம்—ஓர்வகைநெல், தீர்தல்.

மோடி—காடுகாள், பிணக்கு.

மோடு—உயர்ச்சி, பெருமை, வயிறு.

மோதகம்—அப்பவர்க்கம், தோசை.

மோதம்—உவகை, வாசனை.

மோதல் — அடித்தல், வியங்கோண்முற்று.

மோதிரம்—ஆழி.

மோத்தல்—ஆக்கிராணித்தல்.

மோத்தை—வெள்ளாட்டுக்கடா.

மோவாய்—தாடி.

மோழல்—பன்றி.

மோழை—கஞ்சி, கொம்பின்மை.

மோனம்—மௌனம்.

மோனர்—முனிவர்.

மோனை—ஆதி, ஓர்தொடை.

மௌ

மௌஞ்சி — நாணற்புல்லாற்செய்தவரைஞாண்.

மௌத்திகம்—முத்து.

மௌர்வி—வின்னாண்.

மௌலி—கள், சிகை, மயிர்முடி, முடி.

மௌவல்—வனமல்லிகை.

மௌனியர்—முனிவர்.

ய

யசமானன்—தலைவன்.

யசனம்—யாகம்.

யசுசு—இரண்டாம்வேதம்.

யசுரு—இரண்டாம்வேதம்.

யட்டி—ஊன்றுகோல், முத்துத்தாழ்வடம்.

யதி — தாளப்பிரமாணம், முனிவர், மோனை.

யது—ஓரரசன்.

யமகம்—வந்தசொல்லேவருதல்.

யமளம்—இரட்டை.

யமி—முனிவன்.

யமுனை—காளிந்திநதி.

யயாதி — குருகுலத்தரசர்களிலொருவன்.

யவம்—ஓர்வகைக்கோதுமை.

யவனம்—ஓர்தேயம்.

யவனர் — கம்மாளர், சித்திரக்காரர், சோனகர்.

யா

யா—அசைச்சொல், ஓரெழுத்து, ஓர்மரம், சந்தேகம், (உ-ம். யாபன்னிருவர்மாணாக்கரகத்தியனார்க்கு) யாவென்னும்வினா.

யாகபோசனர்—வானோர்.

யாகம்—வேள்வி.

யாக்கை—உடல், கட்டு.

யாங்கு—இடத்தினையுற்றசொல், எங்கு.

யாங்ஙனம்—எங்ஙனம்.

யாசகம்—இரப்பு.

யாசகர்—இரப்போர்.

யாசித்தல்—இரத்தல்.

யாணர்—அழகு, தச்சர், நன்மை, புதுமை, வளமை.

யாண்டு—எங்கு, காலம்.

யாண்டை—இடத்தினையுற்றசொல், எவ்விடம்.

யாதனம்—தெப்பம், மரக்கலம்.

யாதனை— துன்பம், நரகத்திற்கொல்லாதுவருத்துநோய்.

யாது—இராக்கதர், எது, ஐயுற்றசொல், கள்.

யாதுதானவர்—இராக்கதர்.

யாதோ—ஐயச்சொல்.

யாத்திரை—திருவிழா, பிரயாணம்போதல்.

யாப்பு—கட்டு, செய்யுள்.

யாமம் — இடக்கைமேளம், இராத்திரி, சாமம், தெற்கு.

யாமவதி—இராத்திரி.
யாமளை—காளி.
யாமிகன்—நகரசோதகன்.
யாமியம்—தெற்கு.
யாமினி—இராத்திரி.
யாமினியம்—தெற்கு.
யாரி—கதவு.
யார்—வினு.
யாவும்—எல்லாம்.
யாழ—முன்னிலையசைச்சொல், (உ-ம். நீயேசெய்வினை மருங்கிற்செல்வயர்ந் தியாழநின்கைபுனை வில்லினுனூர்தி யே.)
யாழ் — அச்சுவினிநாள், திருவாதிரை நாள், மிதுனவிராசி, வீணை.
யாழ்வல்லோர்—கந்திருவர்.
யாளி—சிங்கம், சிங்கவிராசி, யாளி.
யாளியூர்தி—காளி, துர்க்கை.
யாறு—ஆறு.
யானம்—கள், சிவிகை, மரக்கலம்.
யானை—யானை, வடதிசைப்பாலன்குறி.
யானைச்சார்பு—யானைதுயிலிடம்.
யானைமுகவற்கிளையோன்—வீரபத்தி ரன்.
யானைமுகன்—விநாயகன்.
யானையுண்குருகு—சக்கரவாகப்புள்.
யானையுரித்தோன்—சிவன்.

யு

யுகந்தரம் – தேர்முதலியவற்றினுகத்தி ற்பிணிக்குநெடுந்தறி.
யுகமுடிவு—உலகமுடியுங்காலம்.
யுகம்—இருபொருள், ஓர்காலத்தளவு, நுகத்தடி, பூமி.
யுகளம்—இரண்டு.
யுகளி—இரண்டு.
யுகாதி—அருகன்.
யுத்தம் — உசிதம், கூடல், நியாயம், போர்.
யுத்தி—உபாயம், யோசித்தல்.
யுவ—ஓராண்டு.
யுவதி—பதினாறுவயதுப்பெண்.
யுவராசன்—இளவரசன்.

யூ

யூகம்—ஓர்புல், கருங்குரங்கு, காந்தி, நுருக்கம், படை, படைவகுப்பு, பெண் குரங்கு, மூசு.
யூகி—யூகியென்னேவல், விவேகி.
யூகித்தல்—ஆராய்தல்.
யூதநாதன் — யானைக்கூட்டத்துத்தலை யானை.
யூதபம்—யானைகூட்டத்துத்தலையானை.
யூதம்—யானைக்கூட்டம், விலங்கின்கூ ட்டம்.
யூபம்—உடற்குறை, யாகப்பசுவைக்கட் டுந்தறி, யாகம்.
யோகம் — அடயோகமுதலியயோகம், அதிட்டம், உபசாரம், உபாயம், உயர் ச்சி, உற்சாகம், கூடல், கூட்டம், சா வு, தியானம், பஞ்சாங்கத்திலொன்று.
யோகர்—சமணமுனிவர், முனிவர்.
யோகி—அரன், அருகன், ஐயனார், மு னிவன்.
யோகினி—காளி, யோகினி.
யோக்கியம்—தகுதி, நன்கு.
யோசனை—ஒலித்தல், ஓரெல்லையளவு, யோசித்தல்.
யோசனைகந்தி—வியாசர்தாய்.
யோசித்தல்—ஆராய்தல்.
யோனி—காரணம், பெண்குறி.

யௌ

யௌதகம் — மகட்குமருமானுக்குந்தந்தபொருள்.
யௌவனம்—அழகு, களிப்பு.

வ

வகிர்—வகிரென்னேவல், வழி, வார்.
வகிர்தல் — அறுத்தல், கோதல், பங்குசெய்தல், போழ்தல்.
வகுத்தல்—வகைப்படுத்தல்.
வகுந்து—வழி, வினையெச்சம்.
வகுப்பு—அழகு, வகுத்தல்.
வகுலி—மீன்.
வகுளம்—மகிழமரம்.
வகுளி—ஒலி.
வகை— கூறுபாடு, வகுப்பு.
வக்கிரம்—கொடுமை, பொய், பொறாமை, மீளமடங்குதல், வட்டம்,வளைவு.
வக்கிரன்—செவ்வாய்.
வக்கிராங்கம்—அன்னம்.
வங்கணம்—சிநேகம்.
வங்கம்—ஈயம், ஓர்தேயம், கத்தரிச்செடி, பதினெண்பாடையிலொன்று,மரக்கலம், வெள்ளி.
வங்கர்—சண்டாளர்.
வங்காரம்—உலோகக்கட்டி.
வங்காளம்—ஓரிராகம், ஓர்தேசம்.
வங்கி—துறடு.
வங்கியம்—இசைக்குழல்.
வங்கு—கற்புழை.
வங்கூழ்—காற்று.
வசதி—மருதநிலத்தூர், வீடு.
வசந்தபயிரவி—ஓரிராகம்.
வசந்தம்—இந்திரன்மாளிகை, இளவேனில், தென்றற்காற்று, வாசனை.
வசந்தன்—தென்றற்காற்று,மன்மதன்.
வசந்திகை—தேமல்.
வசனம்—சொல்.
வசனித்தல்—சொல்லல்.
வசி—கூர்மை, சூலம், தழும்பு, வசியம், வசியென்னேவல், வாள்.
வசிட்டன்—பிரமன்மானதபுத்திரன்.
வசித்தல்—தங்கல், வாசகம்.
வசித்துவம் — அட்டபாக்கியத்தொன்று, வசமாக்கல்.
வசியம்—கைவசம்.
வசிவு—வளைவு.
வசீகரணம்—புணர்ச்சிக்கிணக்கம், வசம்.
வசீகரம்—வசம்.
வசு—கிரணம், நெருப்பு, பசுவின்கன்று, பொருள், பொன்.
வசுக்கள்—அட்டவசுக்கள்.
வசுதேவன்—கண்ணன்றந்தை.
வசுதை—பூமி.
வசுநாள்—அவிட்டநாள்.
வசுந்தரை—பூமி.
வசுமதி—பூமி.
வசை—இகழ்ச்சிச்சொல், குற்றம்.
வச்சகம்—மலைமல்லிகை.
வச்சி—காயாமரம்.
வச்சிரகம்—தாமரைக்காய்.
வச்சிரபாணி—இந்திரன்.
வச்சிரம்—சதுரக்கள்ளி,வச்சிராயுதம், வயிரமணி.
வச்சிரவல்லி—பிரண்டை.
வச்சிராங்கம்—சதுரக்கள்ளி.

வச்சிராவர்த்தம்—இராமன்வில்.
வச்சிரி—இந்திரன்.
வச்சையம்—கலைமான்.
வஞ்சகன்—தூர்த்தன், வஞ்சிப்போன்.
வஞ்சப்பெண் — காளியேவல்செய்பவள்.
வஞ்சம்—கொடுமை, சிறுமை, பொய், வாள்.
வஞ்சவம்—பாம்பு.
வஞ்சனம்—வஞ்சித்தல்.
வஞ்சனி—இடாகினி, காளியேவல்செய்மகள், பெண்.
வஞ்சனை—தெய்வப்பெண், வஞ்சம்.
வஞ்சி—ஓர்கொடி, ஓர்பா, கருவூர், தருமதேவதை, பகைவர்மேற்செல்லுஞ்சேவகர்க்குமாலை, பெண், வஞ்சியென்னேவல்.
வஞ்சித்தல்—வஞ்சனைசெய்தல்.
வஞ்சிவேந்தன்—சேரன்.
வஞ்சுளம்—அசோகமரம்.
வஞ்சுளன்—கரிக்குருவி.
வடகம்—உல்லாசம், தோல்.
வடகிரி—பொன்மலை.
வடகீழ்த்திசைப்பாலன்—ஈசானன்.
வடக்கு—வடதிசை.
வடதிசைப்பாலன்—குபேரன்.
வடந்தை—வடகாற்று.
வடமரம்—ஆலமரம்.
வடமீன்—அருந்ததி.
வடமேற்றிசைப்பாலன்—வாயு.
வடம்—ஆலமரம், ஊர், கயிறு, நாணி, பூவரும்பு.
வடவாமுகம்—ஊழித்தீ.
வடவாநலம்—வடவாமுகாக்கினி.
வடவிருக்கம்—ஆலமரம்.
வடவை—ஊழித்தீ, எருமை, பெண்குதிரை, பெண்யானை.
வடி—கள், நாய், வடியென்னேவல்.
வடிகயிறு—குதிரைக்கயிறு.
வடிதல்—நீளம், நீளல், வடியல்.
வடித்தல்—வடிக்குதல், வசமாக்கல்.
வடியல்—வடிதல்.
வடிவம்—உடலுருவம், வடிவு.
வடிவு—அல்குல், அழகு.
வடு—இளங்காய், குற்றம், செம்பு, தழும்பு, மருதயாழ்த்திறம், வடுவென்னேவல், வண்டு.
வடுகன்—வயிரவன்.
வடுகன்றாய்—காடுகாள்.
வடுத்தல்—இளங்காயரும்பல்.
வடுகி—காடுகாள்.
வடுகு—உபநயனம், ஓர்தேயம், ஓர்பாடை.
வடுவரி—வண்டு.
வட்கல் — கெடுதல், வியங்கோண்முற்று, வெட்கம்.
வட்கார்—பகைவர்.
வட்டணம்—பரிசை.
வட்டணை—தாளம், வட்டம்.
வட்டணையுறுத்தல்—தாளம்போடல்.
வட்டம் — குளம், கேடகம், கைமணி, கொள்கலம், சக்கரம், சீலை, தாழ்வு, திரிகை, நீர்ச்சால், பரிவேடம், பீடம், பொற்காசுமுதலியவற்றின் வட்டம், வளைதடி.
வட்டி—பலகறை, முதற்பொருட்குவருமூதியம், வட்டியென்னேவல்.

வட்டிகை—கூடை, கைம்மணி, சித்திரம், நால்வகைச்சாந்து.
வட்டித்தல்—ஆணியிடல், ஊணிடுதல், தாளம்போடல்.
வட்டில்—கூடை, புட்டில், வட்டில், வழி.
வட்டு—சூதாடுகருவி, திரட்சி.
வட்டுடை—சீலை.
வட்டை—வழி.
வட்டுலி—சிங்கம்.
வணக்கம்—தொழுதல்.
வணக்கல்—வளைத்தல், வியங்கோண்முற்று.
வணங்கல்—தொழுதல், வளைதல், வியங்கோள்முற்று.
வணங்காமுடியினன்—துரியோதனன்.
வணர்—வளைவு.
வணிகம்—செட்டு.
வணிகன் — கொள்ளல், விற்றல்செய்வோன், வைசியன்.
வணிச்சியம்—வாணிச்சியம்.
வண்களமர்—சூத்திரர், வேளாளர்.
வண்சிறை—மதில்.
வண்டர் — கவிகள்கற்றோர், மங்கலப்பாடகர்.
வண்டல்-மகளிர்விளையாட்டு, வண்டல்.
வண்டன்—திண்ணியன்.
வண்டானம்—நாரை.
வண்டு—அம்பு, குற்றம், கைவளை, சங்கு, பூசநாள், வண்டு.
வண்டுறைமலர்மரம் — சண்பகமரம், வேங்கைமரம்.
வண்டுறை—எழுத்திலாவோசை.
வண்ணகம்—முடுகியல்.
வண்ணமகள்—கோலஞ்செய்வாள்.
வண்ணம்—அழகு, இராகம், குணம், சந்தம், சாந்துப்பொது, நன்மை, நிறம், வடிவு.
வண்ணார்—ஏகாலியர்.
வண்மை—அழகு, ஈகை, குணம், புகழ், மெய்ம்மை, வளமை.
வதனம்—முகம்.
வதன்—கொலைசெய்வோன்.
வதானியன் — குபேரன், வரையாதுகொடுப்போன்.
வதி—சேறு, வதியென்னேவல், வழி.
வதிதல்—தங்கல்.
வதிரன்—செவிடன்.
வதுவர்-குதிரைப்பாகர், யானைப்பாகர்.
வதுவை—புதுமணம், வாசனை.
வதை—கொலை, வதையென்னேவல்.
வதைத்தல்—கொல்லல்.
வத்தி—விளக்குவர்த்தி.
வத்திரம்—சீலை, முகம்.
வத்து—பொருள்.
வந்தனமாலை—வாயிலிற்கட்டுந்தோரணம்.
வந்தனம்—அட்டாங்கமாகப்பணிதல், விநயம், வினைமுற்று.
வந்தனை—ஆராதனை, வணங்கல், வினைமுற்று.
வந்தி—மலடி, வந்தியென்னேவல்.
வந்திகள்—கவிஞர், புகழ்வோர், மங்கலப்பாடகர்.
வந்தித்தல்—வணங்கல்.
வந்தித்துநிற்போர் — புகழ்ந்துபாடுவோர்.
வந்தியர்-புகழ்வோர், மங்கலப்பாடகர்.
வந்தியை—மலடி.

வந்து—காற்று, வினைமுற்று, வினையெச்சம்.

வந்தை—பெருமை, மலடி.

வபனம்—மழித்தல்.

வபு—உடல்.

வபை—வயிற்றினுபிக்குள் வெண்டுகில் போன்றபுளையாகியநிணம்.

வமனம்—சத்திபண்ணல்.

வம்பலர்—அயலோர், புதியோர்.

வம்பல்—திசை.

வம்பி—வசவி.

வம்பு—கச்சு நிலையின்மை, புதுமை, மிடா, வாசனை.

வயங்கல்—ஒளிசெய்தல், நடத்தல், வியங்கோண்முற்று.

வயது—யௌவனம், வயசு.

வயந்தம்—வசந்தம்.

வயப்புலி—சிங்கம்.

வயப்போத்து—சிங்கம்.

வயமா—சிங்கம், புலி, யானை.

வயம்—குதிரை, நீர், பறவை, வசம், வலி.

வயல்—கழனி, மருதநிலம், வெளி.

வயவரி—புலி.

வயவர்—படைவீரர்.

வயவன்—கரிக்குருவி, காதலன், திண்ணியன், வலியன்.

வயவு—ஆசை.

வயவை—வழி.

வயாவு—ஆசை, கருப்பம், வருத்தம்.

வயானம்—பறவை.

வயானன்—வலியன்.

வயிரப்படை—வச்சிராயுதம்.

வயிரம்—கூர்மை, சலஞ்சாதித்தல், சினம், தண்டாயுதம், திருவோணம், பூணுகக்கட்டுவது, மரவயிரம், வச்சிரம், வச்சிராயுதம்.

வயிரியம்—மயிர்ச்சிலை.

வயிரியர்—கூத்தர், பாணர்.

வயிர்—ஊதுகொம்பு.

வயினம்—பறவை.

வயின்—இடம், ஏழனுருபு, (உ-ம். அவர் வயிற்செல்லாய்) வயிறு, வீடு.

வரகு—ஓர்பயிர்.

வரதம்—வரங்கொடுத்தல்.

வரதன்—அரன், அரி, அருகன்.

வரநதி—கங்கை.

வரப்பு—எல்லை.

வரப்புள்—வயல்.

வரம்—அனுக்கிரகம், நவநிதியிலொன்று, மேன்மை.

வரம்பு—எல்லை, வழி.

வரர்—மேலோர், வானோர்.

வரல்—வருதல், வியங்கோண்முற்று.

வரவு—வருகை.

வரன்—சிவன், தமையன், பிரமன், புருடன்.

வரன்முறை—ஊழ், வரலாறு.

வரன்றல்—கொழித்தல், வியங்கோண்முற்று.

வராகம் — அட்டாதசபுராணத்தொன்று, பன்றி.

வராகன்—திருமால்.

வராகி—சத்தமாதாக்களிலொருத்தி.

வராங்கம்—தலை.

வராடகம்—தாமரைக்காய், பலகறை.

வராடம்—ஓர்தேயம், பலகறை.

வராடி—பலகறை, முதுநாற்சிலை.

வரால்—ஓர்வகைமீன்.

வராளம்—பாம்பு.

வராளி—ஓரிசை.

வரி — இசைப்பாட்டு, எழுத்து, குடியிறை, தேமல், நீளம், நெல், வண்டு, வரியென்னேவல், வழி, விரலிறை.

வரிக்கடை—வண்டு.

வரிசந்தி—நாற்றெருக்கூடுமிடம்.

வரிசை—ஒழுங்கு, முறைமை, வெகுமானம்.

வரிதல்—எழுதல், கட்டல், சித்திரமெழுதல்.

வரித்தல்—கட்டல், பூசுதல்.

வரிப்புறம்—அணில்.

வருக்கம்—கூட்டம், வகுப்பு.

வருக்கை—பலாமரம்.

வருச்சித்தல்—நீக்கல்.

வருடம்—ஆண்டு, பாரதவருடமுதலிய, மழை.

வருடல் — தடவல், வியங்கோண்முற்று.

வருடை — எண்காற்புள், குறும்பாடு, மேடவிராசி, வரையாடு.

வருட்டம்—வேம்பு.

வருட்டல்— வற்புறுத்தல், வியங்கோண்முற்று.

வருணம்—எழுத்து, குலம், நிறம், நீர்.

வருணநாள்—சதயநாள்.

வருணனை—தோத்திரம்.

வருணன்—புனற்கரசன்.

வருதல்—நடத்தல், வருகை.

வருத்தம் — உள்ளக்களிப்பு, துன்பம்.

வருத்தல் — துன்புறுத்தல், வியங்கோண்முற்று.

வருபுனல்—ஆறு.

வரூதம் — தேரைப்பாதுகாக்கும்புலித்தோன்முதலிய.

வரூதினி—ஓர்தெய்வப்பெண், படை.

வரேந்திரன்—வரத்தின்மிக்கோன்.

வரை—அளவு, கரை, சிறுவரம்பு, மலை, மூங்கில், வரையென்னேவல், விரலிறை.

வரைச்சிறகரிந்தோன்—இந்திரன்.

வரைதல்—எழுதல், கொள்ளல், சித்திரமெழுதல், நீக்கல், மாற்றல், விவாகம்.

வரைபகவெறிந்தோன்—குமரன்.

வரைப்பு—எல்லை, மதில்.

வரையறுத்தல்—மதித்தல், வரைத்தல்.

வரையறை—அளவு.

வரையாடு—குறும்பாடு.

வரையுறுத்தல்—வரைத்தல்.

வரைவின்மாது—வேசி.

வரைவு — அளவு, எல்லை, பிரிவு, மாறுபாடு.

வர்க்கம்—வருக்கம்.

வர்க்கு—கஞ்சி.

வர்த்தமானம்—நிகழ்காலம்.

வர்த்தி – இரத்தினங்களின் கீழ்ப்பதிக்குந்தகடு, திரிசீலை, பரிமளத்திரவியங்களைக்கூட்டியரைத்துச் செய்தவர்த்தி, வர்த்தியென்னேவல்.

வர்த்தித்தல்—வளர்தல்.

வர்த்துலம்—வட்டவடிவு.

வலக்காரம்—பொய்.

வலத்தல்—சொல்லல், நினைத்தல், வளைத்தல்.

வலத்திடல்—சொல்லல்.

வலந்தம்—வசனம், வளைவு.

வலம்—இடம், ஏழனுருபு, (உ-ம்: காழ்வரைநில்லாக்களிறன்னன் கைவலத்தியாழ்வரைநின்றது,) மேல், வலப்பக்கம், வலி, வெற்றி.

வலம்புரி—நந்தியாவர்த்தம், வலம்புரி, வலம்புரிச்சங்கு.

வலயம்—கடல், குளம், கைக்கடகம், சுற்று, வட்டம்.

வலவன்—சமர்த்தன், தேர்ப்பாகன், வெற்றியாளன்.

வலவை—இடாகினி, காளி, காளியேவற்பெண், வல்லவள், வல்லோன்.

வலன்—வலம்.

வலாகம்—கொக்கு.

வலாரி—இந்திரன்.

வலி—பற்றிரும்பு, வலியென்னேவல், வல்லமை.

வலிதல்—தங்கல், துணிதல்.

வலித்தல்—உடன்படல், நினைத்தல்.

வலிமுகம்—குரங்கு.

வலியன்—கரிக்குருவி.

வலியான்—கரிக்குருவி.

வலியுறுத்தல்—உறுதிசெய்தல், வலிதருதல், வியங்கோண்முற்று.

வலீமுகம்—குரங்கு.

வலு—கொக்கு.

வலை—மீன்வலைமுதலாயின.

வலைப்படல்—சிறைப்படல், வியங்கோண்முற்று.

வலையர்—நெய்தனிலமாக்கள்.

வல்—சீக்கிரம், சூதாடுகருவி, மேடு, வலி.

வல்கிதம்—குதிரையிருகாற்றூக்கியாடிவருநடை.

வல்சி—உண்டல், சோறு.

வல்லகி—வீணை.

வல்லணங்கு—காளி.

வல்லபன்—நாயகன், பிரியமுள்ளோன்.

வல்லபை—ஓரசுரமாது, பிரியநாயகி.

வல்லவன்—இடையன், பருப்புக்கறிகள்சமைப்போன், புருடன், வல்லான்.

வல்லரி—கொடி, தளிர், பூங்கொத்து.

வல்லவி—மனைவி.

வல்லாரை—ஓர்பூடு. கேட்டைநாள்.

வல்லார்—சமர்த்தர், மாட்டாதார்.

வல்லாளன்—திண்ணியன், வல்லான்.

வல்லி—அளவு, இடைச்சேரி, கால்விலங்கு, நீங்கல், படர்கொடி, பிரிதல்.

வல்லிகம்—கொடி.

வல்லிகை—காதணி, யாழ்.

வல்லிசை—உச்சவிசை, பாம்பு.

வல்லியம்—இடையரூர், கொல்லிமலை, புலி.

வல்லுநர்—வல்லோர்.

வல்லுளி—பன்றி.

வல்லூகம்—ஆண்குரங்கு, காடி, முசு.

வல்லூரம்—வன்றூரம்.

வல்லெனல்—அநுகரணவோசை.

வல்லை—ஓர்நோய், கடுப்பு, காலவிரைவு, கோட்டை, பெருங்காடு, மேடு, வட்டம்.

வல்விலங்கு—யானை.

வவ்வல்—வாருதல்.

வழக்கம்—வழங்குதல்.

வழங்கல்—ஈதல், உலாவல், சொல்லல், நடத்தல், வியங்கோண்முற்று.

வழலை—ஓர்பாம்பு, கோழை.

வழாறு—நிறைபுனல்.

வழி—இடம், ஏழனுருபு, (உ-ம். நின்றதோர்நறைவேங்கைநிழல்வழியசைந்தன்ன,) காரணம், திரட்சி, நடை, பழைமை, பின், மகன், முறைமை, வழியென்னேவல்.

வழிதல்—ஒழுகல்.

வழித்தல்—வழிக்குதல்.
வழித்தோன்றல்—மகன்.
வழிநாள்—பின்னைநாள்.
வழிபடல்—வணங்கல்.
வழிபயத்தல்—மறுப்பறுத்தல்.
வழிபாடு—ஆராதனை, வழிபடல்.
வழியடைத்தல்—புறம்புறுத்தல்.
வழியுரைப்போர்—தூதர்.
வழு—ஈனம், கேடு, வழுவென்னேவல்.
வழுக்கல் — அடித்தல், இழுக்கல், மோதல், வியங்கோண்முற்று.
வழுக்கு — நிணம், மறதி, வழுக்கென்னேவல்.
வழுதலை — கத்தரிச்செடி, புனத்திடு பொய்க்கழு.
வழுதி—பாண்டியன்.
வழுது—பொய், வைக்கோல்.
வழுதுணை—கத்தரிச்செடி.
வழுத்தல்—துதித்தல், வியங்கோண்முற்று.
வழும்பு—நிணம்.
வழுவல் — சாய்தல், தப்புதல், வியங்கோண்முற்று, வினைமுற்று.
வழுவை—யானை.
வழை—சுரபுன்னைமரம்.
வளப்பம்—கொழுப்பு, மாட்சிமை.
வளமை—உபகாரம், கொழுப்பு, மாட்சிமை.
வளமையர்—வேளாளர்.
வளம் — அழகு, பலபண்டம், மாட்சிமை, வலி.
வளர்ச்சி—வளர்தல்.
வளர்தல்—உயர்தல்.
வளர்மயிர்—மயிர்க்குழற்சி.
வளர்த்தாள்—செவிலித்தாய்.
வளவன்—சோழன்.
வளவி—வீட்டிறப்பு.
வளவு—இல்லம்.
வளாகம் — இடம், சூழ்ந்திடல், தினைப்புனம்.
வளார்—இளங்கொம்பு.
வளாவல்—கலத்தல், வளைத்தல், வளைவு, வியங்கோண்முற்று.
வளி—காற்று, சூறைக்காற்று.
வளை — கங்கணம், கைவளை, சக்கரம், சங்கு, நுழைவளை, வளையென்னேவல்.
வளைத்தல்—கட்டல், தடுத்தல், வளைத்தல், வாருதல்.
வளைபோழ்நர்—சங்கறுப்போர்.
வளைமணி—அக்குமணி, சங்குமணி.
வளையகம்—சங்கு.
வளையம் — குளம், தாமரையுட்சுருள், வட்டம்.
வளைவு—வளைதல்.
வள் — காது, கூர்மை, நெருக்கம், வலி, வள்ளம், வார், வாளுறை, வாள்.
வள்ளம் — ஒருமரத்திற்றோண்டியசிறு தோணி, மரக்கால், வட்டில்.
வள்ளல்—வரையாதுகொடுப்போன்.
வள்ளி — ஆபரணம், ஓர்கூத்து, கைவளை, படர்கொடி, பிரப்பங்கேடகம்.
வள்ளிமணாளன்—முருகன்.
வள்ளியம்—ஊதுகுழல், மரக்கலம், மிளகு, மெழுகு.
வள்ளியோர்-வரையாதுகொடுப்போர்.
வள்ளுவன்—ஓரிழிசாதியோன், பறையறைவோன், புரோகிதன், வருங்காரியஞ்சொல்வோன்.
வள்ளூரம்—ஆட்டிறைச்சி, ஆவினிறைச்சி, சூட்டிறைச்சி, புலால்.

வள்ளை — ஓர்கொடி, உலக்கையோச்சித்தந்தலைவன்வளங்கூறி மகளிர்பாடுவது.
வறத்தல்—காய்தல்.
வறிஞர்—தரித்திரர்.
வறிது — அறியாமை, சிறுமை, பயனின்மை.
வறியோன்—தரித்திரன்.
வறுத்தல்—வறட்டல்.
வறுமை—தரித்திரம்.
வறை—துவட்டற்கறி.
வறையல்—துவட்டற்கறி, பிண்ணாக்கு.
வற்கம்—குதிரைக்கயிறு.
வற்கரி—கரகம்.
வற்கலை—மரவுரிச்சீலை.
வற்காலி—வெள்ளாடு.
வற்சதரம்—ஈனுவிளங்கன்று.
வற்சம் — எருமைபசுவிவற்றின்கன்று, ஓர்தேயம், மார்பு.
வற்சரம்—வருடம்.
வற்சலம்—கன்றுத்தாய்ப்பசு, தயை.
வற்சை—குழந்தை, மலட்டுப்பசு.
வற்பு—உறுதி.
வற்புறுத்தல்—உறுதிப்படுத்தல்.
வற்றல்-வறத்தல், வியங்கோண்முற்று.
வனசம்—தாமரை.
வனசரம்—வனத்திற்பிறந்தயானை.
வனசரர்—வேடர்.
வனச்சார்பு—முல்லைநிலம்.
வனப்பு—அழகு.
வனமாலி—திருமால்.
வனம்—அழகு, ஊர்சூழ்ந்தசோலை, காடு, சுடுகாடு, துளசி, நீர், வழி.
வனுந்தரம்—மக்கள்வழங்காதவிடம்.
வனிதை—பெண்.
வனைதல்—அலங்கரித்தல், செய்தல்.
வன்கட்பேதையர்—பாலைநிலப்பெண்கள்.
வன்பால்—குறிஞ்சிநிலம், பாலைநிலம், மேடு.
வன்பு—வன்மை.
வன்மரம்—அகக்காழ்.
வன்மீகம்—புற்று.
வன்மீன்—முதலை.
வன்மை—கருத்து, வலி.
வன்னி—ஓர்மரம்,கிளி, நீ,பிரமசாரி.

வா

வாகனம்—ஏறிநடத்தப்பட்டவை, சீலை.
வாகினி-படை, படையிலோர்தொகை.
வாகு—அழகு, தோள்.
வாகுசன்—அரசன்.
வாகுலேயன்—முருகன்.
வாகுவலயம்—தோளணி.
வாகை—அறத்தின்றுறை, ஈகை, ஒழுக்கம், ஓர்மரம், தவம், மிகுதி, வெற்றி, வெற்றிமாலை.
வாக்காள்—சரச்சுவதி.
வாக்கியம்—வினைமுதல்செயப்படுபொருள் பயனிலையோடுகூடிய தொடர்மொழி.
வாக்கு — கருமேந்திரியத்திலொன்று, சொல், வாக்கென்னேவல்.
வாக்குதல்—வார்த்தல்.
வாங்கல் — அழைத்தல், கொள்ளல், வளைத்தல்,வளைவு, வியங்கோண்முற்று.
வாசகம்—வசனம்.
வாசந்தி—குருக்கத்திமரம்.
வாசபேயம்—ஓர்வேள்வி.

வாசம்—அம்பு, இருப்பிடம், இறகு, ஊர், சீலை, மருதநிலத்தூர், வாசனை, வேகம்.
வாசரம்—நாள்.
வாசவன்—இந்திரன்.
வாசனி—மேற்கட்டி.
வாசனை—மணம்.
வாசாலன்—மிகப்பேசுவோன்.
வாசி—அச்சுவினிநாள், இசைப்பாட்டு, குதிரை, பறவை, பாணம், மிகுதி, வாசியென்னேவல்.
வாசிகம்—சொல்லியனுப்பினகாரியம்.
வாசிகை—கோத்தமாலை, தொடுத்தமாலை, மாலை.
வாசிட்டம்—அட்டாதசதருமநூலிலொன்று, அட்டாதசவுபபுராணத்தொன்று.
வாசித்தல்—படித்தல்.
வாசுகி—அட்டநாகத்தொன்று.
வாசுதேவன்—விட்டுணு.
வாசை—ஆடாதோடை.
வாச்சியம்—பறை.
வாச்சியாயன்—களாநூற்செய்தமுனி.
வாஞ்சை—ஆசை.
வாடல்—சாதல், மெலிதல், வியங்கோண்முற்று.
வாடி—வினையெச்சம்.
வாடை—இடைச்சேரி, இடையர்வீதி, தெரு, வடகாற்று, வேடர்வீதி.
வாட்டம்—தெரு, தோட்டம், வழி, வாடல்.
வாட்டல் — மெலிவித்தல், வியங்கோண்முற்று.
வாட்படையாள்—துர்க்கை.
வாணன்—ஓரரசன், ஓரசுரன், கார்த்திகைநாள், தஞ்சாக்கூர்வாணன்.
வாணி—கூத்து, சரச்சுவதி, சொல், சொல்லல்.
வாணிகம்—வியாபாரம்.
வாணிகன்—செட்டி, துலாராசி.
வாணிகேள்வன்—பிரமன்.
வாணிச்சியம்—கொள்ளல்விற்றல்செய்யும்வணிகச்செயல்.
வாணிதம்—கள்.
வாணினி—கூத்தி, மதத்தவள்.
வாணிபர்—செட்டிகள்.
வாணீசன்—பிரமன்.
வாதசாரதி—அக்கினி.
வாதபோதம்—பலாசு.
வாதப்பிரமி—காற்றுக்கெதிர்செலும் விலங்கு.
வாதம்—காற்று, தருக்கம், முப்பிணியிலொன்று.
வாதனம்—சீலை.
வாதாயனம்—பலகணி.
வாதி—நாற்கவியிலொருவன், வாதஞ்செய்வோன், வாதியென்னேவல்.
வாது—தருக்கம்.
வாதுவர்—குதிரைப்பாகர், யானைப்பாகர்.
வாதை—துன்பம், நோய்.
வாத்தியம்—கஞ்சக்கருவி, துளைக்கருவி, தோற்கருவி, நரப்புக்கருவி இந்நான்கும்.
வாந்தி—சத்திபண்ணல்.
வாமதேவன்—சிவன்.
வாமம்—அழகு, இடதுபக்கம், ஒளி, குறுமை, சிவனைம்முகத்தொன்று, தொடை.
வாமலூரு—புற்று.
வாமலூருதநயன்—வான்மீகி.

வாமலோசனை — அழகியவிழியுடையாள்.

வாமனம்— அட்டாதசபுராணத்தொன்று, குறள், தென்றிசையானை.

வாமனன்—குள்ளன், திருமாலவதாரத்தொன்று.

வாமன்—அருகன்.

வாயசம்—காக்கை.

வாயசாரதி—கூகை.

வாயம்—நீர்.

வாயிலாளர்—வாயில்காப்போர்.

வாயிலோர் — தமிழ்க்கூத்தர், வாயில் காப்போர்.

வாயில்—ஐம்பொறி, கடை, காரணம், தூது, வாயில்.

வாயு—காற்று.

வாயுமைந்தன்—அனுமான், வீமன்.

வாயுவிளங்கம்—ஓர்மருந்து.

வாய்—இடம், உதடு, ஏழனுருபு, (உ-ம், குணகடல்வாயமுதென்கோ,) மெய், வாக்கு, வாயில், வாயென்னேவல், வாய்மை.

வாய்க்கால்—நீரோடுங்கால், மகநாள்.

வாய்தல்—வாயில்.

வாய்த்தல்—கிடைத்தல், பொருந்தல், மாட்சிமை.

வாய்ப்பு—வளமை.

வாயப்புள்—நிமித்தம்.

வாய்மை—சொல், மெய், வலி.

வாய்வட்டம்—குதிரைக்கயிறு.

வாரணம் — கடல், கவசம், கேடகம், கோழி, சங்கு, சட்டை, தடுத்தல், யானை, விடுதல்.

வாரணசி—காசி.

வாரணை—தடுத்தல்.

வாரணையம்—தடுத்தல்.

வாரம் — அன்பு, உரிமை, ஏழுகிழமை, கடல், கரை, சிறுவரம்பு, திரை, பக்கபாதம், பங்கு, மலைச்சாரல்.

வாரல்—அள்ளுதல், கொள்ளையிடல், வியங்கோண்முற்று.

வாரவாணம் — கவசம், பஞ்சுபெய்துதைத்தமெய்ப்பை.

வாரவாரம்—கவசம்.

வாராகி—சத்தமாதாக்களிலொருத்தி, பெண்பன்றி.

வாராணசி—காசி.

வாரி—இசைக்குழல், கடல், கதவு, நிறைபுனல், நீர், மதில், மதிற்சுற்று, யானைநிற்குங்கூடம், யானைப்படுக்குங்குழி, வழி, வாயில், வாரியென்னெச்சம், வெள்ளம்.

வாரிசம்—தாமரை.

வாரிதம்—மேகம்.

வாரிதி—கடல்.

வாரித்தல்—ஆணையிடல், தடுத்தல்.

வாரிவாகம்—மேகம்.

வாருகோல்—துடைப்பம்.

வாருணம் — அட்டாதசவுபபுராணத்தொன்று, கடல், மேற்கு.

வாருணி—அகத்தியமுனி, கள், சதயநாள், மேற்கு.

வாருண்டகம்—எண்காற்புள்.

வாருண்டம்—எண்காற்புள்.

வாருதல்—கொள்ளல், திருடல்.

வாரை—மரவுத்திரம்.

வார்—கச்சு, நீர், நீளம், நேர்மை, வாரென்னேவல்.

வார்தல் — உயர்ச்சி, தெரிதல், நீளல், வாருதல்.

வார்த்தகம்-கிழத்தன்மை, கிழவர்குழு.
வார்த்தல்—வார்க்குதல்.
வார்த்தாகம் — கத்தரிக்காய், கத்தரிச்செடி.
வார்த்தாகி—சிறுவழுதலை.
வார்த்தாவகன்—ஓலைசெய்திகள்கொடுபோகுவோன்.
வார்த்தை—வசனம்.
வார்த்தைத்தொழிலோர்-வேளாளர்.
வார்ப்பு—வார்த்தல்.
வாலகம்—வால்.
வாலதி—யானைவால், வால்.
வாலம்—தலைமயிர், வால்.
வாலவாயசம்—வைடூரியம்.
வாலாமை—அசுத்தம், மகளிர்சூதகம்.
வாலி—இந்திரன்மகனாகியவானரன்.
வாலுகம்—வெண்மணல்.
வாலுங்கி—ஓர்மருந்து, கக்கரி.
வாலுவர்—மடையர்.
வாலேபம்—கழுதை.
வால்—சுத்தம்,மிகுதி,வால்,வெண்மை.
வாவல்—தாண்டல், வியங்கோண்முற்று, வௌவால்.
வாவி—குளம், வினையெச்சம்.
வாவுதல்—கடத்தல்.
வாவெனல்—அழைத்தல்.
வாழி—இடைச்சொல்.
வாழிய—முன்னிலையசைச்சொல்,(உ-ம். காணியவாழியமலைச்சாரல்,) வியங்கோண்முற்று.
வாழை—வாழைமரம்.
வாழ்க்கை—ஊர், செல்வம், மருதநிலத்தூர், மனைவி.
வாழ்க்கைத்துணை—இல்லாள்.
வாழ்தல்—வாழ்வு.
வாழ்த்தல் — துதித்தல், வியங்கோண்முற்று.
வாழ்வு—முறைமை, வாழ்தல்.
வாளாமை—கேளாமை, மௌனம்.
வாளி—அம்பு,ஓர்காதணி,வட்டமாயோடல்.
வாளுழவர்—படைவீரர்.
வாளை—ஓர்மீன்.
வாள்—ஒளி, கத்தி.
வாள்கைக்கொண்டாள்—துர்க்கை.
வானதி—கங்கை.
வானபத்தி—பூவாதுகாய்க்குமரம்.
வானபத்தியம்—பூவாதுகாய்க்குமரம்.
வானப்பிரத்தன் — காட்டிற்றவஞ்செய்வோன்.
வானப்பிரத்தி—பூவாதுகாய்க்குமரம்.
வானம்-ஆகாயம்,உலர்ந்தமரம், மழை.
வானரக்கொடியோன்—அருச்சுனன்.
வானரம்—குரங்கு.
வானவரம்பன்—சேரன்.
வானவருறையுள்—தேவர்கோயில்.
வானவர்முதுவன்—சேரன்.
வானவன்—சேரன், பிரமன்.
வானவில்—இந்திரவில்.
வானி—கூடாரம், படை, மேற்கட்டி, விருதுக்கொடி.
வானீரம்—நீர்வஞ்சி.
வானுலகம்—தேவலோகம்.
வானேறு—இடி.
வானோர்—தேவர்கள்.
வானோர்கோமான்—இந்திரன்.
வானோர்மாற்றலர்-அசுரர்,இராக்கதர்.
வானோர்முதுவன்—பிரமன்.

வான்-ஆகாயம், எதிர்காலவிடைச்சொல், (உ-ம். கொல்வான்கொடித்தானை கொண்டெழுந்தான்,) பெருமை, மழை, மேகம்.
வான்மிகம்—இந்திரவில்.
வான்மீகி—ஒருமுனி.
வான்மீன்—தாராகணம்.

வி

விகங்கம்—அன்னம், பறவை.
விகசம்—மலர்ந்தது.
விகசிதம்—மலர்தல்.
விகடம்—வேறுபாடு.
விகர்த்தனன்—சூரியன்.
விகலம்—குறைபாடு.
விகலை—காலநுட்பம், நாழிகை.
விகற்பம்—வேற்றுமை.
விகற்பித்தல்—வேறுபடுதல்.
விகாதம்—விரோதம்.
விகாரம்—காமக்கவலை, தன்மயம், வேற்றுமை.
விகாரி—ஓராண்டு.
விகிரம்—இறைத்தல், பறவை.
விகிர்தம்—பொய், வேறுபாடு.
விகிர்தி—ஓராண்டு, விகுதி.
விகுணி—கள்.
விகுதி— பகுபதவுறுப்பினுளொன்று, வேறுபடுத்தல்.
விக்கல்-விக்குதல், வியங்கோண்முற்று.
விக்கியாதன்—பிரசித்தன்.
விக்கிரகம்—உடல்.
விக்கிரம—ஓராண்டு.
விக்கிரமம்—பராக்கிரமம், மிகுபலம், முறைபிழைத்தல்.
விக்கிரமார்க்கன்—ஓரரசன்.
விக்கிரயம்—விற்றல்.
விக்கினம்—இடையூறு, தீமை, வினைமுற்று.
விக்கினேச்சுவரன்—விநாயகன்.
விசதம்—நிருமலம், வெண்மை.
விசயச்சந்தம்—எழுநூறுகோவைமுத்துத்தாழ்வடம்.
விசயநகரம்—ஓர்பட்டணம்.
விசயம் — சருக்கரை, சூரியமண்டலம், வெற்றி.
விசயன்—அருச்சுனன், கலிசகாந்தன், திருமால்வாயில்காப்போன்.
விசயார்த்தம்—கைலைமலை.
விசயை—துர்க்கை.
விசரம்—கூட்டம், கொலை.
விசர்க்கம்—விடல்.
விசலோ—சட்டி.
விசனம்—துன்பம், பேராசை, மனிதரில்லாதவிடம், விசிறி.
விசாகன்—குமரன்.
விசாரதர்—புலவர்.
விசாரம் — ஆலோசனை, எண்ணல், இலேசப்படல்.
விசாரிதம்—ஆலோசிக்கப்பட்டது.
விசாலம்—கடம்பு, விரிவு.
விசாலை—சத்தபுரியிலொன்று.
விசிகம்—அம்பு, புனற்றிரை.
விசிகை—கச்சு, கருத்து, தெரு.
விசிதம்—விபூதி.
விசித்தல்—கட்டல்.
விசித்திரம்—அதிசயம், பேரழகு.
விசித்திரவேளாகொல்லி— கொல்லிரத்திறத்திலொன்று.

விசிறி—சிற்ருலவட்டம்.
விசும்பு—ஆகாயம், திசை, தேவலோகம், மேகம்.
விசுவகருமன்—தேவதச்சன்.
விசுவசித்து—ஓர்வேள்வி.
விசுவதேவர் — பதின்மூன்றுதேவகணம்.
விசுவநாதன்—சிவன்.
விசுவநாள்—உத்திராடநாள்.
விசுவம்—உலகம்.
விசுவம்பரன்—திருமால்.
விசுவம்பரை—பூமி.
விசுவாசம்—நம்புதல்.
விசுவாமித்திரன்—ஓரிருடி.
விசுவாவசன்—ஓர்கந்திருவன்.
விசுவாவசு—ஓராண்டு.
விசுவான்மா—பிரமன்.
விசுளி—கள்.
விசை—சீக்கிரம், விசையென்னேவல்.
விசைத்தல்—வேகமுறல்.
விச்சாதரர்—வித்தியாதரர்.
விச்சின்னம்—வேருக்கப்பட்டது.
விச்சுவர்—தேவரிலோர்பிரிவு.
விச்சை—தெரு, வித்தை.
விஞ்சை—கல்வி.
விஞ்சையருர்—நாகலோகம்.
விஞ்சையர்—புலவர், வித்தியாதரர்.
விடக்கு—ஊன்.
விடங்கம்—அழகு, ஆண்மை, கொடுங்கை, சுவர்ப்புறத்துநீண்டவுத்திரம், புறவுசட்குத் தூண்கண்மேற்செய்தகூட்டின்வரிசை, முகடு, வீதியிற்கட்டியகொடி.
விடங்கர்—சிறுவழி.
விடசூசகம்—சகோரப்புள்.
விடதரம்—பாம்பு, மேகம்.
விடதரன்—சிவன்.
விடந்தை—ஓரூர்.
விடபம்—எருது, சிவனூர்தியுங்கொடியும், சிறுதூறு, மரக்கொம்பு.
விடபி—மரப்பொது.
விடப்பு—கமர்.
விடம்—நஞ்சு.
விடம்பு—கமர்.
விடயம்—காணப்பட்டது, காரணம்.
விடருகம்—பூனை.
விடர்—கமர், காடு, தூர்த்தர், மலைப்பிளப்பு.
விடலை—ஆண்மகன், திண்ணியன், பாலைநிலத்தலைவன்.
விடல்—குற்றம், சாதல், விடுதல், வியங்கோண்முற்று.
விடவிடெனல்—நடுக்கக்குறிப்பு.
விடவு—கமர்.
விடன்—தூர்த்தன்.
விடாணம்—விலங்கின்கொம்பு.
விடி—திரைச்சீலை, விடியென்னேவல்.
விடிதல்—உதயமாதல்.
விடியல்—விடியற்காலம், வியங்கோண்முற்று.
விடுதல்—எறிதல், நீக்கல்.
விடுத்தல் — அனுப்பல், தங்கல், நடத்தல், வியோகம்.
விடுந்தலைப்பு—முன்றூனை.
விடுவாய்ச்செயதல்—அறுத்தல்.
விடேலெனல்—அனுகரணவோசை.
விடை—இடபவிராசி, எதிர்மொழி, எருது, விடுவல்.

விடைதல்—கோபம், சினம்.
விடைத்தல் — சினக்குறிப்பு, பெருங் கோபம்.
விடையோன்—சிவன்.
விட்டம்—உத்திரம்.
விட்டரம் — கொள்கலம், தவத்தோர் பீடம்.
விட்டவர்—துறந்தோர், பகைவர்.
விட்டில்—பிராயமரம், விட்டிற்பறவை.
விட்டுணு—திருமால்.
விட்டேறணம்—வேல்.
விட்டேறு—வேல்.
விட்டை—மலம்.
விணிகை—கச்சு.
விண்—ஆகாயம், இளமை, மேகம்.
விண்டலம்—ஆகாயம்.
விண்டல்—மூங்கில்.
விண்டு— அட்டாதசதருமநூலிலொன்று, காற்று, திருமால், மலை, மூங்கில், மேகம், வினையெச்சம்.
விண்டுநதி—ஆகாயகங்கை.
விண்டுபதம்—ஆகாயம்.
விண்ணவன்—அருகன், தேவன்.
விண்ணுலகம்—தேவலோகம்.
விண்ணேறு—இடி.
விண்ணோர்—தேவர்.
விண்மணி—சூரியன்.
விண்மீன்—நட்சத்திரம்.
விண்முழுதாளி—இந்திரன்.
விதம்—புட்பொது, விதம்.
விதத்தல்—மிகப்படல்.
விதப்பு—சீக்கிரம், மதிலுறுப்பு, மிகுதி.
விதரணம்—ஈகை.
விதர்ப்பம்—ஓர்தேயம்.
விதர்ப்பு—அச்சம், நெருக்கம், போர், வெற்றி.
விதலை—நடுக்கம்.
விதவை—கைம்பெண்.
விதனம்—வேதனை.
விதாதா—அருகன், பிரமன்.
விதாரணம்—பிளத்தல்.
விதானம்—உபாயம், கூட்டம், மேற்கட்டி, விதம்.
விதி—உண்மை, ஊழ், குணம், செய்தொழில், செலவும், நியமித்தல், பிரமன், மெய், விதியென்னேவல், வேதாகமவிதி.
விதிக்கு—கோணத்திசை.
விதிதம்—தெரியப்பட்டது.
விதித்தல் — உண்டாக்கல், செய்தல், சொல்லல்.
விதித்தோன்—கடவுள்.
விதிப்பாள்—மகள்.
விதியர்—கணக்கர், தந்திரிகள், மந்திரிகள்.
விதியுளி—ஓமம், தூதர், விவாகம்.
விதிவை—இரண்டாந்திதி.
விதிர்ப்பு—அச்சம், நடுக்கம்.
விது—சந்திரன், விட்டுணு.
விதுடி—படித்தவள்.
விதுதமுகம் — உணவணிமுதலியவேண்டாததற்குத்தலையசைத்தல்.
விதுப்பு—ஆசை, சீக்கிரம்.
விதும்பல்—ஆசைப்படல்.
விதுரன்—அறிஞன், திண்ணியன், வாழ்க்கைத்துணையிழந்தோன், விதுரன்.
விதேகை—மிதிலைநகரம்.
விதேயன்—சொற்படிகேட்போன்.

விதை—பெருமை, விதையென்னேவல், வித்து.
விதைத்தல்—வித்துதல்.
விதைப்புனம்—புதுக்கொல்லை.
வித்தகம்—ஞானம்.
வித்தகர்—கம்மாளர், தூதர்.
வித்தகன்—வயிரவன்.
வித்தம்—ஞானம், பொன்.
வித்தாரம்—அகலம், ஓர்கவி.
வித்தியர்—கம்மாளர்.
வித்தியார்த்தி—கற்போன்.
வித்து—விதை, வித்தென்னேவல்.
வித்துதல்—விதைத்தல்.
வித்துரு—மின்னல்.
வித்துருமம்—பவளம்.
வித்துவான்—புலவன்.
வித்துவேடணை — அட்டசித்தியிலொன்று.
வித்துவேடம்—விரோதம்.
வித்தை—கல்வி, ஞானம்.
விநதை—கருடன்ருய், சத்தபுரியிலொன்று.
விநயம்—தருமம், வணக்கம்.
விநாசம்—கொலை, நாசம்.
விநாசன்—கொலைசெய்வோன்.
விநாடி—காலநுட்பம்.
விநாயகன்—அருகன், புத்தன், விநாயகன்.
விநீதன்—தண்டிக்கப்பட்டவன், விநயமுள்ளவன்.
விநோதம்—விளையாட்டாற்பொழுதுகழித்தல்.
விந்தம்—ஒரொண், மலை.
விந்தர்—இடையர்.
விந்தியம்—அட்டகுலப்பருப்பதத்தொன்று.
விந்து—ஓர்புள்ளி, நீர்த்துளி.
விந்தை—ஆச்சரியம், தூர்க்கை.
விபக்கன்—பகைவன்.
விபஞ்சிகம்—வீணை.
விபணி—கடை, கடைவீதி.
விபதம்—கெடுவழி.
விபத்தன்—வேறுபட்டோன்.
விபத்தி—குற்றம், துன்பம், வேற்றுமை.
விபத்து—துன்பம்.
விபரீதம்—அதிசயம், வேறுபாடு.
விபலம்—பயனின்மை.
விபவ—ஓராண்டு.
விபவம்—செல்வம்.
விபன்னன்—மெலிந்தோன்.
விபாகம்—செல்வம், பக்குவம்.
விபாகரன்—சூரியன், தீக்கடவுள்.
விபாதம்—உதயகாலம்.
விபாவசன்—சூரியன், தீக்கடவுள்.
விபாவரி—இராத்திரி.
விபினம்—காடு.
விபீடணன்—இராவணற்கிளையோன்.
விபீதகம்—தான்றிமரம்.
விபு—கருத்தா.
விபுதர்—அறிஞர், மிகக்கற்றோர், வானோர்.
விபுலம்—அகலம், பூமி, பெருமை, விரிவு.
விபுலை—பூமி.
விபூடணம்—ஆபரணம்.
விபூதி— அணிமாமுதலியன, குற்றம், கொடுமை, செல்வம், திருநீறு, பெருமை.

விப்பிரமம் — தலைவன்றலைவிவிளையாட்டு, மயக்கம்.
விப்பிரயோகம்—பிரிதல்.
விப்பிரர்—பார்ப்பார்.
விப்பிரலம்பம்—பிரிதல்.
விப்பிலவம்—நாட்டின்குற்றம்.
விமதன்—பகைவன்.
விமர்த்தனம்—அரைத்தல்
விமலம்—அழுக்கின்மை.
விமலன்—கடவுள், சிவன்.
விமலி—சரச்சுவதி.
விமலை—இலக்குமி, துர்க்கை, பார்வதி.
விமானம் — உரோகணிநாள், ஏழ்நிலைமேடை, தேர், தேவர்கோயில், தேவலோகம்.
விமோசனம்—தீர்தல்.
விம்பம்—கோவைக்கொடி, பிரதிவிம்பம், வட்டம்.
விம்பிகை—கோவைக்கொடி.
விம்மல்—அழுதல், ஒலித்தல், வியங்கோண்முற்று.
விம்மிதம்—அச்சம், அதிசயம், உடல்.
வியக்கம்—பெருமை.
வியங்கம்—பிறவிமறு.
வியங்கோள்—ஐம்பான்மூவிடத்தும்வருமேவல்.
வியஞ்சகம்—அபிநயம்.
வியஞ்சனம்—அடையாளம், ஒற்றெழுத்து, பருப்புத்திரளை.
வியதிரேகம்—எதிர்மறை.
வியத்தல்—அதிசயப்படல், துதித்தல்.
வியத்திகை—பெருமை.
வியத்தியாசம்—ஓரிடத்தது பிறிதோரிடத்துறல்.
வியந்தரம்—பிசாசம்.
வியப்பு—அதிசயம்.
வியம்—உடல், பறவை, பெருமை.
வியர்த்தம்—பயனின்மை.
வியர்த்தல்—சினக்குறிப்பு, வியர்வை.
வியர்ப்பு—கோபம், சினம், வியர்வை.
வியர்வு—வியர்வை.
வியலிகை—பெருமை.
வியலிடம்—அகலம்.
வியல்—அகலம், காடு, பெருமை, விரிவு.
வியவன்—ஏவுவான், திண்ணியன், வழிச்செல்வோன்.
வியனுலகு—தேவலோகம்.
வியன்—பெருமை.
வியாகரணம்—இலக்கணம்.
வியாகாதம்—இடையூறு.
வியாகுலம்—துக்கப்படல்.
வியாக்கியானம்—உரைசொல்லல்.
வியாக்கிரம்-சிறந்தசொல், பெரும்புலி.
வியாசம்—நிபம், பகுத்தறிதல், விரிவு.
வியாச்சியம்—வழக்கு.
வியாதம்—வேறுபாடு.
வியாதன்—வியாசமுனி, வேடன்.
வியாதி—நோய்.
வியாத்தம்—வியாத்தியோடுகூடியது.
வியாத்தி—வியாபித்தல்.
வியாபகம்—சாதாரணம்.
வியாபாதம்—வஞ்சமனம்.
வியாபாதனம்—கொல்லல்.
வியாபாரம்—காரியம்.
வியாப்பியம்—வியாத்தியையுடையது.
வியாமம்—நான்குமுழவளவு.
வியாழம்—ஓர்நாள், தேவகுரு.

வியாளக்கிராகி—பிடாரன்.
வியாளம்—கெட்டயானை, பாம்பு, புலி.
வியானன்—ஓர்வாயு.
வியூகம்—விலங்கின்கூட்டம்.
வியோகம்—பிரிதல், விடுதல்.
வியோமம்—ஆகாயம்.
விரகம்—காமநோய், பிரிவு.
விரகு—அழித்தல், உணர்வு, உபாயம்.
விரணம்—புண், விழல்.
விரதம்—ஆணை, தவம்.
விரதி—துறவோன்.
விரத்தி—துறவு.
விரவல்-கலத்தல், வியங்கோண்முற்று.
விரவு—கலப்பு, விரவென்னேவல்.
விரவுதல்—கலத்தல்.
விரளம்—நீக்கம்.
விராகன்—அருகன்.
விராடம்—ஓர்தேயம்.
விராட்டு—பரப்பிரமம், புள்ளரசு.
விராத்தியன்—சாதிதருமம்விட்டவன், பிரதிலோமத்தந்தைக்குமனுலோமத்தாய்க்கும்பிறந்தோன்.
விராமம்—ஒற்றெழுத்து.
விராவம்—ஒலி.
விராளி—விரகம்.
விரி—மாட்டுவிரி, விரியென்னேவல்.
விரிசிகை—முப்பத்திருகோவைமணியுளமாதரிடையணி.
விரிச்சி—நன்னிமித்தம்.
விரிச்சிகன்—சூரியன்.
விரிஞ்சனன்—பிரமன்.
விரிஞ்சன்—பிரமன்.
விரிஞ்சி—பிரமன்.
விரிதல்—அலர்தல், ஒளிசெய்தல், பரவல், விசாலம்.
விரித்தல்--சொல்லல்,பரப்பல்,பூசுதல்.
விரியலர்—மலர்ந்தபூ.
விரியல்—ஒளி, பரவல், மலர்தல், வியங்கோண்முற்று,
விரிவு—அகலம்.
விரீகி—நெல்.
விருகம்—செந்நாய்.
விருகு—விருகந்தண்டு.
விருகோதரன்—வீமன்.
விருக்கம்—மரப்பொது.
விருச்சிகம்—ஓரிராசி, தேள்.
விருதர்—படைவீரர்.
விருதா—பயனின்மை.
விருத்தகங்கை—கோதாவரி.
விருத்தகிரி—விர்த்தாசலம்.
விருத்தம்—பழமை, பாவினத்தொன்று, மூப்பு, வட்டம், வேறுபடல்.
விருத்தர்—கிழவர், மேலோர்.
விருத்தி—அடிமை, ஒழுக்கம், ஒருஊர் செல்வம், தொழிலிலாபம், வளர்தல்,
விருத்தை—கிழவி.
விருந்தம்—விலங்கின்கூட்டம்.
விருந்தர்—புதியர்.
விருந்தனை—மனைவி.
விருந்தினர்—புதியோர்.
விருந்து—புதுமை.
விருபன்—வெள்ளெலி.
விருப்பம்—ஆசை.
விருப்பு—ஆசை.
விரும்பல்—ஆசைப்பெருக்கம், கருத்து, வியங்கோண்முற்று.
விருளா—கடிவாளப்பூண்.

விரூபம்—விகாரரூபம், வேற்றுமை.
விரூபாக்கன்—சிவன்.
விரேசனம்—விடுவித்தல்.
விரை—சாந்து,வாசனை,விரையென்னேவல்.
விரைதல்—விரைவு,வெயில்,வேண்டல்.
விரைவு—வேகம்.
விரோசனன்—சூரியன், பலிச்சக்கரவர்த்திதந்தை.
விரோதம்—பகை, வேற்றுமை.
விரோதி—ஓராண்டு, சத்துரு, விரோதியென்னேவல்.
விரோதிகிருது—ஓராண்டு.
விர்த்தி—விருத்தி.
விலகல்—எறிதல், நீங்கல், வியங்கோண்முற்று.
விலக்கல் — மாற்றல், வியங்கோண்முற்று.
விலங்கரசு—சிங்கம்.
விலங்கல் — கலங்கனீர், மலை, வியங்கோண்முற்று, விலங்குதல்.
விலங்கு—காற்றளை, குறுக்கு, மிருகம், விலங்கென்னேவல்.
விலங்குதல்—எறிதல், விலகல்,
விலா—பழு.
விலாங்கு—ஓர்மீன்.
விலாசம்— ஆடவர்மகளிர்விளையாட்டு.
விலாசனை—மகளிர்விளையாட்டு.
விலாபம்—கனவுகண்டிரங்கல்.
விலாழி — குதிரைவாய்நுரை, யானைத்துதிக்கைநீர்.
விலாளம்—ஆண்பூனை, பூனை.
விலேபனம்—பூசுதல்.
விலேபி—கஞ்சி.
விலை—விற்றல்.
விலைஞர்—செட்டிகள்.
விலைமகள்—வேசி.
விலோசனம்—கண்.
விலோதம்-பெண்மயிர், மயிர்க்குழற்சி.
விலோதனம் — துகிற்கொடி, பெருங்கொடி.
விலோமம்—முறைபிழைத்தல்.
வில்—ஒளி, சேரன்கொடி, மூலநாள், வில், வில்லென்னேவல்.
வில்லவன்—சேரன்.
வில்லார்—வில்லுடையார், வேடர்.
வில்லி—மன்மதன், வீரபத்திரன்.
வில்லுவம்—வில்வம்.
வில்லேருழவர்—படைவீரர், வேடர்.
வில்வம்—கூவிளை.
விவசம்—பரவசம்.
விவரம்—உட்டுளை, பகுத்தல்.
விவர்த்தனம்—புரளல்.
விவாகம்—கலியாணம்.
விவாதம்—சொற்கலகம்.
விவிதம்—பலவிதம்.
விவேகம்—பகுத்தறிவு.
விழல் — ஓர்புல், வியங்கோண்முற்று, விழுதல்.
விழவு—திருவிழா, மிதுனவிராசி.
விழா—விழவு, வினையெச்சம்.
விழி—கண், விழியென்னேவல்.
விழித்தல்—கண்டிறத்தல்.
விழுகை—விழுதல்.
விழுக்கு—நிணம்.
விழுங்கல்—வியங்கோண்முற்று, விழுங்குதல்.

விழுதல்—விழல்.

விழுது — ஆலமரமுதலியவற்றின்விழுது.

விழுத்தல்—வீழ்த்தல்.

விழுப்பம்—ஆசை, குலம், நன்மை.

விழுமம் — இடும்பை, சிறப்பு, சீர்மை, நன்மை.

விழைச்சு—இளமை, புணர்ச்சி.

விழைதல்—ஆசைப்பெருக்கம்.

விழைந்தோர்—சிநேகிதர்.

விழைவு—ஆசைப்பெருக்கம், உள்ளோசை, கலத்தல்.

விளக்கம்—சந்திரனுள், தெளிவு.

விளக்கு—சோதிநாள், தீபம்,விளக்கென்னேவல்.

விளங்கல் — ஒளிசெய்தல், வியங்கோண்முற்று.

விளங்குதிங்கள்—சுக்கிரன்.

விளம்பம்—தாமதம்.

விளம்பல் — சொல்லல், வியங்கோண்முற்று.

விளம்பனம்—தாமதம்.

விளம்பி—ஓராண்டு, வினையெச்சம்.

விளம்பிதம் — தாமதப்படமுற்றுந்தாளப்பிரமாணம்.

விளரி —இளமை, நெஞ்சாற்பிறக்குமிசை, நெய்தனிலத்தியாழ், மிகுதி, யாழிலோர் நரம்பு, வேட்கை.

விளரிப்பாலை—ஓரிராகம்.

விளர்—இளமை, கொழுமை, நிணம், வெண்மை.

விளவு — கமர், விளவென்னேவல, விளாமரம்.

விளா—விளாமரம்.

விளாகம்—போர்க்களம்.

விளாவல்—கலத்தல், வியங்கோண்முற்று.

விளி—எட்டன்வேற்றுமை, விளியென்னேவல்.

விளிதல்—கெடுதல், சாதல், மறிதல்.

விளித்தல்—அழைத்தல்.

விளிம்பு—கண்ணிமை, கரை.

விளிவு—கோபம், சாவு.

விளைஞர்—மருதநிலமாக்கள்.

விளைதல்—உண்டாதல்.

விளைநிலம்—வயல்.

விளைபுலம்—வயல்.

விளையுள்—வயல்.

விளைவு—மேகம், வயல், விளைதல்.

விள்ளல் — தழுவல், மலர்தல், வியங்கோண்முற்று, வேறுபடல்.

விறப்பு—அச்சம், நெருக்கம், பெருக்கம், போர், வெற்றி.

விறலி — பதினறுவயதுப்பெண், பாடன்மகடூ.

விறலோன்—அருகன், திண்ணியன்.

விறல்—பெருமை, வலி, வீரம், வெற்றி.

விற்பன்னர்—கற்றோர், புலவர்.

விற்றல்—விற்குதல்.

வினவல்-வியங்கோண்முற்று, வினுவல்.

வினவுதல்—வினுதல்.

வினு—சொல், வினுவென்னேவல்.

வினுசன்—கொலைசெய்வோன்

வினீதன் — தண்டிக்கப்பட்டவன், விநயமுள்ளவன்.

வினை—கருத்து, தொழில், போர்.

வினைஞர்—கம்மாளர், கூத்தர், சூத்திரர், மருதநிலமாக்கள்.

வினையுரைப்போர்—தூதர்.
வினைவிஞ்சன்—கடவுள்.
வின்னூலாளன்—துரோணசாரியன்.

வீ

வீ—ஓரெழுத்து, சாவு, நீக்கம், பறவை, பூ, வீயென்னேவல்.
வீகம்—பூட்டு, மோதிரம்.
வீக்கம்—மிகுதல், வீங்கல்.
வீக்குதல்—கட்டல்.
வீங்கல்—நித்திரைசெய்தல், வியங்கோண்முற்று, வீக்கம்.
வீசம்—ஓரெண், நெல்லிடைப்பொன்.
வீசல் — ஈதல், எறிதல், வியங்கோண்முற்று.
வீசனம்—சிற்றாலவட்டம், விசிறி.
வீசை—ஓர் நிறை.
வீடல்—சாதல், வியங்கோண்முற்று.
வீடிகை—தாம்பூலம்.
வீடு — மனை, மோக்கம், வீடென்னேவல்.
வீட்டுதல்—கொல்லல்.
வீணை—ஓசையாழ்.
வீணைவல்லோர்—கந்திருவர்.
வீண்—பயனின்மை.
வீதம்—முறை.
வீதராகம்—வைராகம்.
வீதல்—கெடுதல், சாதல், வறுமை.
வீதி — ஒழுங்கு, கடைவீதி, தெரு, நேரோடல், வழி, வினைமுற்று.
வீபணி—கடைவீதி.
வீபத்து—சந்திரன்.
வீபற்சு—அருச்சுனன்.
வீமம்—பயங்கரம்.
வீமன்—பஞ்சபாண்டவரிலொருவன்.
வீரசாகி—சேங்கொட்டைமரம்.
வீரச்செல்வி—துர்க்கை.
வீரட்டாணம்—கூத்தின்விகற்பம்.
வீரணம்—விலாமிச்சம்வேர்.
வீரதச்சுவன்—மன்மதன்.
வீரபத்திரன்—சிவன்மகன்.
வீரமுட்டி — வீரசைவந்தருந்திரவேடம்பூண்டு சமயப்பாதுகாவலனாயிருப்போன்.
வீரமுத்திரிகை—காலடுவிரலணி.
வீரம்—ஓர்மருந்து, மலை, வலி, வீரியம்.
வீரர்—படைவீரர்.
வீரன் — அருகன், திண்ணியன், வீட்டுமாசாரி.
வீரி—காளி, துர்க்கை.
வீரியம்—சுக்கிலம், பறைப்பொது, வீரம்.
வீரியர்—வீரர்.
வீருதம்—மிடைதூறு.
வீரை—ஓர்மரம், கடல், துன்பம்.
வீவு—சாவு.
வீழி—ஓர்செடி.
வீழ்—மரவிழுது, வீழென்னேவல்.
வீழ்கதி—நரகம்.
வீழ்க்கை—சோதிநாள்.
வீழ்தல் — ஆசை, ஆசைப்பெருக்கம், மேவல், விழுதல்.
வீழ்த்தல்—வியங்கோண்முற்று, விழுவித்தல்.
வீறல்—வியங்கோண்முற்று, வீறுதல்.
வீறு—தனிமை, புண்ணியம், பெருமை, விளக்கம், வீறென்னேவல், வெறுப்பு.

வீற்றம்—வேறுபாடு.

வீற்று—தனிப்பாடு, வேறுபாடு.

வெ

வெகுளி—சினம்.

வெகுளுதல்—சினத்தல்.

வெஃகல் — ஆசைப்பெருக்கம், வியங்கோண்முற்று.

வெஃகாமை—வேண்டாமை.

வெங்களம்—போர்க்களம்.

வெங்கோல்—கொடுங்கோல்.

வெஞ்சமம் — பாலைநிலத்திராகம், போர்.

வெஞ்சிலைச்செல்வன் — வீரபத்திரன்.

வெஞ்சுடர்க்கிரணன்—சூரியன்.

வெடி—அச்சம், இடி, கள், நறும்புகை, வெடியென்னேவல், வெளி.

வெடித்தல்—பிளத்தல்.

வெடிப்பு—பிளப்பு.

வெட்கம்—நாணம்.

வெட்கல்—அச்சக்குறிப்பு, நாணுதல், வியங்கோண்முற்று.

வெட்சி—ஓர்பூஞ்செடி, பகைநிரையோட்டுவார்க்குமாலை.

வெட்டல்—கொலைசெய்தல், தறித்தல், வியங்கோண்முற்று.

வெட்டி—வழி, வினையெச்சம்.

வெட்டை—உட்டணம்.

வெட்பாலை—ஓர்மரம்.

வெண்கதிரோன்—சந்திரன்.

வெண்கலம்—ஒருலோகம்.

வெண்கூதாளம்—நீர்த்தாளி.

வெண்சலசமுற்றாள்—சரச்சுவதி.

வெண்டலை—தலையோடு.

வெண்டாது—வெள்ளி.

வெண்டாமரையாள்—சரச்சுவதி.

வெண்டேர்—கானல்.

வெண்பலி—சாம்பல்.

வெண்பொன்—வெள்ளி.

வெண்மயிர்—சாமரம்.

வெண்மலை—கைலை.

வெண்மை — அறிவின்மை, இளமை, வெள்ளை.

வெதிரேகம்—எதிர்மறை.

வெதிர்—மூங்கில்.

வெதிர்த்தல்—சினத்தல்.

வெதிர்ப்பு—கலக்கம், சினக்குறிப்பு, நடுக்கம்.

வெதுப்பல்—வாட்டல், வியங்கோண்முற்று.

வெதுப்பு — ஓர்நோய், வெதுப்பென்னேவல்.

வெதும்பல் — சினக்குறிப்பு, வாடல், வியங்கோண்முற்று.

வெந—முதுகு.

வெந்தை—பிட்டு.

வெந்நீர்—சுடுநீர்.

வெப்பம்—ஆசை, வெம்மை.

வெப்பு—வெம்மை.

வெம்பல்—பெருங்கோபம், வாடல், வியங்கோண்முற்று.

வெம்மை — ஆசை, உட்டணம், கடுமை.

வெயில்—ஒளி, சூரியன்.

வெய்து—வெம்மையுடையது.

வெய்துறல் — அச்சக்குறிப்பு, சினக்குறிப்பு, துன்பம்.

வெய்தெனல்—விரைவுக்குறிப்பு.

வெய்யோன்—கொடியோன், சூரியன், மிருகசிரிடம், விருப்புற்றோன்.
வெரிந்—முதுகு.
வெருகம்—வாலின்கிழிடம்.
வெருகு—ஆண்பூனை, பூனை.
வெருட்சி—அச்சம்.
வெருட்டல் — அச்சமுறுத்தல, வியங்கோண்முற்று.
வெருவந்தம்—அச்சம்.
வெருவு — அச்சம், வெருவென்னேவல்.
வெருவுதல்—அஞ்சுதல்.
வெருளி—வெருட்சி.
வெருளுதல்—மருளுதல்.
வெருள்—உன்மத்தம், வெருளென்னேவல்.
வெல்லம்—கரும்பின்கட்டி.
வெல்லல்—வியங்கோண்முற்று, வெல்லுதல்.
வெல்லுமா—புலி.
வெளி—ஆகாயம்.
வெளிசம்—தூண்டில்.
வெளிப்படல்—தோன்றல்.
வெளில்—அணில், கட்டுத்தறி, தயிர்கடைமத்து, யானைத்தூண், வெண்மை.
வெளிறர்—அறிவில்லார்.
வெளிறு—அறிவின்மை, நறுவிலிமரம், வயிரமில்லாமரம், வெண்மை.
வெளிற்றுமரம்—முருக்கு.
வெள்கல் — அச்சம், வியங்கோண்முற்று, வெட்கம்.
வெள்வரி—பலகறை.
வெள்ளம்—ஓரெண், கடல், நீர்ப்பெருக்கு மிகுதி.
வெள்ளி—சுக்கிரன், வெண்பொன், வெண்மை.
வெள்ளிடை—வெளி.
வெள்ளிமலை—கைலைமலை.
வெள்ளில்—பாடை, விளாமரம்.
வெள்ளை—சங்கு, பலபத்திரன், வெண்பா, வெண்மை, வெள்ளாடு, வெள்ளாட்டுக்குட்டி, வெள்ளி.
வெள்ளைநிறத்தாள்—சரச்சுவதி.
வெள்ளைமெய்யாள்—சரச்சுவதி.
வெள்ளையானையூர்தி—ஐயனார்.
வெள்ளைவாரணன்—இந்திரன்.
வெறி — அச்சம், ஆடு, கலக்கம், கள், சீக்கிரம், நாற்றம், பிசாசம், வெறியென்னேவல், வேலனாடல்.
வெறிதல்—நெருங்கல்.
வெறிது—அறிவின்மை.
வெறித்தல்—மயக்குறல்.
வெறியாடல்—தேவர்க்காடுங்கூத்து.
வெறியாட்டாளர் — தேவர்க்காடுவோர்.
வெறுக்கை—செல்வம், பொன், விரும்பும்பொருள்.
வெறுநுகம்—சோதிநாள்.
வெறுத்தல்—கோபம், சினம்.
வெறுப்பு — அச்சம், கலக்கம், சினம், செறிவு, துன்பம், வேண்டாமை.
வெற்பன்—குறிஞ்சிநிலத்தலைவன்.
வெற்பு—மலை.
வெற்றம்—வெற்றி.
வெற்றி—சயம்.
வென்றி—வெற்றி.
வென்றோன்—அருகன்.

வே

வே—ஓரெழுத்து, வேவு, வேவென்னேவல்.

வேகம்—கடுமை, கோபம், சினம்.

வேகவதி—கம்பாநதி, வைகையாறு.

வேகி—வேகமுடையோன்.

வேங்கை—ஓர் மரம், புலி, பொன்.

வேசகம்—யானைநுனிவால், வால்.

வேசரி—கழுதை, கோவேறுகழுதை.

வேசனம்—மருதநிலத்தூர்.

வேசி—விலைமகள்.

வேசை—வேசி.

வேட்கம்—காதணி.

வேடம் — காதணி, தன்கோலம்விட்டு மற்றோர்கோலங்கொளல்.

வேடர்—வேடுவர்.

வேட்கை—ஆசை.

வேட்கோவன்—குயவன்.

வேட்டம்—வேட்டை.

வேட்டல் — ஆசைப்பெருக்கம், வியங்கோண்முற்று. விருப்பம், விவாகம், வேள்விசெய்தல்.

வேட்டார்—சிநேகிதர்.

வேட்டுவன் — குளவி, மகநாள், வேடன்.

வேட்டை—துன்பம், வேட்டம்.

வேட்டோர்—சிநேகிதர்.

வேட்டோன்—சிநேகிதன், புருடன்.

வேட்பு—விருப்பம்.

வேணகை—மதில்.

வேணவா—ஆசைப்பெருக்கம்.

வேணி—ஆகாயம், ஆறு, இடையர்வீதி, சடை.

வேணீர்—தாகநீர்.

வேணு—உட்டுளை, மூங்கில், வாள், வில், வேய்ங்குழல்.

வேண்—தமிழ்நாட்டிலொன்று.

வேண்டல்—ஆசை, ஆசைப்பெருக்கம். இரத்தல், வியங்கோண்முற்று.

வேண்டாமை—வெறுப்பு.

வேண்டார்—பகைவர்.

வேதகம் — தன்மையைவேறுபடுத்துவது.

வேதகாரர்—பொருந்தர்.

வேதக்கொடியோன்— துரோணாசாரியன்.

வேதண்டம்—கைலை, மலை, யானை.

வேதபாரகர்—பார்ப்பார்.

வேதமுதல்வி—சரச்சுவதி, பார்வதி.

வேதம்—முதனூல்.

வேதல்—வேகுதல்.

வேதனம்—அறிவு, கூலி, சம்பளம்.

வேதனை—அலைத்தல், நோய், வருத்தம்.

வேதன்—கடவுள், வியாழம்.

வேதா—கடவுள், பிரமன்.

வேதாந்தம்—வேதத்துட்பொருள்.

வேதாந்தன் — அரன், அருகன், கடவுள்.

வேதாந்தி — வேதாந்தநூலுணர்ந்தோன்.

வேதார்த்தன்—கடவுள்.

வேதாளம்—பிசாசம்.

வேதாளி—காளி.

வேதாளியர்—புகழ்வோர்.

வேதி—ஓமகுண்டம், கேட்டைநாள், திண்ணை, மதில்.

வேதிகை—கேடகம், திண்ணை.

வேதிதம்—துளையுடைப்பொருள்.

வேதித்தல்—பிளத்தல், வெருக்கல்.

வேதியர்—பார்ப்பார்.

வேதினம்—ஈர்வாள்.

வேது—வெய்து.

வேதை—துன்பம், பொன்னுக்கல்.

வேத்திரதரன்—வாயில்காப்போன்.

வேத்திரம்—அம்பு, இறைந்தை, பிரம்பு.

வேந்தன்—அரசன், இந்திரன், சந்திரன், சூரியன், வியாழம்.

வேந்து—அரசன்.

வேமம்—நெய்யுங்கருவியிலொன்று.

வேம்பின்றுரோன்—பாண்டியன்.

வேம்பு—ஓர்மரம்.

வேயர்—வேவுகாரர்.

வேயல்—மூங்கில்,வியங்கோண்முற்று.

வேயுள்—மாடம்.

வேய்—உட்டுளை, ஒற்று, மூங்கில், வேயென்னேவல்.

வேய்கள்—வேவுகாரர்.

வேய்தல் — அணிதல், அலங்கரித்தல், சூடுதல், மூடுதல், வேயுள்.

வேரம்—சலஞ்சாதித்தல்.

வேரல்—மூங்கில்.

வேரி—கள், வாசனை, வெட்டிவேர்.

வேர்—மூலம்.

வேர்க்கொம்பு—இஞ்சி.

வேர்த்தல்—கோபம், வியர்த்தல்.

வேலனாடல்—தேவர்க்காடுங்கூத்து.

வேலன்—முருகன்,வெறியாட்டாளன்.

வேலாவலயம்—கடல், பூமி.

வேலி—ஊர், காவல், நிலத்தளவையிலொன்று, மதில்.

வேலிறையோன்—குமரன்.

வேலை—கடல், கடற்கரை,தொழில், நெடுங்காலம், பொழுது.

வேலையிற்றுயின்றோன்—திருமால்.

வேல்—ஆயுதப்பொது, கைவேல், மூங்கில், வேலமரம்.

வேவு—ஒற்று, வேதல், வேவென்னேவல்.

வேழம்—கரும்பு, கொறுக்கை, மூங்கில், யானை.

வேழம்பர்—கழைக்கூத்தர்.

வேளாண்மை — ஈகை, உபகாரம், மெய்.

வேளாளர்—ஈகையாளர்.

வேளிர்—குறுநிலத்தரசர்.

வேளை—ஓர்பூடு, காலம்.

வேள் — ஆண்மகன், குமரன், மன்மதன்.

வேள்புலவரசர்—சாளுவர்.

வேள்வி—ஆராதனை, ஈகை, ஓமகுண்டம், மகநாள், யாகம்.

வேள்விக்குண்டம்—ஓமகுண்டம்.

வேள்விநாயகன்—இந்திரன்.

வேள்வியாளர் — ஈகையாளர், பார்ப்பார்.

வேறிடம்—ஏகாந்தம்.

வேறு — வினைமுற்று, வேற்றுமையுடையது.

வேறுபாடு—வேறுபடல்.

வேற்றலம்—காற்று.

வேற்றுமை—எழுவாய்முதலியவுருபுகள், வேறுபடல்.

வேனல்—கானல்.

வேனிலாளி—மன்மதன்.

வேனில்—கோடை.

வை

வை—ஒரெழுத்து, கூர்மை, வைக்கோல், வையென்னேவல்.

வைகடிகன்—இரத்தினங்கள்சாணைதீர்ப்போன்.

வைகரி—ஓர்வாக்கு, திட்டம்.

வைகல்—கழிவுநாள், தங்கல், நாள், விடியல், வியங்கோண்முற்று.

வைகல்வியம்—குறைவு.

வைகறை—இரவினிருபதுநாழிகைமுதன்முப்பதுநாழிகையளவுஞ்செல்லும்பொழுது, விடியற்காலம்.

வைகாசம்—வைகாசிமாதம்.

வைகாசி—ஓர்மாதம், விசாகநாள்.

வைகுண்டம்—திருமால்நகரம்.

வைகுண்டன்—திருமால்.

வைகுந்தநாதன்—திருமால்.

வைகுந்தம்—வைகுண்டம்.

வைகை—மதுரையாறு.

வைகைத்துறைவன்—பாண்டியன்.

வைசயந்தம்—இந்திரனுப்பரிகை.

வைசயந்தி—திருமான்மாளிகை.

வைசாகம்—ஓர்மாதம்.

வைச்சிரவணன்—குபேரன்.

வைடூரியம்—நவமணியிலொன்று.

வைணவம்—அட்டாதசபுராணத்தொன்று, ஓர்சமயம், மூங்கிலரிசி.

வைணவர்—நாராயணன்சமயத்தோர்.

வைணவி—சத்தமாதாக்களிலொருத்தி.

வைணிகன்—வீணைவாசிப்போன்.

வைதரணி—யமபுரத்தியாறு.

வைதர்ப்பி—தமயந்தி.

வைதல்—திட்டல்.

வைதனிகம்—அற்றைக்கூலி.

வைதாளிகன்—பள்ளியெழுச்சிப்பாடுவோன்.

வைதிகம்—வேதமார்க்கம்.

வைதிகர்-வேதமார்க்கத்தினடப்போர்.

வைதேகன்—பார்ப்பனத்திக்கும்வைசியனுக்கும்பிறந்துதுதித்துய்வோன்.

வைதேகி—சீதாதேவி.

வைதேயன்—கருடன்.

வைத்தல்—வைக்குதல்.

வைத்தியநாதன்—அதலலோகத்திருக்குஞ்சிவன்.

வைத்தியம்—பரிகாரம்.

வைத்தியன்—பரிகாரி.

வைநதேயன்—கருடன்.

வைநம்—பகுத்தல்.

வைநீதகம்—ஈரிணைமூவிணையெருதேனுங்குதிரையேனுங்கட்டியபண்டி.

வைபவம்—விபவம்.

வைப்பு—இடம், ஊர், பெருமை, வைத்தல்.

வைமாத்திரேயன்—சக்களத்திமகன்.

வையகம்—பூமி.

வையம்—உரோகணிநாள், சிவிகை, தேர், பண்டி, பாண்டில்பூண்டவூர்தி, பூமி, வாகனம்.

வையாகரணன்—வியாகரணம்படித்தோன்.

வையாளிவீதி—குதிரைநடத்தும்வீதி.

வைரசுத்தி—பகைதீர்த்துக்கொளல்.

வைராக்கியாதனம்—பகைதீர்த்துக்கொடல்.

வைரம்—விரோதம்.

வைரவம்—பைரவம்.

வைரி—சத்துரு.

வைரோசனன்—மாவலி.

வைவச்சுதன்—ஓர்மநு, நமன்.

வௌ

வௌவல்—கொள்ளையிடல், திருடல், பிடித்தல், வாருதல், வியங்கோள்முற்று.

வௌவால்—ஓர்பறவை, வியங்கோள்முற்று.

முதலாவது

பெயரகராதி முற்றிற்று.

இரண்டாவது

பொருளகராதி.

அருளகத் தனைத்துமே யாளு நாத..................னை
மருளகத் தகற்றிட வணங்கி நூற்ப..................டி
தெருளகத் தொருபொருட் செப்பும் பற்பெயர்ப்........ப்
பொருளக ராதியாம் புகலு வாம..................ரோ

அக்கு

அகத்தி—அச்சம், கரிரம், முனி.

அகத்தியன்—கும்பயோனி, குறுமுனி, முத்தமிழுரியோன்.

அகப்பை—கோரிகை, மூழி.

அகலம்—அகலுள், அகறல், ஆய்வு, ஆன்றல், இடம், இடம்பாடு, கண்ணறை, சேண், ததும், நளம், நளி, நனவு, நியக்குரோதம், படர்தல், பாழி, மார்பு, விபுலம், வியல், விரிவு.

அகல்—இடிஞ்சில், சராவம், சுத்திகை, தகழி, பாண்டில்.

அகழி — அகழ், உடு, ஓடை, கயம், கிடங்கு, கேணி, பரிகம், பரிகை, பாம்புரி.

அகற்றல்—உச்சாடனம், ஒருவுதல், துறத்தல், நீக்கல்.

அகில்—அகரு, காகதுண்டம், சாகாதுண்டம், பூழில்.

அக்குமணி—சங்குமணி, மனவு, வளைமணி.

அசைத

அசுத்தம் — அச்சி, அருவருப்பு, குற்சிதம், சூதகம், தூய்தன்மை, பயிர்ப்பு, வாலாமை.

அசுரர்—அவுணர், தகுவர், தனுசர், தானவர், திதிமைந்தர், தைத்தியர், நிசாசரர், நிசிசரர், வானோர்மாற்றலர்.

அசைச்சொல்— அத்து, அந்தில், அம்ம, அரோ, அன்று, ஆங்கு, ஆம், ஆல், இகும், இட்டு, இருந்து, இன்று, ஒரும், கா, குரை, சின், தம், தாம், தான், தில், நின்று, பிற, பிறக்கு, போம், போலும், மன், மன்னே, மா, மாது, மாதோ, யா, இவற்றுண் மாவென்னுமசைச்சொல், வியங்கோளோடுவரும், அன்றியுமுன்னிலையசைச்சொன் முதலிய தத்தம்வரியிற்காண்க.

அசைதல்—அலங்கல், ஊசல், ஒசிதல், சாய்தல், ததும்பல், தயங்கல், தளம்பல், தள்ளாடல், துயல்வரல், துவளல்.

அசைத்தல் — ஆட்டல், இரட்டல், ஒசித்தல், துவட்டல்.

அசையாநிலை — அசலம், சலியாமை, சாசுவதம், துருவம், துவம்.

அசைவு — உலோலம், கம்பம், கம்பிதம், சஞ்சலம், சலம், சலனம், தரளம், துலிதம்.

அசோகமரம் — காகோளி, செயலை, செந்து, பிண்டி.

அச்சக்குறிப்பு — அளுக்கல், உலமரல், ஓடல், குலைதல், குலையல், குளிர், கூசல், ஞெரேலெனல், ஞொள்கல், நிட்கல், துட்கல், துணுக்கெனல், துண்ணெனல், தேங்கல், வெட்கல், வெய்துறல்.

அச்சமின்மை — அபயம்.

அச்சமுள்ளோன் — கரிதன், காதரன், சிதன், பீதன், பீரு, பீருகன், பீலுகன்.

அச்சம் — அடுப்பு, அணங்கு, அற்றம், உட்கு, உரும், உருவு, உறுகண், கடி, கம்பலை, கலக்கம், கவலை, கொன், கோரம், சூரம், சூர், தரம், நாம், பயம், பனி, பனிப்பு, பீதி, பீர், புலம்பு, பேம், பைரவம், போம், விறப்பு, வெடி, வெருவந்தம், வெருவு, வெறி, வெறுப்பு.

அச்சுவினிநாள் — இரலை, ஏறு, ஐப்பசி, சென்னி, பரி, புரவி, மருத்துவநாள், முதனாள், யாழ், வாசி.

அஞ்சல் — உட்கல், கலங்கல், பயப்படல், மருளல், வெருவுதல்.

அஞ்சனக்கோல் — கோல்.

அஞ்ஞானம் — அவித்தை, மிச்சை.

அடக்கம் — அடங்கல், ஒடுக்கம், ஒருங்கல், குத்தி, சங்கோசம், நொறில், முணங்கு.

அடிச்சேரி — அடிக்குடில்.

அடித்தல் — அலைத்தல், அதுக்கல், அறைதல், எறிதல், எற்றல், குத்தல், கொட்டல், புடைத்தல், மொத்தல், மோதல், வழுக்கல்.

அடிமை — ஆள், கிணகர், சேடர், தாசர், தொண்டு, தொத்து, தொழும்பர், தொழும்பு, தொறுவு, பிருத்தியர், இவற்றாட்சிறந்தபெயர், சேடர், சேடியர்.

அடுக்குதல் — எற்றல்.

அடுப்பு — உத்தானம், காமாய், குழிசம், சுபாலிகை, சுல்லி, சோபாலிகை, மணலை.

அடை — அப்பம்.

அடைக்கலம் — அபயம், இல்லடை, கையடை, சரணம், சரண், மறை.

அடைக்கலம்புகுதல் — சரணம், சரண்புகல், மறைபுகல்.

அடையாளம் — அங்கம், அச்சு, அறிகுறி, ஆணை, ஆவணம், இலக்கணம், இலாஞ்சனம், இலிங்கம், களங்கம், குறி, கேது, சாதனம், சின்னம், சூசனம், நிமித்தம், பதம், பாணி, பொறி, முத்திரை, வியஞ்சனம்.

அட்டை — உரு, சளுகம்.

அணிதல் — ஆர்த்தல், சூடல், புனைதல், பூணல், மலைதல், மிலைதல், வேய்தல்.

அணில் — இருதை, வரிப்புறம், வெளில், இதன்பிள்ளை, குட்டி, பறழ், பிள்ளை.

அண்ணன் — தமையன், முன்னோன்.

அதட்டல் — அதிர்த்தல், உரப்பல், சீறல், தெழித்தல்.

அதிசயச்சொல் — அக்கோ, அத்தோ, அந்தோ, அன்னோ, ஆஅ, எற்றோ, என்னே ஐயோ, ஓஒ.

அதிசயம் — அதிரேகம், அற்புதம், இறும்பூது, சித்திரம், விசித்திரம், விபரீதம், விம்மிதம், வியப்பு.

அதிமதுரம்—அதிங்கம்.

அத்தநாள்—அங்கிநாள், ஐமீன், ஐவிரல், களிறு, கன்னி, காமரம், கைமீன், கைகளி, கௌத்துவம், நவ்வி.

அத்திமரம்—அதம், உதும்பரம், கோளி.

அந்திப்பொழுது—சந்தி, சாயங்காலம், சாயம், சாய்பொழுது, மாலை.

அப்பவர்க்கங்கள்—அடை, அண்டகை, அபூபம், இட்டிகம், கருசம், சஷ்குலி, தோசை, தோஸை, பூரிகம், பொள்ளல், போளி, மண்டிகை, மோதகம்.

அப்புதல்—ஒட்டல், சதுர்த்தல், சாத்தல்.

அமாவாசியை—இந்திரவிகடல், குகு.

அமிழ்து—அமரி, சுதை, மருந்து.

அமைத்தல் — கெழுமல், சமைத்தல். புல்லுதல், பொருத்தல்.

அமையுமென்றல்—அலம்.

அம்பலம்—சபை, பொது, பொதியில், மன்றம்.

அம்பிறகு—சார்ங்கில், உடு.

அம்பு — அத்திரம், ஆசுகம், ஆவளி, ஈகம், கங்கபத்திரம், கணை, கதிரம், காண்டம், கோ, கோல், சரம், சாயகம், சிலீமுகம், தொடை, தோணி, பகழி, பத்திரம், பத்திரி, பல்லம், பாணம், பிரதரம், புங்கம், புதை, மார்க்கணம், வண்டு, வாளி, விசிகம், வேத்திரம், இவற்றின்மொட்டம்பு, உதணம், முன்கிடுமம்பின்பெயர், அத்திரம்.

அம்புக்கட்டு—புதை.

அம்புக்குதை—குலை, பகழி, புங்கம்.

அம்புக்குப்பி—புழுது.

அம்புக்கூடு — ஆவநாழிகை, ஆவம், தூணி.

அம்புத்தலை—உடு, சுரை.

அம்புத்திரள்கட்டுங்கயிறு—பற்றுக்கை.

அம்மானை—அம்மனை.

அம்மி—அரைசிலை.

அயலோர்—ஏதிலர், நொதுமலர், வம்பலர்.

அயல்—ஏதில், ஒன்றுவிட்டயல், உபாந்தியம்.

அயோத்தி—கோசலம், சாகேதம்.

அரக்கு—அரத்தம், தமரம், துப்பு.

அரசமரம்—அச்சுவத்தம், கணவம், குஞ்சராசனம், சுவலை, திருமரம், பணை, பிப்பலம், போதி.

அரிசி—அரி, தண்டுலம், பரிவயம்.

அரிதாரம்—பழுப்பு.

அரிவாள்—குயம், குனிக்குயம், கொடுவாள்.

அருகன்—அசோகன், அண்ணல், அதிசயன், அந்தணன், அமலவன், அரியணைச்செல்வன், அருட்கொடிவேந்தன், அறவோன், அறிவன், ஆசான், ஆதன், ஆந்தன், உறவன், உறுவன், கந்தன், கமலவூர்தி, கருத்தா, கலைநாதன், காதிவென்றோன், காமற்காய்ந்தோன், குற்றங்களில்லோன், கொல்லாவேதன், சதுமுகன், சமி, சம்பு, சாதரூபி, சாது, சாந்தன், சித்தன், சிவகதியிறைவன், சினவரன், சினன், சினேந்திரன், சீமான், செய்யோன், செல்வன், சைனன், தத்துவன், தருமராசன், திகம்பரன், திருமறுமார்பன், தீர்த்தன், நக்கன், நான்முகன், நிச்சிந்தன், நிராயுதன், நீதிநூலி, நீத்தவன், பண்ணவன், பரமேட்டி, பிதா, புண்ணியன், புத்தன், புலவன், புனிதன், பூமிசைநடந்தோன், பொன்மலை

யிற்கோன், போதன், மாமுனி, மால், முக்குடைச்செல்வன், மூத்தன், முனிந்தோன், முனிவன், யோகி, வரதன், வாமன், விதாதா, விநாயகன், விராகன், விறலோன், வீரன்.

அருச்சுனன்—அனுமக்கொடியோன், ஆண்டொழின்மைந்தன், காண்டீவன், கிரீடி, கிருட்டினன், கேசவற்றோழன், சவ்வியசாசி, சுரேந்திரன்மைந்தன், சுவேதவாகனன், தனஞ்சயன், பற்குனன், பார்த்தன், மாதவிகொழுநன், விசயன், வீபற்சு.

அருந்ததி—சாலி, வடமீன்.

அரும்பண்டம்—தாரம்.

அரும்பொருள்—ஞாபகம், பிசி.

அருவருப்பு—குற்சிதம், பயிர்ப்பு.

அருவல்—பருவரல்.

அரைஞாண்—அரைநூல், இரதம், இரதனம்.

அரைப்பட்டிகை-அத்து, கலை; மறைவு.

அலங்கரித்தல் — அணிதல், ஒப்பனை, கைசெய்தல், கைத்தல், புனைதல், பூசுதல், பொற்புறுத்தல், மண்ணல், வனைதல், வேய்தல்.

அலங்காரம்—அணி, ஒப்பனை, கட்டழகு, காமர், கை, சிங்காரம், துப்புரவு பொற்பு.

அலரி—அயமரம், கணவீரம், கரவீரம், கவிரம்.

அலி—பேடி, பேடு.

அலையல்—அலைதல், அழுங்கல், ஆஞ்சி, சோம்பு, ஞெகிழ்தல், ஞொள்கல், துளும்பல்.

அல்குல்—அகல், வடிவு.

அவதரம்—உசிதசமயம்.

அவந்திநகர்—உஞ்சை.

அவரை—சிக்கடி, சிம்பை, முதிரை.

அவிட்டநாள்—ஆவணி, காகப்புள், பறவை, புள், வசுநாள்.

அவித்தல்—நதுத்தல், நவிழ்த்தல், அதுத்தல், நொதுத்தல்.

அவுரி—நீலி.

அவ்விடம்—அந்தில், அம்பர், அவண், ஆங்கு, ஆண்டு.

அழகு—அணங்கு, அணி, அந்தம், அபிராமம், அமலம், அம், அம்மை, அலரி, ஆரியம், இராமம், இலலிதம், இலாவண்ணியம், எழில், ஏர், ஐ, ஒண்மை, ஒப்பு, கவின், கலை, காந்தி, காமர், காரிகை, குழகு, கொம்மை, கோலம், சந்தம், சவி, சாயல், சித்திரம், சீர், சுந்தரம், செவ்வி, செழுமை, சேடு, சொக்கு, சோபம், சௌமியம், தகை, தகைமை, தளிமம், தென், தேசிகம், தையல், தோட்டி, தோல், நலம், நவ்வி, நன்கு, நோக்கம், நோக்கு, பகம், பத்திரம், பந்தம், பந்துரம், பாங்கு, பூ, பை, பொற்பு, பொலன், மஞ்சு, மஞ்சுளம், மணி, மதன், மயம், மனோகரம், மனோக்கியம், மாண்பு, மாதர், மாமை, மாழை, முருகு, யாணர், யௌவனம், வகுப்பு, வடிவு, வண்மை, வளம், வனப்பு, வாகு, வாமம், விடங்கம், அன்றியும்பேரழகின்பெயர். அலங்காரம், கட்டழகு, காமர், சித்திரம், விசித்திரம்.

அழிஞ்சில் — அங்கோலம், செம்மரம், சேமரம்.

அழித்தல் — அரக்குதல், அரைத்தல், கிழ்தல், சட்டித்தல், சிதைத்தல், சிரத்தல், தேய்த்தல், நூறல், விராகு.

அழிவின்மை—கன்னி, குமரி, கோனை. நிறை.

அழிவு—இலயம், சிதிலம், சிரணம்.

அழுக்காறு—ஔவியம், கோட்டம், மனக்கோட்டம், மனத்தழுக்கம்.

அழுக்கின்மை—அமலம், நிருமலம், விமலம்.

அழுக்கு—மலம், மாசு.

அழுதல்—அரற்றல், அழுங்கல், இரங்கல், உரோதனம், ஏங்கல், கசிதல், கலங்கல், கலுழ்ச்சி, கலுழ்தல், பொருமல், விம்மல்.

அழுந்தல்—அமுங்கல், அரங்கல், ஒமுங்கல்.

அழைத்தல்—அகவல், ஆகருடணை, இகுத்தல், உளைத்தல், கரைதல், குயிறல், கூவல், கேதல், மாவெனல், வாங்கல், வாவெனல், விளித்தல்.

அளக்கல்—கச்சம், கடன்.

அளபெடை—புலுதம்.

அளவின்மை—அநந்தம், அபரிமிதம், அபாரம், அமானம், அமிதம், எல்லையின்மை.

அளவு—அந்தரம், அவதி, அளவை, காறு, தனை, தாறு, துணை, பிரமாணம், மடங்கு, மட்டு, மாத்திரை, மானம், மிதம், வரை, வரையறை, வல்லி.

அறச்சாலை—அறப்புறம், சாலை, பள்ளி.

அறம்—சுகிர்தம், தருமம், நல்வினை, புண்ணியம், வீறு.

அறிவிலான்—அஞர், அஞ்ஞன், ஆதன், இழுதை, ஏழை, குதலை, சிதடன், பேதை, மடன், மண்ணை, முழுமகன், மூடன்.

அறிவின்மை—அசேதனம், அறியாமை, எய்யாமை, சிதடு, பேதைமை, மடமை, மடம், மருட்சி, மாழை, வெண்மை, வெளிறு, வெறிது.

அறிவு—உணர்வு, உண்மை, உரன், உறழ்வு, ஒண்மை, ஓதி, காட்சி, சேதனம், சைதன்னியம், ஞாபகம், ஞானம், துப்பு, தெருட்சி, தெளிவு, புத்தி, புந்தி, புலன், பொறி, போதம், மதி, மேதை, அன்றியும், பேரறிவு, மூகரிமை, முதுக்குறைவு.

அறிவுடையோர்-அறிஞர், ஆய்ந்தோர், ஆரியர், ஆன்றவர், உயர்ந்தோர், உரவோர், உரியோர், உலகம், எழுத்தாளர், கணக்காயர், கலைவல்லோர், கவிஞர், குசலர், கூவலர், சான்றோர், சிரியர், தகுதியோர், நல்லோர், நிபுணர், நூலுணைப்போர், நூலோர், மிகவல்லோர், மிக்கோர், மேதாவியர், மேலோர், விபுதர்.

அறுகு — இளம்புல், சட்பம், தூர்வை, பதம்.

அறுகுவெள்ளரிசிகலந்தது — அச்சுதம்.

அறுத்தல்—அகைத்தல், அரிதல், ஈர்த்தல், கடிதல், கத்தரித்தல், கொய்தல், சூலல், சேதித்தல், தடிதல், துணித்தல், துண்டித்தல், பகல், பரிதல், விடுவாய்ச்செய்தல்.

அற்பத்தின்பெயர்— சிறுமையைக்காண்க.

அனந்தன்—சேடன்.

அனிச்சமரம்—அருப்பலம், சுள்ளி, நறவம்.

அனுடநாள்—தாளி, தேள், பனை, புல், பெண்ணை, போந்தை, மித்திரநாள்.

அனுபவித்தல்—திளைத்தல், நுகர்தல்.

அனுபோகம்—துப்பு, துவ்வு, நுகர்ச்சி, போகம்.

அன்பு—அளி, ஆணம், ஆர்வம், இட்டம், ஈரம், காமம், நாரம், நார், நேயம், பரிதல், பரிவு, பற்று, பாசம், புரிவு,

வாரம், அன்றியும் விடாதுதொடர்ந்த வன்பு, உழுவல்.

அன்றில்—கிரவுஞ்சம், தரிஞ்சகம், இதனுண், அகன்றில், இதன்குஞ்சு, பிள்ளை.

அன்னம்—அஞ்சம், உன்னம், எகினம், ஓதிமம், மராளம், வக்கிராங்கம், விகங்கம், இதனுண், சேவல், இனிதாகப் பாடுமென்னம், காதம்பம்.

ஆ

ஆகாயம் — அண்டம், அநந்தம், அந்தரம், அம்பரம், ஆசினி, இடம், உம்பர், உலகம், ககனம், கம், காயம், குடிலம், தலை, சேண், நபம், நாகம், புட்கரம், மங்குல், மாகம், மாதிரம், மீ, மேல், வானம், வான், விசும்பு, விண், விண்டலம், வியோமம், வெளி, வேணி.

ஆக்கம்—நந்தல்.

ஆங்காரம்—செருக்கு, தருக்கு.

ஆசிரியப்பா—அகவல்.

ஆசிரியவிருத்தம்—மனவிருத்தம்.

ஆசை—அணங்கு, அருத்தி, அவா, ஆதரம், ஆர்வம், ஆவல், இச்சை, இராகம், எட்டை, காதல், காமம், காமர், நசை, நச்சு, நம்பு, நயப்பு, நரம்பு, பற்று, பிணை, புரி, பெட்பு, மாதர், மோகம். வயாவு, வாஞ்சை, விதுப்பு, விருப்பு, விழுப்பம், விழைவு, விளரி, விளைவு, வெப்பம், வெம்மை, வேட்கை, வேட்பு.

ஆசைப்பெருக்கம்—அவா, இரதி, இவறல், கவர்தல், காதலித்தல், சார்வு, தாழ்தல், நச்சுதல், நம்பல் நயத்தல், நல்கல், பற்றல், பெட்டல், பேணல், மேவல், விரும்பல், விழைதல், வீழ்தல், வெஃகல், வேட்டல், வேண்டல்.

ஆச்சாமரம்—ஆ, சாலம், சுள்ளி, மராமரம், யாலம்.

ஆடல் —அகவல், அசைதல், ஆலல், குனித்தல், தாண்டல், தூங்கல், நடித்தல், நுடங்கல், பெயர்தல், மாறல், இவற்றுள்வாயார்த்தாடலின்பெயர், ஆவலங்கொட்டல்.

ஆடாதொடை—வாசை.

ஆடிமாதம்—ஆசாடம், சுசி.

ஆடு—அசம், அயம், அருணம், உடு, ஒருவு, துள்ளல், புருவை, வெறி, வெள்ளாடுமுதலியவகை, தத்தம்வரியிற்காண்க.

ஆட்டுக்குட்டி—குட்டன், சோரன், பறழ், மணங்கு, மறி.

ஆணி—கீலம்.

ஆணை—சத்தியம், சபதம், சூள், தெரிசொல், தேவசாட்சி, பிரமாணம், விரதம், அன்றியுமிடும்பாடையின்பெயர், சபதம், வஞ்சம், வஞ்சனை.

ஆணையிடல்—தகைதல், தடுத்தல், தட்டல், வட்டித்தல், வாரித்தல்.

ஆண்குறி—இலிங்கம், கோசம்.

ஆண்மகன்—ஆடு, காளை, குமரன், புமான், புருடன், மகன், மாந்தர், மானவர், மைந்தர், அன்றியும், ஆண்மகனுக்குச் சிறந்தபெயர், நம்பி.

ஆதி — அடி, ஆரம்பம், எழுவாய், தலை, தாள், தொடக்கம், பிராசயம், பூருவம், முதல், முன்னர், மூலம், மோனை.

ஆதொண்டை—தொண்டை.

ஆத்தி—ஆரம், ஆர், சல்லகி, தாதகி.

ஆந்தை—இருடி, கின்னரம், கூகை, பிங்கலை.

ஆபரணக்கடைப்புணர்வு — கயில், மடை.

ஆபரணத்தின்றூங்கணி — தூக்கம், தொங்கல், நிலை, மதலிகை.

ஆபரணமுதலியவைக்கும்வீடு — பண்டசாலை.

ஆபரணம்—அணி, அணிகலன், ஆரம், இழை, கலம், கலன், நகை, பணி, பூடணம், பூண், மஞ்சு, மதாணி, வள்ளி, இவற்றுட் பேராபரணத்தின் பெயர், ஆரம், மதாணி, பூணுகைக்கட்டுமாபரணத்தின்பெயர், கிம்புரி, தாங்கி, வயிரம், மணிவடத்தின்பெயர், ஆரம், காழ், சரம், தாமம், மணிக்கோவையின் பெயர், காழ், சவி, அன்றியுங்காதணிமுதலியவகை, தத்தம்வரியிற்காண்க.

ஆபரணம்வைக்குஞ்செப்பு—கடிப்பம், கண்டிகை, காண்டம், கோடிகம் துமானம், பரணி, பீடிகை.

ஆமணக்கு—ஏரண்டம், சித்திரம்.

ஆமை—அண்டசம், அம்பணம் அமுங்கு, உறுப்படக்கி, ஒடுங்கி, கச்சபம், கமடம், கல்வி, கூர்மம், இதன்பெண், இடிலி, துளி.

ஆம்பற்பொது — அல்லி, சயம், நெய்தல், இவற்றுட்செவ்வாம்பல், அரக்காம்பல், செங்குமுதம், செவ்வல்லி, சேதாம்பல், வெள்ளாம்பலின்பெயர், கயிரவம், குமுதம்.

ஆயம்—உல்கு, சாரிகை, சுங்கம்.

ஆயிலியநாள்-அரவுநாள், ஆயில்,கௌவை, பாம்பு.

ஆயுதப்பொது—அசி, அரி, அலகு, இரும்பு, எஃகு, ஏதி, கருவி, கழுமுள், காண்டம், காத்திரை, கூர்த்திகை, சுதனம், சேனை, தானை, துப்பு, படைக்கலம், வேல், இவற்றுட்கைவிடுமாயுதப்பொதுப்பெயர், அத்திரம், தூரியம், கைவிடாவாயுதப்பொதுப்பெயர், சத்திரம்.

ஆயுதவுறை — உறை, கருவிப்புட்டில், தடறு, படையுறை.

ஆய்தவெழுத்து—தனிநிலை,முப்புள்ளி.

ஆராதனை—அருச்சனை, அர்ச்சனை, பத்தி, பலி, பூசனை, பூசை, வந்தனை, வழிபாடு, வேள்வி.

ஆராய்தல்—ஆய்தல், ஆலோசனை, ஓர்தல், சூழல், சூழ்ச்சி, தூக்கு, தெரிதல், தெளிதல், தேர்தல்.

ஆரான்மீன்—ஆரல்.

ஆலமரம் — ஆலம், ஆல், கானமரம், கோளி, தொன்மரம், நியக்குரோதம், பழுமரம், பாலி, பூதவம், வடம், இதன்விழுது, வீழ்.

ஆலவட்டம்—உக்கம், காலசம், தாலவிருந்தம், பீலி.

ஆலாங்கட்டி—ஆலி,கரகம், கனோபலம்.

ஆலை—இயந்திரம்.

ஆலோசனை—சூழல், சூழ்ச்சி, தெரிதல், தெளிதல், மந்திரம், விசாரம்.

ஆவணிமாதம்—சிராவணம், நபம்.

ஆழம்—அழுந்து, கம்பீரம், கயம், குட்டம், குண்டு.

ஆறு—உந்தி, ஒலியல், ஓணம், குடிஞை, சிந்து, தடினி, தரங்கிணி, திரை, தீபவதி, தீர்த்திகை, துறை, துனி, நதி, புனல், யாறு, வருபுனல், வேணி, இவற்றுண்மேற்கோடுமாறு, நதம், கிழக்கோடுமாறு, நதி, நிறையாறு, பிராறு, வழாறு, வாரி, புதுப்புனல்வரவு, தலையல், நீந்துபுனல், அகாதம்,நீத்து.

ஆற்றிடைக்குறை — அரங்கம், இலங்கை, துருத்தி.

ஆனிமாதம்—சுக்கிரம், சேட்டம்.

இ

இகழத்தகுபொருள்—இழிதகவு, இழிவு, தண்மை, பரிபவம்.

இகழ்ச்சி — இகழ்வு, இழிவு, உவர்ப்பு, ஒல்லாமை, நகவு, நகை, நிந்தை.

இகழ்ச்சிக்குறிப்பு — இளி, எல், என், ஏஎ, சிச்சி, சையெனல்.

இகழ்ச்சிச்சொல் — அங்கதம், இழிச்சொல், வசைச்சொல்.

இகழ்தல்—இகழ், எள்கல், எள்ளல், நகுதல்.

இசங்கஞ்செடி — குண்டலி, மூத்தாபலம்.

இசை—கந்தருவம், காந்தாரம், தென், நரம்பு, இவற்றுண் மந்தவிசையின்பெயர், காகுளி, மந்தரம், சமனிசையின்பெயர், தாத்தம், மதுரம், மத்திமம், உச்சவிசையின்பெயர், தாரம், வல்லிசை.

இசைக்குழல்—ஆம்பல், வங்கியம், வாரி, இவற்றுண் மூக்கால்வாசிக்குங்குழல், முரளி.

இசைப்பாட்டு—இசை, இராகம், கந்தருவம், காந்தாரம், காமரம், கானம், கீதம், குழல், கேயம், கேரளே, பண், பாட்டு, பாணி, பாண், மனவிழி, வரி, வாசி, இவற்றுள், வாச்சியத்தோடுபாடுமிசைப்பாட்டு, சங்கீதம், பாண்.

இசைப்பு — அத்து, இசை, இயைய, உத்தானம், சந்தி, புணர்ச்சி.

இஞ்சி—அல்லம், ஆத்திரதம், மருப்பு, வேர்க்கொம்பு.

இடதுபக்கம் — அபசவ்வியம், இடம், வாமம்.

இடபவிராசி—ஏறு, குண்டை, சே, நந்தி, நரை, பசு, பாண்டில், பாறல், புல்வம், விடை.

இடம் — அகம், அயல், அரங்கு, இடை, இல், உழி, உழை, உளி, உள், கடை, கண், களம், கால், கீழ், சார், தலம், தலை, தாமம், தானம், திணை, தேசம், தேயம், நிலம், பக்கம், பட்டி, பதி, பாங்கர், பாடு, பால், பின், புடை, புலம், புறம், மாடு, முகம், முதல், முன், மேல், வயின், வலம், வழி, வளாகம், வாய், வைப்பு.

இடாகினி—மாயவள், வஞ்சனி, வலைவை.

இடி — அசனி, அனலேறு, இகளி, உரும், ஏறு, ஒலி, செல், மடங்கல், வானேறு, விண்ணேறு, வெடி.

இடை—உக்கம், நடு, நுசுப்பு, நுண்ணிடை, மத்திமம், மருங்கு.

இடைப்பக்கம்—ஒக்கல்.

இடையரூர் — ஆய்ப்பாடி, ஆவிரம், இடைச்சேரி, உவளகம், பல்லி, வல்லியம், வாடை.

இடையர் — முல்லைநிலமாக்களைக்காண்க.

இடையர்வீதி — சிரோணி, சேடி, பாடம், வாடை, வேணி.

இண்டு—இண்டை, ஈகை, ஈங்கை, ஈண்டு, புலிதொடக்கி.

இத்திமரம்—இரத்தி, இரத்திரி, இறலி.

இந்திரகோபம்-ஈயல், கோபம், மூதா.

இந்திராணி — அயிராணி, இந்திரன்மனைவி, சசி, சுந்தரி, புலோமசை.

இந்திராணிகூத்து—கடையம்.

இந்திரியம்—கந்தம், கரணம், பொறி.

இந்துப்பு—சயிந்தவம்.

இப்போழ்து—இன்று, இன்னே.

இமயமலை—பனிமலை, பார்வதிபிறந்தமலை.

இரக்கச்சொல் — அக்கோ, அந்தோ, அந்தோ, அய்யோ, அன்னோ, ஆஅ, எற்றே, என்னே, ஓஓ.

இரங்குதல்—இளைதல், இனைதல், குனிதல், நைதல், பரிதல்.

இரதம்—சபலம், சூதம், பாதரசம்,பாரதம், பேதி.

இரத்தம்—அரத்தம், ஆர்க்கம், உதிரம், எருவை, கறை, கிலாலம், குருதி, சுடுவல், செந்நீர்,செம்பால், செம்புனல், சோணிதம், சோரி, தோரை, தோன்றி, நெய், நெய்த்தோர், புண்ணீர், புலாணீர்.

இரத்தல்—இரவு, ஏற்பு, ஏற்றல், குறைகோள், வேண்டல்.

இரப்போர்-இரவலர், இரவோர்,தீனர், நிரப்போர், பரிசிலாளர், மார்க்கணர், யாசகர்.

இரப்போர்கலன்—கடிஞை, கப்பரை, பாத்திரம், மண்டை.

இராகு—கரும்பாம்பு, தமம், மதிப்பகை, மதியுணி.

இராக்கதர்-அரக்கர், இடும்பர், சாலகடங்கடர், நிருதர், பிசிதாசனர், யாது, யாதுதானவர், வானோர்மாற்றலர்.

இராசதேவிமனை—அந்தப்புரம், கந்தவாரம்.

இராசமனை—அரமனை,குலம்,கோயில், சாலை, நகரம், பவனம், மந்திரம், மாலை, மாளிகை.

இராசா—அண்ணல், அதிபதி,அதிபன், அயன்றேள்வந்தோன், அரசன், அரசு, ஆண்டகை, இறை, இறைவன், இனன், ஏந்தல், ஓங்கல், காரணன், காவலன், குரிசில், கொற்றவன், கோ, கோமான், கோன், சக்கிரி, தராபதி, தலைவன், தோன்றல்,நரபதி,நிருபன், பதி, பார்த்திவன், புரவலன், பூபதி, பூபாலன், பெருந்தகை, பெருமகன், பெருமான், பொருநன், மண்டலீகன், மன், மன்னவன், மன்னன், மீளி, முதல்வன், வாகுசன், வேந்தன், இவற்றுண் மற்றொருவரைப்பணியாதுலகாள்வோன்பெயர், சக்கரவர்த்தி, சார்வபௌமன், மண்டலேசுவரன், குறுநிலமன்னர்பெயர், அரட்டர், குறும்பர், புரோசர், வேளிர், சாளுவர்பெயர், சளுக்குவேந்தர், வேள்புலவரசர்.

இராசிகளின்பொது—இல், ஓரை, பவனம்.

இராத்திரி—அல், அல்கல், அல்லி, இரசனி, இரவு, இரா, எல்லி, ஏமம், கங்குல், நத்தம், நிசா, நிசி, மாலை, யாமம், யாமினி, விபாவரி.

இருப்புமுள்ளு—தாறு.

இருப்புலக்கை—முசலம்.

இருமல்—ஐ.

இரும்பு — அகி, அயம், அயில், கருங்கொல், கருந்தாது, கரும்பொன்.

இருவாட்சி—அனங்கம், கருமுகை, மயிலை.

இருள் — அந்தகாரம், அந்தரம், அல், கங்குல், கச்சளம், கருவரி, கருள், கார், சருவரி, தமம், திமிரம், துணங்கறல், துவாந்தம், நத்தம், நிசி, நீலம், மங்குல்.

இரேவதிநாள்-இரவிநாள், கடைநாள், கலம், குலம், சூலம், தொழு, தோணி, நாவாய், பஃறி, புருடநாள், பெருநாள்.

இலக்கியப் பொருட்டொடர் நிலைச்செய்யுட்கூறுபாடு-அத்தியாயம், இலம்பகம்,காண்டம், சருக்கம், படலம், பரிச்சேதம், இவற்றுள், வேதநூல்விரிக்குமிலக்கியத்திற்கும்,முனிவருரைத்தவிலக்கியத்திற்குங்கூறுபாடு, அத்தியாயம், தொடுத்த பொருண்முடிக்குங்கூறுபாடு, இலம்பகம், சருக்கம்,

இலக்குமி—அரிப்பிரியை, ஆக்கம், இந்திரை, இளையாள், கமலை, கோகனகை, சிரீதேவி, செல்வி, திரு, நளினி, பதுமை, பார்க்கவி, பாற்கடற்பிறந்தாள், பின்னை, பொருட்செல்வி, பொறி, பொன், மா, முண்டகாசனை, விமலை.

இலக்குமிக்கூத்து—பாவை.

இலந்தை—இரத்தி, குவலி, குல்வலி, கோலி, கோற்கொடி, பதரி.

இலந்தைக்கனி — குவலம், கோண்டை, கோலம்.

இலவமரம்—சான்மலி, பூரணி, பொங்கர்.

இலவம்பஞ்சு—பூளை.

இலாபம்—அதிகம், ஆக்கம், ஆயம், ஊதியம், சபலம், நந்தல், நயன், பசை, பயம், பயன், பலன், பலித்தல், பேறு, பொலிசை, அன்றியுந்தொழிலிலாபம், உருத்திதம், விருத்தி.

இலுப்பை-இருப்பை, குலிகம், மதூகம்.

இலை—அடை, சதம், சதனம், தகடு, தண்ணடை, தமாலம், தலம், தழை, தளம், பத்திரம், பத்திரி, பலாசம், பலாசு, பன்னம், பாசடை, பாசிலை, முறி, அன்றியும், ஏடு, பனைக்கும், பூவிதழ்க்குமுரித்து, ஓலை, பனை, தெங்கு, தாழைக்குமுரித்து, மடல், ஈந்தில், கமுகு, தாழை, தெங்கு, பனை, வாழைக்குமுரித்து, அன்றியுந், தோடு, தாழை, தெங்கு, பனை, பூவிதழ்க்குமுரித்து.

இலைக்கறி—அடகு.

இவ்விடம் — இம்பர், இவண், ஈங்கு, ஈண்டு.

இழிவு—அவமானம், இழிதகவு, இளிவு, பரிபவம்.

இளமரம்—கன்று, குழவி, பிள்ளை, போதகம், போத்து.

இளமை—இளை, எழில், கயம், கன்னி, குருகு, குருளை, குழவி, குழவு, கொம்மை, கோமளம், சேடு, சேய், தருணம், தவ்வி, நாகு, புதுமை, போதகம், மஞ்சு, மன்னை, மழவு, முருகு, விளரி, விளர், வெண்மை.

இளவேனில்—மது, மாதவம், வசந்தம்.

இளைஞர்—ஆடவர், இளவல், உவா, காளை, குமாரன், சேய், மழவு, முருகன், யுவா.

இளைத்தல்—எய்த்தல், கிலிசம், சிக்கம், சிக்கல், சொருகல், தளைதல், தேம்பல், தேய்தல், நாம்பல், பழுங்கல், மெலிதல்.

இறகு — இறை, தூவல், கூரல், கூழை, சதம், சதனம், சிறகு, சிறை, செட்டை, தூவி, தோகை, பக்கம், பத்திரம், பறை, பிச்சம், பிஞ்சம், வாசம்.

இறங்குதல்—அவரோகணம், அவாவுதல், இழிதல்.

இறால்—இறவு.

இறைகூடை—அம்பி, இடார், இறவை, காராம்பி, கிழார், பிழா, புட்டில், பூட்டை, அன்றியுநீரிறைக்குமரப்பத்தல், இறைவை.

இறைச்சி—ஊன், மேதை, வல்லூரம், இவற்றுளாவிவிறைச்சி, வல்லூரம், குட்டிறைச்சி, குசியம், படித்தூரம்.

இனிமை—அமிழ்து, ஆறு, இமிழ், இரதம், இழுமெனல், சாரம், சுவை, சேறு, தமிழ், தீ, தேம்.

இனியென்பது—ஞாங்கர், புறம், மேற்று, முன், மேல்.

இன்பம்—ஏமம், கடி, களிப்பு, சுகம், சேமம், தொய்யல், நகை, நயம், நயன், நலன், நன்னிலை, பரிவு, மகிழ்ச்சி, அன்றியும் பேரின்பம், ஆனந்தம்.

ஈ

ஈகை—அளி, இலை, உதவி, உதாரம், உபகாரம், கடப்பாடு, கவிகை, கொடை, தத்தம், தானம், தியாகம், பிரதம், புரவு, வண்மை, வாகை, விதரணம், வேளாண்மை, வேள்வி, அன்றியும் வகையாக் கொடையின் பெயர், கொடைமடம்.

ஈகையாளன்—உபகாரி, கொடையாளன், தனதன், தாதா, தியாகி, புரவலன், வதானியன், வேளாளன், வேள்வியாளன், அன்றியும் வகையாறு கொடுப்போன் பெயர், தானதாரியன், வள்ளல், வள்ளியோன்.

ஈட்டி—இட்டி, கழுக்கடை, கழுமுள், சவளை, சவளம்.

ஈதல்—அருளல், அளித்தல், இருத்தல், இசைத்தல், இடுதல், உதவல், கொடுத்தல், தருதல், நல்கல், நீட்டல், நேர்தல், பகுத்தல், பணித்தல், புரத்தல், பொழிதல், வழங்கல், வீசல்.

ஈயம்—சீருள், தகரம், வங்கம்.

ஈரல்—ஈருள், குண்டு.

ஈர்வாள்—அரி, இரம்பம், கரபத்திரம், வேதினம்.

ஈழதேசம்—சிங்களம்.

ஈனம்—அடர், இகழ்ச்சி, இதாம், இழிவு, இழுக்கு, கீழ், சிறுமை, குறைவு, தாழ்வு, நிரப்பு, புன்மை, பொல்லாங்கு, மறவி.

உ

உக்காரி—அகிருவல்லி.

உசிலமரம்—சீக்கிரி, துரிஞ்சில்.

உச்சாரம்—உன்னத்திலிங்குஇலையைக்காண்க.

உச்சி—குடுமி, சிக்கம், சுடிகை, சூடு, நவிரம், நனந்தலை.

உச்சிக்கொண்டை—சூழி, முச்சி.

உடல்—அங்கம், அவயவி, ஆகம், ஆதாரம், உடம்பு, உயிர்நிலை, உரு, உறுப்பு, கடம், களேபரம், காத்திரம், காயம், குரம்பை, சடம், சட்டகம், சரீரம், தனு, தாபரம், துவக்கு, தேகம், தேயம், படிவம், பிண்டம், புகல், புணர்வு, புதை, புரம், புற்கலம், பூட்சி, பூதியம், மூர்த்தம், மெய், யாக்கை, விக்கிரகம், வியர், அவ்வுருவத்தின் பெயர், சட்டகம், படிவம், மேனி, வடிவம்.

உடற்குறை—கவந்தம், மட்டை, முண்டம், ரூபம்.

உடற்மறுப்பு—அங்கிதம், செக்கை, வரி, வடு.

உடன்படல்—இசைதல், ஒட்டல், நேர்தல், வலித்தல்.

உடன்பிறந்தாள்—சகோதரி, பகினி.

உடுக்கல்—இறுக்கல், ஒற்றல், சுற்றல்.

உடும்பு—அண்டசம், கோதா, தடி, முசலி, முசலிகை.

உட்டணம்—அழல். அனலம், உருப்பம், உருமம், கருமம், கோரம், தகம், தாபம், வெப்பம், வெம்மை.

உட்டுளை—அரி, குழல், சுசிர், களை, சுசிரம், தூம்பு, நாடி, நாழி, நாளம், புழை, புரை, வேணு, வேய்.

உணவு—அசனம், ஆகாரம், இரை, உறை, உண்டி, ஊட்டி, ஓதனம், துப்பு, பதம், போசனம், வல்சி, அன்றியும், பேருணவின் பெயர், பிரப்பு, சிற்றுணவின் பெயர், அப்பவர்க்கத்தைக் காண்க.

உண்கலம்—கலம், தட்டம், தளிகை, தாலம், பாசனம், பாத்திரம்.

உண்டல்—புசித்தலைக் காண்க.

உண்டாக்கல்—காண்டல், சிட்டித்தல், சிருட்டித்தல், தோற்றுவித்தல், நியமித்தல், நிருமித்தல், படைத்தல், பயத்தல், பாரித்தல், விதித்தல்.

உண்டாதல்—அஞ்சிதம், சுரத்தல், நந்தல், படல், பூத்தல், விளைதல்.

உண்ணு—அண்ணம்.

உதடு—இதழ், துடி, பாலிகை, மூத்தம், அன்றியுமேலுதடு, ஓட்டம், கீழுதடு, அதரம்.

உதாரணம்—இதியாசம்,இலக்கியங்காட்டல், பிசிதம்.

உத்தரீயம் — உத்தராசங்கம், ஏகாசம், அன்றியுமேற்போர்வை, மீக்கோள்.

உத்திரட்டாதிநாள்—அறிவனுள், நீபம், பிற்கொழுங்கோல், மன்னன், முரசு.

உத்திரநாள்—கடையெழுஞ்சனி, கதிர்நாள், செங்கதிர்நாள், செங்கதிர்பிறந்தநாள், பங்குனி, பாற்குனி, மானேறு.

உத்திராடநாள் — ஆடி, ஆனி, கடைக்குளம், விசுவநாள்.

உபகரணம் — ஆயுதம், ஏது, கரணம், கருவி, துணைக்காரணம், துப்பு.

உபகாரம்—நலம், நன்மை, வேளாண்மை.

உபசாரம்-சன்மானம்,'நயம், முகமன்.

உபாத்தியாயன் — அய்யன், ஆசான், ஆசாரியன், ஆசிரியன், திர்த்தன், தேசிகன், பணிக்கன்.

உபாயம்—யோகம்.

உப்பமைப்போர்—அளவர், உமணர், கழியர்.

உப்பமைப்போர்பெண்கள் — அளத்தியர்.

உப்பளம்—அளக்கர், அளம், இருணம், உவர்க்களம், உவர்த்தரை, உவளகம், கழி.

உயர்ச்சி—உகப்பு, உச்சம், உத்தரம், உத்துங்கம், உந்தி, உந்துதல், உம்பர், உரை, உவணம், உவப்பு, உறை, உன்னதம், ஊக்கம், எழுமை, ஏந்தல், ஓக்க்கம், ஒழுகல், ஒழுக்கம், ஓங்கல், சிகரம், சேண், துங்கம், நிமிர்தல், நிவப்பு, நிவர்தல், நீள், பிறங்கல், புங்கம், புரை, பொங்கல், மிசை, மீ, மேக்கு, மேடு, மோடு, யோகம், வார்தல்.

உயிர் — அணு, ஆதன், ஆவி, ஆன்மா, இயமானன், உறவி, கூத்தன், சீவன், செந்து, சேதனன், பசு, பிராணன், புற்கலன், பூதம்.

உயிர்ப்பு—ஆவி, கொறுக்கை, சுவாசம், தும்மல், மூச்சு.

உயிர்வாழ்தல்—உய்தல், உய்தி, சீவனம், வாழ்தல்.

உரல்—உலூகலம், எருந்து, கறை, திட்டை.

உராய்தல்—உரிஞ்சல், உரோசல்.

உரித்து—ஆட்சி, ஆவணம், காணி, கெழுதகைமை, தகவு, தகுதி, தாயம்,பாங்கு, பால்.

உரிமை—ஆட்சி, இதம், உரித்து, ஒற்றுமை, காணி, கிழமை, குறிக்கோள், கெழுதகைமை, தகவு, தகுதி, பாங்கு, பால்.

உரிமையின்மை—அகிதம்.

உரியோர்—கிழவர்.

உருக்கு—எஃகு.

உரை — அத்தம், அருத்தம், சொற்பயன், பதம், பாழி, அதுநால்வகையாம், அகலவுரை, கருத்துரை, பதவுரை, பொழிப்புரை.

உரைகல்—கட்டளை, கட்டளைக்கல்.

உரைதல்—உராஞ்சல், உராய்தல், உராய்போதல், உரிஞ்சல், உரைசல், உரோசல், தேய்தல்.

உரைத்தல்—தேய்த்தல்.

உரையுரைத்தல் — பயனுரைத்தல், மெய்யுரைத்தல், விரித்துரைத்தல், அன்றியும்பதவுரையுரைத்தலின்பெயர், கண்ணழித்தல், பொழிப்புத்திரட்டல், பொழிப்புரைத்தல்.

உரோகணிநாள்—அயனுள், உருளி, உருள், உரோணி, ஊற்றுல், சகடம், சகடு, சதி, தேர், பண்டி, பார், விமானம், வையம்.

உலகின்பொது — தலம், நாடு, புவனம், பொழில்.

உலக்கை—உரோங்கல், தடி, முசலம்.

உலக்கைப்பாட்டு—வள்ளை.

உலாப்போதல்—சாரி, பவனி.

உலாவல் — அசைதல், இயங்கல், திரிதல், வழங்கல்.

உலைமூக்கு—குருகு, சிவை.

உலையாணிக்கோல்—சுட்டுக்கோல்.

உலோபன்—கிருபணன், பிசுனன்.

உல்லாசம்—அத்தவாளம், ஏகாசம், மீக்கோள், மேற்போர்வை, வடகம்.

உவகை—ஓகை, பிரியம், பிரீதி, மாராயம், முத்தம், மோதம்.

உவமை — இகல், இணை, ஈடு, உவமம், உறழ்வு, எதிர், ஒப்பு, கட்டளை, கிடை, சங்காசம், சதிரிசம், சமம், சமானம், சன்னிபம், சாயல், துணை, துல்லியம், நிகர், நிகாசம், நிபம், நேர், புரை, பொருவு, பொருவுதல், போல், மலை, மானம், மான்.

உவமையின்மை—அசமானம், அதுலம், தனிமை.

உவமையுருபு — அற்று, அனைய, அன்ன, ஆங்கு, இகல், இயைய, இன்ன, உறழ, என்ன, ஏய்ப்ப, ஒப்ப, கடுப்ப, கதழ்வு, கேழ், சன்னிபம், சேத்து, தூக்கு, நிகர, நேர, புரைய, பொருவ, போல, மான.

உவர்த்தரை—இருணம், கழிநிலம்.

உவர்த்தல் — இலவணம், உப்பு, பௌவம்.

உவர்நீர்—உரவுநீர், உறை.

உவ்விடம்—உம்பர், உவணை.

உழுந்து—மாடம்.

உழுபடைச்சால்—சீதை.

உளி—இடங்கம், கணிச்சி.

உளு—உசு.

உள்—அகடு, அகணி, அகம்,

உள்ளங்கை — அகங்கை, அங்கை, குடங்கை.

உள்ளமிகுதி—ஆட்சி, ஆண்மை, ஆள்வினை, உத்தியோகம், உரம், உரன், உற்சாகம், ஊக்கம், சால்பு, சான்றாண்மை, தாளாண்மை, யோகம்.

உள்ளான்—உள்ளல்.

உறவு—இகுளை, இனம், உறவி, ஒக்கல், கடும்பு, கயிளை, கிளை, குடும்பம், கூளி, கேண்மை, கேள், சுற்றம், தொடர்பு, நட்பு, நண்பு, நள்ளி, பந்தம், பரிசனம், பாசனம்.

உறவோர் — அடைந்தோர், இகுளை, இனத்தார், உரியோர், உற்றார், கிளைஞர், சார்ந்தோர், சிறந்தோர், சுற்றத்தார், சூழ்ந்தோர், தக்கார், தமர், நட்டோர், நள்ளியர், பரிசனம், பற்றினர், மேவினர், அன்றியுந்தந்தைவழிச்சுற்றம்,

தாயம், இவ்வழியுறவோர், ஞாதிகள், தாய்த்தார், தாயாதிகள், குடியிலிறந்தோர்பெயர், தென்புலத்தார், பிதிரர்.

உறி—சிக்கம், சிதர், சிமிலி, தூக்கு.

உறுதிச்சொல்—இடி, இடித்தல், கழறல், நெருங்கல்.

வேற்றுமை—அந்தரம், திரிபு, பங்கம், பின்னம், பேதம், மாற்றம், விகடம், விகற்பம், விகாரம், விகிர்தம், விபரீதம், விருபம், விரோதம், வில்லங்கம், வீற்று, வேறுபாடு.

ஐ

வைகாசிமாதம்—மாதவம், வைகாசம்.

வைகையாறு—வேகவதி.

வைக்கோல்—பலாலம், வழுது, வை.

வைசியர்—அயனூருவில்வந்தோர், இப்பர், இளங்கோக்கள், எட்டியர், சிவேபியர், செட்டியர், தருமக்கிழவர், தனாளர், தாணிகர், தேசிகர், தொன்றிகர், நாய்கர், பரதர், மன்னர்பின்னர், முத்தொழிலோர், வணிகர், வாணிகர், இவர்தொழிலாகமூவகையர், கோவைசியர், தனவைசியர், பூவைசியர்.

வைடூரியம்—வாலவாயசம்.

வைத்தியர் — ஆமாத்தியர், ஆயுள்வேதியர், ஆரியர், பண்டிதர், பிடகர், மருத்துவர்.

ஔ

வௌவால் — அஞ்சலிகை, ஆவாலம், துரிஞ்சில், வாவல்.

இரண்டாவது

பொருளகராதி முற்றிற்று.

மூன்றாவது

தொகையகராதி.

அருட்டொகை வகைவகுத் துலகனைத் ... ...து
மங்கையி லேந்திய தயையிற்கா... ... ... த்
திருட்டொகை துடைத்தெழும் பருதியைப்... ... ... போ
லெங்கணும் விளக்கிய வோரொன்பா... ... ... ன்
மருட்டொகை விலகெனப் பணிந்தேத் ... ...தி
வழக்கொடு புலமையோர் முன்னுறைத் ... ... த
பொருட்டொகை வகைப்பட விரித்துணர்த்தி ... ...ப்
புகலுறுந் தொகையக ராதியென் ... ... றே

அங்க

அகிற்கூட்டு, ரு—சந்தனம், கர்ப்பூரம், எரிகாசு, தேன், ஏலம்.

அக்கினி, ரு—இராகம், கோபம், காமம், சடம், தீபனம்.

அங்கம், ச—தேர், கரி, பரி, காலாள், இவைசதுரங்கமெனப்படும்.

அங்கம், ரு—திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம், இவைபஞ்சாங்கமெனப்படும்.

அங்கம், ய—மலை, யாறு, நாடு, ஊர், மாலை, பரி, கரி, முரசு, கொடி, செங்கோல், இவையரசர்க்குரிய தசாங்கம்.

அங்கயோகம், அ—இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, இவற்றுள், இயமம், கொல்லாமை, மெய்மைகூறல், கள்ளாமை, பிறர்பொருளிச்சியாமை, இந்திரியமடக்கல்,—நியமம், தவம், தூய்மை, தத்துவநூலோர்தல், மனமுவந்திருத்தல், தெய்வம்வழிபடல்,—ஆதனம், சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம், அவையாவன, சுவத்திகம், தொடைக்கு முழங்காற்கு நடுவே யிரண்டுள்ளங்காலையுஞ்செலுத்தி யிறுமாந்திருத்தல்,—கோமுகம், சகனப்பக்கத்தி விருகாற்பரட்டையுமாறவைத்தவ்விருகாற்பெருவிரலைக்கைப்பிடித்திருத்தல்,—பதுமம், இருதொடைமேலு மிரண்டுள்ளங்காலையுமாறித்தோன்றவைத்தல்,—வீரம், வலத்தொடையி லிடக்காற்பரட்டைச்சேர்த்தி யிறுமாப்புற்றிருத்தல்,—கேசரி, பீசத்தின்கீழ்ச்சீவனியிடத்துப் பரட்டைவைத்திட முழங்கையைமுழந்தாளில்வைத் தங்குலிவிரித்

து நாசியைப்பார்த்திருத்தல்,—பத்திரம், பீசத்தின்கீழ்ச்சிவனியிடத் திருகாற்பாட்டையும்வைத் தவ்விருபதத்தையுமிருகையாலிறுகப்பிடித் தசையாதிருத்தல்,—முத்தம், இடக்காற்பரட்டாற் சிவனியையமுத்தி வலக்காற்பரடப் பரட்டின்கீழுந்தவிருத்தல்,—மயூரம், முழங்கையிரண்டுமுந்திப் புறத்திலமுந்தப்புவியிற் கையூன்றிக்காணீட்டித் தலைநிமிர்ந்திருத்தல்,—சுகம், சுகமுந்திடமுமெவ்வாறிருக்கி னெய்துமோ வவ்வாறிருத்தல்,—பிராணாயாமம், பிராணவாயுவை இரேசகபூரககும்பகஞ்செய்தல், —பிரத்தியாகாரம், உபாதியைநீக்கியுண்ணோக்கல்,—தாரணை, கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி, இவற்றிலொன்றிற் சந்ததம், சிந்தைவைத்தல்,—தியானம், ஐம்புலமடக்கிச்சிவயோகஞ்சேர்தல்,—சமாதி, இந்திரியமுதலிய தத்துவசேட்டைகட் கேதுவா யாக்கையுணின்றவற்றோடுகூடினு மவற்றிற் பற்றின்றியிருக்குமான்மாவாகிய தன்னைத் தான்காண்டல்.

அச்சுவினிதேவர், ௨.

அரசச்சின்னம், ௨௰௧—முடி, குடை, கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யானை, கொடி, மதில், தோரணம், நீர்க்குடம், பூமாலை, சங்கு, கடல், மகரம், ஆமை, இணைக்கயல், சிங்கம், தீபம், இடபம், ஆசனம்.

அரசர், ௩—சேரன், சோழன், பாண்டியன்.

அரசர்க்குக்குழு, ௫—மந்திரியர், புரோகிதர், சேனாபதியர், தூதர், சாரணர்.

அரசர்க்குத்துணைவர், ௮—மந்திரியர், கருமாதிகாரர், சுற்றம், கடைகாப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், இவுளிமறவர், யானைவீரர்.

அரசர்க்குறுதிச்சுற்றம், ௫—நட்பாளர், அந்தணாளர், மடைத்தொழிலர், மருத்துவக்கலைஞர், நிமித்திகப்புலவர்.

அரசியல், ௬—படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்.

அரசியல், ௬—அறநிலையறம், மறநிலையறம், அறநிலைப்பொருள், மறநிலைப்பொருள், அறநிலையின்பம், மறநிலையின்பம், அவையாவன, தத்தம்வருணத்திற்பிறழாது நிலைபெறப் பாதுகாத்தலறநிலையறம்,—நிரைமீட்டெட்டலைகவென்று செஞ்சோற்றுக் கடன்கழியாதாரைத் தண்டித்துக் குறைவுறச்செய்தன் மறநிலையறம்,—நெறிவழிநின்று தந்தநிலையினான் முயன்றுபெறுபொருளறநிலைப்பொருள்,—பகைஞர்பொருளுந் திறைப்பொருளுஞ் சூதில் வெல்பொருளு மறநிலைப்பொருள்,—பருவமுங்குலமு மொழுக்கமுங் குணமு மொத்த கன்னிகையைத் திவெட்டிலலத் திருத்த லறநிலையின்பம்.—ஏறுதழுவியும் வில்விற்றொடுத்தவம்பிறைக்கமெய்து மிவ்வாறு மாறுடைநெறியின் மணத்தன் மறநிலையின்பம்.

அரண், ௪—மலை, காடு, மதில், கடல்.

அலங்காரம், ௩௰௫—தன்மை, உவமை, உருவகம், தீவகம், பின்வருநிலை, முன்னவிலக்கு, வேற்றுப்பொருள்வைப்பு, வேற்றுமை, விபாவனை, ஒட்டு, அதிசயம், தற்குறிப்பேற்றம், ஏது, நுட்பம், இலேசம், நிரனிறை, ஆர்வமொழி, சுவை, தன்மேம்பாட்டுரை, பரியாயம், சமாயுதம், உதாத்தம், அவநுதி, சிலேடை, விசேடம், ஒப்புமைக்கூட்டம், விரோதம், புகழ்நிலை, புகழாப்புகழ்ச்சி, நிதரிசனம், புணர்நிலை, பரிவருத்தனை, வாழ்த்து, சங்கிரணம், பாவிகம்.

அலங்காரம், ௱—உவமை, இயையின்மை, புகழ்பொருளுவமை, எதிர்நிலை, உருவகம், திரிபு, பலபடப்புனைவு, நினைப்பு, மயக்கம், ஐயம், ஒழிப்பு, தற்குறிப்பு, உயர்வுநவிற்சி, ஒப்புமைக்கூட்டம், விளக்கு, பின்வருவிளக்கு, தொடர்முழுதுவமை, எடுத்துக்காட்டுவமை, காட்சி, வேற்றுமை, உடனிகழ்ச்சி, இன்மைநவிற்சி, சுருங்கச்சொல்லல், கருத்துடையடை, கருத்துடையடைகொளி, பலபொருட்சொற்றொடர், புனைவிலிபுகழ்ச்சி, புனைவுளிவிளைவு, பிறிதினவிற்சி, வஞ்சப்புகழ்ச்சி, வஞ்சப்பழிப்பு, எதிர்மறை, முரண்விளைந்தழிவு, பிறிதாராய்ச்சி, காரணவாராய்ச்சி, கூடாமை, தொடர்பின்மை, தகுதியின்மை, தகுதி, வியப்பு, பெருமை, சிறுமை, ஒன்றற்கொன்றுதவி, சிறப்புநிலை, மற்றதற்காக்கல், காரணமாலை, ஒற்றைமணிமாலை, மாலைவிளக்கு, மேன்மேலுயர்ச்சி, நிரனிறை, முறையிற்படர்ச்சி, மாற்றுநிலை, ஒழித்துக்காட்டு, உறழ்ச்சி, கூட்டம், வினைமுதல்விளக்கு, எளிதின்முடிபு, விறல்கோள், தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறு, தொடர்நிலைச்செய்யுட்குறி, வேற்றுப்பொருள்வைப்பு, மலர்ச்சி, கற்றோர்நவிற்சி, உய்த்துணர்வு, பொய்த்தற்குறிப்பு, வனப்புநிலை, இன்பம், துன்பம், அகமலர்ச்சி, இகழ்ச்சி, வேண்டல், இலேசம், குறிநிலை, அரதனமாலை, பிறிதின்குணம்பெறல், தொல்லுருப்பெறல், பிறிதின்குணம்பெறாமை, தன்குணமிகை, மறைவு, பொதுமை, மறையாமை, சிறப்பு, இறை, நுட்பம், கரவுவெளிப்படுப்பு, வஞ்சநவிற்சி, குறிப்புநவிற்சி, வெளிப்படைநவிற்சி, யுத்தி, உலகவழக்குநவிற்சி, வல்லோர்நவிற்சி, மடங்குதனவிற்சி, தன்மைநவிற்சி, நிகழ்வினவிற்சி, வீறுகோள், மிகுதிநவிற்சி, பிரிநிலைநவிற்சி, விலக்கு, விதி, ஏது.

அவத்தை, ரு—சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்.

அளவு, ச—எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்—தெறித்தலோடைந்தெனவுங்கூறுப.

அளவை, அ — காட்சி, அனுமானம், உவமானம், ஆகமம், அருத்தாபத்தி, அபாவம், ஐதிகம், சம்பவம், அவையாவன, காணல்காட்சி,—புகையைக்கண்டு நெருப்புண்டெனலனுமானம்,—மரை பசுப்போலெனலுவமானம்,—பெரியோர்வாய்ச்சொலாகமம்,—பகலுண்ணான் பருத்திருப்பானென்புழி யிரவிலொளித்துண்பானெனவுணர்தலருத்தாபத்தி,— முன்னுமில்லை பின்னுமில்லை ஒன்றிலொன்றில்லையொருகாலத்துமில்லை யெனலபாவம்,—இம்மரத்திற்பேயுளதென்பதைதிகம், ஆயிரத்தினூறுண்டெனல் சம்பவம்.

அறத்துறப்பு, அ—ஐயப்படாமை, விருப்பின்மை, வெறுப்பின்மை, மயக்கமின்மை, பழியைநீக்கல், அழிந்தோரைநிறுத்தல், அறம்விளக்கல், பேரன்புடைமை.

அறம், உ—இல்லறம், துறவறம்.

அறம், ௩௰உ—ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்குண்டி, பசுவுக்குவாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டநல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்தல், அறவைப்பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறு

விடுத்தல், விலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம்.

அனுபந்தம், ௪—விடயம், சம்பந்தம், பிரயோசனம், அதிகாரி.

அன்னுவயவிலக்கணம், ௫—விசேடணம், விசேடியம், கருத்தா, கருமம், கிரியை.

ஆ

ஆச்சிரமம், ௪ — பிரமசாரி, இல்வாழ்வோன், வானப்பிரத்தன், சந்நியாசி, இவருட்பிரமசாரி, ஆசிரியனிடத்தோதிவிரதங்காத்து விவாகமின்றியிருப்போன்,—இல்வாழ்வோனில்லறத்தின்வழாதில்லாளோடுங்கூடி வாழ்வோன்,—வானப்பிரத்தன், இல்லந்துறந்தில்லாளோடாயினுந்தனித்தாயினும் வனத்திற்றவஞ்செய்வோன்,—சந்நியாசி முற்றத்துறந்தோன்.

ஆதாரம், ௬ — மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, இவற்றிற்கு முறையேயிடம், குதம், குய்யம், நாபி, இதயம், அடிநா, நெற்றி.

ஆயுதவகை, ௨—அத்திரம், சத்திரம், இவற்றுட்கைவிடுமாயுதமத்திரம், கைவிடாவாயுதஞ்சத்திரம்.

ஆன்மா, ௨—சீவான்மா, பரமான்மா, அவையாவன, சரீராவச்சின்னவான்மா, சீவான்மா, இதரபதார்த்தானவச்சின்னவான்மா, பரமான்மா.

இ

இசை, ௩ — மந்தரம், மத்திமம், தாரம்.

இசை, ௭—குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், இவற்றுண்மிடற்றுற்குரல், நாவினுற்றுத்தம், அண்ணத்தாற்கைக்கிளை, சிரத்தாலுழை, நெற்றியாலிளி, நெஞ்சால்விளரி, மூக்காற்றாரம், இங்ஙனந்தனித்தனிப்பிறக்கும், இவையே, யேழ்சுரமெனவும் வீணையிலேழ் நரம்பெனவும்படும், இவற்றிற்கோசையுவமை, மயில், இடபம், ஆடு, கொக்கு, குயில், குதிரை, யானை,—சுவையுவமை, பால், தேன், கிழான், நெய், ஏலம், வாழை, மாதுளங்கனி,— வாசனையுவமை, மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னுவிரை, புன்னை,—அக்கரம், ஆ அ, ஈ இ, ஊ உ, ஏ எ, ஐ இ, ஓ ஒ, ஔ உ, — மாத்திரை, நான்குகுரல், நான்குதுத்தம், இரண்டுகைக்கிளை, மூன்றுழை, நான்கிளி, மூன்றுவிளரி, இரண்டுதாரம்,— இவற்றாலெழுபாலைபிறக்கும், அவையாவன, குரலேகுரலாயிற்செம்பாலை,—துத்தமேகுரலாயிற்படுமலைப்பாலை, — கைக்கிளையேகுரலாயிற் செவ்வழிப்பாலை,—உழையே குரலாயினரும்பாலை,—இளியேகுரலாயிற்கொடிப்பாலை,—விளரியேகுரலாயின் விளரிப்பாலை,—தாரமேகுரலாயின்மேற் செம்பாலை,—இவற்றுட் செம்பாலைக்குக் கொடிப்பாலைவலிது, கொடிப்பாலைக்கு விளரிப்பாலையுமேற்செம்பாலையுவலிது, அன்றியுந்தாரத்துளுழையுமுழையுட் குரலுங்குரலுளிளியு மிளியுட்டுத்தமுந்துத்தத்துள்விளரியும் விளரியுட்கைக்கிளையும் பிறப்பதுதகுதி,—இவற்றிற்கிறைவர், விசுவாமித்திரன், சமதக்கினி, சந்திரன், சூரியன், கௌதமன், காசிபன், ஈசன், இவற்றிற்குயிர், ஈசன்.

இடம், ௩—தன்மை, முன்னிலை, படர்க்கை.

இதிகாசம், ௨ — பாரதம், இராமாயணம்.

இரதம், ௯ — சிங்காரம், வீரியம், பெருநகை, கருணை, இரௌத்திரம், குற்சை, சாந்தம், அற்புதம், பயம்.

இராகத்தகுதி, ௪ — இடம், செய்யுள், குணம், காலம், இவற்றுளிடம்பற்றியவிராகமைந்திணையிராகம், — செய்யுட்பற்றியவிராகத்துள், வெண்பாவிராகஞ் சங்கராபரணம், அகவலிராகந்தோடி, கலியிராகம், பந்துவராளி, கலித்துறையிராகம்பைரவி, தாழிசையிராகந்தோடி, விருத்தவிராகங் கலியாணி, காம்போதி, மத்தியமாவதிபலவும், உலாவிராகஞ்சௌராட்டிரம், தோடையவிராகஞ் சௌராட்டிரம், நாட்டை, மங்களராகம் மங்களகௌசிகம், தேவாரத்திராகம், பூபாளம், பிள்ளைக்கவிராகங் கேதாரகௌளம், பரணிராகங்கண்டாரவம், —குணம்பற்றியவிராகத்துள், இரக்கராகம், ஆகரி, கண்டாரவம், நீலாம்பரி, பியாகடம், புன்னாகவராளி, துக்கவிராகம், இரக்கராகங்களன்றி வராளியின்மேலாம், மகிழ்ச்சியிராகம், காம்போதி, சாவேரி, தன்னியாசி, யுத்தவிராகம், நாட்டை, —காலம்பற்றிய விராகத்துள், வசந்தகாலவிராகம், காம்போதி, அசாவேரி, தன்னியாசி, அன்றியுமாலையிராகங்கலியாணி, காபி, கன்னடம், காம்போதி, யாமராகம், ஆகரி, விடியலிராகம், இந்தோளம், இராமகலி, தேசாட்சரி, நாட்டை, பூபாளம், உச்சியிராகம், சாரங்கம், தேசாட்சரி, அன்றியும், ஆகரி, இந்தோளம், இராமகலி, சாரங்கம், பூபாளநீக்கிநின்றமற்றவையெக்காலத்தும் பொதுமைய.

இராகம், ௩௨ — பைரவி, தேவக்கிரியை, மேகவிரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, சிராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, தேசி, இலலிதை, தோடி, வசந்தம், இராமக்கிரியை, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தன்னியாசி, காம்போதி, கௌளி, நாட்டை, தேசாட்சரி, காந்தாரி, சாரங்கம், இவற்றுள், பைரவி, புருடவிராகம் பிராமணசாதி, இதின்மனைவிகள், தேவக்கிரியை, மேகவிரஞ்சி, குறிஞ்சி, அதிதேவதையீசன், — பூபாளம், புருடவிராகம், பிராமணசாதி, இதின்மனைவிகள், வேளாவளி, மலகரி, பௌளி, அதிதேவதைதிருமால், —சிராகம், புருடவிராகம், அரசசாதி, இதின்மனைவிகள், இந்தோளம், பல்லதி, சாவேரி, அதிதேவதைசரச்சுவதி, — படமஞ்சரி, புருடவிராகம், அரசசாதி, இதின்மனைவிகள், தேசி, இலலிதை, தோடி, அதிதேவதை; இலக்குமி, —வசந்தம், புருடவிராகம், வைசியசாதி, இதின்மனைகள், இராமக்கிரியை, வராளி, கைசிகம், அதிதேவதைசூரியன், —மாளவி, புருடவிராகம், வைசியசாதி, இதின்மனைவிகள், நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, அதிதேவதை, நாரதன், —பங்காளம், புருடவிராகம், சூத்திரசாதி, இதின்மனைவிகள், தன்னியாசி, காம்போதி, கௌளி, அதிதேவதைவிநாயகன், —நாட்டை, புருடவிராகம், சூத்திரசாதி, இதின் மனைவிகள், தேசாட்சரி, காந்தாரி, சாரங்கம், அதிதேவதைதும்புருவன், — இவையன்றிப் பலவகைப்படவழங்குமிராகம் பலவுளவவைகூறிற்பெருகும்.

இராசி, ௧௨ — மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், இவற்றுண் முன்னாறுமுத்தராயணராசி, பின்னாறுந் தக்கணா

யனராசி, அன்றியு முதன்மூன்றுங் கடைமூன்றுமேமறுமிராசி, இடையாறுமிறங்குமிராசி.

இருமை, உ—இம்மை, மறுமை

இலக்கணம், ரு — எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.

இலிங்கம், ரு—பிருதுவிலிங்கங்காஞ்சியில், அப்புலிங்கம் திருவானைக்காவில், தேயுலிங்கந் திருவண்ணாமலையில், வாயுலிங்கஞ் சிகாளத்தியில், ஆகாயலிங்கஞ் சிதம்பரத்தில், இவையே பஞ்சபூத வடிவங்களான பிரதானபஞ்சலிங்கம்.

இழிச்சொல், ச—குறளை, பொய், கடுஞ்சொல், பயனிலசொல்.

ஈ

ஈச்சுரன்குணம், அ—தனவயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பிலின்பமுடைமை, இவை சைவாகமத்துட் கூறப்பட்டன, அன்றியும், வரம்பின்ஞானம், வரம்பில்காட்சி, வரம்பிலின்பம், வரம்பிலாற்றல், நாமமின்மை, கோத்திரமின்மை. ஆயுவின்மை, இடையூறின்மை, என்பன ஆருகதராற்கூறப்பட்டன.

ஈச்சுரன் பிரபுத்துவ சாமர்த்தியகுணம், ௩—கர்த்தத்துவம், அகர்த்தத்துவம், அன்னியதாகர்த்தத்துவம்.

ஈச்சுரன்முகம், ரு — ஈசானம், தற்புருடம், அகோரம்,வாமம், சத்தியோசாதம், இவற்றுள், ஈசானமனைத்துமாளுதல்,தற்புருடங்காத்தல், அகோரமழித்தல், வாமம்விளக்கல், சத்தியோசாதந்தோற்றுவித்தல்.

ஈச்சுரன்முக்கியகுணம், ௬ — சருவஞ்ஞத்துவம், சருவேசத்துவம், சருவநியந்திருத்துவம், சருவாந்தரியாமித்துவம், சருவகர்ப்பிதத்துவம், சருவசத்தித்துவம், அன்றியும், தன்வயத்தனாதல், முதலிலனாதல், உடம்பிலனாதல், எல்லாநலமுமுளனாதல், எங்கும்வியாபகனாதல், எவற்றிற்குங் காரணனாதல்.

உ

உட்பகை, ௬ — காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்.

உண்டி, ச—உண்டல், தின்றல், நக்கல், பருகல், அவையாவன, சோறுமுதலியவுண்டல், கறிமுதலியதின்றல், தேன்முதலியநக்கல், நீர்முதலியபருகல்.

உபசாரம், ௰௬—தவிசளித்தல், கைகழுநீர்தரல், கால்கழுநீர்தரல், முக்குடிநீர்தரல், நீராட்டல், ஆடைசாத்தல், முப்புரிநூறால், தெய்வைபூசல், மலர்சாத்தல், மஞ்சளரிசிதூவல், நறும்புகைகாட்டல்,விளக்கிடல், கருப்பூரமேற்றல், அமுதமேந்தல், அடைகாய்தரல், மந்திரமலரா லருச்சித்தல்.

உபநிடதம், ௩௰௨ — சிருத்திரம், பிரகதாரண்ணியம், சுவேதாசுவதரம், கைவல்லியம், காலாக்கினி, கடம், வல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பரமாங்கிசம், பார்க்கரம், பிரமபிந்து, ஆருணி, அமிர்தபிந்து, பருவபஞ்சம், பிரமசாபாலம், தோசோபிந்து, வாசியாநீயம், போதாயநீயம், ஆசுவலாயநீயம், சாங்கியாயநீயம், வாசிராயநீயம், சௌனகியம், சிவசங்கற்பம், சிரவணம், பாராகம், கிம்புரோடியம், மாண்டூக்கம், முண்டிரம், மௌண்டிரம்.

உபாயம், ௪—சாமம், தானம், பேதம், தண்டம், அவையாவன, சமாதானத் தோடாயினும் பொருள்கொடுத்தா யினும் பிறரைப்பிரித்தாயினும்படை கொண்டாயினுங்காரியங்கொள்ளலி ந்நான்குமரசர்க்குரியனவாம்.

உயிர்வேதனை, ௰௨ — அனல், சீதம், அசனி, புனல், வாதம், ஆயுதம், விடம், மருந்து, பசி, தாகம், பிணி, முனி வருமை.

உருத்திரர், ௰௧—மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், காபாலி, சௌமியன்.

உரை, ௪—கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, அகலவுரை, அவையாவன, செய்யுட்கருத்துரைத்தலே கருத்துரை, சொற்றொறும் பதப்பயனுரைத்தலே பதவுரை, பொருட்டொகுத்துரைத்தலே பொழிப்புரை, இலக்கணமுமிலக்கியமு மெடுத்துக் காட்டிப் பொருள்விரித் துரைத்தலே யகலவுரை.

உரையிலக்கணம், ௫ — பதம், பதப் பொருள், வாக்கியம், வினா, விடை.

உலகம், ௩ — பூமி, அந்தரம், சுவர்க்கம், அன்றியும், பூலோகம், பரலோகம், பாதாளலோகமென்பாருமுளர்.

உலகம், ௰௪ — மேலுலகேழுங் கீழுலகேழும், மேலுலகாவன, பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம்—கீழுலகாவன அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம்.

உலோகம், ௫—பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், இவையே பஞ்சலோகம்.

உலோகம், ௭ — செம்பொன், வெண்பொன், கரும்பொன், செம்பு, ஈயம், வெண்கலம், தரா.

உவர்ப்பு, ௯—ஆசியம், இரதி, அரதி, சோகம், பயம், குர்ச்சை, இவைமுறையே, சிரிப்பு, ஆசை, வெறுப்பு, சோர்வு, அச்சம், அருவருப்பு.

ஊ

ஊறு, ௮—வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, திண்மை, நொய்மை, சீர்மை, சர்ச்சரை, இவையே தொடப்படும் பொருட்கெண்குணம்.

ஊறுபாடு, ௪—எறிதல், குத்தல், வெட்டல், எய்தல்.

எ

எச்சம், ௨—பெயரெச்சம், வினையெச்சம்.

எச்சம், ௮—குறள், கூன், ஊமை, செவிடு, குருடு, முடம், உறுப்புமயக்கம், உறுப்பில்பிண்டம்,இவையெண்வகையுடற்குறை.

எழுத்துத்தானம், ௫— பாலன், குமரன், அரசன், விருத்தன், மரணம், இவற்றிற்குமுறையே யெழுத்துக்களாவன, அஆ, இஈஐ, உஊஔ, எஏ, ஒஓ பாட்டுடைத்தலைவன், பேரெழுத்தை ப்பாலதானமாகக்கொண்டெண்ணப் படும், இவற்றுண் முன்னையமூன்று நன்மை பயக்கும், பின்னையவிரண்டுந் தீமைபயக்கும்.

ஐ

ஐச்சுவரியம், ௮—இராசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை.

ஐம்புலனுகர்ச்சியினிறப்பன, ௫ — சுவையாலிறப்பதுமீன், நாற்றத்தால் வண்டு, பரிசத்தால்யானை, ஓசையாலசுணம், ஒளியால்விட்டில்.

ஒ

ஒருமை, ௧ — இறையுணர்வு.

க

கடல், ௭ — உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன்.

கடுகம், ௩ — சுக்கு, திப்பிலி, மிளகு, இவையே திரிகடுகெனப்படும்.

கடைப்படுதானம், ௭ — ஆர்வம், புகழ், அச்சம், கைம்மாறு, காரணம், கண்ணோட்டம், கடப்பாடு.

கணக்குவகை, ௪ — தொகை, பிரிவு, பெருக்கு, கழிவு.

கணம், ௮ — நிலம், நீர், மதி, இயமானன், சூரியன், தீ, வாயு, ஆகாயம், இவற்றுண் முன்னர் நான்கு நன்று, பின்னர் நான்குங்கலகம், நிரை நிரை நிரை நிலக்கணம், நேர் நிரை நிரை நீர்க்கணம், நிரைநேர் நேர்மதிக்கணம், நேர் நேர்நேர் உயிர்க்கணம், நேர் நிரைநேர் சூரியகணம், நிரைநேர் நிரை தீக்கணம், நேர்நேர் நிரை வாயுக்கணம், நிரை நிரைநேர் ஆகாயக்கணம்.

கணம், ௧௮ — அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசிகள், போகபூமியர்.

கணிதம், ௮ — சங்கலிதம், விபகலிதம், குணனம், பாகாரம், வர்க்கம், வர்க்கமூலம், கனம், கனமூலம், இவற்றுள், சங்கலிதம் கூட்டல், — விபகலிதம் கழித்தல், — குணனம் பெருக்கல், — பாகாரம் பங்கிடல், — வர்க்கம் சமமாகிய விரொண்ணின் பெருக்கம், அஃதாவது நிலத்தைச் சமமாக நாற்கோணஞ்செய்தல், — வர்க்கமூலம் அவ்வர்க்கத்தொகையினின்றதன் மூலமாகிய வரம்பறிதல், — கனம் சமமாகிய மூவெண்ணின் பெருக்கம், அஃதாவது, குழியைச் சமமாகப் பன்னிருகோணப்படுத்தல், - கனமூலம் அக்கனத்தொகையினின்றதன் மூலமாகிய வொருமூலையறிதல்.

கண்டம், ௯ — கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரோபதம், தென்னிரோபதம், வடபரதம், தென்பரதம், மத்திமகண்டம், இவையே நவகண்டம்.

கதி, ௪ — தேவகதி, மக்கட்கதி, விலங்கின்கதி, நரககதி.

கந்தம், ௨ — நற்கந்தம், துர்க்கந்தம்.

கரணம், ௪ — மனம், புத்தி, அகங்காரம், சித்தம்.

கரணம், ௧௧ — பவ, பாலவ, கௌலவ, தைதுலை, கரசை, வனசை, பத்திரவா, சகுனி, சதுர்ப்பாத,நாகவா, கிமிஸ்துக்கின.

கருமபூமிக்குரிமை, ௬ — வரைவு, தொழில், வித்தை, வாணிகம், உழவு, சிற்பம்.

கருமேந்திரியம், ௫ — வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்.

கருவுளமைப்பு, ௬ — பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு.

கலைஞானம், ௬௪ — அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாத்திரம், சோதிடசாத்திரம், தருமசாத்திரம்,

யோகசாத்திரம், மந்திரசாத்திரம், சகுனசாத்திரம், சிற்பசாத்திரம், வைத்தியசாத்திரம், உருவசாத்திரம், இதியாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அந்திரபரீட்சை, கனகபரீட்சை, இரதபரீட்சை, கசபரீட்சை, அசுவபரீட்சை, இரத்தினபரீட்சை, பூமிபரீட்சை, சங்கிராமவிலக்கணம், மல்லயுத்தம், ஆகருடணம், உச்சாடனம், வித்துவேடணம், மதனசாத்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தருவவாதம், பைபீலவாதம், கவுத்துகவாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம், அதிரிசயம், இந்திரசாலம், மகேந்திரசாலம், அக்கினித்தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கனனத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப்பிரயோகம்.

கவி, ௪—ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், இவற்றுள், பொருளடிபாவணிமுதலிய கொடுத்துமற்றொருவன் பாடுகவென்றவுடனே பாடுவோனாசுகவி,—பொருட்செல்வம், சொற்செல்வம், தொடை, தொடைவிகற்பஞ்செறியவுருவகமுதலிய வலங்காரந்தோடின்னோசைத்தா யமுதமுறப் பாடுவோன் மதுரகவி,—மாலைமாற்று, சுழிகுளம், ஏகபாதம், சக்கரம், எழுகூற்றிருக்கை, காதைகரப்பு, கரந்துறை, தூசங்கொளல், வாவனாற்று, பாதமயக்கு, பாவின்புணர்ப்பு, கூடசதுக்கம், கோமூத்திரி, ஓரெழுத்தினம், ஒற்றெழுத்தந்நீர்ந்த வொருபொருட்பாட்டு, சித்திரப்பா, விசித்திரப்பா, வினவுத்தரம், சருப்பதோபத்திரம், எழுத்துவருத்தன மிவைமுதலிய மிறைக்கவிதெரிந்து பாடுவோன், சித்திரக்கவி,—மும்மணிக்கோவை, பன்மணிமாலை, மறம், கலிவெண்பா, தசாங்கம், மடலூர்தல், கிரீடை,* இயல், இசை, கூத்து, பாசண்டத்துறை, இவைமுதலிய விரித்துப்பாடுவோன் வித்தாரக்கவி.

கன்னிகை, ௫—அகலியை, துரோபதை, சீதை, தாரை, மண்டோதரி.

கா

காதலர், ௩—புருடன், தோழன், மகன்.

காலம், ௩—இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.

காலம், ௬—பருவத்தைக்காண்க.

கி

கிரகம், ௯—ஆதித்தன், சோமன், அங்காரகன், புதன், பிரகற்பதி, சுக்கிரன், சனி, இராகு, கேது, இவையேநவக்கிரகங்களெனப்படும்.

கு

குணம், ௩—சத்துவம், இரசசு, தமசு, அவையாவன, ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறியடக்கலென வெட்டுஞ்சத்துவம்,—மனவூக்கம், ஞானம், வீரம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வியென வெட்டுமிரசசு,—பேருண்டி, நெடுந்துயில், சோம்பு, நீதிவழு, ஒழுக்கவழு, வஞ்சம், மறதி, பொய், கோபம், காமம், கொலை, இவைதமசு.

குணம், ௪—ஆடூக்குணம், அறிவு, நிறை,

ஓர்ப்பு, கடைப்பிடி,—மகடூஉக்குணம், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு.

குரவர், ரு—அரசன், உபாத்தியாயன், தந்தை, தேசிகன், மூத்தோன்.

குற்றம், ௩—காமம், வெகுளி, மயக்கம்.

குற்றம், ரு—கொட்டாவி, நெட்டை, குறுகுறுப்பு, கூன்கிடை, நட்டுவிழல்.

குற்றம், அ—ஞானவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயு, நாமம், கோத்திரம், அந்தராயம்.

கூ

கூத்துவகை, உ—தேசிகம், மார்க்கம்.

கே

கேள்வி, ச—அறம், பொருள், இன்பம், வீடு, இந்நான்குங்கேட்டல்.

கேள்வி, ரு—அறம், பொருள், இன்பம், வீடு, இந்நாற்கேள்வியோடிவற்றின்வழிநிற்றல்.

கை

கைத்தொழில், ரு—எண்ணல், எழுதல், இலைகிள்ளல், பூத்தொடுத்தல், யாழ்வாசித்தல்.

கோ

கோசம், ரு—அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், அவையாவன,உடல் அன்னமயகோசம், கருமேந்திரியமும் பிராணனும் பிராணமயகோசம், கருமேந்திரியமுமனமு மனோமயகோசம், ஞானேந்திரியமும் புத்தியும் விஞ்ஞானமயகோசம், அவித்தையானந்தமயகோசம்.

கௌ

கௌடம், ரு—தந்துகௌடம், காணகுப்சம், சாரசுவதம், உற்கலம், மைதிலை.

கௌவியம், ரு—கோசலம், கோமயம், பால், தயிர், நெய்.

ச

சக்கரவர்த்திகள், ௬—அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுத்சன், புரூரவன், கார்த்தவீரியன், இவர்களற்றொருவினைப்பவனியாறு, தரணியாண்டோர்.

சதுரங்கம்—அங்கங்காணக.

சத்தம், ரு—தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி,இவையேசத்தத்துக்கைந்துகாரணம்.

சத்தி, ௩—இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, இவற்றுளிச்சாசத்தியுயிர்க்கருணைசெய், ஞானசத்தி, கருமங்களையறிந்தூட்டல், கிரியாசத்தி, உலகங்களாக்கல்.

சத்தி, ரு—சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, அவையாவன, உயிர்க்கொளியாகநிற்பது சிற்சத்தி,—பிராணன்முதலிய வாயுவாகநிற்பது பராசத்தி,—பஞ்சபூதமாநிற்பதிச்சாசத்தி,—ஐம்பொறியுணர்ச்சியாகநிற்பதுஞானசத்தி,—மற்றைவினைத்துணையாகநிற்பதுகிரியாசத்தி.

சமயம், ௬—வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம், அன்றியும் புறச்சமயமாவன, ௬, உலோகாயிதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம்,

சயனம், ௫—இலவம்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிர், அன்னத்தூவி, இவற்றாற்செய்யப்பட்டவைவகை மெத்தை, இவையேபஞ்சசயனம்.

சா

சாதி, ௪—ஆந்திரம், கன்னடம், திராவிடம், மகராட்டிரம்.

சாத்திரம், ௩—சாங்கியம், பாதஞ்சலியம், வேதாந்தம், இவைமுறையேகபிலர், பதஞ்சலி, வியாசரிம்மூவராற்கூறப்பட்டன, இவற்றையத்தியான்மீகநூலென்ப.

சாத்திரம், ௬—வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூருவமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை.

சாந்துவகை, ௪—பீதம், கலவை, வட்டிகை, புவி.

சி

சித்தர், ௯—சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அநாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர்.

சித்தி, ௮—அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், அவையாவன ஆன்மாப்போலாதலணிமா,—மகத்துவமாதலேமகிமா,—தன்னுடற்கண்டிப்பின்றாய்க் கண்டிப்புள்ளவற்றையுருவவல்லவனாதல் கரிமா,—இலகுத்துவமாதலேயிலகிமா,—வேண்டுவனவடைதலேபிராத்தி,—நிறையுளனாதலேபிராகாமியம்,—ஆட்சியுளனாதலேயீசத்துவம்,—எல்லாந்தன்வசமாக்கவல்லனாதலேவசித்துவம்.

சிரஞ்சீவியர், ௭—அசுவத்தாமன், மாபலி, வியாசன், அநுமான், விபீடணன், கிருபாசாரியன், பரசுராமன்.

சிவதத்துவம், ௫—சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம், அவையாவன, ஞானமேறிக் கிரியைகுறைந்தது சுத்தவித்தை,—ஞானங்குன்றிக் கிரியையுயர்ந்ததீச்சுரம்,—ஞானங்கிரியையொத்தது சாதாக்கியம்,—கிரியைநாடல் சத்தி,—ஞானம்மொன்றல் சிவம்.

சிவபூசையியல்பு, ௪—சரியை, கிரியை, யோகம், ஞானம்.

சிவாகமம், ௨௰௮—காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிரபேதகம், விசயம், நிசுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானசருவோத்தம், பாரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம்.

சிற்பத்தொழிற்குறுப்பு, ௰—கல், உலோகம், செங்கல், மரம், மண், சுதை, தந்தம், வண்ணம், கண்டசருக்கரை, மெழுகு.

சிற்பநூல், ௩௰௨—விச்சுவதருமம், விச்சுவேசம், விச்சுவசாரம், விருத்தம், தாவட்டம், நளம், மயம், அனுமான், பானு, கற்பாரியம், சிருட்டம், மானசாரம், வத்துவித்தியாபதி, பாராசரியம், அரிடிகம், சயித்தகம், வாத்துபோதம், வித்தாரம், இந்திரம், வச்சிரம், சவுமம், விச்சுவகாசிபம், மகதந்திரம், விசாலம், சித்திரம், காபிலகாலயூபம், நாமசங்கிதை, சாத்திகம், விச்சுவபோதம், ஆதிசாரம், வெகுச்சுருதம், மானபேதம்.

சீ

சீவதேகம், ௩—தூலம், சூக்குமம், காரணம்.

சீவாவத்தை, ௩—சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி.

சு

சுடர், உ—சூரியன், சந்திரன்.

சுடர், ௩ — சந்திரன், சூரியன், அக்கினி.

சுபம், ௮—மங்கலங்காண்க.

சுப்பிரமணியர்பிரதானத்தலம், ௬—திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுகள், சோலைமலை.

சுரம், ௭—ச, ரி, க, ம, ப, த, நி, அன்றியுமேழிசைகாண்க.

சுவை, ௬—கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு.

சூ

சூதகம், ௫—சனனசூசம், மரணசூசம், சண்டாளநீரிற்றோய்தல், சுராபானம்பண்ணல், பொய்கூறல்.

சூரியர், ௰௨—தாத்துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவச்சுவான், பூடன், சவித்திரு, துவட்டன், இப்பெயர் சித்திரைமாதமேடவிராசிமுதலொவ்வொருமாதத் தொவ்வோரிராசியிற்புகுந்து சூரியனுக்குமுறையேசெல்லுமென்பர், இவரே துவாதசாதித்தர்.

சூரியர்சந்திரர்முதலியவீதி, ௩—மேடவீதி, இடபவீதி, மிதுனவீதி, அவைதாம், இடபம், சிங்கம்,மிதுனம், கடகம், நான்குமேடவீதி,—மீனம், மேடம், கன்னி, துலாம், நான்கு மிடபவீதி,—தனுசு, மகரம், கும்பம், விருச்சிகம், நான்கு மிதுனவீதி.

சே

சேனைத்தொகை, ௰ — பதாதி, சே
முகம், குமுதம், கணகம், வாகினி, பி
ரளயம், சமுத்திரம், சங்கம், அநிகம்
அக்கோணி, அவையாவன, யானை ௧
தேர் ௧, குதிரை ௩, காலாள் ௫, இ
வைகூடியது பதாதி, பதாதி மும்மடி
கொண்டதுசேனாமுகம், சேனாமுகமு
ம்மடி குமுதம், குமுதமும்மடி கண
கம், கணகமும்மடி வாகினி, வாகினி
மும்மடி பிரளயம், பிரளயமும்மடி ச
முத்திரம், சமுத்திரமும்மடி சங்கம்
சங்கமும்மடி யநிகம், அநிகமும்மடி
அக்கோணி.

சை

சைவம், ௰௬— ஊர்த்தசைவம், அநா
திசைவம், ஆதிசைவம், மகாசைவம்
பேதசைவம், அபேதசைவம், அந்தர
சைவம், குணசைவம், நிற்குணசைவ
ம், அத்துவாசைவம், யோகசைவம்
ஞானசைவம், அணுச்சைவம், கிரியா
சைவம், நாலுபாதச்சைவம்,சுத்தசை
வம்.

சொ

சொல், ௪—பெயர், வினை, இடை, உரி.

த

தத்துவம், ௯௰௬ — ஆன்மதத்துவம் உ௰௪, நாடி ௰, அவத்தை ௫, மலம் ௩, குணம் ௩, மண்டலம் ௩, பிணி ௩, விகாரம் ௮, ஆதாரம் ௬, தாது ௭, வாயு ௰, கோசம் ௫, வாயில் ௯, இவற்றுளான்மதத்துவமாவன, பூதம் ௫, புலன் ௫, ஞானேந்திரியம் ௫, கருமேந்திரியம் ௫, கரணம் ௪, இவைதத்தம்வரியிற்காண்க.

தந்தையர், ௫ — பிறப்பித்தோன், கற்

பித்தோன், மணமுடிப்பித்தோன், அன்னந்தந்தோன், ஆபத்துக்குதவினோன்.

தமிழ், ௩—இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.

தமிழ்நாடு, ௰௩— செந்தமிழ்நாடொன்று, இதற்கெல்லை, கருவூரின் கிழக்கு, மருவூரின்மேற்கு, வைகையாற்றின்றெற்கு மருதயாற்றின்வடக்கு, இதனைச்சூழ்ந்த கொடுந்தமிழ்நாடு ௰௨, தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, பன்றி, அருவா, அருவா வடதலை, சீதம், மலாடு, புனநாடு.

தயாவிருத்தி, ௰௪—களாபடனம், வியாதாகாரம், நிற்கததண்டனம், சந்தேகவாரணம், அன்னியகுணசகனம், பரதிருதூனயோகம், பாரார்த்ததேவப்பிரார்த்திதம், அவையாவன முறையே, கல்விபயிற்றல், துயர்தீர்த்தல், தண்டத்தினீக்கல், ஐயந்தேற்றல், பிறர்குணத்தழுக்காறின்றிப் பொறுத்தல், பிறராற் செய்யப்படுந் தீமைமறந்து நன்றிநினைத்தல், பிறர்க்குவேண்டித் தெய்வம்வழிபடல், இவையுயிர்க்கேழுபகாரம், அன்றியுஞ் சத்தாங்கோபகாரம், அன்னம், பானம், அம்பரம், மந்திரம், தாசபாலனம், காராமயத் திரிதயமோசனம், சவச்சேமம், அவையே, உணவு, பானம், உடை, இடம், அடிமைகாத்தல், சிறைநோய்மூன்றுந் தீர்த்தல், பிணமடக்கல், இவையுடற்கேழுபகாரம்.

தயாவிருத்தி, அ—பிறர்க்குப்பொருள் வரவையுவத்தல், பிறர்செல்வம்பொறுத்தல், பிறர்கருமத்திற்குடன்படல், தீமைக்கஞ்சல், பிறர்கரும முடிக்க விழைதல், பிறரையந்தீர்த்தல், நன்மைகடைப்பிடித்தல், பிறர்துயர்க்கிரங்கல்.

தரு, ரு—அரிச்சந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம்.

தருமநூல், ௰அ—மநு, அத்திரி, ஔரிதம், விட்டுணு, யாஞ்ஞவற்கியம், உசனம், ஆங்கிரசம், யமம், ஆபத்தம்பம், சமவர்த்தம், காத்தியாயனம், பிரகற்பதி, பாராசரம், வியாசம், சங்கலிதம், தக்கம், கௌதமம், சாதான்மம், வசிட்டம், இவற்றுட் சங்கலிதம் பொது, இவற்றுள், கிருதயுகத்தில், மநுமிருதியும், திரேதாயுகத்திற் கௌதமமிருதியும், துவாபரயுகத்திற்சங்கலிதமிருதியும், கலியுகத்திற் பாராசரமிருதியுமுக்கியமாயிருக்கும்.

தா

தாது, எ—இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல்.

தாயர், ரு—பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய், அன்றியுமரசன்றேவி, குருவின்றேவி, அண்ணன்றேவி, தன்றேவியையீன்றாள், தன்னையீன்றாள்.

தாரணை, கூ—நாமதாரணை, வச்சிரதாரணை, மாயாதாரணை, சித்திரதாரணை, செய்யுட்டாரணை, நிறைவு குறைவாகிய வெண்பொருட்டாரணை, சத்ததாரணை, வத்துத்தாரணை, சதுரங்கதாரணை.

தாளம், ரு — சச்சற்புடம், சாசற்புடம், சட்பிதாபுத்திரிகம், சம்பத்துவேட்டம், உற்கடிதம், இவற்றுட் சச்சற்புடமாவது, குரு உ, இலகு க, புலுதம் க, ஊ|ஊ, ஆகமாத்திரை அ, இஃதீசன் சத்தியோசாத முகத்திற்பிறந்தது, பிரமசாதி,—சாசற்புடமாவது, குரு க, இலகு உ, குரு க, ஊ||ஊ, ஆகமாத்திரை கூ, இஃதீசன்வாமமுகத்தி

ற்பிறந்தது அரசசாதி,— சட்பிதாபுத்திரிகமாவது, புலுதம் ௧, இலகு ௧, குரு ௨, இலகு ௧, புலுதம், ௧, ஒ|ஒஒ|ஒ, ஆகமாத்திரை ௰௨, இஃதீசனகோரமுகத்திற்பிறந்தது, வைசியசாதி,— சம்பத்துவேட்டமாவது, புலுதம் ௧, குரு ௩, புலுதம், ௧, ஒ, ஒஒஒ, ஒ, ஆகமாத்திரை ௰௨, இஃதீசன்றற்புருடமுகத்திற் பிறந்தது, சூத்திரசாதி,—உற்கடிதமாவது, குரு, ௩, ஒஒஒ, ஆகமாத்திரை ௬, இஃதீசானமுகத்திற் பிறந்தது, சங்கிரமசாதி.

தாளம், ௭—துருவம், மட்டியம், உருபகம், சம்பை,திரிபுடை, அடதாளம், ஏகதாளம், இவற்றுள், துருவத்திற்கு, இலகு ௧, குரு ௧, துரிதம் ௧, | ஒ○,இதற்குச்சுரம், சரிகம, கரிசரி கரிசரிகம,—மட்டியத்திற்கு, இலகு ௧, துரிதம் ௧, இலகு ௧, |○|, இதற்குச்சுரம், சரிகரி, சரி, சரிகம,—உருபகத்திற்கு, இலகு ௧, துரிதம் ௧, |○, இதற்குச்சுரம், சரி, சரிகம,—சம்பைக்கு, இலகு ௧, அநுதுரிதம் ௧, துரிதம் ௧, |, ◡○, இதற்குச்சுரம், ச, ரிக, சரிசரி, கமா,—திரிபுடைக்கு, துரிதம் ௩, அநுதுரிதம் ௧, ○○○◡, இதற்குச்சுரம், கரிகசரிகம,— அடதாளத்திற்கு, இலகு ௧, துரிதம் ௨, இலகு ௧, |○○| இதற்குச்சுரம், சரிகா, சாரிகா, மா, மா, — ஏகதாளத்திற்கு இலகு ௧, |, இதற்குச்சுரம், ச்ரிகம,—சம்பைக்குப் பிர்மசாதி தவிர நான்குசாதியுமுள திரிபுடைக்கு மூன்று விராமமுமோரநுதுரிதமுமாறுலொரேசாதி, இலகுவிருந்தா லைந்து சாதியுமுள, மற்றையைந்து தாளங்கட்கு மைந்து சாதியுமுள, அவற்றை யவ்வவசாதியேகதாளலகு, அக்கரங்களாலறியுமாறு,பிரமசாதியிலகுவிற்கு நான்கக்கர காலம், அரசசாதியிலகுவிற்கு மூன்றக்கரகாலம், ஆறக்கரகாலமுமென்ப, வைசியசாதி யிலகுவிற் கேழக்கரகாலம், சூத்திரசாதியிலகுவிற் கைந்தக்கரகாலம், சங்கிரமசாதியிலகுவிற் கொன்பதக்கரகாலம், எச்சாதியினு மநுதுரிதமோ ரக்கரகாலமுந் துரிதமிரண்டக்கரகாலமுமாம்.

தாளம், ௯—அரிதாளம், அருமதாளம், சமதாளம், சயதாளம், சித்திரதாளம், துருவதாளம், நிவிர்ததாளம், படிமதாளம், விடதாளம், இவையே நவசந்திதாளம்.

தாளப்பிராணம், ௰ — காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம், சாதி, கலை, இலயை, யதி,பிரததாரம்,இவையே தாளதசப்பிராணமென்ப, இவற்றுட்காலப்பிரமாணம், ௰, அவையாவன, கணம், இலவம், காட்டை, நிமிடம், துடி, துரிதம், இலகு, குரு, புலுதம், காகபதம், இவற்றுட் கணம், தாமரையிதழ் நூறடுக்கி யதிலோரிதழி லூசிசெலுத்துங்காலம்,— கணமெட்டுக்கொண்ட திலவம், — இலவமெட்டுக்கொண்டது காட்டை,— காட்டையெட்டுக்கொண்டது நிமிடம்,—நிமிடமெட்டுக்கொண்டது துடி,—துடியிரண்டுகொண்டது துரிதம்,—துரிதமிரண்டுகொண்டதிலகு, — இலகிரண்டு கொண்டது குரு,—இலகு மூன்றுகொண்டது புலுதம்,—குருவிரண்டுகொண்டது காகபதம்,—மார்க்கம்-௬, தக்கணம், வார்த்திகம், சித்திரம், சித்திரதரம், அர்த்தசித்திரம், அதிசித்திரம், இவற்றுள், எட்டுமாத்திரை யோர்கலையாகக்கொண்டது தக்கணம்,— நான்குமாத்திரை யோர்கலையாகக்கொண்டது வார்த்திகம்,—இரண்டுமாத்திரை யோர்கலையாகக்கொண்டது சித்திர

ம், — ஒருமாத்திரை யோர்களையாக க்கொண்டது சித்திரதரம், — அரை மாத்திரை யோர்களையாகக்கொண்டது அர்த்தசித்திரம்,—கான்மாத்திரை யோர்களையாகக்கொண்ட ததிசித்திரம், — நொடியளவுமாத்திரை,—கிரியை ௨, மார்க்கம், தேசிகம், இவற்றுண் மார்க்கம் ௮, இவற்றுணி சத்தம் ௪, சசத்தம் ௪, நிசத்தமாவது ஆவாபம், நிட்கிராமம், விட்சேபம், பிரவேசம்,—சசத்தமாவது துருவம், சம்மியம், தாளம், சன்னிபாதம்,-தேசிகம் ௮, துருவகம், சர்ப்பிணி, கிருடியை, பதுமினி, விசர்ச்சிதை, விட்சிப்த்தம், பதாகை, பதிதம், இவற்றினிலக்கியங்களை நூலானுணர்க,—அங்கம் ௬, அவையாவன, ◡ ○ | ௨ ௩ +, இவைமுறையே பிறை, மதி, கணை, வில், பாம்பு, புள்ளடி, முறையேயிவற்றின்பெயர், அநுதுரிதம், துரிதம், இலகு,குரு, புலுதம், காகபதம், இவற்றினுற்பத்திகளும், பரியாயநாமங்களும், வண்ணங்களும், அதிதேவதைகளும்,மாத்திரைகளும், அத்தாங்குலப் பிரமாணங்களும், காதைப் பிரமாணங்களும், நூலானுணர்க,—கிரகம், ௪, அதீதம், அநாகதம், சமம், விடமம், இவற்றுட் குரன்முன்னுந் தாளம்பின்னும் வருவததீதம்,—தாளமுன்னுங்குரல்பின்னும்வருவ தநாகதம்,—குரலுந்தாளமுமொத்துவரிற் சமம்,—குரலுந்தாளமுமுன்னும் பின்னுங்கலந்து வருவதுவிடமம், சாதி, ௫, சதுரசிரம், திரசிரம் மிசிரம், கண்டம், சங்கீரணம், இவைமுறையே, பிரமவரச வைசிய சூத்திர சங்கிரமம், இவற்றை முற்கூறியவிலகு, அக்கர காலங்களாலறிவது,—களை, ௩, ஏககளை, துவிகளை, சதுர்க்களை, இவற்றுளக்கரகாலமாயுங் கிரியையோடும் வருவது ஏககளை,—இதனையிரட்டித்துக் கிரியை யோடுவருவது துவிகளை,—இதனையிரட்டித்துக்கிரியையோடுவருவது சதுர்க்களை,- இலயம் ௩, விளம்பம், மத்திமம், துரிதம், இவற்றுளக்கரகாலமாய்க் கிரியையோடு வருவது விளம்பம்,—இதனையிரட்டித்துக் கிரியையோடு வருவது மத்திமம்,-இதனையிரட்டித்துக்கிரியையோடு வருவது துரிதம்,—யதி ௬, சமம், விடமம், மிருதங்கம், வேதமத்தியம், கோபுச்சம், சுரோதோவகம், இவற்றுள், நெட்டங்கமாயினுங் குற்றங்கமாயினுமொரோவிதமாய் வருவது சமயதி, ◡◡, | |,—எல்லாவங்கமுங்கிரமமின்றிக் கலந்துவருவது விடமயதி, ௨◡○,—முதலிலுங் கடையிலுங் குற்றங்கமுமிடையி னெட்டங்கமும்வருவதுமிருதங்கயதி,◡○௨○◡,-முதலிலுங்கடையிலு நெட்டங்கமுமிடையிற் குற்றங்கமும்வருவது வேதமத்தியயதி, |◡|,—முதலிலேநெட்டங்கமுமீற்றிலே குற்றங்கமுமாய் நேர்ந்துவருவது கோபுச்சயதி, ௩௨|○◡,-முதலிலேகுற்றங்கமுமீற்றிலே நெட்டங்கமுமாய்வருவது, சுரோதோவகம், ◡○|௨௨,—மற்றைய விவ்விலக்கணத்தாற்கண்டுணர்க.

தானம், ௩—தலைப்படுதானம், இடைப்படுதானம், கடைப்படுதானம், அவையாவன, அறத்தானீட்டிய பொருளை முக்குற்ற மற்ற நற்றவத் தோரைக் கொள்கெனப்பணிந்து குறையிரந்து தம்முள்ளமுவந்தீதல், தலைப்படுதானம்,—ஆதுலர், குருடர், மாதர், முதற்பிறர் சிறுமையைப்பற்றி மனமிரங்கியீவதிடைப்படுதானம்,— புகழார்வங் கைமாறச் சங்கண்ணோட்டங்காரணங்கடைப்பா டிவற்றைப்பற்றி யீவது கடைப்படுதானம்.

தானை, ௬—தேர், கரி, பரி, வாள், வில், வேல்.

தி

திக்கு, ௮—கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, இவையேயட்டதிக்கு.

திக்கு, ௰ — மேற்சொன்னவையன்றி மேலுங்கீழுங்கூட்டித் தசதிசையென்ப, கிழக்குக்கருடதிசை, தென்கிழக்குப் பூனைத்திசை, தெற்குச் சிங்கத்திசை, தென்மேற்குச் சுனகதிசை, மேற்கு நாகத்திசை, வடமேற்கெலித்திசை, வடக்கு யானைத்திசை, வடகிழக்கு முயற்றிசை, மேல் விசும்புத்திசை, கீழ் பாதாளதிசை.

திக்குப்பாலகர், ௮—கிழக்காதிமுறையே, இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், இவர்க்குமுறையே குறிகளாவன, கொடி, புகை, சீயம், நாய், இடபம், கழுதை, யானை, காகம்.

திக்குயானைகள், ௮—கிழக்காதிமுறையே, ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம், இவையேயட்டதிக்கயம், இவற்றிற்குமுறையே பிடியானைகளாவன, அப்பிரமை, கபிலை, பிங்களை, அனுபமை, தாமிரபருணி, சுதந்தி, அஞ்சனை, அஞ்சனாவதி.

திணை, ௨—உயர்திணை, அஃறிணை, இவற்றுள் உயர்திணை, மக்களுந், தேவரும், நரகருமாம், அஃறிணை, மற்றவுயிருள்ளனவுமில்லனவுமாகிய யாவுமாம்.

திணை, ௫—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், இவற்றுள், மலைச்சார்பு, குறிஞ்சி, நீரில்லாக்கடுநிலம் பாலை, காட்டுச்சார்பு முல்லை, வயற்சார்பு மருதம், கடற்சார்பு நெய்தல்.

திதி, ௰௫ — பிரதமை ௧, விதியை ௨, திரிதியை ௩, சதுர்த்தி ௪, பஞ்சமி ௫, சட்டி ௬, சத்தமி ௭, அட்டமி ௮, நவமி ௯, தசமி ௰, ஏகாதசி ௰௧, துவாதசி ௰௨, திரையோதசி ௰௩, சதுர்த்தசி, ௰௪, இவற்றிற் சுக்கிலபக்கத்திற்சுத்தமென்றுங் கிருட்டிணபக்கத்திற்பகுளமென்றுங்கூட்டுக, பதினைந்தாந் திதியாவது, சுக்கிலபக்கத்திற்குப்பௌர்ணமி, கிருட்டிணபக்கத்திற்கு, அமாவாசியை.

திராவிடம், ௫ — திராவிடம், ஆந்திரம், கன்னடம், மகாராட்டிரம், கூர்ச்சரம்.

திரவியம், ௫—மலைபடுதிரவியம், காடுபடுதிரவியம், நாடுபடுதிரவியம், நகர்படுதிரவியம், கடல்படுதிரவியம், இவற்றுண் மலைபடுதிரவியம், மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம்,—காடுபடுதிரவியம், இறால், தேன், அரக்கு, மயிற்பீலி, நாவி,—நாடுபடுதிரவியம், செந்நெல், சிறுபயறு, கரும்பு, வாழை, செவ்விளநீர்,— நகர்படுதிரவியம், அரசன், பித்தன், மந்திரி, யானை, கண்ணாடி,— கடல்படுதிரவியம், உப்பு, முத்து, பவளம், சங்கு, ஒக்கோலை.

திருமாலவதாரம், ௰ —மச்சம், கூர்மம், வராகம், நாரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலபத்திரன், கண்ணன், கற்கி, இவற்றிற்குக் காரணம், வேதத்தைத்திருடிக் கடலிலொளித்தசோமுகாசுரனென்னு மிராக்கதனைக்கொல்லமச்சாவதாரம்,—கடலைக்கடையும்போது மந்தரமலையைத்தாங்கக் கூர்மாவதாரம்,—பூமியைப் பாயாக விரணியாக்கன் சுருட்டினதை விரிக்கவுமவனைக் கொல்லவும் வரா

காவதாரம்,-இப்பழிவாங்கச் சருவதேவவணக்கம் விலக்கினவவன் றம்பியிரணியகசிபனைக்கொல்ல நரசிங்காவதாரம்,—இந்நான்கவதாரத்திற்குந்தாயரில்லை, மாவலியையடக்கக் காசிபனுந் திதியுந் தந்தைதாயாக வாமனாவதாரம்,—அரசராற் ருழ்த்தப்பட்ட பார்ப்பார்நிமித்த மவ்வரசரைக் கொல்லச் சமதக்கினியு மிரேணுகையுந் தந்தைதாயாகப்பரசுராமாவதாரம்,-இராவணன் முதலிய விராக்கதரைக் கொல்லத் தசரதனுங் கௌசலையுந் தந்தைதாயாக விராமாவதாரம்,—பிரலம்பன்முதற் பல விராக்கதரைக் கொல்ல வசுதேவனுந் தேவகியு முரோகணியுந் தந்தைதாயாகப் பலபத்திர ராமாவதாரம்,— பாரதநடத்த வசுதேவனுந் தேவகியுந் தந்தைதாயாகக் கண்ணனவதாரம்,—உலகங்களைச் சங்கரிக்கக் கற்கியவதாரம்.

திருமாலவதாரம், ௰௫— சனகன், சனந்தனன், சனாதன், சனற்குமாரன், நரநாராயணன், கபிலன், இடபன், நாரதன், அயக்கிரீவன், தத்தாத்திரேயன், மோகினி, யாகபதி, வியாதன், தன்வந்திரி, பௌத்தன்.

திருமாலாயுதம், ௫—சக்கரம், தனுசு, வாள், தண்டு, சங்கம்.

தீ

தீ, ௩—உயிரிலுள்ளதீ, உதரத்துள்ளதீ, சினத்திலெழுந்தீ, அன்றியும், வேதாக்கினி ௩, காருகபத்தியம், தக்கணாக்கினியம், ஆகவனீயம்.

தீக்குணம், ௰-பொய்சொல்லல், கோட்சொல்லல், கோபித்துச்சொல்லல், பயனிலசொலல்,இந்நான்கும்வாக்கின்றீக்குணம், களவாடப்போதல், வறிதே தொழில்செயல், கொலைசெயல், இம்மூன்றுங்காயத்தீக்குணம்,கொலைநினைக்கை, காமப்பற்று, ஆசை, இம்மூன்று மனத்தீக்குணம்.

தீவு, ௭—நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு. இவ்வெழுவகைப்பொருளு மவ்வவ்தீவின் மிக்கன வாகையா லிவற்ருற் பெயர் பெற்றன.

து

துரககதி, ௫—மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, விடபகதி.

துவர், ௰—நாவல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆல், அரசு, அத்தி, இத்தி, முத்தக்காசு, மாந்தளிர்.

தே

தேயம், ௫௰௬—அங்கம், அருணம், அவந்தி, ஆந்திரம், இலாடம், யவனம், ஒட்டியம், கருசம், கலிங்கம், கன்னடம், கன்னடம், காசம், காசிமீரம், காந்தாரம், காம்போசம், கிராடம், குருகு, குடகம், குந்தளம், குரு, குலிந்தம், கூர்ச்சரம், கேகயம், கேரளம், கொங்கணம், கொல்லம், கோசலம், சகம், சவ்வீரம், சாலவம், சிங்களம், சிந்து, சீனம், சூரசேனம், சோழம், சோனகம், திராவிடம், துளுவம், தெங்கணம், நிடதம், நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பல்லவம், பாண்டியம், புலிந்தம், போடம், மகதம், மச்சம், மராடம், மலையாளம், மாளவம், யுகந்தரம், வங்கம், வங்காளம், விதர்ப்பம்.

தேவர், ௫ — பிரமா, விட்டுணு, உருத்திரன், மயேச்சுரன், சதாசிவன், இவர்பஞ்சதேவதையும், பஞ்சகருத்தாக்களுமென்ப.

தேவர்வகை, ௩௰௩—ஆதித்தர் ௰௨, அச்சுவினிகள் ௨, உருத்திரர் ௰௧, வசுக்கள் ௮.

தொ

தொழில், ௩—ஆக்கல், காத்தல், அழித்தல்.

தொழில், ௬—உழவு, தொழில், வரைவு, வாணிபம், விச்சை, சிற்பம்.

தொழில், ௬ — அந்தணரறுதொழில், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், — அரசரறு தொழில் ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படைபயிற்றல், பொருதல்,—வைசியரறுதொழில், ஓதல், வேட்டல், பொருளீட்டல், ஈதல், பசுக்காத்தல், ஏருழல்,—சூத்திரரறுதொழில், முதன்மூவர்க் கேவல்செயல், பொருளீட்டல், உழுதல், பசுக்காத்தல், குயிலுவத்தொழிற்செய்தல், காருகவினைகளாக்கல்,—இவற்றுட் குயிலுவத்தொழில்களாவன, தோற்கருவிகளைக்கொட்டலுந் துளைக்கருவிகளையூதலுமாம்,—காருகவினைகளாவன, பட்டுநூலையும் பருத்திநூலையுங்கொண்டாடையாக்கலுஞ் சுமத்தலு முழுத்தலுமாம்.

தோ

தோற்றம், ௨—சரம், அசரம், இவற்றுட் சரம் நடையுள்ளன, அசரம் நடையில்லன.

தோற்றம், ௪—பை, முட்டை, நிலம், வியர்வை.

ந

நட்சத்திரம், ௨௭ — அச்சுவினி, பரணி, கார்த்திகை, உரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுடம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி, இவற்றுள், ஒவ்வொன்று, முறையே மேடமுதற் பன்னிரண்டிராசிகளிற் பதின்மூன்றுபாகமுமிருபது கலையுங்கொண்டவிடம்.

நதி, ௭—கங்கை, யமுனை, சரச்சுவதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி, இவையெ சத்தநதித்தமெனப்படும்.

நதி, ௰௧—மேற்சொல்லியவேழினோடுமேல், சிந்து, தாமிரபருணி, துங்கபத்திரி, கிட்டிணியென்றுகூட்டுக,

நரகம், ௭—அள்ளல், இரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி.

நரகவட்டம், ௭—தமப்பிரபை, இமப்பிரபை, தூமப்பிரபை, வாலுகப்பிரபை, சாகரப்பிரபை, இரத்தப்பிரபை, அழற்பிரபை, அவையாவன, இருள், குளிர், புகை, மணல், துயிலாமை, இரத்தம், தீ.

நரம்பு, ௭—இசைகாண்க.

நற்குணம், ௰—மெய்புகை, நல்வார்த்தை, இனியவைகூறல், பயன்படுசொல், இந்நான்கும் வாக்கினற்குணம், கோயில்வலம்வரல், தவம்புரிதல், தானஞ்செயல், இம்மூன்றும் காயநற்குணம், அருணினைவு, ஆசையறுத்தல், தவப்பற்று, இம்மூன்றும் மனநற்குணம்.

நா

நாகம், ௮—வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன், இவற்

றைக் கடவுட்பாம்பென்ப, இவைமுறையே கிழக்குமுதலெண்டிக்கிற்பூமியைத்தாங்குவதன்றியே நடுவே சேடனென்னுநாகம் பூமியைத்தாங்காநிற்கும், இந்நவநாகமுங் காசிபப்பிரமாவுக்குமவன்மனைவிகள் பதின்மூவருட்கத்துருவைக்கும்பிறந்தன.

நாடி, ய — சுழிமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குகு, சங்கினி, அவையாவன, சுழிமுனையாதாரமாறினு மூடுருவிநிற்பது,—இடை, பிங்கலையிரண்டுங்கத்திரிகைக்கால்போற் பின்னிநிற்பன,—காந்தாரிநாபியிற் ரோன்றிச்சத்தமேழுக்குமேழுநாடியாய்க்கண்டத்துறுவது—அத்தி, சிகுவையிரண்டும் பத்துநாடியுற்றுக்கண்ணினிற்பன,— அலம்புடை, புருடனிரண்டுஞ்செவியினூற்றிருபதுநரம்புற்றிருப்பன,—குகு, நாபியுறைந்து குய்யம்பற்றிநிற்பது,—சங்கினி, உபத்தத்தைப்பற்றியிருப்பது.

நாட்டமைதி, சு — செல்வம், விளைநிலம், செங்கோல், நோயின்மை, வளம், குறும்பின்மை.

நாட்டுக்குற்றம், எ—தொட்டியர், களவர், யானை, பன்றி, விட்டில், கிள்ளை, பெருமழை.

நாட்டுக்குற்றம், அ — விட்டில், தன்னரசு, வேற்றரசு, யானை, மிகுமழை, மிகுகாற்று, கிள்ளை, நட்டம்.

நி

நிலம், ச — குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்.

நிலை, ச—பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடம், இவை நான்கும் விற்றொடுத்தம்பினையெய்வார்க்குரியநிலை, இவற்றுளொருகாலினின்றொருகான்முடக்கல் பைசாசநிலை.—இருகாலும் பக்கல்வளைய மண்டலித்தலை மண்டலநிலை,— வலக்கான்மண்டலித்திடக்கான்முந்துறலேயாலீடநிலை,— வலக்கான் முந்துற்றிடக்கான்மண்டலித்தலே பிரத்தியாலீடநிலை.

நூ

நூல், ௩—முதனூல், வழிநூல், சார்புநூல், இவற்றுளொருவன்முன்கண்டுரைத்ததே முதனூல்,—முதனூல்வழியேவிகற்பித்துரைத்தநூலே வழிநூல்,—அவ்விருநூல்பொருட்கூட்டித்திரிபுவேறுடையநூலேசார்புநூல்.

நூற்பயன், ச—அறம், பொருள், இன்பம், வீடு.

ப

பக்குவர், ௩—கருமகாண்டி, ஞானகாண்டி, பத்திகாண்டி.

பஞ்சமூலம், ரு—செவ்வியம், சித்திரமூலம், கண்டுபாரங்கி, பேரரத்தை, சுக்கு.

படைவகுப்பு, ச—அணி, உண்டை, ஒட்டு, யூகம்.

பட்சி, ரு—வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில், இவற்றிற்குமுறையேயெழுத்து, அ, இ, உ, எ, ஒ, உண்டி, நடை, அரசு, தூக்கம், சாவு, பிறபக்கமாகில், உண்டி, சாவு, தூக்கம், அரசு, நடை,—சாவுதூக்கமில்லாதபொழுதறிந்து செய்யுண்முதலிய செய்தனன்மை.

பண், ச—பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி.

பதவி, ச—சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம், இவற்றுட்கடவுளுல

கத்தில் வாழ்தலேசாலோகம்,—கடவுள்சமீபத்துவாழ்தலே சாமீபம்,–கடவுளுருப்போன்றுவாழ்தலே சாருபம்,–கடவுளோடொன்றிவாழ்தலே சாயுச்சியம்.

பரிச்சேதம், ௩—காலபரிச்சேதம்,தேயபரிச்சேதம், வத்துபரிச்சேதம், அவையாவன,ஒருகாலத்துண்டொருகாலத்தின்றென்பது காலபரிச்சேதம், ஒருதேயத்துண்டொருதேயத்தின்றென்பது தேயபரிச்சேதம்,—ஒருபொருளிதுவாகு மொருபொருளிஃதன்றென்பது வத்துபரிச்சேதம்.

பருவகாலம், ௬—கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதிர்வேனில், இவையே யாவணிமுதலாக விரண்டிரண்டுமாதமொவ்வொன்றும்.

பருவம், ௪—வாலே, தருணி, பிரவிடை, விருத்தை, இவைபெண்கட்குரியபருவமாம்.

பருவம், ௭—பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை,அரிவை, தெரிவை, பேரிளம்பெண், இவர்க்குமுறையே வயதெல்லே, ஐந்துமுத லேழளவும் பேதை,—எட்டுமுதற் பதினென்றளவும் பெதும்பை, பன்னிரண்டுமுதற்பதின் மூன்றளவுமங்கை,—பதினன்குமுதற் பத்தொன்பதளவுமடந்தை,–இருபதுமுதலிருபத்தைந்தளவுமரிவை, –இருபத்தாறுமுதன் முப்பத்தொன்றளவு ந்தெரிவை,– முப்பத்திரண்டுமுதனற்பதளவும்பேரிளம்பெண், —ஆகையாலொவ்வொரு பருவங்கொண்டவருடம், ௩, ௪, ௨, ௬, ௬, ௬, ௧, இவைபெண்கட்குரிய பருவமாம்.

பலே, ௩—கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்,இவையே திரிபலேயென்ப.

பா

பா, ௪—வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பாவொன்றுகூட்டியைந்தென்பாருமுளர்.

பாடை, ௰அ—அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம், காம்போசம், கொங்கணம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திரவிடம், துளுவம்,பப்பரம்,மகதம்,மராடம், வங்கம்.

பாதகம், ரு — கொலே, பொய், களவு, கள்ளருந்தல், குருநிந்தை, இவையே பஞ்சமாபாதகம்

பாதகம், ௭—சித்தசமுன்னதி, அருத்தலோபம், காமம், வைடம்மியம், அசனப்பிரியம், கோபம், அநுட்டணம், இவையேசத்தவிசனம், இவைமுறையே, அகங்காரம், உலோபம், காமம், பகை,போசனப்பிரியம்,காய்தல், சோம்பல், இவையேமுந்தலேமையான பாதகமெனப்படும்.

பாலே, ௭—இசையைக்காண்க.

பால், ரு—ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல.

பால், ரு—முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை, இவற்றுண்மயிரையுச்சியின்முடித்தலேமுடி, —பக்கன்முடித்தலேகொண்டை,—பின்னேசெருகல்சுருள்,—சுருட்டிமுடித்தலேகுழல், பின்னிவிடுதலேபனிச்சை.

பாவபுண்ணியவழக்கம், ௩ —செய்தல், செய்வித்தல், உடன்படல்,

பாவினம், ௩—தாழிசை, துறை, விருத்தம்.

பி

பிணி, ௩–வாதம்,பித்தம்,சிலேட்டுமம்.